T.N.L.C. Debates

Official Report

1983

Vol. CXCIV No. 1, 2

D
V2 11,32'N83
N83.194.1-2
143138

(301)

[ISSUED 19—8—1983

COMMISSIONER OF TAMILNADU
ARCHIVES & HISTORICAL RESEARCH
24 SEP 1983
EGMORE, MADRAS-8

TRUTH ALONE TRIUMPHS

# TAMIL NADU LEGISLATIVE COUNCIL DEBATES

# OFFICIAL REPORT

SATURDAY 5th MARCH 1983

Volume CXCIV (No. 1)

©
GOVERNMENT OF TAMIL NADU
1983

*Legislative Council Department*
*Fort St. George, Madras*-600 009.

Price *Rs.* 2.75 *Paise*]

143138

பொருளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| தமிழ் நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் .. .. .. | i—v |
| தமிழ் நாடு சட்ட மன்ற மேலவையின் முக்கிய அலுவலர்கள் .. .. | vii |
| தொகுதிகள் உள்ளிட்ட தமிழ் நாடு சட்ட மன்ற மேலவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட பட்டியல். | ix—x |
| 1. 1983-84 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கை. | 1—39 |
| 2. அறிவிப்பு— | |
| அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவு குறித்து. | 40 |
| 3. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள். | 41—43 |

# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

## GOVERNOR OF TAMIL NADU.

THIRU SUNDAR LAL KHURANA.

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS.

1. THE HONOURABLE THIRU M. G. RAMACHANDRAN, Chief Minister, in charge of Public, General Administration, Indian Administrative Service, District Revenue Officers, Deputy Collectors, Police, Prevention of Corruption, Planning, Molasses and Archaeology.

2. THE HONOURABLE DR. V. R. NEDUNCHEZHIYAN, Minister for Finance, in charge of Finance, Legislature, Elections, Food, Fisheries, Backward Classes, Youth Service Corps, Price Control and Ex-Servicemen.

3. THE HONOURABLE THIRU S. RAMACHANDRAN, Minister for Electricity, in charge of Electricity, Iron and Steel Control.

4. THE HONOURABLE THIRU K. A. KRISHNASWAMY, Minister for Rural Industries, in charge of Rural Industries including Village, Cottage and Small Industries, Milk, Dairy Development, Registration and Stamp Act.

5. THE HONOURABLE THIRU S. D. SOMASUNDARAM, Minister for Revenue, in charge of Revenue, Commercial Taxes, Excise and Census.

6. THE HONOURABLE THIRU R. M. VEERAPPAN, Minister for Information and Religious Endowments, in charge of Information and Publicity, Film Technology, Tourism, Tourism Development Corporation, Cinematograph Act, Hindu Religious and Charitable Endowments, Forests and Cinchona and Grant of Liquor Permits.

7. THE HONOURABLE THIRU C. ARANGANAYAGAM, Minister for Education, in charge of Education including Technical Education, Official Language and Handlooms.

8. THE HONOURABLE DR. K. KALIMUTHU, Minister for Agriculture, in charge of Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering Wing and Agro-Engineering

9. THE HONOURABLE THIRU C. PONNAIYAN, Minister for Co-operation and Law, in charge of Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits and Co-operation.

10. THE HONOURABLE THIRU P. KOLANDAIVELU, Minister for Local Administration, in charge of Municipal Administration, Panchayats and Panchayat Unions, Community Development, Rural Indebtedness, Bhoodan and Gramdhan and Highways.

11. THE HONOURABLE THIRU S. RAGHAVANANDAM, Minister for Labour, in charge of Labour, Housing, Slum Clearance Board, Statistics, Tamil Nadu Water Supply and Drainage Board, Town Planning and Accommodation Control.

12. THE HONOURABLE DR. H. V. HANDE, Minister for Health, in charge of Health.

13. THE HONOURABLE THIRU K. RAJA MOHAMMED Minister for Irrigation, in charge of Agro-Service Co-operative Societies, Irrigation including Minor-Irrigation and Wakf.

14. THE HONOURABLE THIRU S. MUTHUSWAMY, Minister for Transport, in charge of Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Ports.

15. THE HONOURABLE THIRU S. THIRUNAVUKKARASU, Minister for Industries, in charge of Large Scale Industries, Mines and Minerals and Textiles.

16. THE HONOURABLE THIRU S. N. RAJENDRAN, Minister for Khadi and Public Works in charge of Kadhi, Prohibition excluding grant of liquor Permits, Passports, Public Works Department and Establishment matters relating to Public Works Department.

17. THE HONOURABLE THIRU M. VIJAYASARATHI, Minister for Adi Dravidar Welfare, in charge of Adi Dravidar Welfare, Stationery and Printing, Government Press, Newsprint Control, Hill Tribes and Bonded Labour and Employment and Training.

18. THE HONOURABLE THIRUMATHI GOMATHI SRINIVASAN, Minister for Social Welfare, in charge of Social Welfare including Women and Children Welfare, Animal Husbandry, Beggars Home, Orphanages, Indian Overseas, Refugees and Evacuees and Correctional Administration.

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

### தமிழ்நாடு ஆளுநர்

திரு. சுந்தர் லால் குரானா

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் (முதலமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர், மாவட்ட வருவாய் அதிகாரிகள், மாவட்டத் துணை ஆட்சியாளர் சம்பந்தப்பட்டவை, காவல், இலஞ்ச ஒழிப்பு, திட்டம், சர்க்கரைப் பாகுக் கழிவு மற்றும் தொல் பொருள் இயல்.

2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் (நிதி அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

நிதி, சட்டமன்றம், தேர்தல்கள், உணவு, மீன்வளம், பிற்பட்ட வகுப்பினர், இளைஞர் அணி, விலைவாசிக் கட்டுப்பாடு, மற்றும் முன்னாள் இராணுவத்தினர்.

3. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (மின்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

மின்சாரம், மற்றும் இரும்பு, எஃகு கட்டுப்பாடு.

4. மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி (ஊரகத் தொழில் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

கிராம, குடிசை, சிறுதொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், பால், பால் பெருக்குத் திட்டம், ஆவணப் பதிவுத் துறை மற்றும் முத்திரைச் சட்டம்.

5. மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் (வருவாய்த்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

வருவாய், வணிக வரிகள், ஆயத்துறை, மற்றும் மக்கள் தொகைக் கணக்கு.

6. மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் (செய்தி-அறநிலையத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், திரைப்படச் சட்டம், இந்து அறநிலையத் துறை, வளங்கள், சின்கோனா, மற்றும் மது அருந்த அனுமதி வழங்கல்.

7. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் (கல்வி அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

தொழில் நுட்பக் கல்வி உள்ளிட்ட கல்வி, ஆட்சி மொழி மற்றும் கைத்தறி.

8. மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து (வேளாண்மைத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

வேளாண்மை, வேளாண்மை மறுநிதி, வேளாண்மைப் பொறியியல் பிரிவு மற்றும் அக்ரோ பொறியியல்.

9. மாண்புமிகு திரு. சி. பொன்னையன் (கூட்டுறவு மற்றும் சட்ட அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

சட்டம், நீதிமன்றங்கள், சிறைகள், எடைகள்–அளவைகள் பற்றி சட்டம் இயற்றல், நிறுவனங்கள் பதிவு, கடன் வழங்கல் மீதான நிவாரணச் சட்டம், சீட்டு பற்றிய சட்டம், கூட்டுறவு.

10. மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு (உள்ளாட்சித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

நகராட்சிகள், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், சமுதாய வளர்ச்சி, கிராமப்புற கடன் சம்பந்தப்பட்டவை, பூமிதானம், கிராம தானம் மற்றும் நெடுஞ்சாலைகள்.

11. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

தொழிலாளர், வீட்டு வசதி, குடிசை மாற்று வாரியம், புள்ளி விவரங்கள், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், நகர அமைப்பு மற்றும் இட வசதிக் கட்டுப்பாடு.

12. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைக்குப் பொறுப்பு வகிப்பார் :—

மக்கள் நல்வாழ்வுத் துறை.

13. மாண்புமிகு திரு. கா. இராசா முகமது (நீர்ப்பாசனத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டங்கள் மற்றும் வக்ப்.



14. மாண்புமிகு திரு. க. முத்துசாமி (போக்குவரத்துத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

போக்குவரத்து, அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம் மற்றும் துறைமுகங்கள்.

15. மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு (தொழில் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

பெருந்தொழில்கள், சுரங்கமும்–கனிவளமும் மற்றும் நெசவாலைகள்.

16. மாண்புமிகு திரு. செ. நீ. இராசேந்திரன் (கதர் மற்றும் பொதுப்பணித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்கு பொறுப்பு வகிப்பார் :—

கதர், மது விலக்கு (மது அருந்த அனுமதி வழங்கல் நீங்கலாக) மற்றும் பயண இலவசச் சீட்டு, பொதுப்பணித் துறை மற்றும் பொதுப்பணித் துறை அலுவல்கள் சம்பந்தமாக.

17. மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி (அரிசன நலத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

அரிசன நலம், எழுது பொருள்–அச்சுத்துறை, அரசு அச்சகம், அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, மலைவாழ் பழங்குடியினர், பிணைத் தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பும் பயிற்சியும்.

18. மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் (சமூக நலத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

மகளிர், குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூக நலம், கால் நடைப் பராமரிப்பு, பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப்பட்டவர்கள் நலம் மற்றும் சீர்திருத்த நிர்வாகம்.

## தமிழ்நாடு சட்டமன்ற மேலவையின் முக்கிய அலுவலர்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்

டாக்டர் ம. பொ. சிவஞானம்

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்

திரு. புலவர் புலமைப்பித்தன்

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்*

1. திரு. க. இராமமூர்த்தி
2. திரு. சி. இராமலிங்கம்
3. திரு. பா. ரா. தாமஸ்
4. திரு. ஜே. எம். மியாகான்

மேலவைச் செயலாளர்

திரு. சி. கு. இராமசாமி, பி.ஏ., பி.எல்.

சார்புச் செயலாளர்

திரு. த. பி. டெல்லிதுரை, பி. எஸ். சி., பி. எல்.

விவாதப் பதிப்பாளர்

திரு. நா. கோதண்டராமன், பி. ஏ., பி. ஜி. எல்., பி. எல்.

தலைமை நிருபர்

திரு. ச. சுவாமிநாதன்.

தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்.

| தொடர் இலக்கமும் உறுப்பினர் பெயரும். | தொகுதி. |
|---|---|
| (1) | (2) |
| 1 அருணாசலம், திரு. க. .. | நியமனம். |
| 2 ஆறுமுகம், திரு. சோ. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 3 ஆற்காடு நா. வீராசாமி, திரு. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 4 ஆனந்தம், திரு. வி.வி.வி. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 5 இராகவானந்தம், திரு. எஸ். (தொழிலாளர் நல அமைச்சர்). .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 6 இராசா முகமது, திரு. கா. (பாசனத் துறை அமைச்சர்). .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 7 இராதா, திரு. எஸ். ஆர். | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 8 இராமமூர்த்தி, திரு. க. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 9 இராமலிங்கம், திரு. சி. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 10 கண்ணப்பன், திரு. காடுவெட்டி .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 11 சங்கரலிங்கம், திரு. ம. எம். ஏ. .. | திருநெல்வேலி—கன்னியாகுமரி ஆசிரியர்கள் தொகுதி. |
| 12 சந்தோஷம், திரு. த. எம். ஏ. பி. எல். | தமிழ்நாடு தெற்கு பட்டதாரிகள் தொகுதி. |
| 13 சனார்த்தனம், டாக்டர் இரா. .. | தமிழ்நாடு மேற்கு மத்திய பட்டதாரிகள் தொகுதி. |
| 14 சிவஞானம், டாக்டர் ம. பொ. (மாண்புமிகு தலைவர்). .. | நியமனம். |
| 15 சீதாதேவி கிருஷ்ணசாமி, திருமதி. | நியமனம். |
| 16 சீத்தாபதி, திரு. ஆர். டி. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 17 சுவாமிநாதன், திரு. ஜி. பி. பார்ம். | தமிழ்நாடு கிழக்கு மத்திய பட்டதாரிகள் தொகுதி. |

D-II C 98—iii

| தொடர் இலக்கமும் உறுப்பினர் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 18 தாமஸ், திரு. பா. ரா. .. | மதுரை-இராமநாதபுரம் ஆசிரியர்கள் தொகுதி. |
| 19 தாமோதரன், திரு. ஏ. ஆர். .. | தமிழ்நாடு வடக்கு பட்டதாரிகள் தொகுதி. |
| 20 தாரா செரியன், திருமதி. | நியமனம். |
| 21 தாஸ், திரு. ஏ. ஜே. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 22 துரைசாமி, திரு. ஒ. எஸ். | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 23 நல்லசிவன், திரு. ஆ. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 24 நீலநாராயணன், திரு. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 25 ஜேப்பியார், திரு. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 26 புலவர் புலமைப்பித்தன், (மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்) | நியமனம். |
| 27 மந்தாகினி கிருஷ்ண மூர்த்தி, திருமதி. | நியமனம். |
| 28 மாணிக்கம், திரு. ப. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 29 மியாகான், திரு. ஜே. எம். | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 30 மீனாட்சிசுந்தரம், திரு. க. | தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி-புதுக்கோட்டை ஆசிரியர்கள் தொகுதி. |
| 31 முத்து, திரு. எஸ். .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 32 முத்துசாமி, திரு. செ. .. | சேலம், தர்மபுரி, கோயம்புத்தூர்-நீலகிரி ஆசிரியர்கள் தொகுதி. |
| 33 முத்தையா செட்டியார், டாக்டர் எம். ஏ. | நியமனம். |
| 34 முனுசாமி, திரு. பி. .. | நியமனம். |
| 35 லீலாவதி செல்வி, ஆ. .. | சென்னை-செங்கல்பட்டு ஆசிரியர்கள் தொகுதி. |



| தொடர் இலக்கமும் உறுப்பினர் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 36 லெட்சுமிகாந்தன், திரு. சி. ரா. .. | வடஆற்காடு-தென்ஆற்காடு ஆசிரியர்கள் தொகுதி. |
| 37 வசந்த பை, திரு. ஜி. .. | சென்னை மாவட்டப் பட்டதாரிகள் தொகுதி. |
| 38 வள்ளிமுத்து, திரு. ஈ. வெ. அ. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 39 வீரப்பன், திரு. இராம. (செய்தி-அறநிலையத் துறை அமைச்சர்). | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 40 வெங்கடேசன், திரு. ஈ. எஸ். | நியமனம். |
| 41 ஹண்டே, டாக்டர் எச். வி. | சென்னை மாவட்டப் பட்டதாரிகள் தொகுதி. |
| 42 வெற்றிடம் .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 43 ஷை | தஞ்சாவூர் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 44 ஷை | ஷை |
| 45 ஷை | சேலம்-தர்மபுரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 46 ஷை | ஷை. |
| 47 ஷை | இராமநாதபுரம் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 48 ஷை | ஷை |
| 49 ஷை | சென்னை உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 50 ஷை | செங்கல்பட்டு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 51 ஷை | கோயம்புத்தூர் நீலகிரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 52 ஷை | ஷை |
| 53 ஷை | மதுரை உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 54 ஷை | ஷை |

| தொடர் இலக்கமும் உறுப்பினர் பெயரும். | | தொகுதி. |
|---|---|---|
| | (1) | (2) |
| 55 | வெற்றிடம் | திருநெல்வேலி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 56 | ஷ்டி | ஷ்டி |
| 57 | ஷ்டி | வட ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 58 | ஷ்டி | ஷ்டி |
| 59 | ஷ்டி | தென் ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 60 | ஷ்டி | ஷ்டி |
| 61 | ஷ்டி | திருச்சிராப்பள்ளி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 62 | ஷ்டி | ஷ்டி |
| 63 | ஷ்டி | கன்னியாகுமரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |

# தமிழ் நாடு சட்டமன்ற மேலவை.

**சனிக்கிழமை, 1983 மார்ச் 5.**

**மாசி 21, துந்துபி—திருவள்ளுவராண்டு 2014.**

சென்னை, செயிண்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4 மணியளவில் மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

## 1. 1983-84 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,

1982-83 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடுகளையும், 1983-84 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளையும் @ இம் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்க விழைகிறேன்.

‘ விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்து
உள்நின்று உடற்றும் பசி ’

‘மழை பெய்யாமல் பொய்த்துவிடுமேயானால், கடல் சூழ்ந்த அகன்ற உலகமாக இருந்தபோதிலும், பசியானது உயிர்களிடத்தே இருந்து வருத்தும்’ என்பது திருவள்ளுவப் பெருந்தகையார் தேர்ந்து தெளிந்து கூறிய உலகியல் உண்மையாகும்.

2. சென்ற ஆண்டும், அதனைத் தொடர்ந்து இந்த ஆண்டும், தமிழ் நாட்டில் பருவ மழைகள் பெருமளவுக்குப் பொய்த்துப்போனதன் காரணமாக உணவுப் பற்றாக்குறை, குடிநீர்ப் பற்றாக்குறை, மின் பற்றாக்குறை போன்றவைகள் தமிழ்நாட்டைப் பெரும் அல்லல்களுக்கு ஆட்படுத்தியிருக்கின்றன. தமிழக அரசு தன் அறிவாற்றல் திறன்களையெல்லாம் முழுமையாகப் பயன்படுத்தி ஒரு பக்கம் இயற்கையால் ஏற்படும் கொடுமைகளைச் சமாளித்தும், மற்றொரு புறம் செயற்கையால் ஏற்படுத்தப்படும் இடர்ப்பாடுகளைச் சமாளித்தும் மக்களுக்கு நல்வாழ்வு அளித்திட அரும்பாடுபட்டு வருகின்றது.

3. கடந்த ஆண்டும் இந்த ஆண்டும் பருவ மழைகள் தொடர்ந்து பொய்த்து விட்டதன் காரணமாக இம்மாநிலம் முழுவதிலும் பாசனத்திற்கு மட்டுமல்லாமல், குடிநீருக்கும் கடுமையான தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

---

@ 43-83 ஆம் பக்கங்களில் இணைப்பு ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1983 மார்ச் 5

சென்னைப் பெருநகரில் பல இலட்சக் கணக்கான மக்கள் வாழ்ந்து வருவதால், மாநகரமே இதனால் மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே, இரண்டு நாளைக்கு ஒருமுறை குடி தண்ணீர் அளிக்க வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாகியுள்ளது. சென்னை மாநகரில் குடி தண்ணீர் வழங்கலைப் பெருக்குவதற்காக நிலத்தடி நீர் வளத்திற்கு உறுதுணையாக, 22 ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன. தாமரைப்பாக்கத்தில் கிணறுகள் இருக்கும் பகுதியிலிருந்து புழலேரி இணைப்புக் குழாய்க்குத் தண்ணீர் எடுத்துச்செல்ல 2.3 கிலோ மீட்டர் தொலைவிற்கு இணைப்புக் குழாய் போடப்படும். சென்னை மாநகரில் அமைக்கப்பட்டுள்ள குழாய்க் கிணறுகளின் மொத்த எண்ணிக்கை 10,200 ஆகிவிட்டது. ஏறக்குறைய 130 தண்ணீர் லாரிகள் அன்றாடம் 1,585 உருக்குத் தொட்டிகளில் தண்ணீர் நிரப்பி வருகின்றன. இந்தத் தொட்டிகள் நலிவுற்ற பிரிவினர் வசிக்கும் பகுதிகளிலேயே முக்கியமாக அமைக்கப்பட்டுள்ளன. திருவான்மியூருக்குத் தெற்கே நிலத்தடி நீரைப் பயன்படுத்துவதற்கான திட்டம் சுமார் ரூ. 3 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. சென்னை மாநகரில் குடிநீர் நிலைமை மிகக் கடுமையாக இருப்பதால் மக்களுக்கு ஏற்படும் இன்னல்களைக் குறைப்பதற்காக இம் மாநில அரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது. அவ்வண்ணமே, இம் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலுள்ள வெவ்வேறு நகரங்களிலும், பட்டணங்களிலும், பேரூர்களிலும், சிற்றூர்களிலும் குடி தண்ணீர் வழங்கல் அளவைப் பெருக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

4. பருவ மழைகள் பொய்த்ததன் காரணமாக வேளாண்மை நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன; இதன் விளைவாக, உணவு உற்பத்தி மிகவும் குறைந்துள்ளது. அண்டை மாநிலமான கர்நாடகம் உரிய நேரத்தில் போதிய அளவு தண்ணீரைக் கொடுத்து உதவியிருந்தால் தமிழ் நாட்டின் நெற்களஞ்சியமான தஞ்சாவூர் மாவட்டம்—சாதாரணமாக வறட்சி நிலைமை ஏற்படாத மாவட்டம்—இப்போது கடுமையாகப் பாதிக்கப் பட்டிருப்பதைப்போல் வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்காது. இம் மாநில அரசு தொடர்ந்து பல வேண்டுகோள்கள் விடுத்திருந்தும் இவ்வகையில் கர்நாடக மாநிலத்திலிருந்து அதிக அளவு உதவி கிடைக்கவில்லை.

5. இம் மாநிலத்தின் உணவு நிலைமை மிகவும் கவலையளிப்பதாக உள்ளது. மத்திய அரசிடமிருந்து உணவு தானியங்களைப் பெறுவதற்கு இம் மாநில அரசு மேற்கொண்டுள்ள பல்வேறு முயற்சிகளை மதிப்பிற்குரிய உறுப்பினர் அனைவரும் அறிவர். ஆளுநர் அவர்களின் உரையில் குறிப்பிட்டுள்ளதுபோல் 1982 ஜூன் திங்களிலிருந்து இம் மாநில அரசுக்கு மத்தியத் தொகுப்பிலிருந்து



1983 மார்ச் 5] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

அரிசி எதுவும் ஒதுக்கப்படவேயில்லை. இது தொடர்பாக மத்திய உணவு-
வேளாண்மை அமைச்சர்களுடனும், பிரதம அமைச்சருடனும் நேரடியாகப்
பேசுவதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அண்மையில் டில்லிக்குச்
சென்று, நிலைமையை விளக்கிக் கூறிவிட்டு வந்தார்கள். தமிழகத்தின் பற்றாக்
குறையைத் தீர்க்க மத்திய அரசு தன் தொகுப்பிலிருந்து திங்கள்தோறும்
அரிசி 80 ஆயிரம் டன்னும் கோதுமை 40 ஆயிரம் டன்னும் வழங்க வேண்டும்
என்று தமிழக அரசு தொடர்ந்து வற்புறுத்திக்கொண்டிருக்கிறது. அரிசியை
உபரியாகக் கொண்டுள்ள பிற மாநில நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலம்
அரிசியைத் தமிழக அரசு பெற முடியாமல் மத்திய அரசால் பாதிக்கப்
பட்டிருக்கிறது. வெளிநாட்டு அரிசியை இறக்குமதி செய்ய அனுமதி
கிடையாது. தமிழ்நாட்டு நுகர்பொருள் வாணிபக் கழகமோ அல்லது தமிழ்
நாட்டு வியாபாரிகளோ வெளி மாநிலங்களில் அரிசியை அதிக விலை
கொடுத்துக் கொள்முதல் செய்து கொண்டு வரவேண்டியிருக்கிறது. ஒரு
கோடியே 17 இலட்சம் குடும்ப அட்டைகளுக்கு நியாயமான விலையில், லெவி
விலையைவிடக் குறைந்த விலையில், அட்டை ஒன்றுக்கு திங்கள் ஒன்றுக்கு
அதிக அளவு 20 கிலோ அரிசி என்று வழங்க வேண்டியிருக்கிறது. குழந்தைகள்
சத்துணவுத் திட்டத்திற்கும், ஓய்வூதியம் பெறும் நலிந்தோர் சத்துணவுத்
திட்டத்திற்கும் சுமார் 17,000 டன் அரிசி திங்கள்தோறும் வழங்கவேண்டி
யிருக்கிறது. இந்த நெருக்கடி நிலையில் தமிழக அரசு தமிழகத்தில் லெவி
கொள்முதல் மூலம் கிடைக்கும் அரிசியை இயன்றவரையில் பயன்படுத்தி
வருகிறது. தமிழகத்தின் இருப்பு ஓரிரு திங்கள்களுக்கு மட்டுமே போதுமான
தாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தியாவின் ஒரு பகுதியாக
விளங்கும் தமிழகத்தின் அரிசிப் பற்றாக்குறைகளைத் தீர்க்கத் தமிழக அரசு
தன்னால் இயன்ற அளவுக்குப் பாடுபடுகின்ற நேரத்தில், தேவைப்படும்
அளவுக்கு நிதி வசதிகளையும், உணவுப் பண்டங்களையும் அளித்து உதவிபுரிய
வேண்டிய பொறுப்பு மத்திய அரசுக்கு இருக்கிறது என்பதை அனைவர்க்கும்
நினைவூட்ட விரும்புகிறேன். எனினும், மத்திய அரசின் உதவியும்,
ஒத்துழைப்பும் இந்த வகையில் அண்மைக்காலத்தில் இதுவரையில் தமிழக
அரசிற்குக் கிட்டாமல் இருப்பது பெரும் வருத்தத்தை அளிக்கிறது.
மாண்புமிகு முதல்வர் அவர்கள் பிரதம அமைச்சரோடும், மத்திய உணவு
அமைச்சரோடும் நடத்திய பேச்சுவார்த்தைகளின் விளைவாக, இனியேனும்
மத்திய அரசு, தமிழகத்தின் உணவு பற்றாக்குறையை உரிய வகையில் நீக்கிட
பேருதவி புரிய விரைவில் முன்வரும் என்று தமிழக அரசு எதிர்பார்க்கிறது.
இந்த நாட்டில் உணவு தானியங்கள் எங்கெங்கு கிடைக்கினும் அங்கெல்லாம்
சென்று, உணவு தானியங்களைக் கொள்முதல் செய்வதற்கு இம் மாநில அரசு
முனைப்பான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. தமிழ்நாடு நுகர்
பொருள் வாணிபக் கழகத்தின் அலுவலர்கள் உணவு தானியங்களைக்

சென்னைப் பெருநகரில் பல இலட்சக் கணக்கான மக்கள் வாழ்ந்து வருவதால், மாநகரமே இதனால் மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே, இரண்டு நாளைக்கு ஒருமுறை குடி தண்ணீர் அளிக்க வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாகியுள்ளது. சென்னை மாநகரில் குடி தண்ணீர் வழங்கலைப் பெருக்குவதற்காக நிலத்தடி நீர் வளத்திற்கு உறுதுணையாக, 22 ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன. தாமரைப்பாக்கத்தில் கிணறுகள் இருக்கும் பகுதியிலிருந்து புழலேரி இணைப்புக் குழாய்க்குத் தண்ணீர் எடுத்துச்செல்ல 2.3 கிலோ மீட்டர் தொலைவிற்கு இணைப்புக் குழாய் போடப்படும். சென்னை மாநகரில் அமைக்கப்பட்டுள்ள குழாய்க் கிணறுகளின் மொத்த எண்ணிக்கை 10,200 ஆகிவிட்டது. ஏறக்குறைய 130 தண்ணீர் லாரிகள் அன்றாடம் 1,585 உருக்குத் தொட்டிகளில் தண்ணீர் நிரப்பி வருகின்றன. இந்தத் தொட்டிகள் நலிவுற்ற பிரிவினர் வசிக்கும் பகுதிகளிலேயே முக்கியமாக அமைக்கப்பட்டுள்ளன. திருவான்மியூருக்குத் தெற்கே நிலத்தடி நீரைப் பயன்படுத்துவதற்கான திட்டம் சுமார் ரூ. 3 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. சென்னை மாநகரில் குடிநீர் நிலைமை மிகக் கடுமையாக இருப்பதால் மக்களுக்கு ஏற்படும் இன்னல்களைக் குறைப்பதற்காக இம் மாநில அரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது. அவ்வண்ணமே, இம் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலுள்ள வெவ்வேறு நகரங்களிலும், பட்டணங்களிலும், பேரூர்களிலும், சிற்றூர்களிலும் குடி தண்ணீர் வழங்கல் அளவைப் பெருக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

4. பருவ மழைகள் பொய்த்ததன் காரணமாக வேளாண்மை நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன: இதன் விளைவாக, உணவு உற்பத்தி மிகவும் குறைந்துள்ளது. அண்டை மாநிலமான கர்நாடகம் உரிய நேரத்தில் போதிய அளவு தண்ணீரைக் கொடுத்து உதவியிருந்தால் தமிழ் நாட்டின் நெற்களஞ்சியமான தஞ்சாவூர் மாவட்டம்—சாதாரணமாக வறட்சி நிலைமை ஏற்படாத மாவட்டம்—இப்போது கடுமையாகப் பாதிக்கப் பட்டிருப்பதைப்போல் வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்காது. இம் மாநில அரசு தொடர்ந்து பல வேண்டுகோள்கள் விடுத்திருந்தும் இவ்வகையில் கர்நாடக மாநிலத்திலிருந்து அதிக அளவு உதவி கிடைக்கவில்லை.

5. இம் மாநிலத்தின் உணவு நிலைமை மிகவும் கவலையளிப்பதாக உள்ளது. மத்திய அரசிடமிருந்து உணவு தானியங்களைப் பெறுவதற்கு இம் மாநில அரசு மேற்கொண்டுள்ள பல்வேறு முயற்சிகளை மதிப்பிற்குரிய உறுப்பினர் அனைவரும் அறிவர். ஆளுநர் அவர்களின் உரையில் குறிப்பிட்டுள்ளதுபோல் 1982 ஜூன் திங்களிலிருந்து இம் மாநில அரசுக்கு மத்தியத் தொகுப்பிலிருந்து



அரிசி எதுவும் ஒதுக்கப்படவேயில்லை. இது தொடர்பாக மத்திய உணவு-
வேளாண்மை அமைச்சர்களுடனும், பிரதம அமைச்சருடனும் நேரடியாகப்
பேசுவதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அண்மையில் டில்லிக்குச்
சென்று, நிலைமையை விளக்கிக் கூறிவிட்டு வந்தார்கள். தமிழகத்தின் பற்றாக்
குறையைத் தீர்க்க மத்திய அரசு தன் தொகுப்பிலிருந்து திங்கள்தோறும்
அரிசி 80 ஆயிரம் டன்னும் கோதுமை 40 ஆயிரம் டன்னும் வழங்க வேண்டும்
என்று தமிழக அரசு தொடர்ந்து வற்புறுத்திக்கொண்டிருக்கிறது. அரிசியை
உபரியாகக் கொண்டுள்ள பிற மாநில நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலம்
அரிசியைத் தமிழக அரசு பெற முடியாமல் மத்திய அரசால் பாதிக்கப்
பட்டிருக்கிறது. வெளிநாட்டு அரிசியை இறக்குமதி செய்ய அனுமதி
கிடையாது. தமிழ்நாட்டு நுகர்பொருள் வாணிபக் கழகமோ அல்லது தமிழ்
நாட்டு வியாபாரிகளோ வெளி மாநிலங்களில் அரிசியை அதிக விலை
கொடுத்துக் கொள்முதல் செய்து கொண்டு வரவேண்டியிருக்கிறது. ஒரு
கோடியே 17 இலட்சம் குடும்ப அட்டைகளுக்கு நியாயமான விலையில், லெவி
விலையைவிடக் குறைந்த விலையில், அட்டை ஒன்றுக்கு திங்கள் ஒன்றுக்கு
அதிக அளவு 20 கிலோ அரிசி என்று வழங்க வேண்டியிருக்கிறது. குழந்தைகள்
சத்துணவுத் திட்டத்திற்கும், ஓய்வூதியம் பெறும் நலிந்தோர் சத்துணவுத்
திட்டத்திற்கும் சுமார் 17,000 டன் அரிசி திங்கள்தோறும் வழங்கவேண்டி
யிருக்கிறது. இந்த நெருக்கடி நிலையில் தமிழக அரசு தமிழகத்தில் லெவி
கொள்முதல் மூலம் கிடைக்கும் அரிசியை இயன்றவரையில் பயன்படுத்தி
வருகிறது. தமிழகத்தின் இருப்பு ஓரிரு திங்கள்களுக்கு மட்டுமே போதுமான
தாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தியாவின் ஒரு பகுதியாக
விளங்கும் தமிழகத்தின் அரிசிப் பற்றாக்குறைகளைத் தீர்க்கத் தமிழக அரசு
தன்னால் இயன்ற அளவுக்குப் பாடுபடுகின்ற நேரத்தில், தேவைப்படும்
அளவுக்கு நிதி வசதிகளையும், உணவுப் பண்டங்களையும் அளித்து உதவிபுரிய
வேண்டிய பொறுப்பு மத்திய அரசுக்கு இருக்கிறது என்பதை அனைவர்க்கும்
நினைவூட்ட விரும்புகிறேன். எனினும், மத்திய அரசின் உதவியும்,
ஒத்துழைப்பும் இந்த வகையில் அண்மைக்காலத்தில் இதுவரையில் தமிழக
அரசிற்குக் கிட்டாமல் இருப்பது பெரும் வருத்தத்தை அளிக்கிறது.
மாண்புமிகு முதல்வர் அவர்கள் பிரதம அமைச்சரோடும், மத்திய உணவு
அமைச்சரோடும் நடத்திய பேச்சுவார்த்தைகளின் விளைவாக, இனியேனும்
மத்திய அரசு, தமிழகத்தின் உணவு பற்றாக்குறையை உரிய வகையில் நீக்கிட
பேருதவி புரிய விரைவில் முன்வரும் என்று தமிழக அரசு எதிர்பார்க்கிறது.
இந்த நாட்டில் உணவு தானியங்கள் எங்கெங்கு கிடைக்கினும் அங்கெல்லாம்
சென்று, உணவு தானியங்களைக் கொள்முதல் செய்வதற்கு இம் மாநில அரசு
முனைப்பான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. தமிழ்நாடு நுகர்
பொருள் வாணிபக் கழகத்தின் அலுவலர்கள் உணவு தானியங்களைக்

கொள்முதல் செய்வதற்காக, பல்வேறு மாநிலங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளனர். இம் மாநில அரசு தன் பங்குக்கு, பொதுப்பங்கீட்டு ஏற்பாட்டினைச் செவ்வனே நடத்தவும், மக்களுக்கு உணவு தானியங்களை வழங்கப் பெருத்த செலவு ஏற்படும் என்றாலும் அவர்களுக்குப் போதிய அளவு உணவு தானியங்களை வழங்கவும் தன்னால் ஆனதையெல்லாம் செய்து வருகின்றதென மதிப்பிற்குரிய உறுப்பினர்களுக்கு உறுதி கூற விழைகிறேன்.

6. பருவ மழை பொய்த்ததன் காரணமாக, இம் மாநிலத்தில் மின்சார நிலைமையும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. இதன் விளைவாக, எல்லாவகைப் பயனீட்டாளருக்கும் அதிக அளவில் மின்வெட்டு விதிக்க வேண்டி வந்துள்ளது. இந்த மின் வெட்டு உயரழுத்த மின்சாரம் பயன்படுத்தும் தொழிற்சாலைகளுக்குத் தேவையில் 75 சதவீதமாகவும் மின்னழுத்தத்தில் 60 சதவீதமாகவும் தமிழ்நாடு மின்வாரியத்தால் விதிக்கப்பட்டுள்ளதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். மேட்டூர் உள்பட புனல் மின்சார நீர்த் தேக்கங்கள் அநேகமாக வற்றிப்போய்விட்டதால், இம் மாநில மின் இணைப்பு ஏற்பாடு இப்போது அனல் மின் உற்பத்தியையே முழுவதும் நம்பியிருக்க வேண்டிய நிலையிலுள்ளது. தொழில்களையும், குடியானவர்களையும் மின்சாரத்தைப் பயன்படுத்தும் மற்றவர்களையும் இது பெரிதும் பாதித்துள்ளது. இதன் காரணமாக, உற்பத்தி மிகவும் குறைந்துபோய் மாநில அரசுக்குப் பெருத்த வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது. அண்டை மாநிலங்களும் மின் சக்தி உற்பத்தியில் சிரமப்பட்டு வருவதால், அம் மாநிலங்களிலிருந்து முந்தைய ஆண்டுகளைப் போல், மின்சாரம் எதையும் தமிழ்நாடு பெற முடியவில்லை. ஜூன் மாதத்தில் பருவமழை பெய்யத் தொடங்கினால்தான், நிலைமை சீர்திருந்தும், அதுவரை இம் மாநிலத்தில் மின்வெட்டு இருக்கத்தான் செய்யும்.

7. தமிழக அரசு திட்டமிட்டுள்ள புதிய மின்சாரத் திட்டங்களைச் செயற்படுத்துவதற்கான அனுமதிகளை வழங்கவும், அனல் மின்சார நிலையங்களுக்குத் தேவைப்படும் நிலக்கரியை அவ்வப்போது தட்டுப்பாடில்லாமல் அளிக்கவும் மத்திய அரசு தேவையான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்றும் வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

8. எதற்கெடுத்தாலும் மத்திய அரசை மாநில அரசு எதிர்பார்க்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் சிலர் சுட்டிக் காட்டுகிறார்கள். தமிழக அரசு எதற்கெடுத்தாலும் மத்திய அரசை எதிர்பார்க்கவில்லை. எதெதற்கு மாநில அரசு, மத்திய அரசை எதிர்பார்க்க வேண்டும் என்று, அரசமைப்புச் சட்டமும், மத்திய அரசின் அதிகார ஆதிக்கவரம்புகளும் விதிமுறைகளை வகுத்துத் தந்திருக்கின்றனவோ, அது, அதைப் பொறுத்துத்தான் தமிழக அரசு எதிர்பார்க்கிறது. அவை கிட்டாத நிலையில் வற்புறுத்தி வருகிறது. ஆட்சிமுறை



நிர்வாகம், சட்டம், நீதி, பொருளாதாரம் போன்ற பல துறைகளில் மத்திய அரசுக்கும் மாநில அரசுகளுக்குமிடையே பல தகராறுகள் அவ்வப்போது எழுகின்றன. மத்திய அரசுக்கும் மாநில அரசுகளுக்குமிடையே இணக்கமான உறவு ஏற்பட, தேசிய ஒருமைப்பாட்டிற்கு ஊறு நேராவண்ணம் போதிய அதிகாரங்களோடுகூடிய தன்னாட்சி உரிமையை மாநிலங்கள் பெற வேண்டும் என்பதை இந்த ஆட்சி அடிக்கடி நினைவுபடுத்தி வருகிறது. பொதுக் கோட்பாடுகளில் மத்திய அரசு ஆதிக்கம் செலுத்துதல், மாநிலங்களுக்கு மட்டுமே சொந்தமான துறைகளிலும் மத்திய அரசு ஆதிக்கம் செலுத்துதல், மாநிலங்களின் தன்னாட்சி உரிமையைப் பெரிதும் பாதிக்கும்வகையில் மாநிலங்கள் மீது மத்திய அரசு ஆதிக்கம் செலுத்துதல், முன்னர் மாநிலங்கள் அனுபவித்துவந்த வரி விதிப்பு அதிகாரத்தையும் குறைத்தல் போன்றவைகள் மத்திய அரசை மாநில அரசுகள் எதிர்பார்த்து வாழவேண்டிய நிலையை உருவாக்கி வருகின்றன. உரிமையை வற்புறுத்துவது குற்றச்சாட்டாகாது.

9. 1967 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 27 ஆம் நாளன்று பேறிஞர் அண்ணா அவர்கள் சட்டமன்ற மேலவையில் பொதுவிவாதத்திற்கு விடையளிக்கும் போது,

"மானியங்கள் என்ற போர்வையில் மத்திய அரசு அதனிடம் சாட்டையை வைத்துள்ளது; ஏனெனில், மத்திய அரசு அதன் உளத் தேர்வின்படி மானியங்களை வழங்குகிறது . . . —திட்டத் தொகையைப் பொறுத்தவரையில் நிதித் தொடர்புகள் மறு ஆய்வு செய்யப்பட வேண்டும்; மிக விரைந்து செய்யப்பட வேண்டும். நமக்குச் சேர வேண்டியது, நம்மிடமிருந்து கொள்ளை போகக்கூடாது. மாநில அரசுக்கும் மத்திய அரசுக்கும் உள்ள தொடர்பு மறு ஆய்வு செய்யப்பட வேண்டும்" என்றும்

10. 1967 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 17 ஆம் நாளன்று சட்டமன்ற அவைகளில் வரவு-செலவுத் திட்டத்தை அளிக்கும்போது,

"திட்டத்திற்காக நிதி ஆதாரங்களைத் திரட்டுதல், ஒதுக்கீடு செய்தல், அதைப் பயன்படுத்துதல், சம்பந்தமாக மத்திய அரசு கொண்டுள்ள அதிகாரங்கள், மத்திய அரசிடம் உதவிக்காக இறைஞ்சி வேண்டுபவர்களின் நிலைக்கு மாநிலங்களின் தகுதியைக் குறைத்துள்ளன. கட்சிக் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டுச் சிலர் இச் சிக்கலை விவாதிக்காமல் ஒதுங்கியிருந்தாலும், பொருளாதார ரீதியில் இச் சிக்கலை நோக்குபவர்கள் அனைவரும் மத்திய அரசுக்கும், மாநில அரசுகளுக்குமிடையே நிதித் தொடர்பு சம்பந்தப்பட்ட போக்குகள் குறித்துக் கவலை கொண்டுள்ளனர். மாநிலங்கள் அவற்றின் விருப்பப்படி நிதி ஒதுக்கீடுகளைப் பயன்படுத்தும் முழு உரிமையுடன் வருவாய்ப் பெருக்க வாயில்களை ஏற்படுத்திக் கொண்டும், ஒப்புக்கொண்ட

அடிப்படையில் திட்ட ஆதாரங்களை ஒதுக்கீடு செய்தும், மாநிலங்களின் நிதி அடிப்படை பெருமளவு வலிமைக்கப்பட்டாலன்றிப் புதிய சமுதாயம் காண வேண்டும் என்னும் மக்களின் வளர்ந்து வரும் விருப்பத்தினை சமாளிப்பதில், மாநில அரசுகள் அவற்றின் பொறுப்புக்களை நிறைவேற்றிட இயலாது என்பதைப் பல மாநில அரசுகளின் முதலமைச்சர்கள் உணர்ந்துள்ளனர்," என்றும் குறிப்பிட்டிருப்பது கூர்ந்து நோக்கத்தக்கதாகும்.

மத்திய-மாநில அரசுகளின் உறவுமுறை மிக்க நிலையான அடிப்படையில் சீரமைக்கப்பட வேண்டிய காலம் அவசரமாக வந்துள்ள நிலையை எவரும் குறைத்து மதிப்பிட முடியாது என்பது, எல்லாராலும் உணரப்பட வேண்டிய ஒன்றாகும்.

## வறட்சி நிலை.

11. இம் மாநில அரசு மோசமான பருவ நிலைமைகளை எதிர்த்துப் போராடுவதற்காகத் துயர் தணிப்பு நடவடிக்கைகளைப் பெரிய அளவில் மேற்கொள்வதற்காக இதுவரை ரூ. 45.63 கோடி அளவிற்கான செலவை அனுமதித்துள்ளது. தமிழ்நாடு குடிநீர்-வடிகால் வாரியம் கிராமப் பகுதிகளிலும் நகராட்சிப் பகுதிகளிலும் 1982 ஆகஸ்டு மாதத்திலிருந்து ஆயிரக் கணக்கான துளைக் கிணறுகளை அமைத்துள்ளது. அதே நேரத்தில், சமுதாயக் கிணறுகளை ஆழப்படுத்தும் பணியும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. கிராமத் தினருக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் நோக்குடன் தொழிலாளர் அதிகம் தேவைப்படுகிற பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலே சொல்லிய அனுமதிக்கப்பட்ட செலவில் தஞ்சாவூர் மாவட்டத்தில் 5,000 வடிமுனைக் குழாய்க் கிணறுகளை அமைப்பதற்குத் தொடக்க நிலவள வங்கிகளுக்கு அரசு ஒப்புதலளித்த ரூ. 7.50 கோடி கடனும் அடங்கும். வரும் ஆண்டுகளிலும் வேளாண்மை நடவடிக்கைகளை உறுதிப்படுத்த இவை பெரிதும் உறுதுணை யாக இருக்கும். நகராட்சிகளிலும், பேரூராட்சிகளிலும் ஊராட்சிகளிலும் குடிநீர் வழங்கும் அமைப்புகளில் தனிப்பட்ட நீர்வாவுக் குழாய்கள் அமைக்கும் பணியும் தொடங்கப்பட்டுள்ளது. பெரும் பாசன ஆதாரங்களையும் சிறு பாசன ஆதாரங்களையும் மேம்படுத்தவும், புதிய சாலைகள் அமைக்கவும் இன்னபிற பணிகளை மேற்கொள்ளவும் மாவட்டங்களில் வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மக்களின் இன்னல்களைப் போக்குவதற்கு எவ்வளவு செலவு செய்ய வேண்டியிருந்தாலும் அச் செலவைச் செய்வதற்கு இவ்வரசு தயங்காது.



12. சில ஆண்டுகளாக இம் மாநிலம் மேலே விளக்கிக் கூறியுள்ளவாறு பல இடுக்கண்களை எதிர்கொள்ள வேண்டியிருப்பினும், பற்பல துறைகளிலும் கணிசமான முன்னேற்றத்தை இம் மாநிலம் எய்தியுள்ளது.

## வேளாண்மை.

13. இம் மாநிலத்தின் பொருளாதாரத்தில் வேளாண்மைத் துறைக்கு மிக முக்கியமான பங்கு உண்டு. வேளாண்மை விரிவாக்கப் பணி வசதிகள், நல்ல விற்பனை வசதி, சேமிப்புக் கிடங்கு வசதிகள், மேம்படுத்தப்பட்ட தரமான விதைகளை வழங்குதல் முதலிய வசதிகளைச் செய்து கொடுப்பதன் மூலம், வேளாண்மை மேம்பாட்டிற்குச் சிறப்பு நடவடிக்கைகள் பலவற்றை அரசு மேற்கொண்டுள்ளது. ஒவ்வொன்றும் 1,000 மெட்ரிக் டன் திறனளவுள்ள கிராமப்புற கிடங்குகள் 89-ஐக் கட்டுவதற்கு இந்திய அரசு தரும் நிதியுதவியை, அரசு பெரிதும் பயன்படுத்தியுள்ளது. உழவர்கள் தங்களது விளைபொருள் களைக் கொண்டுவந்து, அவர்களுக்கு நல்ல விலை கிடைக்கும் வரையில், அவற்றை உரியவாறு சேமித்து வைக்க இத் திட்டம் பெரிதும் உதவும். உழவர் களுக்குத் தரமான விதைகளை உற்பத்தி செய்து பகிர்ந்தளிப்பது மிகவும் அவசியமான பணியாக இருப்பதால், அடுத்த நிதியாண்டில் விதைகளைப் பதப்படுத்தும் பிரிவுகள் இரண்டு, ரூ. 24 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் தொடங்கப்படும். மொத்தம் 4 இலட்சம் ஹெக்டேர் பரப்பளவு பயனடையும் வகையில், சிறிய அளவில் பாசன ஆதாரங்கள் 212-ஐ கட்டிப் புன்செய் பயிர்ச் சாகுபடி தொழில் நுட்ப உத்திகளை மேம்படுத்தி, அவற்றை உழவர்களுக்குத் தெரியச் செய்வதில் வேளாண் பொறியியல் துறை முனைப்பாகப் பங்கு கொண்டுள்ளது. 1981-ல் நிறுவப்பட்ட தமிழ்நாடு கூட்டுறவு எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியாளர்கள் இணையம் உழவர்களிடமிருந்து 1,000 டன் வேர்க்கடலையைக் கொள்முதல் செய்வதன் மூலம் தனது பணியைத் தொடங்கி யுள்ளது. அரசு நடத்திவருகின்ற செடிப் பண்ணைகளில், ரூபாய் 15 இலட்சம் மானிய உதவியுடன், பாசன வசதிகளை நடப்பு நிதியாண்டிலிருந்து மூன்றாண்டுக் கால அளவில் மேம்படுத்த, கொச்சி, தென்னை அபிவிருத்தி வாரியம் முன்வந்துள்ளது. எண்ணெய் வித்துக்கள் மாநில இயக்ககம் தரமான விதைகளைக் கொள்முதல் செய்யும் தன்னுடைய பணியை முழுமூச்சுடன் மேற்கொண்டுள்ளது; மேலும், அடுத்த நிதியாண்டில், நிலப்பரப்பில் 4 சதவீதப் பகுதியில் மேம்படுத்தப்பட்ட விதைகளைக் கொண்டு உற்பத்தியை மேம்படுத்தவும் திட்டமிட்டுள்ளது. 1983-84 ஆம் ஆண்டு, வேளாண்மைத் துறைக்காக, மொத்தம் ரூ. 88.87 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

### கால்நடை வளர்ப்பு.

14. நன்கு அமைக்கப்பட்ட கால்நடை மருத்துவ நிறுவனங்களின் மூலமாக, இம் மாநிலத்திலுள்ள கால்நடைகளுக்கு உரிய சுகாதார வசதிகளை வழங்குவதில் இவ்வரசு நாட்டம் கொண்டுள்ளது. அடுத்த நிதியாண்டில் ரூ. 31.08 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் புதிதாக மருந்தகங்கள் 25 ஐத் தொடங்கியும், மூன்று மருந்தகங்களைக் கால்நடை மருத்துவமனைகளாக நிலை உயர்த்தியும், கால்நடை மருத்துவ மனைகள் 2-ஐ மருத்துவச் சாலைகளாக நிலை உயர்த்தியும் அவற்றின் மூலமாக இத் துறை வலுப் படுத்தப்படும். இந்திய அரசின் நிதியுதவியுடன் கலப்பினக் கறவை மாடுகளைக் கொண்டு கலப்பின கால்நடைகளை உருவாக்கவும், எருமை மாடுகளின் தரத்தை மேம்படுத்தவும், ரூ. 117.31 இலட்சம் செலவில் உறை விந்து வங்கித் திட்டம் ஒன்றுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் ஏழு இலட்சம் கலப்பினக் கால்நடைகளும் எருமை மாடுகளும் பயனடையும். கால்நடை வளர்ப்புத் துறை நோய்த் தடுப்பு நடவடிக்கையை மேற்கொள்ளும் பொருட்டு, கால்நடைகளுக்கு ஏற்படுகின்ற நோய் குறித்துக் கண்டறிவதற்காக, கால்நடை நோய் தகவல் சேகரிப்புப் பிரிவு ஒன்றை அடுத்த நிதியாண்டில் தொடங்க, வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 9.64 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. அடுத்த நிதியாண்டில் ரூ. 17.40 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் செங்கற்பட்டு, தருமபுரி மாவட்டங்களில் செம்மறியாடு இன வளர்ச்சிக்காக மனைப்பு சுகாதாரத் திட்டம் ஒன்று செயலுக்குக் கொண்டு வரப்படும்.

### பால் பண்ணை வளர்ச்சி.

15. பாலைக் கொள்முதல் செய்யும் பணியைப் பால்பண்ணைக் கூட்டுறவுச் சங்கங்களிடமே ஒப்படைக்க வேண்டும் என்கிற அரசின் கொள்கை முடிவின்படி, கிராம அளவில் தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களும், மாவட்ட அளவில் கூட்டுறவு ஒன்றியமும், மாநில அளவில் கூட்டுறவு இணையமும் ஆக மூன்று நிலைகளில் பால் பண்ணை அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. "ஆனந்த்" முறையைப் பின்பற்றி, புதிய சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. தற்போதுள்ள பால் வழங்கல் சங்கங்கள் அனைத்தும் பால் உற்பத்தியாளர் சங்கங்களாக மாற்றப்பட்டுள்ளன. 1983-84-ல் புதிதாகப் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் 500 ஏற்படுத்தப்படும். நாளொன்றுக்கு 10,000 லிட்டர் பாலைக் குளிரூட்டும் வசதி பெற்ற பால் குளிரூட்டு நிலையம் ஒன்று அடுத்த நிதியாண்டில் ரூ. 19 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் பட்டுக்கோட்டையில் தொடங்கப்படும். மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நடப்பாண்டில் உதகமண்டலத்தில் பால் பண்ணை ஒன்று தொடங்க ரூ. 55 இலட்சத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஒரு இலட்சம் லிட்டர் பால் உற்பத்தி வசதிக்காக, கிருஷ்ணகிரியில் சீர்நிலை சினைப் பால்பண்ணை நிறுவுதல் தொடர்பான பணி முடிவடையும் நிலையில் உள்ளது.



### கூட்டுறவு.

16. கூட்டுறவு நிறுவனங்களுக்கு வரவேண்டிய கடன்கள் தொடர்ந்து நிலுவையாக இருந்துவந்த போதிலும்கூட, இம்மாநிலத்திலுள்ள கூட்டுறவு நிறுவனங்கள், கடன் வழங்கு விதிகளுக்குட்பட்டு, உழவர்களுக்கும் ஏனையோருக்கும் இயன்ற அளவு கடன் வழங்கி வந்துள்ளன. நீண்ட காலக் கூட்டுறவுக் கடன்களைப் பொறுத்தவரையில், தொடக்க நிலவள வங்கிகள், 1980-81, 1981-82 ஆகிய ஆண்டுகளில் முறையே ரூ. 4.76 கோடியும் ரூ. 5.50 கோடியும் கொடுத்திருக்க, 1982-83 ஆம் ஆண்டில் டிசம்பர் 1982 வரையில் ரூ. 10.50 கோடி கொடுத்துள்ளன. தொடக்க வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், 1982 ஆம் ஆண்டு டிசம்பர் வரையில் குறுகிய காலக் கடனாக ரூ. 53.64 கோடியும் நடுத்தரக் காலக் கடனாக ரூ. 10.36 கோடியும் கொடுத்துள்ளன. நலிந்த பிரிவுகளைச் சேர்ந்தோரின் பொருளாதார நிலையை மேம்படுத்த, கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்கள் தொடர்ந்து முயன்று வருகின்றன. கொடுக்கப்பட்ட குறுகிய கால, நடுத்தரக் காலக் கடன்களில் ஏறக்குறைய 64 சதவீதம் நலிந்த பிரிவினர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. பால் பண்ணை, செம்மறியாடு வளர்ப்பு முதலிய துணைத் தொழில்களுக்காக நலிந்த பிரிவினர்களுக்குக் கொடுக்கப்பட்ட நடுத்தரக் காலக் கடன்கள், வழங்கப்பட்ட மொத்தக் கடன்களில் 98 சதவீதம் என்ற அளவுக்கு இருப்பது குறிப்பிடத்தக்கதாகும். இந்திய ரிசர்வ் வங்கி ஒப்புதல் அளித்துள்ள பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ள சிறு தொழில்களிலும் குடிசைத் தொழில்களிலும் ஈடுபட்டுள்ள நலிந்த பிரிவினர்களுக்கு 4 சதவீதச் சலுகை வட்டி விதத்தில் கடன் வழங்கப்படுகிறது. இந்தச் சலுகை வட்டிவீதங்கள், பெரிய அளவிலான பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளன.

17. கூட்டுறவுச் சங்கங்கள், கிராம அளவிலான நியாய விலைக் கடைகள் 11,159-ஐ நடத்துகின்றன. 1981-82 ஆம் ஆண்டில் அவற்றின் வியாபாரத் தொகை ரூ. 85 கோடி ஆகும். இம்மாநிலத்தில் உள்ள மொத்த விற்பனைக் கடைகள் உட்பட நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் அனைத்தின் ஆண்டு விற்பனைத் தொகை 1981-82-ல் ரூ. 211 கோடிக்கு உயர்ந்துள்ளது. ஆதி திராவிடர் வகுப்பைச் சேர்ந்த ஒரு இலட்சம் குடும்பங்களில் ஒவ்வொரு குடும்பத்திலிருந்தும் ஒருவரை வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினராகச் சேர்த்து, அச்சங்கங்கள் அளிக்கும் கடன் வசதியையும் ஏனைய பயன்களையும் அவர்கள் பெறும் வகையில் அமைந்துள்ள திட்டம், தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் அடுத்த நிதியாண்டில் ரூ. 20 இலட்சம் செலவில் 20,000 உழவர்கள் அச் சங்கங்களில் சேர்த்துக்கொள்ளப்படுவர். 1983-84 ஆம் ஆண்டில் நுகர்வோர், நல்ல தரமான உணவு தானியங்கள், சமையல் எண்ணெய் முதலியவற்றைப் பெறவேண்டி, தா

சோதனை ஆய்வுக்கூடங்களை நிறுவ, மொத்த விற்பனைக் கூட்டுறவுக் கடைகள் நான்கிற்கு நிதியுதவி அளிக்கப்படும். மொத்தம் 25,000 டன் கொள்ளளவுள்ள 200 கிராமக் கிடங்குகளையும் 5 விற்பனைக் கிடங்குகளையும் கட்ட 1983-84-ல் அரசு நிதியுதவி அளிக்கும்.

### மீனளம்.

18. மீனள மேம்பாட்டுக்கான பல்வேறு திட்டப்பணிகள் ஏற்கெனவே நிறைவேற்றப்பட்டு வருகின்றன. அடிப்படை வசதிகளைச் செய்துகொடுக்கும் பொருட்டு, இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள தொண்டி என்னுமிடத்தில், பிடித்த மீன்களைக் கரை சேர்க்கும் தோணித் துறையை ரூபாய் 41 இலட்சம் செலவில் அமைப்பதற்கான செயற்குறிப்பினை இவ்வரசு அனுப்பியுள்ளது. இதற்கு மத்திய அரசு இசைவளித்துள்ளது; இப்பணி, மிக்க விரைவில் தொடங்கப்படும். செயற்கை முத்துக்களை உருவாக்கி, அவற்றை விற்பனை செய்வதற்காக, 'சதர்ன் பெட்ரோ கெமிகல் இண்டஸ்டிரீஸ் கார்ப்பொரேஷன் லிமிடெட்' (ஸ்பிக்), என்ற நிறுவனத்துடன் கூட்டுத் துறையில் நிறுவனம் ஒன்றை அமைப்பதற்காக, தமிழ்நாடு மீனள மேம்பாட்டுக் கழகம் அனுப்பிய செயற்குறிப்பிற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டத்திற்காகும் மதிப்பீட்டுச் செலவு ஏறக்குறைய ரூ. 40 இலட்சம் ஆகும். முத்துச்சிப்பிகளைச் சேகரிப்பது, செயற்கை முறையில் அவற்றில் முத்துக்களை வளர்ப்பது, அவற்றை விற்பனை செய்வது ஆகியவை இத் திட்டத்தில் அடங்கும். அடுத்த நிதியாண்டில் சென்னை மீன்பிடி துறைமுகத்தில் பனிக்கட்டி (ஐஸ்) தயாரிக்கும் இயந்திரச்சாலை ஒன்று நிறுவுவதற்காக, அரசு மீனள மேம்பாட்டுக் கழகத்திற்கு ரூ. 20 இலட்சம் பங்கு மூலதனம் அளிக்கிறது. தூயநீர் மீனளத்தை மேம்படுத்துவதற்காக, சில அணைக்கட்டுகளையும் குளங் குட்டைகளையும் பழுதுபார்ப்பதற்காக அடுத்த நிதியாண்டில் ரூ. 24.70 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

### காடு வளர்ப்பு.

19. 'ஸ்வீடன்' நாட்டைச் சேர்ந்த அனைத்து நாட்டு வளர்ச்சி நிறுவனத்தின் நிதியுதவியுடன் 1981, ஏப்ரல் திங்களில் தொடங்கப்பட்ட சமூகக் காடு வளர்ப்புத் திட்டம் முனைப்புடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கென அடுத்த நிதியாண்டில் ரூ. 8.47 கோடி ஒதுக்கப் பட்டுள்ளது. கள்ளத்தனமாக மரங்களை வெட்டியெடுப்பதைத் தடுப்பது, அனுமதியின்றி மரங்களை எடுத்துச் செல்வதைத் தடுப்பது ஆகிய பணி களுக்காகத் தற்போதுள்ள சோதனைச் சாவடி முறையை வலுப்படுத்த





வேண்டி, மாநிலத்திற்கிடையிலான சாலைச் சந்திப்புகளில மேலும் 18 சோதனைச்சாவடிகள் 1983-84 ஆம் ஆண்டில் ரூபாய் 13 இலட்சம் செலவில் தொடங்கப்படும். வனச் செல்வத்தின் முக்கியத்துவம், வனவிலங்குப் பாதுகாப்பின் அவசியம் குறித்து சிறு வயதிலிருந்து குழந்தைகள் அறியும் வண்ணம், வன விலங்கு, இயற்கைச் சூழலை எவ்வாறு பாதுகாப்பது என்பவை குறித்த புத்தகங்களைப் பள்ளி மாணவர்களுக்குக் கொடுப்பதென அரசு முடிவு செய்துள்ளது. மேலும், பள்ளி மாணவர்களுக்குக் காண்பிக்க, வன விலங்கு உய்விடங்கள் பற்றிய வண்ணப்படம் தயாரிக்கப்படும், வன விலங்கு உய்விடங் களுக்குக் குழந்தைகளை அழைத்துச் செல்லும் திட்டம், அடுத்த நிதி ஆண்டில் தொடங்கப்படும்.

20. தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம், தனது தேயிலையை அண்மையில் ஏற்றுமதி செய்துள்ளது. இதுவரை, 45,000 கிலோகிராமுக்கு மேல் இது ஏற்றுமதி செய்துள்ளது; இதன் மதிப்பு ரூ. 9.40 இலட்சம் ஆகும்.

### பாசனம்.

21. நடப்பு நிதியாண்டில் ஆறு புதிய நடுத்தரப் பாசனத் திட்டங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன. கோல்வார்பட்டி நீர்த் தேக்கத் திட்டம் (ரூ. 597 இலட்சம்), ஆனைகுட்டம் நீர்த் தேக்கத் திட்டம் (ரூ. 276 இலட்சம்), ஆனைமடுவு நீர்த் தேக்கத் திட்டம் (ரூபாய் 554 இலட்சம்), குதிரையாறு நீர்த் தேக்கத் திட்டம் (ரூபாய் 406 இலட்சம்), கரியகோவில் நீர்த் தேக்கத் திட்டம் (ரூபாய் 576 இலட்சம்), சோத்துப்பாறை நீர்த் தேக்கத் திட்டம் (ரூபாய் 791 இலட்சம்) ஆகியவையே இத் திட்டங்களாகும். 11,656 ஹெக்டேர் பரப்பளவிற்குப் புதிதாகப் பாசனம் அளிக்கவும் பழைய பரப்பளவில் 144 ஹெக்டேர் பரப்பளவிற்குப் பாசன வசதியளிக்கவும் நன்செய் ஆயக்கட்டில் 1,766 ஹெக்டேர் பரப்பளவிற்குப் பாசன வசதியை உறுதிப்படுத்தவும் இத்திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. 31,250 மெட்ரிக் டன் கூடுதல் உணவு உற்பத்தி கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இவற்றுடன் நடப்பு நிதி யாண்டில் 8 புதிய சிறு பாசனத் திட்டங்களும் அனுமதிக்கப்பட்டுள்ளன. இவற்றால் 330 ஹெக்டேர் பரப்பளவிற்குப் புதிதாகப் பாசன வசதி கிடைக்கும். அடுத்த நிதியாண்டில் 30 சிறு பாசனத் திட்டங்களை நிறைவேற்றி முடிப்பதென இலக்கிடப்பட்டுள்ளது. இவற்றால், மேற்கொண்டும் 2,530 ஹெக்டேர் பரப்பளவிற்குப் பாசன வசதி கிடைக்கும்.

22. பெரியாறு-வைகை கால்வாய் அமைப்பை நவீனப்படுத்தும் திட்டம் உலக வங்கி நிதியுதவியுடன் செவ்வனே நிறைவேற்றப்பட்டு வருகிறது. இத் திட்டம் நல்ல வகையில் நடந்தேறி வருகிறது. இத்திட்டத்திற்கென அடுத்த நிதியாண்டிற்கு ரூ. 10.50 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இத் திட்டம் 1984-க்குள்

நிறைவுறுமென எதிர்பார்க்கப்படுகிறது. பெரியாறு-வைகை கால்வாய் அமைப்பை நவீனப்படுத்தும் திட்டத்தின் 2 ஆம் நிலையை மேற்கொள்வதற்காக அடுத்த நிதியாண்டில் ரூ. 5 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. பாசனம் மற்றும் வெள்ளக் கட்டுப்பாடு துறைகளுக்காக அடுத்த நிதியாண்டில் ரூ. 105.16 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

## மின் உற்பத்தி.

23. திட்டப் பணிகளுக்கு நிதி ஒதுக்கம் பெறுவதில் மின்சாரத் துறையே தொடர்ந்து முதலிடம் வகித்து வருகிறது. மாநிலத்தின் ஆறாவது திட்ட நிதி ஒதுக்கீட்டில் 30 சதவீதத்திற்கு மேற்பட்ட பகுதி மின் உற்பத்தித் திட்டங்களுக்குத்தான் ஒதுக்கப்பட்டுள்ளது. அடுத்த நிதியாண்டில் மின் உற்பத்திக்கென ரூ. 272.42 கோடி அளவிற்குச் செலவிட புத்திய திட்டக்குழு ஒப்புதல் அளித்துள்ளது. அடுத்த நிதியாண்டுக்கான திட்ட மொத்த நிதி ஒதுக்கீட்டில் இது 30 சதவீதத்திற்கு மேற்பட்டுள்ளது.

24. வேளாண்மை விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு கொடுப்பதில் இந்நாட்டிலேயே மற்ற எல்லா மாநிலங்களையும்விட இம்மாநிலமே சிறந்து விளங்கி வருகிறது. 31—12—1982 நிலவரப்படி 9.6 இலட்சம் வேளாண்மை விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது. நடப்பு நிதியாண்டில் 52,564 குடிசைகளுக்கு மின் வசதி அளிக்கப்பட்டுள்ளது. இதனால், மின் வசதி பெற்றுள்ள குடிசைகளின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சமாக உயரும். நடப்பாண்டில் 31—12—1982 வரை 17 குறு சிற்றூர்களும் 16 சிற்றூர்களும் மின்வசதி பெற்றுள்ளன. இன்னும் 353 குறு சிற்றூர்களுக்கும் 108 சிற்றூர்களுக்கும் மின் வசதி அளிக்க வேண்டியுள்ளது. 1984-85 இறுதிக்குள் அவற்றுக்கும் மின் வசதி அளிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

25. பெரிய அளவில் மின் உற்பத்தித் திட்டங்களாகிய சேர்வலாறு (20 மெ.வா.), கீழ் மேட்டூர் (120 மெ.வா.), காடம்பாறை (400 மெ.வா.), குந்தா ஐந்தாவது கூடுதல் இயந்திரம் (20 மெ.வா.), பார்சன்ஸ் பள்ளத்தாக்கு (30 மெ.வா.), மேட்டூர் அனல்மின் திட்டம் (420 மெ.வா.) ஆகியவையும் சிறு அளவில் மேற்கொள்ளப்படும் புனல்மின் திட்டங்களாகிய பைகாரா, கீழ் பவானி, வைகை அணை திட்டங்களும் (16 மெவா.) நிறைவேறி வருகின்றன.

26. இம் மாநிலத்தில் அனல் மின் உற்பத்தி 1981-82-ல் 337.4 கோடி யூனிட்டாக இருந்தது. நடப்பாண்டில் 416 கோடி யூனிட்டாகவும் அடுத்த நிதியாண்டில் 500 கோடி யூனிட்டாகவும் உயருமென எதிர்பார்க்கப்படுகிறது.



27. குறைந்த மின் கட்டணங்கள், கூடுதல் பராமரிப்புச் செலவு, திட்டங்களை நிறைவேற்றுவதற்காகும் செலவு உயர்வது ஆகியவற்றின் காரணமாக, தமிழ்நாடு மின் வாரியத்திற்குக் கடுமையான நிதி இடர்ப்பாடுகள் ஏற்பட்டுள்ளன. நிலக்கரி விலையும் எண்ணெய் விலையும் ஏறிவிட்டதன் காரணமாக, நிலைமை மேலும் மோசமாகியுள்ளது. இரயில்வே சரக்குக் கட்டணத்தையும் டீசல் எண்ணெய் விலையையும் மத்திய அரசு அண்மையில் உயர்த்தி இருப்பதால், தமிழ்நாடு மின்வாரியத்தின் செலவு மேலும் உயரும். கப்பல் சரக்குக் கட்டணமும் நிலக்கரியை இறக்கி, கொண்டு வருவதற்கான செலவும் அண்மையில் கணிசமாக உயர்ந்துள்ளன. இவற்றின் காரணமாக மின் வாரியத்தின் நிதி நிலைமை மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. நிதியாதாரத்திற்கும் செலவிற்கும் இடையிலுள்ள பற்றாக்குறையை ஓரளவேனும் நிறைவு செய்ய மின்வாரியத்திற்கு உதவும் பொருட்டு, மின் கட்டண விதங்களை உயர்த்துவதைத் தவிர மாநில அரசுக்கு வேறுவழியில்லை.

28. மின் உற்பத்தியைப் பெருக்குவதற்காக மேட்டூர் மின் உற்பத்தி நிலையத்தை விரிவுபடுத்துவது (420 மெ.வா.), தூத்துக்குடி மின் உற்பத்தி நிலையத்தை விரிவுபடுத்துவது (710 மெ.வா.), வடசென்னை மின் உற்பத்தித் திட்டம் (1,050 மெ.வா.) முதலிய திட்டங்கள் மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. மேட்டூர் மின் உற்பத்தி நிலைய விரிவுத் திட்டத்திற்கு மத்திய மின் சக்தி அதிகார மன்றம் அனுமதியளித்துள்ளது. ஆனால், இத் திட்டத்திற்கும் மத்திய அரசின் பல்வேறு நிலைகளில் மேற்கொண்டும் அனுமதி கிடைத்தாக வேண்டும். ஏனைய திட்டங்களுக்கு இதுவரை அனுமதி கிடைக்கவில்லை.

## தொழில் வளர்ச்சி.

29. இன்றியமையாத தேவைப்படும் அடிப்படை வசதிகளைச் செய்து கொடுப்பதன் மூலமாகவும் பெருந் தொழில்களையும், நடுத்தரத் தொழில்களையும், சிறு தொழில்களையும், கிராமத் தொழில்களையும் குடிசைத் தொழில்களையும் ஏற்படுத்துவதற்காக எல்லா வகையான உதவிகளை அளிப்பதன் மூலமாகவும் இம் மாநிலத்தை விரைந்து மேலும் மேலும் தொழில் மயமாக்குவதே இவ்வரசின் கொள்கையாகும். இவ்வகையில் அரசின் பல்வேறு நிறுவனங்களும் தத்தம் துறைகளில் முனைப்பாகச் செயலாற்றி வருகின்றன. எடுத்துக்காட்டாக, நடப்பு நிதியாண்டில் மாவட்டத் தொழில் மையங்கள் இதுவரை 12,253 சிறு தொழில் பிரிவுகளைப் பதிவு செய்துள்ளன. இவற்றின் மூலம் 43,000 பேர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படும். இந்த மாவட்டத் தொழில் மையங்கள் மூலமாக வங்கிகளிலிருந்தும் நிதி உதவி அளிக்கும் ஏனைய நிறுவனங்களிடமிருந்தும் நடப்பு நிதியாண்டில் ரூ. 11.60 கோடி அளவுக்குத்

தொழில் முனைவோருக்கு நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது. இந்த மாவட்டத் தொழில் மையங்கள் பயிற்சித் திட்டங்களையும் நடத்தி வருகின்றன. இதுவரை 15,000 பேர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

30. இம்மாநிலத்தில் சிறு தொழில்களை மேம்படுத்துவதற்கான பொறுப்பு தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. நிதி வகையில் நலிவுற்ற தொழில்களுக்குத் தொடக்க நிதியுதவித் திட்டத்தின் கீழ் நடப்பு நிதியாண்டில் இந்நிறுவனத்தின் மூலம் ரூ. 15.37 இலட்சம் அளவுக்கு நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது. வட்டியில்லா விற்பனை வரிக்கடன் ரூ. 22.03 இலட்சம் அளவுக்கு அளிக்கப்பட்டுள்ளது. மத்திய அரசின் மூலதன முதலீட்டு உதவித் தொகையையும், மாநில அரசின் மூலதன முதலீட்டு உதவித் தொகையையும், குறைவழுத்த மின்சக்தி உதவித் தொகையையும் பெறத் தகுதிபெற்ற தொழில் பிரிவுகளுக்கு இந் நிறுவனமே வழங்கி வருகிறது. முதலமைச்சர் சத்துணவுத் திட்டத்தின்கீழ் குழந்தை நல நிலையச் சிறுவர் களுக்கு வழங்க வேண்டிய கல்வி சாதனங்களையும் இலவசமாக வழங்கப்படும் பல்பொடியையும் தயாரிப்பதற்காக சிறு தொழில் பிரிவுகள் மூலம் இந் நிறுவனம் ஏற்பாடு செய்துள்ளது. கிராமப் பகுதிகளில் வேலைவாய்ப்பு ஏற்படுத்துவதன் மூலம் கதர்-கிராமத் தொழில் வாரியம் பெரும் பயனுள்ள பணியாற்றி வருகிறது. நடப்பு நிதியாண்டில் ரூ. 76 கோடி மதிப்புள்ள பொருள்களை விற்பனை செய்யும் திட்டமும் 33,000 பேர்களுக்குக் கூடுதல் வேலைவாய்ப்பு ஏற்படுத்தும் திட்டமும் இவ்வாரியத்திடம் உள்ளன. இவ்வாரியம் மேற்கொண்ட சிறப்பு முயற்சிகள் காரணமாக, இவ்வாண்டில் கதர் பட்டு ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது. தொழில் முறைப் பிரிவு ஒன்றை ஏற்படுத்துவதன் மூலம் பாலிஸ்டர் துணி உற்பத்தி செய்யும் பெரும் திட்டம் ஒன்றையும் இவ்வாரியம் வகுத்துள்ளது.

31. பெருந்தொழில் துறையில் அரசுத் துறையிலும் கூட்டுத் துறையிலும் தொழில் திட்டங்களை ஏற்படுத்தும் பணி, தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டு, பலவகையான திட்டங்கள் நிறைவேற்றப் பட்டு வருகின்றன. அரக்கோணத்தில் உருக்கு மறு-உருளை ஆலை ஒன்று ரூ. 7 கோடி செலவில் நிறுவப்பட்டு வருகிறது. காட்பாடி வட்டத்தில் வெடி மருந்துத் தயாரிப்புச் சாலையொன்றை ஏற்படுத்தும் பணி ரூ. 19 கோடி மதிப்பீட்டுச் செலவில் 'டிட்கோ' நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்நிறுவனத்தின் கூட்டுத் துறை திட்டமாகிய தூத்துக்குடி ஆல்கலி இரசாயனப் பொருள்கள்-இரசாயன உரங்கள் உற்பத்தி நிறுவனம் ரூ. 60 கோடி செலவில் அமைக்கப்பட்டு, நடப்பு நிதியாண்டில் சோடா ஆஷ், அம்மோனியம் குளோரைட் ஆகியவற்றை உற்பத்தி செய்யத் தொடங்கி விட்டது. வேறு சில திட்டங்கள் குறித்தும் 'டிட்கோ' நிறுவனம் நடவடிக்கை எடுத்து வருகிறது.



32. தமிழ்நாடு கனிம நிறுவனம், மாநில அரசின் தொழில் நிறுவனமாகும். மிகத் திறமையுடன் நடைபெற்றுவரும் நிறுவனம் என்ற நற்பெயரை இது தொடர்ந்து நிலைநாட்டி வருகிறது. நடப்பு நிதியாண்டில் இந்நிறுவனம் ரூ. 35 இலட்சம் செயல் ஆதாயம் ஈட்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நிறுவனம் நான்காவது ஆண்டாகத் தொடர்ந்து ஆதாயம் ஈட்டி வருகிறது. இந்நிறுவனம் 1981-82 ஆம் ஆண்டில் ரூ. 98 இலட்சம் அளவுக்குக் கனிப்பொருள்களை விற்பனை செய்தது. இந்த விற்பனை, 1982-83-ல் ரூ. 150 இலட்சமாக உயருமென எதிர்பார்க்கப்படுகிறது. அடுத்த நிதியாண்டில் ரூ. 200 இலட்சம் அளவுக்கு விற்பனை நடைபெற வேண்டுமென இலக்கிடப்பட்டுள்ளது. விற்பனைத் தொகையில் 90 சதவீதம் அன்னியச் செலாவணி ஈட்டும். சென்னைக்கருகில் மணலியில் முற்றிலும் ஏற்றுமதி நோக்கிலான கறுப்புக்கல் மெருகேற்றும் பிரிவு ஒன்றை ரூ. 393 இலட்சம் செலவில் ஏற்படுத்தும் திட்டமும் இந்நிறுவனத்திடம் உள்ளது. சிவகெங்கையில் கிடைக்கும் கிராபைட் படிவங்களைப் பயன்படுத்தி, கனிப்பொருள் செறிவுச்சாலை-மூசை தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை மொத்தம் ரூ. 258 இலட்சம் செலவில் ஏற்படுத்தவும் இந்நிறுவனம் திட்டமிட்டுள்ளது. இத் தொழிற்சாலை 1983-84 ஆம் ஆண்டின் முதல் பாதியில் உற்பத்தியைத் தொடங்குமென எதிர் பார்க்கப்படுகிறது. வெளிநாட்டுத் தொழில் நுட்ப உத்தி தேவைப்படும் கிராபைட் மூசைகள் தயாரிப்பு பின்னர் மேற்கொள்ளப்படும்.

33. தமிழ்நாடு சிறுதொழில் மேம்பாட்டு நிறுவனம், தொழிற்சாலைகளுக்கு நிதி உதவி அளிக்கிற அரசு நிறுவனங்களில் ஒன்றாகும். நடப்பு நிதியாண்டில் 31—1—1983 வரை இந் நிறுவனம் ரூ. 22.41 கோடி அளவுக்கு நிதியுதவி அளித்துள்ளது. இந்த நிதியாண்டு முடிவதற்குள் இத்தொகை ரூ. 25 கோடியாக உயருமென எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நிறுவனம் தொழிற்பேட்டைகளை ஏற்படுத்தும் பணியில் முழு மூச்சுடன் ஈடுபட்டு வருகிறது.

34. நாள் ஒன்றுக்கு 1,250 டன் கரும்பு பிழியும் திறனுடைய சர்க்கரை ஆலை ஒன்றைக் கூட்டுறவுத் துறையில் ஏற்படுத்த திருத்தணி கூட்டுறவுச் சர்க்கரை ஆலைத் திட்டத்திற்கும் அத்தகைய ஆலை ஒன்றைத் தனியார் துறையில் ஏற்படுத்த பொன்னி சர்க்கரை-இரசாயனப் பொருள் நிறுவனத் திற்கும் மத்திய அரசு அனுமதிக் கடிதம் அளித்துள்ளது. திருத்தணி கூட் டுறவுச் சர்க்கரை ஆலை குறித்த பணி தொடங்கப்பட்டுவிட்டது.

35. தொழிற்சாலைகளை ஏற்படுத்துவதற்குத் தமிழ்நாடு அரசு பெரு முயற்சிகளை மேற்கொண்ட போதிலும், மத்திய அரசிடமிருந்து ஊக்கம் அளிக் கும் பதில் கிடைக்கவில்லை. 1981 ஆம் ஆண்டில் இம்மாநில அரசின் தொழில்

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1983 மார்ச் 5

துறை அனுமதிக் கடிதங்கள்/உரிமங்கள் வழங்கப்பெற 92 விண்ணப்பங்களைப் பரிந்துரை செய்திருக்க, 1982-ல் 186 விண்ணப்பங்களைப் பரிந்துரை செய்துள்ளது. மத்திய அரசு 1981-ல் 39 அனுமதிக் கடிதங்கள்/உரிமங்கள் வழங்கியிருக்க, 1982-ல் 37 அனுமதிக் கடிதங்கள்/உரிமங்கள் மட்டுமே வழங்கியுள்ளது. மாநில அரசிடமிருந்து வருகிற செயற்குறிப்புகளைப் பரிசீலனை செய்யும் போது, எதிர்காலத்திலாவது மத்திய அரசு மேலும் பரிவுடனும் நடைமுறை நோக்குடனும் நடந்துகொள்ளுமென நம்புகிறேன்.

36. கிராமப் பகுதிகளில் பட்டுபுழு வளர்ப்புத் தொழில் வேலைவாய்ப்பு வளத்தை ஏற்படுத்தியுள்ளதால், கடந்த சில ஆண்டுகளாகவே பட்டுப் புழு வளர்ப்புத் தொழிலில் குறிப்பிடத்தக்க கவனம் செலுத்தப்பட்டுள்ளது. 1983-84-ல் முசுக்கட்டைச் செடி சாகுபடிப் பரப்பளவை மேலும் 8,000 ஏக்கரில் விரிவுபடுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. இதனால், முசுக்கட்டைச் செடி வளர்க்கப்படும் பரப்பளவு மொத்தம் 63,000 ஏக்கர் ஆகும். தற்போது பட்டிழை சுற்றும் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் 36 உள்ளன. அடுத்த நிதி ஆண்டில் மேலும் அத்தகைய 5 சங்கங்களை நிறுவுவதென்று முடிவு செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் கிராம நிலையில் 65 சௌக்கி சுற்றும் பிரிவுகள் இப்போது உள்ளன. 1983-84-ல் மேலும் 50 நிலையங்கள் ஏற்படுத்துவதென்று தற்போது திட்டமிடப்பட்டுள்ளது.

37. ஆண்டுக்கு இருமுறை முட்டையிடும் பட்டுப்புழு வளர்ப்புத் திட்டம் 1981-82-ல் இம் மாநிலத்தில் தொடங்கப்பட்டது. ஆண்டுக்கு இருமுறை முட்டையிடும் பட்டுப்புழு வளர்ப்புக் கட்புல விளக்க பயிற்சி பிரிவு 1983-84-ல் ரூபாய் 10.68 இலட்சம் மொத்தச் செலவில் தொடங்கப்படக்கூடும். மகளிருக்கென இரு கூட்டுறவுச் சங்கங்கள் சேலம் மாவட்டத்தின் கிராமப் பகுதிகளில் தொடங்கப்பட்டுள்ளன; இவற்றுள் ஒன்று கழிவுப்பட்டு நூற்புச் சங்கமாகும்; மற்றொன்று பட்டு ஈரிக் கூட்டுப்புழு விற்பனைச் சங்கமாகும்.

## கைத்தறி

38. இந்தியாவில் 30.21 இலட்சம் கைத்தறிகள் உள்ளன. இவற்றில் 5.56 இலட்சம் தறிகள் தமிழ் நாட்டில் செயற்படுகின்றன. இவற்றால் 13.34 இலட்சம் பேருக்கு நேரடி வேலைவாய்ப்பு கிட்டுகிறது. கைத்தறி நெசவாளர்களைக் கூட்டுறவுச் சங்க அமைப்பிற்குள் சேர்த்துக்கொள்வதன் மூலமாகவும், அரசு நிறைவேற்றி வரும் பல்வேறு கைத்தறி வளர்ச்சித் திட்டங்களின்கீழ் அவர்களுக்குத் தொடர்ந்து வேலையும், ஏனைய சலுகைகளையும் அளிப்பதன் மூலமாகவும் அவர்களைத் தறி முதலாளிகளின் பிடிகளினின்றும் விடுவிப்பதென்னும் கொள்கையை இவ்வரசு கொண்டுள்ளது. கைத்தறி நெசவாளர்களுக்குத்



1983 மார்ச் 5] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

தொடர்ந்து வேலை அளிப்பது, நிலையான வருமானம் கிடைப்பதை உறுதி செய்வது என்கிற இரண்டு நோக்கங்கள், கீழ்க்காணும் திட்டப் பணிகளின் வாயிலாக எய்தக் கருதப்படுகிறது.

### (i) இடு பொருள்கள் வழங்குதல்

கூட்டுறவுத் துறையில் நூல் தேவை அதிகரித்து வருவதை ஈடுசெய்யும் பொருட்டு, அண்மையில் கூட்டுறவு நூற்பாலைகள் ஐந்து பதிவு செய்யப்பட்டுள்ளன. ரூபாய் 30.15 கோடி மூலதனச் செலவில் இந்த நூற்பாலைகள் நிறுவப்படுவதற்கான தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்துடன், சேலம், வேலூர் ஆகிய இடங்களிலுள்ள கூட்டுறவு நூற்பாலைகள் ஒவ்வொன்றும் 12,500 கதிர்களுடன் தங்கள் உற்பத்தித் திறனை விரிவு படுத்தும் திட்டத்தினை நிறைவேற்றி வருகின்றன. இவை, இவ்வாண்டு ஜூன் திங்கள் இறுதிக்குள் இப் பணியைச் செய்து முடிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. புதிய ஆலைகள் நிறுவும் திட்டத்தினாலும் தற்போதுள்ள ஆலைகளின் உற்பத்தித்திறனை விரிவுபடுத்துவதாலும், மேலும் 3,000 பேருக்கு வேலை வாய்ப்பு ஏற்படும்.

### (ii) கூட்டுறவு அமைப்பில் சேர்த்தல்

இம் மாநிலத்தில் மொத்தமுள்ள 5.56 இலட்சம் கைத்தறிகளில், 3.24 இலட்சம் கைத்தறிகளைக் கொண்டு, இதுவரை 1,418 தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதிக்குள் கூட்டுறவு அமைப்புக்குள் 67 சதவீத கைத்தறிகளைக் கொண்டுவருவதென இவ்வரசு இலக்கு கொண்டுள்ளது. தறியில்லாத நெசவாளர்களின் பயனுக்கென்று பொதுவான பணிக் கொட்டகைகள் ஏற்படுத்திக் கொடுக்கும் திட்டம், கூட்டுறவு அமைப்பின்கீழ் கொண்டுவரும் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளும் சிறப்பு மிக்க பணியாகும். இந்தத் திட்ட பணியின் கீழ் 1983-84-ல், பொதுவான பணிக் கொட்டகைகள் கொண்ட நெசவாளர் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் 25-ஐப் புதிதாகத் தொடங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இச் சங்கங்களில் இரு சங்கங்கள், 200 ஆதி திராவிடர் நெசவாளர்களின் பயனுக்கெனவே ஒதுக்கப்பட்டுள்ளன.

### (iii) கைத்தறி நெசவாளர்களைத் தறி முதலாளிகளின் பிடியிலிருந்து விடுவிப்பது

கைத்தறி நெசவாளர்கள், தறி முதலாளிகளின் பிடியிலிருந்து விடுபட்டு தாங்களே சுதந்திரமாகத் தொழிலை நடத்த இயலும்பொருட்டு, 104 கிராமங்களில் உள்ள ஏறக்குறைய 54,000 கைத்தறி நெசவாளர்கள் ஒவ்வொருவருக்கும் ரூபாய் 2,000 நிதியுதவி அளிக்கப்பட வேண்டுமென துறை அதிகாரிகள் நடத்திய

நேரிட ஆய்விலிருந்து தெரிய வந்தது. இதற்காக 4 சதவீத வட்டி விதத்தில் கடன் கொடுக்குமாறு வணிக வங்கிகள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளன. இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டால், தனியார் துறையில் கடன்பட்டுள்ள ஏறக்குறைய 10,000 கைத்தறி நெசவாளர்களைத் தறி முதலாளிகளின் பிடியிலிருந்து விடுவித்து, நடப்பு நிதியாண்டில் கூட்டுறவு அமைப்பின்கீழ் அவர்களைக் கொண்டுவர முடியுமென எதிர்பார்க்கப்படுகிறது.

### (iv) விற்பனை ஆதரவு

'கோ-ஆப்டெக்ஸ்' நிறுவனம் மூலமாகத் தொடக்கக் கைத்தறிக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மாநில அரசு, பெருமளவு விற்பனை ஆதரவு அளித்து வருகிறது. 'கோ-ஆப்டெக்ஸ்' நிறுவனத்தின் மூலம் 1981-82 ஆம் ஆண்டில் மொத்தம் ரூபாய் 70 கோடி அளவுக்குக் கைத்தறித் துணிகள் விற்கப்பட்டன. அத் தொகை 1982-83-ல் ரூபாய் 100 கோடியாக உயருமென எதிர்பார்க்கப்படுகிறது.

### (v) உற்பத்தி நிதியுதவி

தமிழ்நாட்டில் உள்ள தொடக்கக் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் நடைமுதல் மூலதனத்திற்குச் சலுகை நிதியுதவி என்ற வகையில் வேளாண்மை கிராமப் பகுதி வளர்ச்சி தேசிய வங்கி 1982-83-ல் ரூபாய் 40.91 கோடி அளித்துள்ளது.

### (vi) நெசவாளர் வீட்டு வசதித் திட்டம்

வீட்டுவசதி-நகர்ப்பகுதி வளர்ச்சிக் கழகத்தின் (ஹட்கோ) நிதியுதவியுடனும் மாநில அரசு அளிக்கும் நிதியுதவியுடனும் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாக உள்ள நெசவாளர்களுக்கு ஆறாவது திட்டக் காலத்திற்குள் 5,000 வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும்.

### வீட்டு வசதியும் நகர்ப் பகுதி வளர்ச்சியும்

39. மாநில அரசின் வீட்டு வசதி நடவடிக்கைகள் முக்கியமாகத் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் மூலமாகவும், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலமாகவும் செயல்படுத்தப்படுகின்றன. உலக வங்கி நிதியுதவியுடன் குடிசைப் பகுதி சீரமைப்பு விரிவுத் திட்டம் ஒன்று, சென்னை நகர்ப் பகுதி வளர்ச்சித் திட்டம் II-ன் கீழ் செயல் படுத்தப்பட்டு வருகிறது. இந்த நிதியாண்டில் ரூபாய் 250 இலட்சம் செலவில் இத் திட்டத்தின் கீழ் ஏறக்குறைய 12,000 குடும்பங்கள் பயனடையும். இதற்காகச் செய்யப்படும் முதலீடு, 1983-84-ல் ரூபாய் 450 இலட்சம் ஆக உயர்த்தப்படும். சமுதாயத்தில் பொருளாதார வகையில் நலிந்த பிரிவினர்களுக்கு மனைகளுக்கும், பணிகளுக்கும்



வகை செய்யும் திட்டம் ஒன்று உலக வங்கி நிதியுதவித் திட்டம் செயல்படுத்தக் கருதுவதோடு, முகைப்பேர் என்ற இடத்தில் 10,000 க்கு மேற்பட்ட மனைப் பகுதிகள் சீரமைக்கப்படுமென்றும், அதற்கு ரூபாய் 1,608.40 இலட்சம் செலவாகுமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது. 5,034 மனைப் பகுதிகள் அடங்கிய ரூபாய் 771.40 இலட்சம் செலவாகும் மனைகள்-பணிகளுக்கான மற்றொரு திட்டம், நெற்குன்றத்தில் தொடங்கப்படும்.

40. கிராமப்புற வீட்டுவசதி திட்டத்தின் கீழ், 40,000 வீடுகள் நடப்பு நிதியாண்டில் கட்டப்படும். இதுவரை ஏற்பட்டுள்ள பணி முன்னேற்றத்தைக் கவனித்துப் பார்க்கும்போது, ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 2 இலட்சம் வீடுகள் கட்டுவது என்ற இலக்கை எய்துவது எளிதாகும்.

41. வாடகைக் குடியிருப்புகள் கட்டுவதற்கென இந்த நிதியாண்டில் ரூபாய் 3.50 கோடி ஒதுக்கியிருக்க, 1983-84 இல் இத்தொகை ரூபாய் 6.00 கோடியாக உயர்த்தப்படுகிறது. இதனால் அரசுப் பணியாளர் பெரும் பயனடைவர்.

### சாலைகள், சாலைப் போக்குவரத்து, துறைமுகங்கள்

42. போக்குவரத்துக் கழகங்கள் செயல்பட்டு வருவதைப் பார்த்தால், அவற்றின் சாதனை சிறப்பாக இருப்பது தெரியவரும். அவற்றில் பெரும்பாலானவை, இந்த நிதியாண்டின் இறுதிக்குள் ஆதாயத்தை ஈட்டக்கூடும்.

43. பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகம், 1—12—1982 ஆம் நாள் முதல் செயல்பட்டு வருகிறது. ஈரோட்டில் ஜீவா போக்குவரத்துக் கழகம், நாகர்கோயிலில் நேசமணி போக்குவரத்துக் கழகம், காரைக்குடியில் மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழகம் ஆகிய ஏனைய மூன்று புதிய கழகங்கள், 1983 ஆம் ஆண்டு ஏப்ரல் முதற்கொண்டு தனியே செயல்படத் தொடங்கும். திருச்சிராப்பள்ளியில் தற்போது செயல்பட்டு வருகின்ற சோழன் சாலைப் போக்குவரத்துக் கழகத்தின் இரண்டாம் பிரிவு, அடுத்த நிதியாண்டில் தனிக் கழகமாகச் செயல்படத் தொடங்கும்.

44. ஏராளமான பயணிப் பேருந்துகளைச் செயல்படுத்துவதினின்று கிடைத்த சிறப்பான, பலதரப்பட்ட அனுபவத்தைக் கொண்டு, ஆலோசனை நல்கும் தனிப்பட்ட நிறுவனம் ஒன்றை ஏற்படுத்துவதென அரசு கருதுகிறது. இந்தியாவில் உள்ள பிறமாநிலங்களுக்கு மட்டுமின்றி, வளர்ச்சியுறும் பிற நாடுகளுக்கும் பேருந்துப் போக்குவரத்துத் தொழில் நுட்பவியலில் ஆலோசனை நல்க வேண்டி, பல்லவன் போக்குவரத்து ஆலோசனைக் கழகம் வெகுவிரைவில் செயல்படத் தொடங்கும். இது, பல்லவன் போக்குவரத்துக் கழகத்தின் ஒரு பகுதியாகச் செயல்பட்டு வந்த காலத்திலும் நமது நாட்டிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் வரும் வேண்டுகோளின் அடிப்படையில் போக்குவரத்துத் துறையில் இது பல ஆய்வுகளை மேற்கொண்டுள்ளது.

45. போக்குவரத்துக் கழகங்கள், மிகச் சிறந்த முறையில் செயல்பட்டு வந்துள்ள போதிலும், மத்திய அரசு டீசல் எண்ணெய் விலையை 1983 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 15 ஆம் நாள் முதல் மேலும் உயர்த்தியுள்ளதால், ஓராண்டில் ஏறக்குறைய ரூபாய் 9 கோடி அளவுக்குக் கூடுதல் செலவு ஏற்படுமெனத் தோன்றுகிறது. தொடர்ந்து சிறந்த முறையில் செயல்பட்டுவர எல்லா வகையான முயற்சிகளையும் இக் கழகங்கள் மேற்கொள்ளும்.

46. இம் மாநிலத்தின் சமூக-பொருளாதார ஒட்டு மொத்த வளர்ச்சியில் சாலைகளையும், சாலைப் போக்குவரத்து அமைப்பையும் மேம்படுத்துவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்த வேண்டிய அவசியமில்லை. மக்களின் 80 சதவீதத்தினர் கிராமங்களில் வசிப்பதால், ஐந்தாவது, ஆறாவது திட்டக் கால அளவில் கிராமங்களின் சாலை மேம்பாட்டுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டு, கிராமங்களில் சாலைகளின் சீரமைப்பு படிப்படியான முறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. கிராமச் சாலைகள், திட்டத்தின்கீழும் பேருந்து வழித்தடத்தை மேற்கொள்ளும் திட்டத்தின்கீழும் நடப்பு நிதியாண்டில் ரூபாய் 10 கோடி செலவில் 500 கிலோ மீட்டர் கிராமச் சாலைகள் சீரமைக்கப்படும். இதனால், 320 கிராமங்களில் வசிக்கும் 4.50 இலட்சம் மக்கள் பயனடைவர். பேருந்து வழித்தடத்தை மேற்கொள்ளும் திட்டத்தின் கீழ் ரூபாய் 29 கோடி செலவில் நடப்பு நிதியாண்டு முடிவுக்குள் ஏறக்குறைய 8,103 கிலோ மீட்டர் சாலைகள் சீரமைக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் 4,052 கிராமங்களில் வசிக்கும் 41.34 இலட்சம் மக்கள் பயனடைவர். 1982 நவம்பர் திங்கள் வரையில் 25 ஆண்டுகள் பயனுள்ள வகையில் பணியாற்றித் தொடர்ந்து செயற்பட்டு வருகிற நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம், சாலை அமைப்பு தொடர்பாகப் பல்வேறு ஆய்வுப் பணிகளைக் கைவசம் வைத்துள்ளது.

47. இடைத்தர துறைமுகங்கள், சிறு துறைமுகங்கள் மேம்பாடு அரசின் கவனத்தைப் பெற்று வருகிறது. கடலூர் துறைமுகத்தில் அடிப்படை வசதிகளை அடுத்த நிதியாண்டில் மேம்படுத்தவும் கருதப்பட்டுள்ளது. குளச்சல் துறைமுகத்தை மேம்படுத்தவும், வாணிப நோக்கத்தில் சிறு துறைமுகத்தை உப்பு ஏற்றுமதிக்காக ஏற்படுத்தவும் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டம் அடுத்த நிதியாண்டில் நடைமுறைக்குக் கொண்டுவரப்படும்.

## அரசு தகவல் தொகுப்பு நிலையம்

48. அரசு தகவல் தொகுப்பு நிலையத்தில் இப்போதுள்ள கணக்கீட்டுப் பொறி மிகப் பழமையானதும் காலங்கடந்ததும் ஆகும். எனவே, இதற்குப் பதிலாக, புதிய, நவீன வகை கணக்கீட்டுப் பொறி வாங்குவது அவசியமாகியுள்ளது. இதனை வாங்குவதற்கு அடுத்த நிதியாண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூபாய் 1 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.





49. இம் மாநிலத்தின் அனைத்து வளர்ச்சி நடவடிக்கைகள் தொடர்புள்ள தகவல்களைப் புள்ளி விவரத்துறை கணக்கீட்டுப் பொறியில் சேகரித்து வைத்து தலைமைச் செயலகத்தில் தகவல் தேவைப்படும்போது உடனடியாகப் பெறுவதற்காகத் தலைமைச் செயலகத்தில் நுண் அலை முறையில் தகவல் பெறும் ஏற்பாடு உருவாக்கப்படும்.

## கிராம வளர்ச்சியும் தன்னிறைவுத் திட்டமும்

50. 1980-81 ஆம் ஆண்டில் கிராமப் பகுதிகளில் தொடங்கப்பட்ட தன்னிறைவுத் திட்டம், இந்த நிதியாண்டு இறுதிக்குள் நிறைவெய்தும். மூன்றாண்டுக் காலமாகச் செயல்படுத்தப்பட்டு வரும் இத் திட்டத்தின் மூலம் ஊக்கமளிக்கக் கூடிய வகையில் பயன்கள் கிட்டியுள்ளன. கிட்டத்தட்ட ரூபாய் 200 கோடி பெறுமானமுள்ள சொத்துக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இதுவரை புறக்கணிக்கப்பட்ட ஊரகத் துறை இதனால் பொருளாதார வகையில் மொத்தத்தில் வளர்ச்சி அடைந்துள்ளது. இத் திட்டம் ஒருசில மாற்றங்களுடன் இந்த நிதியாண்டில் பேரூராட்சிகளுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. முதல் கட்டமாக, 140 பேரூராட்சிகள் இத் திட்டத்தின்கீழ் பயனடையும். இதற்காக, ரூபாய் 5 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இத் திட்டம், ரூபாய் 10 கோடி ஒதுக்கீட்டுடன் அடுத்த நிதி ஆண்டிலும் தொடர்ந்து, விரிவுபடுத்தப்படும்.

51. குடிநீர் வழங்குவது, தமிழ்நாடு அரசின் மொத்த மேம்பாட்டுத் திட்டத்தின் ஒரு பகுதியாகும் என்பதோடு, இருபது அம்ச பொருளாதாரத் திட்டத்தின் ஒரு கூறாகும். சில ஆண்டுகளுக்கு முன்பு குடிநீர் ஆதார ஆய்வுப் பிரிவு ஒன்றை மாநில அரசு ஏற்படுத்தியதோடு, கிராமக் குடியிருப்புகளுக்கு அருகில் கிடைக்கக் கூடிய குடிநீர் ஆதாரங்களைக் கணக்கில் கொண்டு, அவற்றின் குடிநீர்த் தேவைகளின் அடிப்படையில் கிராமக் குடியிருப்புகளை வகைப்படுத்தியது. இந்த குடிநீர் ஆய்வின் அடிப்படையில், குடிநீர் வழங்கு திட்டங்கள், கிராமப் பகுதிகளில் செயல்படுத்தப்பட்டுள்ளன. இதற்காக நடப்பு நிதியாண்டில் ரூபாய் 43 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த நிதி ஒதுக்கீடு, அடுத்த நிதியாண்டில், ரூபாய் 60 கோடியாக உயர்த்தப்படும். ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் கிராமப் பகுதிகளில் குடிநீர் வழங்கும் திட்டத்திற்காக ஏறக்குறைய ரூபாய் 224 கோடி செலவு செய்யப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

52. கிராமப்புற வேலைவாய்ப்புத் தேசியத் திட்டம், கிராமப் பகுதிகளில் உள்ள பயிற்சி பெறாத தொழிலாளர்களுக்குப் பெருமளவு வேலைவாய்ப்பு அளிப்பதோடு, ரூபாய் 34.52 கோடி பெறுமானமுள்ள நிலையான

சமுதாயச் சொத்துக்களையும் உருவாக்கியுள்ளது. 1982-83 ஆம் ஆண்டில் இத் திட்டத்தின் கீழ் ரூபாய் 2976.25 இலட்சம் ரொக்க மானியமும், 14,890 டன் அரிசியும் ஒதுக்கப்பட்டுள்ளன. இத் திட்டத்திற்கு 1983-84-ல் ரூபாய் 32 கோடி ஒதுக்கப்படும்.

53. ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டம் முக்கியமாக வறுமைத் துயரினைத் தணிக்கும் திட்டமாகும். வளர்ச்சி வட்டாரம் ஒவ்வொன்றிலும் வறுமைக் கோட்டுக்குக் கீழேயுள்ள 600 குடும்பங்களுக்கு ஒவ்வோராண்டும் உதவியளிப்பதே இத் திட்டத்தின் நோக்கமாகும். இக் குடும்பங்களுக்குக் கடன் இணைந்த உதவித் தொகை அடிப்படையில், வெவ்வேறு பணிகளின் கீழ் நிதியுதவி அளிக்கப்பட்டு வருகிறது. 1982-83-ல் வளர்ச்சி வட்டாரம் ஒவ்வொன்றுக்கும் ரூபாய் 3 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. திட்ட இலக்கு 2,25,600 குடும்பங்கள் என்று இருக்கையில் 1983 ஜனவரி முடிய ஏறத்தாழ 1,87,000 குடும்பங்களுக்கு உதவியளிப்பதில் ரூபாய் 22.7 கோடி செலவிடப்பட்டுள்ளது. இத் திட்டத்தினால் பயனடைவோரில் 36 சதவிகிதத்தினர் ஆதி திராவிடர்கள் ஆவர். 30 சதவிகிதத்தினர் மகளிர் ஆவர். சுய வேலை வாய்ப்புக்கான கிராம இளைஞர்களுக்கு பயிற்சியளிக்கும் திட்டம் ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டத்தின் பகுதியாக உள்ளது. இத் திட்டத்தின்கீழ் இது வரையில் 26,292 இளைஞர்கள் பயிற்சி முடித்தனர். 23,773 இளைஞர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர். பயிற்சி குறித்து ரூபாய் 4.5 கோடி செலவிடப்பட்டுள்ளது. இத் திட்டத்தின்கீழ் 5,821 இளைஞர்கள் சுயவேலை வாய்ப்புத் தொழில்களை அமைத்துள்ளனர். ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டத்தின்கீழ் தனி நபர் ஒவ்வொருவரும் வெற்றிகரமாகத் தொழில் நடத்தும் வசதிகளைப் பெருக்கக்கூடிய வகையில் அடிப்படை வசதிகள் ஏற்படுத்தும் திட்டத்துக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

54. கிராமப்புறத்தில் வாழும் மகளிர்களுக்காக பொது கழிப்பிடங்கள் கட்டுவதற்கு ரூபாய் 22.56 கோடி செலவில் தயாரிக்கப்பட்ட திட்டம், அடுத்த நிதியாண்டில் நிறைவேற்றி முடிக்கப்படும்.

55. இம் மாநிலத்தில் கரிமவாயு உற்பத்திக்கான தேசியத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1983 ஜனவரி முடிய கரிம வாயு உற்பத்தி இயந்திரங்கள் 2,364 செயல்படத் தொடங்கியுள்ளன. மத்திய அரசுத் துறைத் திட்டமான இத் திட்டத்தின்கீழ் தமிழ் நாட்டில் 8,000 உற்பத்தி இயந்திரங்கள் நிறுவ இலக்கிடப்பட்டுள்ளது.



### குடும்பத்தில் ஒருவருக்கு வேலை.

56. ஒரு குடும்பத்தில் ஒருவருக்கு வேலை அளிப்பது குறித்து ஆளுநர் அவர்கள் இவ்வாண்டு தொடக்கத்தில் தனது உரையில் குறிப்பிட்டுள்ளார். இத் திட்டத்தின் விவரங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தினைச் செயல்படுத்துவதற்காக இந்த நிதியாண்டில் ரூபாய் 15 கோடி செலவாகுமென எதிர்பார்க்கப்படுகிறது.

### சுற்றுலா

57. சுற்றுலா வளர்ச்சிக்கு வேண்டிய மகத்தான வாய்ப்பு வளத்தைத் தமிழ்நாடு தன்னகத்தே கொண்டுள்ளது. ஆனால், இந்திய நாட்டின் எஞ்சிய பகுதிகளிலும் பல்வேறு நாடுகளிலும் தமிழ்நாடு பற்றிய போதிய தகவலும், விளம்பரத் திட்டங்களும் கிடைக்கப் பெறாமை காரணமாக, நாம் இதனை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளவில்லை. இந்திய அரசு தென்னக மாநிலங்களில் சுற்றுலா வளர்ச்சிக்குப் போதிய முக்கியத்துவம் அளிப்பதில்லை என்றே பொதுவாகக் கருதப்படுகிறது. இதன் காரணமாகத் தமிழ் நாட்டுக்கு வருகைதரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை எந்த அளவுக்கு இருந்திருக்க வேண்டுமோ அந்த அளவைவிட வெகு குறைவாகவே உள்ளது. இவ்வரசு தமிழ்நாட்டில் சுற்றுலா வாய்ப்பு பற்றிப் பரவலாக விளம்பரம் செய்வது பற்றி, பலமுறை இந்திய அரசுடன் விவாதித்துள்ளது. கல்கத்தா போன்ற முக்கியமான மாநகரங்களில் தகவல் நிலையங்களைப் புதிதாகத் தொடங்குவதுடன், புதுடில்லியில் தற்போது செயற்பட்டு வருகிற தகவல் நிலையத்தை விரிவுபடுத்தவும், இவ்வரசு தனது பங்கிற்கு முயற்சி எடுத்துக் கொள்ளும். சிறு கையேடுகள், மடிப்பிதழ்கள் போன்றவற்றைத் தயாரித்து வழங்கியும், விளம்பரங்களை வெளியிட்டும், எதிர் காலத்தில் சுற்றுலாப் பயணிகளைப் பெருவாரியாக ஈர்க்கக்கூடும் என்று அரசு எதிர்பார்க்கிறது.

58. இளைஞர்களையும், குறிப்பிட்ட தொகைக்குள் சுற்றுலா மேற்கொள்ள விழையும் பயணிகளையும் ஊக்குவிக்கும் வகையில், ஒவ்வொரு மாவட்டத்திலும் இவ்வரசு மகிழ்வுலா நிலையம் தொடங்கி மேம்படுத்தும் திட்டத்தினைச் செயற்படுத்தவிருக்கிறது. இத்தகைய நிலையங்களின் வளர்ச்சிக்காக, அடுத்த நிதியாண்டில் ரூபாய் 10 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. சுற்றுலாப் பயணிகளுக்குப் போதிய வசதிகளை அளித்து வருவதில் சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தனிச் சிறப்புமிக்க பங்காற்றி வருகிறது. இக்கழகம், இளைஞர் இல்லங்கள், உணவகங்கள், சாலை-இடைவழி விடுதிகள் (மோட்டல்கள்), கடற்கரை மகிழ்விடங்கள் முதலியவற்றை நடத்தி வருகிறது. 1983-84 ல் மாமல்லபுரம், இராமேஸ்வரம், பிச்சாவரம் ஆகிய இடங்களில் கூடுதலாகக் குடில்கள் கட்டுவதென்றும் இக் கழகம் திட்டமிட்டுள்ளது. அடுத்த நிதி ஆண்டில், சென்னை

யில் ஒன்றும் திருச்சியில் ஒன்றுமாக இளைஞர் இல்லங்கள் இரண்டும், திருத் தணியில் சாலை-இடைவழி விடுதி (மோட்டல்) ஒன்றும் கட்டப்படும். 1979-80-ல் இக் கழகம் நிதி வகையில் ஈட்டிய தொகை ரூபாய் 119.87 இலட்ச மாக இருந்தது. 1981-82-ல் இத்தொகை ரூ. 215 இலட்சமாக உயர்ந்துள்ளது. இவ்வரசு அளித்த ஆதரவினாலேயே இக் கழகத்தால் இச் சாதனையை எய்த முடிந்தது.

## தமிழ்க் கலைகளும் பண்பாடும்

59. தமிழர்களின் பெருமைவாய்ந்த மரபினையும் அவர்களின் நுண்மாண் நுழைபுலத்தை, கலை ஆர்வத்தை வெளிப்படுத்தும் கலை, பண்பாட்டினையும் உலகறியச் செய்வதே இவ்வரசின் தலையாய கொள்கையாகும். கங்கை முத்துப்பிள்ளை எழுதிய நாட்டியப் பாடல்களின் திரட்டு எனப்படுகிற "நாட்டிய நன்னூல்", சுவாமி விபுலானந்தா எழுதிய தமிழ், ஆங்கில நாடகங் கள் பற்றிய ஒப்பாய்வு நூலாகிய 'மதங்க சூளாமணி' ஆகியவற்றை மீண்டும் அச்சிடும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. செங்கற்பட்டு, திருநெல்வேலி, மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களின் பண்பாட்டு மரபினைத் தெளிவு படுத்தும் தகவல்களையும், விவரங்களையும், பொருள்களையும் "கிராமக் களஞ்சியம்" என்னும் நூலில் தொகுக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு அவை தீர ஆராய்ந்த பின் வெளியிடப்படும். தேவாரம், திருவாசக நூல்களிலிருந்தும் தேர்ந்தெடுத்த தீஞ்சுவைப் பாடல்களும், இசை நுணுக்கங்களையும் ஓசை நயங் களையும் தெளிவுபடுத்துகிற நாட்டுப்புறப் பாடல்களும், உலகெங்கும் பரவும் படிச் செய்வதற்காகக் 'காஸெட்டுகளில்' பதியப்பட்டுள்ளன. மகாகவி பாரதி யார் நூற்றாண்டு விழா கொண்டாடியபோது, புகழ் வாய்ந்த பாடகர்- இசை வல்லுநர் ஒருவர், பாரதியாரின் பாடல்களை இசை ஞானத்துடன் எடுத்துப் பாடின பாட்டுகள் இசைத் தட்டுகளில் வடிக்கப்பட்டன. இத்தகைய இசைத் தட்டு காஸெட்டுகள் இந்தியாவிலும் வெளி நாடுகளிலும் அமைந்துள்ள தமிழ்ச் சங்கங்கள் பலவற்றுக்கும் ஏற்கெனவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. நாட்டுப் புறக் கலையினைப் பாதுகாத்துப் பேணி வரவும், அதன் வளத்தையும் சிறப்பை யும் அனைவரும் அறியச் செய்யவும், சென்னையில் நாட்டுப்புறக் கலை விழா நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. கோயில்களில் காணும் புகழ் வாய்ந்த சிற்பங் களையும் சிலைகளையும் நிழற்படமெடுத்த பல்வண்ண வெளியீடு, அடுத்த நிதி யாண்டில் வெளியிடப்படும்.

60. மேற்சொன்ன திட்டங்கள் அல்லாமல், தமிழ் மரபினை விளக்கிக் காட்டும் அரும்பொருள்காட்சியகம் ஒன்று அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. பண்டைய தமிழர்கள் பயன்படுத்திய அரிய கலைப் பொருள்கள், நாணயங்கள், பாத்திரங்கள் முதலியவை சேகரிக்கப்பட்டு, காட்சிக்கு வைக்கப்படும். சங்க





இலக்கியத்தில் சொல்லப்பட்டுள்ள மலர்களும் செடிகளும் மூலிகைப் பண்ணை யில் வளர்க்கப்படும். இம் மூலிகைப் பண்ணை அடுத்த நிதி ஆண்டில் தொடங் கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பண்டைய தமிழ் மன்னர்கள், புலவர் களுக்கும், இசை வல்லுநர்களுக்கும், ஓவியர்களுக்கும், ஏனைய கலைஞர்களுக் கும் அளித்து வந்த ஆதரவை வெளிப்படுத்தும் நிகழ்ச்சிகளில் குறிப்பிடத்தக்க வற்றைப் பற்றிய திரைப்படங்கள் தயாரிக்கப்படும்.

61. பல்வகைக் கலைத் துறைகளில் திறமை பெற்று, ஆனால் தொழிலில் முன்னுக்கு வரவியலாத கலைஞர்களைக் கண்டறிந்து, அவர்கள் தொழிலுக்கு ஆதரவளிக்கவும், அவர்கள் தயாரித்த பொருள்களைப் பொருட் காட்சிகளில் வைக்க ஏற்பாடு செய்யவும், மாவட்டக் கலை மன்றங்களை ஏற்படுத்துவ தென்று அரசு முடிவு செய்துள்ளது.

## கல்வி

62. இம் மாநில அரசின் வருவாய்-செலவுத் திட்டச் செலவில் பெரும் பகுதி கல்வித் துறைக்குச் செலவிடப்படுகிறதென்பது மிகவும் பெருமிதம் கொள்ளத் தக்கதாகும். கடந்த சில ஆண்டுகளாகவே, இத் தலைப்பின்கீழ் செலவு தொடர்ந்து அதிகரித்து வருகிறது. 6—14 வயதுள்ளவர்களைப் பள்ளிகளில் சேர்த்துக் கொள்வதில் சிறந்த சாதனையை இம் மாநிலம் எய்தியுள்ளது. நடப்பு நிதியாண்டில், 2.63 இலட்சம் மாணாக்கர்கள் பள்ளிகளில் கூடுதலாகச் சேர்க்கப்பட்டுள்ளனர். முக்கியமாக முதலமைச்சரின் மதிய சத்துணவுத் திட்டத்தின் காரணமாக இச் சாதனையை அடைய முடிந்தது. மாணாக்கர்கள் கூடுதலாகச் சேர்க்கப்பட்டதன் காரணமாக, கல்வி கற்பிக்க வேண்டிய ஆசிரியத் தேவைகளை ஈடு செய்ய, அடுத்த நிதியாண்டில் ஆசிரியர் பதவிகள் பலவற்றை அனுமதிப்பதென்று திட்டமிடப்பட்டுள்ளது. இத் திட்டத்தில் உயர்தொடக்கப் பள்ளி ஆசிரியர் பதவிகள் 1,250, தமிழ்ப் பண்டிதர் பதவிகள் 150, நடுநிலைப் பள்ளிகளுக்கும் உயர்நிலைப் பள்ளிகளுக்கும் உடற்பயிற்சி ஆசிரியர் பதவிகள் 100, மேல்நிலைப்பள்ளிகளில் பி.எட். ஆசிரியர் பதவிகள் 200, உடற்பயிற்சி ஆசிரியர் பதவிகள் 50 ஆகியவற்றிற்கு அனுமதி அளிப்பது அடங்கும். நடு நிலைப் பள்ளிகளில் பகுதி நேர கைத்திறப் பணி பயிற்சி ஆசிரியர் பதவி 100, 1983-84-ல் முழுநேரப் பதவிகளாக்கப்படும்.

63. 6—4 வயதுள்ள மாணாக்கர்களுக்காக, எட்டறிவுத் திட்ட நிலையங் களையும், முறைசாராக் கல்வி நிலையங்களையும் தொடங்குவதுடன் மொத்தம் ரூ. 100 இலட்சம் செலவில் அடுத்த நிதியாண்டில் முதியோர் கல்வி நிலையங் களை மேலும் தொடங்குவதன் காரணமாக, முதியோர்-முறைசாராக் கல்வித் திட்டம் மேலும் ஊக்கமும் ஆக்கமும் பெறும். இந் நிலையங்களில் ஏறத்தாழ 20 சதவீதம், ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதிகளில் அமைக்கப்படும். இவை ஆதி திராவிடர் பயன்பெறுவதற்கென்றே நடத்தப்படும்.

64. நடப்பு நிதி ஆண்டுடன் ஒப்பிடுகையில், தஞ்சாவூர், கோயம்புத்தூர்,
திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் தொடங்கப்பட்ட புதிய பல்கலைக் கழகங்
களுக்குக் கூடுதல் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. 1983-84 ல் கோடைக்கானலில்
மகளிர் பல்கலைக் கழகம் தொடங்க ரூபாய் 50 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.
மகளிர் பல்கலைக் கழகம் ஏற்படுத்துவது பற்றிய வல்லுநர் குழு அறிக்கையும்,
இது குறித்த வரைவு மசோதாவும் அரசிடம் வரப்பெற்று, அவை பரிசீலனை
யில் உள்ளன.

65. இந்திய வழக்குரைஞர் மன்றம் கருத்துத் தெரிவித்ததற்கிணங்க (மேல்
நிலைப் பள்ளிப் படிப்பு தேறியதிலிருந்து ஐந்து ஆண்டுகள்) ஐந்தாண்டுச்
சட்டப் படிப்பு 1983-84 ல் தொடங்கப்படும்.

66. இம் மாநிலத்தில் 1979-80 லிருந்து 1982-83 வரையில் பல்தொழில்
பயிற்சிப் பள்ளிகள் ஏறத்தாழ 29 தொடங்கப்பட்டுள்ளன. தொலைகாட்சிப்
பெட்டி நுணுக்கங்கள் செப்பனிடுதல் பற்றிய பாடமுறை, காகிதம் தயாரிப்பு,
காகிதக் கூழ் தொழில் நுட்பவியல், செயற்கை இழைத் தொழில் நுட்பவியல்,
மின்னணுவியல், வண்ண ஓவியம் தீட்டுதல், வணிக ஓவியம் வரைதல் முதலிய
வற்றில் பட்டயப் பாடமுறைகள் அடுத்த நிதியாண்டில் பல்வேறு பல்தொழில்
பயிற்சி நிலையங்களில் புதிதாகத் தொடங்கப்படும்.

67. அடுத்த நிதியாண்டில் கல்வித் துறைக்கு ரூபாய் 359.79 கோடி ஒதுக்
கப்பட்டுள்ளது.

## சுகாதாரப் பணிகளும் குடும்ப நலனும்

68. கிராமப் பகுதிகளில் நல்வாழ்வு வசதிகள் மக்களுக்குக் கிடைக்கச்
செய்வது அரசின் கொள்கையாக இருந்து வருகிறது. இந் நோக்கத்தைக்
கருத்திற்கொண்டு, கூடுதலாகத் தொடக்கச் சுகாதார நிலையங்களைத்
தொடங்குவது, தற்போதுள்ள நிலையங்களின் தரத்தை உயர்த்துவது என்னும்
கொள்கையை அரசு கடைப்பிடித்து வருகிறது. ஆறாவது ஐந்தாண்டுத்
தொடக்கத்திலிருந்து கூடுதல் தொடக்கச் சுகாதார நிலையங்கள் 22 தொடங்
கப்பட்டுள்ளன. அடுத்த நிதியாண்டில் மேலும் 15 தொடக்கச் சுகாதார
நிலையங்கள் தொடங்குவதென்று கருதப்பட்டுள்ளது. 1980 ஆம் ஆண்டு
ஏப்ரல் திங்கள் முதல் நாள் அன்றுள்ளபடி, 385 தொடக்கச் சுகாதார நிலை
யங்கள் இயங்கி வருகையில், அடுத்த நிதியாண்டு முடிவுக்குள், 422 தொடக்கச்
சுகாதார நிலையங்கள் இருக்கும். வட்ட மருத்துவ மனைகளில் கிடைக்கப்
பெறுகிற சிகிச்சை வசதிகளின் தரத்தினைக் கிட்டத்தட்ட எட்டுமளவுக்கு,
தொடக்கச் சுகாதார நிலையங்கள் சிலவற்றில் தற்போதுள்ள வசதிகளைத்
தரப்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. 1983-84 ல் 12 தொடக்கச் சுகாதார
நிலையங்களில் அறுவை மருத்துவக்கூட வசதிகளுக்கு வகை செய்யவும்
கருதப்பட்டுள்ளது.



69. 1983-84-ல் ரூபாய் 40 இலட்சம் செலவில், 50 படுக்கை கொண்ட
மருத்துவமனை ஒன்று சத்தியமங்கலத்தில் கட்டப்படும், 50 படுக்கையேனும்
இருக்கிற வகையில், வட்ட மருத்துவமனைகளில் கூடுதல் படுக்கைகளுக்கு
அனுமதி அளிப்பதென்கிற கொள்கை முடிவையும் அரசு எடுத்துள்ளது.
மாவட்டங்கள் அனைத்திலும், விபத்து-அவசர கால சிகிச்சைப் பணிக்கு வகை
செய்யும் பெரிய திட்டம் ஒன்று சில ஆண்டுகளுக்குமுன் தொடங்கப்பட்டது.
இத் திட்டம் படிப்படியாக எல்லா மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டு
வருகிறது. நடப்பு நிதியாண்டில் ரூபாய் 85.86 இலட்சம் செலவில் இத் திட்டம்
இரு மாவட்டங்களில் செயற்படுத்தப்படும். அடுத்த நிதியாண்டில் மேலும்
இரண்டு மாவட்டங்கள் இத் திட்டத்தின்கீழ் வரும்

70. மருத்துவக் கல்லூரிகளையும், கல்லூரி இணைந்த மருத்துவமனைகளை
யும் மேம்படுத்துவதற்கென உள்ள கட்டிடத் திட்டத்திற்காக, நடப்பு நிதி
யாண்டில் அரசு ரூபாய் 417.21 இலட்சம் அனுமதி அளித்துள்ளது. 1983-84-ல்
மருத்துவ மாணவிகளுக்காக மாணவியர் இல்லங்கள் இரண்டு கட்டுவதென்று
கருதப்பட்டுள்ளது. 1983-84-ல் ரூபாய் 60 இலட்சம் செலவில் சென்னை
அரசினர் பொது மருத்துவமனையில், இதய நோயியல் துறைக்காக கதீடரை
சேஷன் ஆய்வுக்கூடம் ஒன்று புதிதாக அமைக்கப்படும்.

71. சித்தமுறை மருத்துவம் அரசிடம் தனி ஆதரவைத் தொடர்ந்து
பெற்று வருகிறது. அடுத்த நிதியாண்டில் தொடக்க சுகாதார நிலையங்கள்
10-ல் சித்த மருத்துவப் பிரிவுகள் தொடங்கப்படும். சித்த மருத்துவம் சார்ந்த
அரிய ஓலைச் சுவடிகளை வாங்கவும், சித்த மருத்துவ வளர்ச்சிக்குழு பாட
நூல்கள் அச்சிடவும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. பாளையங்கோட்டை, அரசினர்
சித்த மருத்துவக் கல்லூரியில், மொத்தம் சுமார் ரூபாய் 35 இலட்சம் செலவில்,
பட்ட மேற்படிப்புத் தொகுதி, விலங்கு இல்லம், மருத்துவப் பிரிவு, சித்த
மருத்துவ ஆராய்ச்சிப் பிரிவு ஆகியவற்றிற்கான கட்டிடங்கள் கட்டப்படும்.

72. கடந்த நிதியாண்டில் குடும்ப நலத் திட்டத்தைச் சிறந்த முறையில்
தமிழ்நாடு நிறைவேற்றியது. 1,82,200 கருத்தடை அறுவைச் சிகிச்சைகள்
என்று திட்ட இலக்கு இருக்கையில், இவ்வரசு 1,88,828 கருத்தடை அறுவைச்
சிகிச்சைகள் செய்து இலக்கினை விஞ்சியது. நடப்பாண்டில், 2,82,000 கருத்
தடை அறுவைச் சிகிச்சைகள் என்று இலக்கு உயர்த்தப்பட்டுள்ளது. இந்த
இலக்கினை எய்த அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
ரூபாய் 9 இலட்சம் செலவில் 30 "லேபரோஸ் கோப்" கருவிகள் வாங்கப்பட்
டுள்ளன. வழக்கப்படியான கருத்தடை அறுவை முறையுடன் ஒப்பிடுகையில்
இக் கருவி மூலம் செய்யும் கருத்தடை அறுவைச் சிகிச்சை விரைவில் நடத்தப்
படுகிறது. இச் சிகிச்சை முறை இப்போது இம் மாநிலத்தில் பெரிதும் விரும்

படுகிறது. இது கருத்தடை அறுவை சிகிச்சை செய்துகொள்வோரின் எண்ணிக்கை கூடவும் வழிகோலுகிறது. அடுத்த நிதியாண்டில் அரசு மேலும் சில "லேபரோஸ்கோப்" கருவிகளை வாங்கக் கருதியுள்ளது.

73. மருத்துவம் மற்றும் பொதுச் சுகாதாரத் துறைக்காக அடுத்த நிதியாண்டில் ரூபாய் 147.75 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

## சமூக நலன்

74. ஆதி திராவிடர்கள், பின்தங்கிய வகுப்பினர் நலனைப் பேணிவரும் கொள்கையை அரசு தொடர்ந்து பின்பற்றி வருகிறது. இவர்களுக்குச் சிறந்த கல்வி வசதிகளையும் அதிக வேலைவாய்ப்பு வசதிகளையும் அளிப்பதன் வாயிலாக, அவர்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்த பல நடவடிக்கைகள் கடந்த சில ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 1982-83 ஆம் ஆண்டுக்கான சிறப்புக் கூறுகள் திட்டத்தில், 1.60 இலட்சம் ஆதி திராவிடர் குடும்பங்கள் பயனடைய ரூபாய் 105.85 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அடுத்த நிதியாண்டில் 1.80 இலட்சம் குடும்பங்கள் பயனடைய இத் தொகை ரூபாய் 119.56 கோடியாக உயரும். ஆதி திராவிடர்கள் சமூக வகையிலும், கல்வித் தரத்திலும், பொருளாதார வகையிலும் உயருவதற்கு இத் திட்டத்தின் கீழ் அனைத்துத் துறைகளும் ஒருங்கிணைந்து முயற்சிகள் மேற்கொள்கின்றன.

75. ஆதி திராவிட மாணவர்கள் கல்வி அறிவு பெறுவதற்கு உதவியாக, அனைத்து வசதிகளும் கொண்ட மாணவரில்லக் கட்டிடங்களை அரசு கட்டி வருகிறது. மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டத்தின்கீழ், தற்போது மாணவியர் இல்லங்கள் 101 கட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மாநிலத் திட்டத்தின்கீழ், ஆதி திராவிடர் மாணாக்கர் இல்லங்கள் 65 கட்ட அரசு அனுமதி வழங்கியுள்ளது. இதற்கு மத்திய அரசு நிதி உதவி எதுவும் கிடைக்காது. கிராம வீட்டு வசதித் திட்டத்தின்கீழ், ஆதி திராவிடர்க்கென்று வீட்டு மனைகள் வழங்குவதும், வீடுகள் கட்ட நிதி உதவி அளிப்பதும் குறித்த கொள்கை தொடர்ந்து பின்பற்றப்பட்டு வருகிறது.

76. பின்தங்கிய வகுப்பினர்களும் குற்றப்பட்டியலில் இருந்து நீக்கப்பட்ட வகுப்பினர் நலத் துறை மாணவரில்லங்களை ஏற்படுத்திப் பராமரித்து வருகின்றது. முடிக்கப்பெறாத மாணவர் இல்லங்கள் 7 கட்டி முடிக்கவும், புதிய கின்றது. முடிக்கப்பெறாத மாணவர் இல்லங்கள் 7 கட்டி முடிக்கவும், புதிய கட்டிடம் கட்டவும் நடப்பு நிதியாண்டில் ரூபாய் 70.40 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது.



77. இம் மாநிலத்தில் பின்தங்கிய வகுப்பினர்களைக் கணக்கிட்டு வகைப்படுத்துவதற்காக, இம் மாநில அரசு, பின்தங்கிய வகுப்பினர் கமிஷன் ஒன்றை அமைத்துள்ளது. இக் கமிஷன் ஓராண்டுக்குள்ளாக தனது அறிக்கையை அளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

78. ஆதி திராவிடர், பிற்பட்டோர் மற்றும் சமூக நலத்துறைக்கு, அடுத்த நிதியாண்டில் ரூபாய் 120.60 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

## வருவாய்த் துறை நிர்வாகம்

79. வறிய நிலையில் உள்ளவர்க்கு இலவசமாக வீட்டு மனைகள் ஒதுக்கும் திட்டம் தொடர்ந்து செயற்படுத்தப்படுகிறது. பயிரிடத்தக்க தரிசு நிலங்களை ஒதுக்குவதில், நிலமற்ற ஏழை மக்களில், ஆதி திராவிடர், பழங்குடியினர் ஆகியோருக்கு உரிய முன்னுரிமை அளிக்கப்படுகிறது. தமிழ்நாடு நிலச் சீர்திருத்தச் சட்டத்தின்கீழ் அறிவிக்கப்பட்ட உபரி நிலம், உரிய தகுதிபெற்றவர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டு வருகிறது. இந் நிதி ஆண்டில் தொடங்கப்பட்ட, நாளது வரையிலான நிலப் பதிவுத் திட்டம் 1983-84-ல் முடிக்கப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

80. பிர்க்கா வருவாய் ஆய்வாளர்களுக்காக அலுவலகம் இணைந்த குடியிருப்புகள் கட்டிக் கொடுக்கும் திட்டத்தின்கீழ், அரசு இதுவரையில் 858 குடியிருப்புகள் கட்டுவதற்கு அனுமதி வழங்கியுள்ளது. அடுத்த நிதியாண்டில், ரூபாய் 66 இலட்சம் மொத்தச் செலவில், 100 குடியிருப்புகள் கட்ட அனுமதி வழங்கப்படும். வட்ட அலுவலகங்கள் சிலவற்றுக்கும் வருவாய்க் கோட்ட அலுவலகம் ஒன்றுக்கும் அடுத்த நிதியாண்டில் புதிய கட்டிடங்கள் கட்டப்படும்.

## தொழிலாளர் நலன்

81. 1982-ல் தொழிற்சாலை உறவு நிலையில் அமைதியும் சுமுகமான சூழ்நிலையும் காணப்பட்டன. இழந்த மனித உழைப்பு நாட்களின் எண்ணிக்கை 1981-ல் 41,24,021 என்றிருந்தது; இது 1982-ல் 18,05,976 மனித உழைப்பு நாட்களாகக் குறைந்தது குறிப்பிடத்தக்கது. தொழிலாளர்களின் உரிமைகளும் நலனும் கூடிய மட்டில் முற்போக்குக் கருத்துள்ள சட்டம் இயற்றுவதன் வாயிலாக உறுதியாகக் கிடைக்கப் பெறுவதில் அரசு கண்ணுங்கருத்துமாக உள்ளது. இக்கொள்கைக்கிணங்க தொழிலாளர் நலனுக்கென்று பல்வேறு சட்டங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன. கட்டிட, கட்டுமானத் தொழிலாளர்களின் பணி நிபந்தனைகளை முறைப்படுத்தி அவர்களின் நலனைப் பாதுகாத்து மேம்படுத்தத் தனிச் சட்டம் இயற்றுவது அரசின் பரிசீலனையில் உள்ளது. தமிழ்நாடு 1947 ஆம் ஆண்டு கடைகள்-நிறுவனங்கள் சட்டத்தினைச் செயல்படுத்தியதில் அடைந்த அனுபவத்தின் அடிப்படையில் மேற்சொன்ன

சட்டத்தை ரத்து செய்து, தக்க மாறுதல்களுடன் மீண்டும் இயற்றுவதென்று முடிவு செய்யப்பட்டுள்ளது. நடப்பு நிதியாண்டில், கம்பளி விரிப்புத் தயாரிப்புத் தொழில், கம்பளி சால்வை நெசவுத் தொழில், திரைப்பட அரங்குகள், உணவகங்கள் ஆகியவற்றில் வேலை செய்பவர்களுக்குக் குறைந்த அளவு ஊதியங்கள் திருத்தி அமைக்கப்பட்டுள்ளன. திரைப்படங்கள் தொழிலிலும் முந்திரித் தொழிலும் வேலை செய்வோருக்குக் குறைந்த அளவு ஊதியங்கள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

82. தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு எடைகள்-அளவைகள் (செயல்படுத்தல்) சட்டத்தின்கீழ், நடைபெறும் குற்றங்களுக்குக் கடுமையான தண்டனை அளிக்கும் பொருட்டு, இச் சட்டத்தில் தண்டனை பற்றிய பிரிவுகளைத் திருத்துவதற்காக மசோதா ஒன்றைக் கொண்டுவரக் கருதப்பட்டுள்ளது.

## காவல் துறையும் நீதி மன்றங்களும்.

83. நடப்பு நிதி ஆண்டில் சட்ட-ஒழுங்கு நிலைமை பொதுவாக மன நிறைவை அளிப்பதாக உள்ளது. கன்னியாகுமரி, திருநெல்வேலி மாவட்டங்களில் நடைபெற்ற ஒருசில மோதல்கள் நீங்கலாக, கடுமையான வகுப்புக் கலவரம் எதுவும் நடைபெறவில்லை.

84. கடந்த நிதி நிலை அறிக்கையில் தெரிவித்தவாறு, சென்னைப் பெருநகர் காவல்படையைச் சீரமைக்கும் பணி, நடப்பு நிதியாண்டில் செயல்படுத்த மேற்கொள்ளப்பட்டுள்ளது. கூடுதல் அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். பெருநகர் காவலர் சரகத்தை விரிவுபடுத்துவதற்கானச் செயற்குறிப்புக்குச் செயல்வடிவம் கொடுக்க அவசியமான சட்டம் விரைவில் கொண்டுவரப்படும். மதுரையிலும் கோயம்புத்தூரிலும் காவல் துறை ஆணையாளர் பதவி முறையைக் கொண்டுவருவதற்குரிய விரிவான திட்டத்தைத் தயாரிப்பதற்காகத் தனி அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். காவல்படை விரைந்து செயல்படுவதை உறுதிப்படுத்தும் பொருட்டு, பழைய மோட்டார் வண்டிகளுக்குப் பதிலாகப் புதியவற்றை வாங்கும் பணி, படிப்படியாக நடத்தப்பட்டு வருகிறது. இதற்காக நடப்பு நிதியாண்டில் ரூ. 1.93 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. 32 காவல் நிலையங்களைப் புதிதாக ஏற்படுத்துவதற்கும், பல்வேறு தரங்களில் 1,200 பதவிகளைப் புதிதாக உருவாக்குவதற்கும் நடப்பு நிதியாண்டில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. காவல்துறை பணியாளர்களுக்கு வீட்டு வசதி அளிப்பதில் கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. காவல்துறை கீழ்நிலைப் பணியாளர்களுக்கு 3,505 வீடுகளும், காவல்துறை மேல்நிலைப் பணியாளர்களுக்கு 524 வீடுகளும் கட்டப்பட்டுள்ளன. 2,445 காவலர் குடியிருப்பு வரிசைகள் கட்டும் பணி, 1984 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்குள் முடிவடையும். "சொந்தத்தில் ஒரு வீடு' என்ற திட்டத்தின் கீழ் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகம் 720 வீடுகளைக் கட்டியுள்ளது.



85. ஈரோட்டில் வழக்குரைஞர் அறைகள் கட்டுவது, மாவட்ட முன்சீப் மற்றும் மாஜிஸ்ட்ரேட்டுகள் நீதிமன்றங்களில் குடிநீர் வழங்கு வசதிகளுக்கும் நீரடிக் கழிப்பிட வசதிகளுக்கும் ஏற்பாடு செய்வது, நாமக்கல்லில் சிற்றுண்டிக் கொட்டகை, பார்வையாளர் காத்திருக்கும் அறை கட்டுவது முதலியவை அடுத்த நிதியாண்டில் மேற்கொண்டு செயல்படுத்தவிருக்கும் ஒருசில திட்டங்களாகும்.

## 20. அம்சத் திட்டம்.

86. பிரதம மந்திரியின் 20 அம்சத் திட்டம் இம்மாநிலத்தில் பயனளிக்கும் வகையிலும் முனைப்பாகவும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கிராமப்புற வேலை வாய்ப்புத் தேசியத் திட்டம் (அம்ச எண் 3), உபரி நிலங்களைப் பகிர்ந்தளிப்பது (அம்ச எண் 4), பழங்குடியினர் குடும்பங்களுக்கு உதவி அளிப்பது (அம்ச எண் 7), வீட்டுமனைகள் ஒதுக்குவது (அம்ச எண் 9), தொடக்கநிலைக் கல்விக் கூடங்களில் கூடுதலாக மாணவர்களைச் சேர்ப்பது (அம்ச எண் 16) ஆகியவற்றில் மத்திய அரசு நிர்ணயித்த ஆண்டு இலக்குகளை இம்மாநில அரசு விஞ்சியுள்ளது குறிப்பிடத்தக்கதாகும். கொத்தடிமைத் தொழிலாளர்களுக்கு மறுவாழ்வு அளிப்பது (அம்ச எண் 6) என்பதன்கீழும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் (அம்ச எண் 15) என்பதன்கீழும் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகள் முழுமையாக எய்தப்பட்டுள்ளன. ஆரம்ப சுகாதாரத் துணை நிலையங்கள் தொடங்குவதில் (அம்ச எண் 14 ( II ) எய்திய முன்னேற்றத்தை மத்தியத் திட்டக் குழு பாராட்டியுள்ளது. 1982 ஏப்ரல்—1983 ஜனவரி கால அளவில் எய்திய சாதனையின் அடிப்படையில், இருபது அம்சத் திட்டத்தைச் செயல்படுத்திய எல்லா மாநிலங்களிலும் தமிழ்நாடு முதலாவதாக உள்ளது.

## முதலமைச்சரின் சத்துணவுத் திட்டம்.

87. இத் திட்டம் திறமையுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது; இத் திட்டம் வெற்றிகரமாகச் செயல்படுவது அனைவரின் பாராட்டினைப் பெற்றுள்ளது. ஆண்டின் ஒவ்வொரு நாளும் இம்மாநிலத்தில் உள்ள ஏறக்குறைய 65 இலட்சம் குழந்தைகளுக்கு உணவளிப்பது, சாதாரணமான சாதனை அல்ல. முதியோர் உதவித் தொகை பெறும் ஏறக்குறைய இரண்டு இலட்சம் பேர், 15—1—1983 முதல் இத்திட்டத்தின்கீழ் பயனடைகின்றனர். இத்திட்டத்திற்காகப் பொதுமக்கள் மனமுவந்து, தாராளமாகத் தொகை அளித்திருப்பதைக் கண்டு அரசு மகிழ்ச்சி அடைகிறது. இத்திட்டம் தொடர்ந்து சிறப்பாகவும், செம்மையாகவும், உறுதியாகவும் செயல்படுத்தப்

படும். இத் திட்டத்திற்கு, அடுத்த நிதியாண்டில் ஏறக்குறைய ரூ. 134 கோடி செலவாகக்கூடும். இத் திட்டம் சிறந்த பலன்களைத் தர, பொதுமக்களின் ஒத்துழைப்பு எல்லாவகையிலும் தேவைப்படுகிறது.

## ஆண்டுத் திட்டம்

88. மத்தியத் திட்டக் குழுவால் அனுமதி அளிக்கப்பட்ட திட்ட அளவைக் காட்டிலும், மாநில அரசின் திட்ட சாதனை, கடந்த சில ஆண்டுகளாகவே மிக உயர்வாக உள்ளது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல் ஆண்டான 1980—81ல், மத்தியத் திட்டக் குழு ரூ. 4,08,25 கோடி செலவில் ஆண்டுத் திட்டத்தை ஒப்புதல் அளித்திருக்க, திட்டச் செலவு ரூ. 4,56.46 கோடியாக அமைந்தது. 1981—82ஆம் ஆண்டு மத்தியத் திட்டக் குழு ரூ. 514 கோடி திட்டத்திற்கு ஒப்புதல் அளித்த போதிலும், திட்டச் செலவு ரூ. 619.54 கோடியாக அமைந்துள்ளது. வறட்சித் துயர் தணிப்புப் பணிகளுக்காகச் செலவிடப்பட்ட ரூ. 53.76 கோடி இதில் அடங்காது. நடப்பு நிதி ஆண்டில், ரூ. 711 கோடி நிதி ஒதுக்கீட்டிற்கு மத்தியத் திட்டக் குழுவின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. ஆனால், திட்டத்திற்கான செலவு, இந்த ஆண்டு ரூ. 795.93 கோடியாக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது. 1983—84ஆம் ஆண்டிற்கு மத்தியத் திட்டக் குழுவால் ஒப்புதல் அளிக்கப்பட்ட தொகை ரூபாய் 845 கோடியாக இருப்பினும், நடப்பில் இருக்கும் திட்டப் பணிகளுக்கான செலவு, அடுத்த ஆண்டில் புதிதாக மேற்கொள்ளப்படும் திட்டங்களுக்கான செலவு ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு திட்டச் செலவு ரூபாய் 803.46 கோடியாக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது. கடந்த சில ஆண்டுகளைப் போலவே, அடுத்த நிதி ஆண்டிலும் மின் துறைக்கு மிக அதிகமான தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. மாநிலத் திட்ட ஒதுக்கீட்டில், சுமார் முப்பது சதவிதம் அதாவது, ரூபாய் 272.42 கோடி மின் துறைக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

89. அடுத்த ஆண்டில் திட்ட ஒதுக்கீட்டில், பல துறைகளுக்கும் ஒதுக்கியுள்ள தொகை விவரம் வருமாறு. வேளாண்மையும் தொடர்புள்ள துறைகளுக்கும் கூட்டுறவுக்கும் ரூ. 138.20 கோடி ; கழிவு நீர் அகற்றலுக்கும், குடிநீர் வழங்கலுக்கும் ரூ. 97.15 கோடி ; வீட்டு வசதி, நகர்ப்பகுதி வளர்ச்சிகளுக்கு ரூ. 74.98 கோடி ; போக்குவரத்து, சாலைகள் ஆகியவற்றிற்கு ரூ. 63.87 கோடி ; பாசனத்திற்கும் வெள்ளக் கட்டுப்பாட்டிற்கும் ரூ. 61.76 கோடி ; தொழில் துறைக்கு ரூ. 40.08 கோடி ; கல்வி மற்றும் தொழில் நுட்பக் கல்விக்கு ரூ. 42.62 கோடி ; மருத்துவத்திற்கும் பொதுச் சுகாதாரத்திற்கும் ரூ. 38 கோடி ; ஆதி திராவிடர் பழங்குடியினர் ஏனைய பின்தங்கிய



வகுப்பினர் நலத்திற்கு ரூ. 22.61 கோடி ; பிற துறைகளுக்கு ரூ. 41.46 கோடி; மேலும், ரூ. 0.31 கோடி அளவுள்ள நிதி, எரி சக்தி திட்டப் பணிக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

## வரவு-செலவுத் திட்ட ஒதுக்கீடு

90. இந்த நிதியாண்டிற்கான வரவு- செலவு திட்ட மதிப்பீடுகளை இந்த அவை முன் வைத்தபோது, திட்டச் செலவுகளுக்கும் திட்டத்தின் கீழ் வராத செலவுகளுக்கும் போதிய ஒதுக்கீடுகள் செய்வதில் கவனம் செலுத்தப்பட்டது. இருப்பினும் தொடக்கத்தில் ஒதுக்கியதைவிட ரூ. 300 கோடிக்கு மேலாக சில கூடுதல் செலவுகளை அரசு மேற்கொள்ள வேண்டி வந்தது. குழந்தைகளுக்கான முதலமைச்சரின் சத்துணவுத் திட்டம், கிராமப்புறங்களில் கழிப்பிடங்களைக் கட்டுவதற்கான திட்டம், கிராமப் பகுதிகளில் குடிநீர் வசதி செய்து கொடுப்பதற்கான திட்டம் ஆகியவற்றிற்கு அதிக நிதி ஒதுக்கீடு, தமிழ்நாடு நுகர் பொருள் வாணிப்பக் கழகத்திற்கும் கொடுக்கப்பட்ட நிதி உதவி மற்றும் கல்வி, காவல் துறை, சாலைகள் ஆகியவற்றிற்காகச் செலவிடப்பட்டக் கூடுதல் தொகை ஆகியவை இந்த அதிகப்படி செலவினத்திற்கு முக்கியமான காரணங்களாகும்.

## நிதி நிலைமை.

91. நடப்பு ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையை இந்த அவையின் முன் வைத்தபோது, 1981—82ஆம் ஆண்டு இறுதியில் ரூ. 17.77 கோடி அளவில் பற்றாக்குறை இருக்குமென எதிர்பார்க்கப்பட்டது. கடந்த நிதி ஆண்டின் கடைசியில் மத்திய அரசிடமிருந்து கிடைக்கப்பெற்ற கூடுதல் நிதியுதவி காரணமாகவும், பொதுக் கணக்கில் எதிர்பார்க்கப்பட்ட அளவைவிட கூடுதலாக உபரி இருந்ததாலும், 1981-82 ஆம் ஆண்டின் முடிவில் அரசின் கையிருப்பில் ரூ. 3.23 கோடி நிதி இருந்தது. தற்போது அவைமுன் வைக்கப்பட்டுள்ள திருத்த மதிப்பீடுகளின்படி, வருவாய்க் கணக்கில் வரவுகள் ரூபாய் 1,681.98 கோடியும் செலவுகள் ரூபாய் 1,576.17 கோடியும் இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் வருவாய்க் கணக்கில், 105.81 கோடி உபரி இருக்குமெனவும். எதிர்பார்க்கப்படுகிறது. மூலதனக் கணக்கில் செலவு ரூபாய் 167.91 கோடியாகவும் பொதுக் கடன் கணக்கில் நிகர வருவாய் ரூபாய் 107.77 கோடியாகவும் இருக்குமெனவும் மதிப்பிடப்பட்டுள்ளது. கடன்களும் முன்பணங்களும் என்பதன்கீழ் நிகர செலவு ரூபாய் 260.25 கோடியாக இருக்கும். மேலேக் குறிப்பிடப்பட்ட செலவினங்களால் தொகுநிதியில் ரூபாய் 214.59 கோடி அளவில் நிகர பற்றாக்குறை இருக்கும் பொதுக் கணக்கில் இருக்கிறது ரூபாய் 123.34 கோடி உபரியைக் கணக்கில் கொண்டபின்,

இப் பற்றாக் குறை, ரூபாய் 92.25 கோடியாகக் குறையும். 1982-83 ஆண்டு ஆரம்பத்தில் அரசின் கையிருப்பில் இருந்த ரூபாய் 3.23 கோடியைச் சேர்த்தோமானால், இந்தப் பற்றாக்குறை மேலும் குறைந்து ஆண்டு இறுதியில் ரூபாய் 89.02 கோடி அளவிற்கு இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

92. 1983-84 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவு திட்ட மதிப்பீடுகளின்படி, வருவாய்க் கணக்கில் வரவுகள் ரூபாய் 1,774.88 கோடியாகவும் செலவுகள் ரூபாய் 1,653.81 கோடியாகவும் இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளன. இதனால் வருவாய்க் கணக்கில் உபரி ரூபாய் 121.07 கோடியாக இருக்கும். மூலதனக் கணக்கில் செலவு ரூபாய் 185.53 கோடியாக இருக்கும் எனவும் பொதுக்கடன் கணக்கில் நிகர வருவாய் ரூபாய் 119.30 கோடியாக இருக்குமெனவும் மதிப்பிடப்பட்டுள்ளது. கடன்களும் முன்பணங்களும் என்பதன்கீழ் நிகர செலவு ரூபாய் 249.67 கோடியாக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளதால், மேலே குறிப்பிட்ட அனைத்துச் செலவினங்களையும் கணக்கில் கொண்டால் தொகு நிதியில் நிகரப் பற்றாக் குறை, ரூபாய் 194.83 கோடியாக அமையும். தொகு நிதியில் உள்ள உயர்ந்த அளவு பற்றாக் குறையின் முக்கிய காரணம், தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ரூபாய் 200 கோடி அளிக்க வகை செய்துள்ளதேயாகும். பொதுக் கணக்கில் கிடைக்கக் கூடிய உபரியான ரூபாய் 99.30 கோடியைக் கணக்கில் கொண்டோமானால், அடுத்த நிதி ஆண்டின் முடிவில் உள்ளப் பற்றாக் குறை ரூபாய் 95.53 கோடியாக இருக்கும். 1983-84 ஆம் ஆண்டில், ஆரம்பப் பற்றாக் குறை ரூபாய் 89.02 கோடியாக உள்ளதாலும், அடுத்த நிதியாண்டில் பற்றாக்குறை மட்டும் ரூபாய் 95.53 கோடியாக இருப்பதாலும், 1983-84 ஆம் ஆண்டின் முடிவில் பற்றாக்குறை ரூபாய் 184.55 கோடியாக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது.

93. அரசின் வருவாய்க்கும் செலவினங்களுக்கும் இடையே உள்ள தொய்வைக் குறைக்கும் பொருட்டு சில புதிய வரிகளையும் கூடுதல் வரிகளையும் விதிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்வார்களென்று நம்புகிறேன்; அவையாவன :—

(அ) மாநிலத்தில் உள்ள மாநகராட்சிகள், சிறப்பு நகராட்சிகள் மற்றும் தேர்வு நிலை நகராட்சிகளின் எல்லைக்குள் உபயோகத்திற்காகவோ, நுகர்விற்காகவோ, மற்றும் விற்பனைக்காகவோ கொண்டுவரப்படும் கீழே குறிப்பிட்ட பொருட்களின் விலை மதிப்பின் பேரில் இரண்டு விழுக்காடு வீதம் ஒரு "நுழைவு வரி" விதிக்கப்படும். இந்த வரி விதிப்பு ஏற்கெனவே நம் நாட்டில் பல மாநிலங்களில் நடைமுறையில் இருந்து வருகிறது. இவ் வரி விதிப்பு பொருள் நுழைவு இடத்தில் வசூல் செய்யப்படாமல், வணிகர்கள்



அனுப்பும் விவர அறிக்கையின் அடிப்படையில் வசூல் செய்யப்படும். ஆதலால் வணிகர்களுக்கு இந்த வரி விதிப்பில் யாதொரு தொல்லையும் ஏற்படாது. நுழைவு வரி விதிப்பின் கீழ் வருகிற இனங்களாவன :—

(i) சர்க்கரை.
(ii) துணி வகைகள்.
(iii) புகையிலையும் அதன் உற்பத்திப் பொருள்களும்.
(iv) சிமெண்ட்.
(v) பெட்ரோலியப் பொருட்கள்.
(vi) வனஸ்பதி.
(vii) மருந்துப் பொருள்களும் மருந்து வகைகளும்.
(viii) காகிதமும் காகித அட்டைகளும்.
(ix) இரும்பும் எஃகும்.
(x) நிலக்கரியும் கல்கரியும் (லிகோ உள்பட).
(xi) மின்சாரப் பொருட்கள்.
(xii) மோட்டார் வாகனங்கள்.
(xiii) வெட்டி எடுத்த கனிப் பொருட்கள்.

(ஆ) மாநகராட்சிகள், சிறப்பு நகராட்சிகள், தேர்வு நிலை நகராட்சிகள் மற்றும் முதல் நிலை நகராட்சிகளில் உள்ள திரை அரங்குகளில் விளம்பரத்திற்காகத் திரையிடப்படும் ஒவ்வொரு சிலைடுக்கும் மற்றும் சிறிய திரைப் படத்திற்கும் ஒவ்வொரு காட்சிக்கும் முறையே 30 காசாகவும் 90 காசாகவும் குறைந்த அளவில் விளம்பர வரி விதிக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது.

(இ) மோட்டார் கார்கள் மற்றும் டீசல் வாகனங்கள் மீது தற்போதுள்ள வரி விகிதம் முறையே ஏழு விழுக்காடு என்றும் பத்து விழுக்காடு என்றும் இருப்பது புதுச்சேரி நீங்கலாக மற்ற அண்டை மாநிலங்களில் உள்ள வரி விகிதத்தைக் காட்டிலும் குறைவாக உள்ளதால், அவை முறையே ஒன்பது விழுக்காடு ஆகவும் பன்னிரண்டு விழுக்காடு ஆகவும் உயர்த்தப்படும்.

94. மோட்டார் வாகன வரி விதிப்புக்குப் பொதுச் சேவைக்கு அல்லாத (Non-transport vehicles) போக்குவரத்து ஊர்திகளான இரண்டு சக்கர வண்டிகள், மோட்டார் கார்கள். ஜீப்புகள், ஸ்டேஷன் வாகனங்கள் மற்றும் பள்ளிப் பேருந்துகள் ஆகியவை உள்ளாகின்றன. அதுவுமின்றி

போக்குவரத்து ஊர்திகளான பேருந்துகள், ஒப்பந்த ஊர்திகள் சரக்கு ஊர்திகள் மற்றும் தனியார் போக்குவரத்து ஊர்திகள் ஆகியவையும் வரி விதிப்புக்கு உள்ளாகின்றன. இந்த ஊர்திகள் மீதான வரிவிதங்கள் கடந்த சில ஆண்டுகளாக உயர்த்தப்படவில்லை. தற்போது, இவ்வூர்திகளில் சில பிரிவுகளின் மீதுள்ள வரி விதங்களை உயர்த்துவது நியாயமானதே என்று கருதப்படுகிறது. மோட்டார் வாகனங்கள் குறித்து கீழ்க்காணும் வரி விதமாற்றங்கள் செய்யக்கருதப்படுகிறது.

(i) பொதுச் சேவைக்கு அல்லாத போக்குவரத்து ஊர்திகள் :

(அ) பரித்திறன் மூன்றரைக்குக் கீழுள்ள இரண்டு சக்கர வண்டிகளுக்கான காலாண்டு வரி ரூ. 10 என்பது ரூ. 15 என உயர்த்தப்படும்.

(ஆ) பரித்திறன் 3½-க்கு மேலுள்ள இரண்டு சக்கர வண்டிகளுக்கு உரிய காலாண்டு வரி ரூ. 15 என்பது ரூ. 20 ஆக உயர்த்தப்படும்.

(இ) 700 கிலோ கிராம் எடைக்கு மேல் அல்லாத ஊர்தி எடையுள்ள மோட்டார் கார் மற்றும் ஜீப்புகளின் காலாண்டு வரி ரூ. 40லிருந்து ரூ. 50 ஆக உயர்த்தப்படும்.

(ஈ) 700 கிலோ கிராம் முதல் 1,500 கிலோ கிராம் எடை வரை ஊர்தி எடையுள்ள மோட்டார் கார் மற்றும் ஜீப்புகளின் காலாண்டு வரி ரூ. 50 லிருந்து ரூ. 60ஆக உயர்த்தப்படும்.

(உ) 1,500 கிலோ கிராம் முதல் 2,000 கிலோ கிராம் வரை ஊர்தி எடையுள்ள மோட்டார் கார்கள் மற்றும் ஜீப்புகளின் காலாண்டு வரி ரூபாய் 60 லிருந்து ரூபாய் 75 ஆக உயர்த்தப்படும்.

(ஊ) 2,000 கிலோ கிராம் முதல் 3,000 கிலோ கிராம் வரை ஊர்தி எடையுள்ள ஸ்டேஷன் வேகன்களுக்கு, காலாண்டுக்கு ரூ. 70 என உள்ள வரி ரூ. 80ஆக உயர்த்தப்படும்.

(எ) 3,000 கிலோ கிராம் எடைக்கு மேல் ஊர்தி எடையுள்ள ஸ்டேஷன் வேகன்களுக்கு, காலாண்டு வரி ரூ. 90 என்பது ரூ. 100 ஆக உயர்த்தப்படும்.





(ii) போக்குவரத்து ஊர்திகள்

(அ) தொழில் நிறுவனம் போன்ற அமைப்புகள் தங்களது ஊழியர்களின் போக்குவரத்துக்காகக் கொண்டுள்ள 3,000 கிலோ கிராம் எடைக்கு மேல் ஊர்தி எடையுள்ள வாகனங்களுக்கு காலாண்டு வரி ரூபாய் 90 லிருந்து ரூபாய் 150 ஆக உயர்த்தப்படும்.

(ஆ) வாடகைச் சுற்றுலா டாக்சிகளுக்கு காலாண்டு வரி ரூ. 90லிருந்து ரூ. 120 ஆக அதிகரிக்கப்படும்.

(இ) நகரப் பணிப் பேருந்துகளுக்கு, இருக்கைக்கு காலாண்டு வரி ரூ. 115 ஆக இருப்பது ரூ. 150 ஆக உயர்த்தப்படும்.

(ஈ) வாடகைக்கு ஓட்டப்படும், சரக்கு ஊர்திகளில் (Public Carrier) ஏற்றப்படும் அனுமதி எடை 9,000 கிலோ கிராம் முதல் 12,000 கிலோ கிராம் வரை உள்ளவற்றிற்கு காலாண்டு வரி ரூபாய் 1,000 லிருந்து ரூபாய் 1,100 ஆக உயர்த்தப்படும்.

(உ) வாடகைக்கு ஓட்டப்படும் சரக்கு வாகனங்கள் 12,000 முதல் 13,000 கிலோ கிராம் வரை ஏற்றப்படும் அனுமதி எடை கொண்டவற்றிற்குக் காலாண்டு வரி ரூ. 1080லிருந்து ரூ. 1,100 ஆக அதிகரிக்கப்படும்.

(ஊ) வாடகைக்கு ஓட்டப்படும் சரக்கு வாகனங்கள், ஏற்றப்படும் அனுமதி ஏ்டை 13,000 முதல் 15,000 கிலோ கிராம் வரை கொண்டவற்றிற்கு காலாண்டு வரி ரூபாய் 1,260-லிருந்து ரூபாய் 1,300 ஆக அதிகரிக்கப்படும்.

(எ) வாடகைக்கு ஓட்டப்படும் சரக்கு வாகனங்கள், ஏற்றப்படும் அனுமதி எடை 15,000 கிலோ இராமுக்கு மேலுள்ள ஊர்திகளுக்கு காலாண்டு வரி ரூபாய் 1,260 லிருந்து ரூபாய் 1,300 ஆக அதிகரிக்கப்படும்.

95. சிரமமான பொருளாதார நிலையிலும், முக்கியமாக சமூகத்தில் உள்ள ஏழை எளிய மக்களுக்கும் சிறிய ஊரகத் தொழில்களில் ஈடுபட்டிருக்கும் மக்களுக்கும் பயனளிக்கும் வகையில் அரசு சில வரிச் சலுகைகளை வழங்க உத்தேசிக்கிறது, அவையாவன :—

(அ) எல்லாவகைப்பட்ட மண்ணெண்ணெய் விளக்குகள், அதன் உதிரி பாகங்களான திரிகள், கண்ணாடி சிம்னி ஆகிய அனைத்திற்கும் முழு விற்பனை வரி விலக்கு அளிக்கப்படுகிறது. (வாயு மற்றும் பெட்ரோமாக்ஸ் விளக்குகளுக்கு இவ் வரி விலக்கு பொருந்தாது). இந்த வரிச் சலுகையினால் சிற்றூர்களிலும் குடிசைகளிலும் வாழும் ஏழை மக்கள் பயன் அடைவார்கள்.

(ஆ) உள்நாட்டுப் பட்டுப்புழு வளர்ப்புத் தொழிலில் கிடைக்கும் பொருட்கள் ஆன பட்டுப் புழுக்கள், ராட்டை மற்றும் வீட்டிலேயே எடுக்கப் படும் பட்டிழை, முறுக்கப்பட்ட பட்டுநூல் நூற்கப்பட்ட பட்டு மற்றும் கழிவுப் பட்டு, பட்டு நூற்புக்கு உபயோகப்படும் கூட்டுப் புழு மற்றும் பழுதான கூட்டுப் புழு ஆகியவற்றிற்கு விற்பனை வரி முழுமையாக விலக்கப்படுகிறது. இவ்வரி விலக்கினால் பட்டுத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் ஆயிரக்கணக்கான மக்கள் பயன் அடைகிறார்கள்.

(இ) வெள்ளிக் கொலுசு, வெள்ளி அரைஞாண் ஆகியவைகளுக்கு முழு வரி விலக்கு அளிக்கப்படுகிறது. இத் தொழிலில் ஈடுபட்டுள்ள ஆயிரக்கணக் கான தொழிலாளர்கள் முக்கியமாக இவ் வரி விலக்கினால் பயன் அடைவார்கள்.

(ஈ) குடிசைத் தொழில் முறையில் கையினால் செய்யப்படும் சலவை சோப்புக் கட்டிகள் மற்றும் கையினால் செய்யப்படும் டிடர்ஜென்ட் கட்டிகள் ஆகியவற்றிற்கு, ஆண்டு ஒன்றுக்கு இரண்டு இலட்ச ரூபாய்க்குக் குறைவான மொத்த விற்பனைத் தொகை (Turn over) உள்ளவர்களுக்கு இப்போது உள்ள விற்பனை வரி விதிப்பிலிருந்து வரி விலக்கு அளிக்கப்படுகிறது.

### திருத்த வகைப்பாடு—தொடர்ச்சி.

| பெருந்தலைப்பு எண்ணும், பெருந் தலைப்புகளும். | 1978-79 கணக்கு கள். | 1979-80 கணக்கு கள். | 1980-81 கணக்கு கள். | 1981-82 கணக்கு கள். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | (ரூபாய் இலட்சத்தில்). | | |
| 211 மாநிலச் சட்டமன்றங்கள் .. .. | 74.52 | 87.55 | 98.19 | 1,25.81 |
| 212 ஆளுநர் .. .. .. .. | 16.09 | 16,80 | 21.22 | 23.70 |
| 213 அமைச்சரவை .. .. .. | 26.10 | 33.63 | 31.23 | 43.07 |
| 214 நீதி நிர்வாகம் .. .. .. | 6,07.66 | 6,62.72 | 7,58,87 | 9,42.54 |
| 215 தேர்தல்கள் .. .. | 33,75 | 4,30.21 | 3,41.02 | 67.43 |
| 220 வருவாய், செலவினங்கள் மீதான வரிகளை வசூலித்தல். | 47.73 | 49.92 | 52.56 | 58.16 |
| 229 நிலவரி .. .. .. .. | 4,41.77 | 4,78.33 | 5,38.51 | 6,25.63 |
| 230, முத்திரைத்தாள்களும் பத்திரப் பதிவும் | 3,05.46 | 3,17.62 | 3,98.31 | 4,43.83 |
| 235 சொத்து மூலதனப் பற்று வரவு மீதான ஏனைய வரிகளை வசூலித்தல். | 45.69 | 44.98 | 51.72 | 55.84 |
| 239 மாநில ஆயத் தீர்வை .. .. | 22.42 | 27.84 | 34.61 | 1,95.36 |
| 240 விற்பனை வரி .. .. .. | 5,58.57 | 5,98.09 | 6,69.05 | 7,79.50 |



| | | | | |
|---|---|---|---|---|
| 241 வண்டிகள் மீது வரிகள் .. .. | 1,49.05 | 1,22.84 | 1,33.15 | 1,57.95 |
| 245 பண்டங்கள், பணிகள் மீதான ஏனைய வரிகளும் தீர்வையும். | 28.67 | 29.06 | 30.74 | 33.93 |
| 247 ஏனைய வரி விதிப்புப் பணிகள் .. | 7.52 | 41.18 | 26.36 | 29,48 |
| 248 கடன் குறைப்பு அல்லது தவிர்ப்புக்கான நிதி ஒதுக்கம். | .. | 20,12.95 | 22,17.59 | 22,65.12 |
| 249 வட்டி கொடுத்தல் .. .. | 61,76.97 | 58,97.91 | 91,04.89 | 92,01.63 |
| 251 அரசுப் பணியாளர் தேர்வுக் கழகம் .. | 51.89 | 43.12 | 69.64 | 76.37 |
| 252 தலைமைச் செயலகம்—பொதுவான பணி | 3,59.23 | 3,68.47 | 4,23.34 | 4,96.32 |
| 253 மாவட்ட நிர்வாகம் .. .. .. | 17,56.08 | 18,18.97 | 21,83.70 | 25,65.83 |
| 254 கருவூல-கணக்குகள் நிர்வாகம் .. .. | 4,34.42 | 4,76.08 | 5,34.90 | 6,18.98 |
| 255 காவல் துறை .. .. .. .. | 33,62.72 | 36,63.62 | 49,78.99 | 59,71.21 |
| 256 சிறைச்சாலைகள் .. .. .. | 4,53.23 | 5,32.94 | 5,61.44 | 6,30.72 |
| 258 எழுதுபொருள்-அச்சுத்துறை .. .. | 6,08.25 | 6,90.70 | 11,11.33 | 12,69.62 |
| 259 பொதுப் பணிகள் .. .. .. | 9,66.68 | 10,13.93 | 10,07.41 | 11,07.53 |
| 260 தீத் தடுப்பும் கட்டுப்பாடும் .. .. | 2,26.87 | 2,87.85 | 3,44.79 | 4,22.52 |
| 265 ஏனைய நிர்வாகப் பணிகள் .. .. | 2,78.67 | 3,48.57 | 6,29.00 | 4,72.41 |
| 266 ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும். | 22,70.11 | 26,50.63 | 27,43.60 | 32,67.00 |
| 267 உதவிப் பொருள்களும் சாதனமும் .. | 49.26 | .. | .. | .. |
| 268 பல்வகைப் பொதுவான பணிகள் .. | 9,03.95 | 4,14.16 | 4,48.44 | 6,69.12 |
| 276 தலைமைச் செயலகம்—சமூக, சமுதாய நலப் பணிகள். | 77.97 | 86.22 | 97.34 | 115.01 |
| 277 கல்வி .. .. .. .. .. | 1,83,40.82 | 1,98,41.43 | 2,35,45.80 | 2,65,52.95 |

## இணைப்பு I—தொடர்ச்சி.

### தமிழ் நாடு வருவாய்க் கணக்கில் வரவினமும், செலவினமும்—தொடர்ச்சி.

### ஆ. வருவாய்க் கணக்கில் செலவினம்—தொடர்ச்சி.

திருத்த வகைப்பாடு—தொடர்ச்சி

| பெருந்தலைப்பு எண்ணும், பெருந்தலைப்புகளும். (1) | | 1982-83 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. (10) | 1982-83 திருத்த மதிப்பீடு. (11) | 1983-84 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. (12) |
|---|---|---|---|---|
| | | | (ரூபாய் இலட்சத்தில்). | |
| 211 | மாநிலச் சட்டமன்றங்கள் .. .. | 1,28.11 | 1,36.49 | 1,36.48 |
| 212 | ஆளுநர் .. .. .. | 21.69 | 24.30 | 23.15 |
| 213 | அமைச்சரவை .. .. .. | 38.73 | 44.65 | 43.91 |
| 214 | நீதி நிர்வாகம் .. .. .. | 10,84.77 | 12,05.02 | 12,40.20 |
| 215 | தேர்தல்கள் .. .. .. | 30.27 | 41.85 | 36.15 |
| 220 | வருவாய், செலவினங்கள் மீதான வரிகளை வசூலித்தல். | 57.13 | 63.59 | 67.01 |
| 229 | நிலவரி .. .. .. .. | 11,59·58 | 8,56.31 | 7,79.23 |
| 230 | முத்திரைத் தாள்களும் பத்திரப் பதிவும் | 4,80.28 | 5,01.91 | 5,69.21 |
| 235 | சொத்து, மூலதனப் பற்று-வரவு மீதான ஏனைய வரிகளை வசூலித்தல். | 57.09 | 61.67 | 66.54 |
| 239 | மாநில ஆயத் தீர்வை .. .. | 2,68.44 | 2,73.93 | 2,61.00 |
| 240 | விற்பனை வரி .. .. .. | 8,32.28 | 8,95.38 | 9,32.78 |



| | | | | |
|---|---|---|---|---|
| 241 | [illegible] மீது வரிகள் .. .. | 1,59.54 | 1,79.75 | 1,82.41 |
| 245 | பண்டங்கள், பணிகள் மீதான ஏனைய வரிகளும் தீர்வைகளும். | 34.80 | 37.48 | 38.55 |
| 247 | ஏனைய வரி விதிப்புப் பணிகள் .. | 26.66 | 32.57 | 29.61 |
| 248 | கடன் குறைப்பு அல்லது தவிர்ப்புக்கான நிதி ஒதுக்கம். | 23,38.68 | 23,38.68 | 23,89.53 |
| 249 | வட்டி கொடுத்தல் .. .. | 1,00,99.75 | 1,04,20.28 | 1,12,72·87 |
| 251 | அரசுப் பணியாளர் தேர்வுக் கழகம் .. | 80.07 | 1,06.65 | 1,09.45 |
| 252 | தலைமைச் செயலகம்—பொதுவான பணிகள். | 4,91.84 | 4,90.29 | 4,99.61 |
| 253 | மாவட்ட நிர்வாகம் .. .. .. | 22,95.40 | 24,42.10 | 27,89.00 |
| 254 | கருவூல-கணக்குகள் நிர்வாகம் .. .. | 6,41.31 | 6,87.78 | 7,15.83 |
| 255 | காவல் துறை .. .. .. .. | 68,04.53 | 74,30.58 | 73,49.01 |
| 256 | சிறைச்சாலைகள் .. .. .. | 6,38.13 | 6,75.40 | 7,01.44 |
| 258 | எழுதுபொருள்-அச்சுத் துறை .. | 9,60.78 | 10,52.65 | 10,59.52 |
| 259 | பொதுப் பணிகள் .. .. .. | 6,56.29 | 6,19.58 | 6,62.02 |
| 260 | தீத் தடுப்பும் கட்டுப்பாடும் .. .. | 4,97.08 | 5,27.53 | 5,64.34 |
| 265 | ஏனைய நிர்வாகப் பணிகள் .. .. | 4,47.16 | 5,90.12 | 5,68.76 |
| 266 | ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும். | 30,27.22 | 35,19.58 | 35,37.59 |
| 267 | உதவிப் பொருள்களும் சாதனங்களும் .. | .. | .. | .. |
| 268 | பல்வகைப் பொதுவான பணிகள் .. | 55,14.03 | 13,42.85 | 45,96.35 |
| 276 | தலைமைச் செயலகம்—சமூக, சமுதாய நலப் பணிகள். | 1,17.35 | 1,23.82 | 1,32.67 |
| 277 | கல்வி .. .. .. .. .. | 296,16.51 | 3,44,16.65 | 3,52,97.72 |

| (1) | | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|---|
| | | | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| 278 | கலை, பண்பாடு .. .. .. | 1,34.77 | 1,29.94 | 1,85.08 | 2,06.09 |
| 279 | அறிவியல் பணிகளும் ஆராய்ச்சியும் .. | .. | .. | .. | .. |
| 280 | மருத்துவம் .. .. .. .. | 36,09.69 | 41,12.66 | 47,23,97 | 50,43.45 |
| 281 | குடும்ப நலத் திட்டம் .. .. .. | 5,55,69 | 6,28.44 | 12,11.06 | 6,79.68 |
| 282 | பொதுச் சுகாதாரம், துப்புரவு, குடிநீர் வழங்கல். | 6,91.84 | 7,74.85 | 18,32.12 | 13,82.33 |
| 283 | வீட்டு வசதி .. .. .. .. | 3,44.10 | 6,02.42 | 7,50.86 | 9,20.61 |
| 284 | நகர்ப் பகுதி வளர்ச்சி .. .. .. | 1,32.87 | 1,13.99 | 1.79,37 | 3,00.62 |
| 285 | செய்தி-விளம்பரம் .. .. .. | 92.78 | 95.95 | 94.72 | 89.36 |
| 287 | தொழிலாளர் நலனும் வேலை வாய்ப்பும். | 3,73.88 | 3,38.76 | 3,92.28 | 4,19.24 |
| 288 | சமூகப் பாதுகாப்பும் நலனும் .. .. | 27,71.88 | 36,31.77 | 30,18.26 | 35,71.88 |
| 289 | இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு. | 20,99.40 | 15,33.55 | 1,59.62 | 10,25.29 |
| 295 | ஏனைய சமூக-சமுதாய நலப் பணிகள் | 1,14.55 | 1,02.02 | 81.47 | 70.20 |
| 296 | தலைமைச் செயலகம்-பொருளாதாரப் பணிகள். | 99.85 | 97.07 | 1,03.31 | 1,08.46 |
| 298 | கூட்டுறவு .. .. .. .. | 4,77.45 | 5,36.03 | 6,04.96 | 7,21.11 |
| 304 | ஏனைய பொதுவான பொருளாதாரப் பணிகள். | 1,25.28 | 1,64.92 | 2,34.69 | 2,40.45 |
| 305 | வேளாண்மை .. .. .. | 23,56.11 | 23,11.64 | 22.26.10 | 30,06.49 |
| 306 | சிறு பாசனம் .. .. .. | 3,39.71 | 4.19.13 | 4,31.79 | 3,44.00 |
| 307 | மண்வளப் பாதுகாப்பும் நீர்வளப் பாதுகாப்பும். | 25.97 | 97.06 | 1,91.51 | 2,66.76 |
| 308 | பகுதி மேம்பாடு .. .. .. | 2,84.59 | 1.24.22 | 1,61.95 | 1,54.46 |



| | | | | | |
|---|---|---|---|---|---|
| 309 | உணவு .. .. .. .. .. | 1.29 | 1.65 | 2.02 | 2.06 |
| 310 | கால்நடை வளர்ப்பு .. .. .. | 6,25.46 | 7,07.66 | 8,74.77 | 10,48.48 |
| 311 | பால் பண்ணை வளர்ச்சி .. .. | 1,80,87 | 1,02.30 | 90.66 | 74.45 |
| 312 | மீனளம் .. .. .. .. | 88.56 | 1,36.44 | 1,64.79 | 2,19.50 |
| 313 | காட்டு வளம் .. .. .. .. | 3,35.51 | 3.52.58 | 4,23.48 | 4,47.56 |
| 314 | சமுதாய நல வளர்ச்சி .. .. .. | 29,18.46 | 33,09.50 | 34,94.84 | 35,05.69 |
| 320 | தொழில்கள் .. .. .. .. | 1,64.90 | 1,74.43 | 1,79.70 | 2,69.58 |
| 321 | கிராமத் தொழில்களும் சிறு தொழில்களும். | 5,26.77 | 5,61.70 | 7,43.47 | 12,46.19 |
| 328 | சுரங்கங்களும் கனிப் பொருள்களும் .. | 17.84 | 16.83 | 19.21 | 27.02 |
| 331 | நீர்-மின் விசை உற்பத்தி வளர்ச்சிப் பணிகள். | 10,53.47 | 27.32 | 38.04 | 1,32.09 |
| 333 | பாசன, நீர்வழி, வடிகால், வெள்ளக் கட்டுப்பாட்டுத் திட்டங்கள். | 15,72.11 | 19,09.21 | 22,51.33 | 26,05.24 |
| 334 | மின் விசைத் திட்டங்கள் .. .. | .. | .. | 8,10.00 | 12,15.00 |
| 335 | துறைமுகங்கள், கலங்கரை விளக்கங்கள் கப்பல் போக்குவரத்து. | 2.13 | 13.39 | 46.30 | 37.33 |
| 336 | பொதுமக்கள் விமானப் போக்குவரத்து | 1.27 | 1.82 | 0.54 | 1.86 |
| 337 | சாலைகளும் பாலங்களும் .. .. | 21,06.76 | 22,89.46 | 26,90.70 | 29,98.21 |
| 338 | சாலை, நீர்வழிப் போக்குவரத்துப் பணிகள். | 14,18.38 | 6,81.77 | 1,30.72 | 1,35.98 |
| 339 | சுற்றுலா .. .. .. .. .. | 13.26 | 13.27 | 15.44 | 20.77 |
| 363 | உள்ளாட்சி மன்றங்களுக்கும் ஊராட்சி நிறுவனங்களுக்கும் அளிக்கப்படும் இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளுக்கும். | 14,32.20 | 15,63.28 | 19,20.52 | 19,20.34 |
| | மொத்தம் .. | 5,28,36.09 | 5,57,92.01 | 6,28,36.71 | 7,06,12.45 |
| | வருவாய் மிகுதி (+) அல்லது பற்றாக்குறை (—) | 8,07.33 (—) | 5,43.71 (+) | 61.42 (+) | 24,07.39 (—) |

| | | (6) | (7) | (8) | (9) |
|---|---|---|---|---|---|
| | | | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| | —தொடர்ச்சி, | | | | |
| 278 | கலை, பண்பாடு .. .. .. | 2,25.31 | 2,35.71 | 2,70.25 | 3,17.79 |
| 279 | அறிவியல் பணிகளும் ஆராய்ச்சியும் .. | .. | .. | .. | .. |
| 280 | மருத்துவம் .. .. .. .. | 55,22.40 | 60,33.45 | 71,72.12 | 83,42.72 |
| 281 | குடும்ப நலத் திட்டம் .. .. .. | 7,99.40 | 7,61.78 | 8,80.42 | 10,38.86 |
| 282 | பொதுச் சுகாதாரம், துப்புரவு, குடிநீர் வழங்கல். | 20,20.22 | 18,14.89 | 24,28,16 | 53,91.77 |
| 283 | வீட்டு வசதி .. .. .. .. | 2,37.91 | 9,68.81 | 8,37.59 | 9,87.31 |
| 284 | நகர்ப் பகுதி வளர்ச்சி .. .. .. | 4,96.18 | 4,59.91 | 3,59.74 | 7,13.91 |
| 285 | செய்தி-விளம்பரம் .. .. .. | 1,14.77 | 1,77.23 | 1,73.59 | 2,27.99 |
| 287 | தொழிலாளர் நலனும் வேலை வாய்ப்பும். | 4,68.77 | 5,35.89 | 6,80.38 | 7,78.16 |
| 288 | சமூகப் பாதுகாப்பும் நலனும் .. .. | 36,07.76 | 36,25.80 | 57,38.53 | 73,94.73 |
| 289 | இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு. | 1,52.09 | 8,64.82 | 8,60.16 | 10,70.77 |
| 295 | ஏனைய சமூக-சமுதாய நலப் பணிகள் .. | 1,00.06 | 1,48.96 | 2,13.89 | 2,39,08 |
| 296 | தலைமைச் செயலகம்-பொருளாதாரப் பணிகள். | 1,29.21 | 1,36.30 | 1,50.82 | 1,77.00 |
| 298 | கூட்டுறவு .. .. .. .. | 10,37.87 | 13,85.65 | 12,93.91 | 94,12.25 |
| 304 | ஏனைய பொதுவான பொருளாதாரப் பணிகள். | 2,68.59 | 3,24.61 | 3,47.56 | 3,78.65 |
| 305 | வேளாண்மை .. .. .. | 30,27.56 | 42,15.50 | 50,74.32 | 65,54.17 |
| 306 | சிறு பாசனம் .. .. .. | 6,20.62 | 3,12.27 | 8,15.76 | 10,45.84 |
| 307 | மண்வளப் பாதுகாப்பும் நீர்வளப் பாதுகாப்பும். | 2,33.10 | 1,85.04 | 2,64.63 | 3,19.51 |
| 308 | பகுதி மேம்பாடு .. .. .. | 2,38.95 | 1,68.42 | 2,29.30 | 2,69.19 |



| | | | | | |
|---|---|---|---|---|---|
| 309 | உணவு .. .. .. .. .. | 0.89 | 0.86 | 17.32 | 92.60 |
| 310 | கால்நடை வளர்ப்பு .. .. .. | 11,65.76 | 12,09.47 | 14,21.05 | 18,17.67 |
| 311 | பால் பண்ணை வளர்ச்சி .. .. | 72.42 | 69.93 | 73.14 | 94.60 |
| 312 | மீனளம் .. .. .. .. | 3,90.25 | 2,60.64 | 2,78.67 | 3,45.93 |
| 313 | காட்டு வளம் .. .. .. .. | 5,10.80 | 5,94.84 | 6,92.09 | 8,43.61 |
| 314 | சமுதாய நல வளர்ச்சி .. .. .. | 37,31.34 | 32,64.08 | 60,95.19 | 1,06,90.17 |
| 320 | தொழில்கள் .. .. .. .. | 3,95.96 | 3,77.79 | 3,75.08 | 4,99.13 |
| 321 | கிராமத் தொழில்களும் சிறு தொழில்களும். | 12,56.62 | 11,14.60 | 14,18.69 | 18,76.99 |
| 328 | சுரங்கங்களும் கனிப் பொருள்களும் .. | 28.23 | 2,39.08 | 2,66.37 | 2,88.21 |
| 331 | நீர்-மின் விசை உற்பத்தி வளர்ச்சிப் பணிகள். | 83.16 | 49.08 | 91,10.05 | 59.90 |
| 333 | பாசன, நீர்வழி, வடிகால், வெள்ளக் கட்டுப்பாட்டுத் திட்டங்கள். | 28,69.56 | 25,96.15 | 26,73.37 | 46,96.75 |
| 334 | மின் விசைத் திட்டங்கள் .. .. | 12,00.00 | 22,50.00 | 22,50.00 | 20,00.00 |
| 335 | துறைமுகங்கள், கலங்கரை விளக்கங்கள், கப்பல் போக்குவரத்து. | 43.42 | 37.77 | 40.49 | 69.44 |
| 336 | பொதுமக்கள் விமானப் போக்குவரத்து | 2.01 | 1.69 | 5.41 | 6.12 |
| 337 | சாலைகளும் பாலங்களும் .. .. | 34,71.69 | 43,43.08 | 65,53.65 | 65,63·62 |
| 338 | சாலை, நீர்வழிப் போக்குவரத்துப் பணிகள். | 65·73 | 5,36.73 | 38.93 | 43.60 |
| 339 | சுற்றுலா .. .. .. .. | 21.46 | 36.67 | 31.32 | 23.95 |
| 363 | உள்ளாட்சி மன்றங்களுக்கும் ஊராட்சி நிறுவனங்களுக்கும் அளிக்கப்படும் இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும். | 19,95.83 | 25,29.31 | 29,06.90 | 20,32.53 |
| | மொத்தம் .. | 7,53,51.02 | 8,49,54·82 | 11,52,24.59 | 13,59,86.62 |
| | வருவாய் மிகுதி (+) அல்லது பற்றாக்குறை(—) | 47,97.24 | 95,30.15 (+) | 1,25,70.93 (+) | 81,65.97 (+) |

| | (1) | (10) | (11) | (12) |
|---|---|---|---|---|
| | தொடர்ச்சி. | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| 278 | கலை, பண்பாடு .. .. .. | 3,47.33 | 5,62.08 | 5,55.70 |
| 279 | அறிவியல் பணிகளும் ஆராய்ச்சியும் .. | .. | .. | 31·00 |
| 280 | மருத்துவம் .. .. .. .. | 88,49.91 | 96,74.30 | 1,03,49.78 |
| 281 | குடும்ப நலத் திட்டம் .. .. .. | 13,13.76 | 12,89.93 | 14,39.28 |
| 282 | பொதுச் சுகாதாரம், துப்புரவு, குடிநீர் வழங்கல். | 48,99.27 | 72,50.49 | 97,24.26 |
| 283 | வீட்டு வசதி .. .. .. .. | 14,00.54 | 13,09.94 | 13,18.19 |
| 284 | நகர்ப் பகுதி வளர்ச்சி .. .. .. | 11,75.71 | 16,86.52 | 14,60.90 |
| 285 | செய்தி-விளம்பரம் .. .. .. | 1,98.15 | 3,24.63 | 2,13.54 |
| 287 | தொழிலாளர் நலனும் வேலை வாய்ப்பும். | 8,35.89 | 8,63.38 | 24,98.52 |
| 288 | சமூகப் பாதுகாப்பும் நலனும் .. .. | 77,61.02 | 1,23,25.67 | 1,20,98.00 |
| 289 | இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு. | 8,59.28 | 49.81 | 8,76.20 |
| 295 | ஏனைய சமூக-சமுதாய நலப் பணிகள் | 60.92 | 69.64 | 1,35.91 |
| 296 | தலைமைச் செயலகம்-பொருளாதாரப் பணிகள். | 1,84.63 | 2,05.92 | 2,05.47 |
| 298 | கூட்டுறவு .. .. .. .. | 13,32.67 | 18,89.68 | 14,03.77 |
| 304 | ஏனைய பொதுவான பொருளாதாரப் பணிகள். | 4,25.28 | 4,05.95 | 4,12.81 |
| 305 | வேளாண்மை .. .. .. | 68,73.85 | 70,10.95 | 59,83.86 |
| 306 | சிறு பாசனம் .. .. .. | 5,01.99 | 7,53.23 | 7,94.86 |
| 307 | மண்வளப் பாதுகாப்பும் நீர்வளப் பாதுகாப்பும். | 4,18.90 | 3,28.63 | 3,59·31 |
| 308 | பகுதி மேம்பாடு .. .. .. | 2,73.69 | 3,98.63 | 3,97.96 |



| | | | | |
|---|---|---|---|---|
| 309 | உணவு .. .. .. .. .. | 4,85.62 | 59,12.61 | 80,15.09 |
| 310 | கால்நடை வளர்ப்பு .. .. .. | 18,19.81 | 19,86.75 | 21,13.24 |
| 311 | பால்பண்ணை வளர்ச்சி .. .. .. | 86.50 | 1,03.18 | 1,19.28 |
| 312 | மீனளம் .. .. .. .. | 3,69.38 | 4,63.47 | 3,91.26 |
| 313 | காட்டு வளம் .. .. .. .. | 8,95.80 | 9,94.48 | 9,75.16 |
| 314 | சமுதாய நல வளர்ச்சி .. .. .. | 1,00,21.26 | 1,25,06.60 | 93,18.33 |
| 320 | தொழில்கள் .. .. .. .. | 4,93.95 | 7,37.71 | 5,54.61 |
| 321 | கிராமத் தொழில்களும் சிறு தொழில்களும். | 13,45·43 | 16,69·80 | 15,69·24 |
| 328 | சுரங்கங்களும் கனிப் பொருள்களும் .. | 3,02·33 | 3,05·21 | 38·10 |
| 331 | நீர்-மின் விசை உற்பத்தி வளர்ச்சிப் பணிகள். | 60·18 | 63·42 | 65·84 |
| 333 | பாசன, நீர்வழி, வடிகால், வெள்ளக் கட்டுப்பாட்டுத் திட்டங்கள். | 32,62·92 | 30,75·17 | 33,17·16 |
| 334 | மின்விசைத் திட்டங்கள் .. .. | 30,00·00 | 30,00·00 | 30,00·00 |
| 335 | துறைமுகங்கள், கலங்கரை விளக்கங்கள், கப்பல் போக்குவரத்து. | 60·69 | 73·55 | 63·52 |
| 336 | பொதுமக்கள் விமானப் போக்குவரத்து | 4·75 | 5·15 | 4·90 |
| 337 | சாலைகளும் பாலங்களும் .. .. | 62,39·43 | 68,39·66 | 65,71·77 |
| 338 | சாலை, நீர்வழிப் போக்குவரத்துப் பணிகள். | 6·73 | 24·38 | 7·37 |
| 339 | சுற்றுலா .. .. .. .. | 22·69 | 50·14 | 34·25 |
| 363 | உள்ளாட்சி மன்றங்களுக்கும் ஊராட்சி நிறுவனங்களுக்கும் அளிக்கப்படும் இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும். | 22,60·00 | 22,66·11 | 22,60·56 |
| | மொத்தம் .. | 13,70,03·76 | 15,76,17·27 | 16,53,81·14 |
| | வருவாய் மிகுதி (+) அல்லது பற்றாக்குறை (—) | (+)1,99,44·96 | (+)1,05.80·52 | (+)1,21,06·39 |

இணைப்பு II

தமிழ்நாடு வருவாய்க் கணக்கின்கீழ் வராத பெருந்தலைப்பு வாரியான விவரங்கள்

பழைய வகைப்பாடு

| பெருந்தலைப்புகள். | 1946–47 முதல் 1968–69 வரை கணக்குகள் | 1969–70 கணக்குகள். | 1970–71 கணக்குகள். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| ஜமீன்தாரி முறை ஒழிப்பினால் நிலக்கிழார் முதலியவர்களுக்கு இழப்பீடு கொடுத்தல். | 9,87·62 | 5·88 | 9·42 |
| பொதுச் சுகாதார மேம்பாட்டிற்கான மூலதனச் செலவு. | 3,97·25 | 50·74 | 10·19 |
| வேளாண்மை மேம்பாடு—ஆராய்ச்சித் திட்டங்கள் நீங்கலாக மூலதனச் செலவு. | 1,56·71 | 14·44 | 22·05 |
| நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களுக்கான மூலதனச் செலவு. | 22·11 | .. | .. |
| தொழில்-பொருளாதார வளர்ச்சிக்கான மூலதனச் செலவு. | 33,53·79 | 4,87·38 | 8,41·47 |
| பாசன, நீர்வழி, கரையுயர்த்து, வடிகால் வேலைகளுக்கான மூலதனச் செலவு (வணிகத் தன்மையுள்ளவை). | 1,04,90·41 | 5,28·49 | 6,04·58 |
| பாசன, நீர்வழி, கரையுயர்த்து, வடிகால் வேலைகளுக்கான மூலதனச் செலவு (வணிகத் தன்மையற்றவை). | 28,47·35 | 3,30·14 | 4,04·16 |
| பொதுப் பணிகளுக்கான மூலதனச் செலவு .. | 68,59·29 | 5,38·41 | 11,69·33 |
| வருவாய்க் கணக்கின்கீழ் வராத மற்ற வேலைகளுக்கு மூலதனச் செலவு. | 23,66·26 | 3,38·21 | 1,82·18 |
| சாலை, நீர்வழிப் போக்குவரத்துத் திட்டங்களுக்கான மூலதனச் செலவு. | 15,28·07 | 29·81 | 1,63·67 |
| காட்டு வள மூலதனச் செலவு .. .. | 5,43·02 | 76·74 | 1,02·90 |
| அரசு வணிகத் திட்டங்களுக்கான மூலதனச் செலவு. | (—)7,67·66 | (—)10,05·53 | (—)19,73·51 |
| எதிர்பாராச் செலவு நிதிக்கு நிதி ஒதுக்கம் .. | 3,50·00 | 5,00·00 | .. |
| மொத்தம் .. | 2,91,34·22 | 18,94·71 | 15,36·44 |

இணைப்பு II—தொடர்ச்சி.

தமிழ்நாடு வருவாய்க் கணக்கின்கீழ் வராத பெருந் தலைப்பு வாரியான விவரங்கள்—தொடர்ச்சி.

பழைய வகைப்பாடு தொடர்ச்சி.

| பெருந்தலைப்புகள் | 1971–72 கணக்குகள். | 1972–73 கணக்குகள். | 1973–74 கணக்குகள். |
|---|---|---|---|
| (1) | (5) | (6) | (7) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| ஜமீன்தாரி முறை ஒழிப்பினால் நிலக்கிழார் முதலியவர்களுக்கு இழப்பீடு கொடுத்தல். | 38.25 | 28.99 | 99.94 |
| பொதுச் சுகாதார மேம்பாட்டிற்கான மூலதனச் செலவு. | 5.47 | (—) 0.78 | .. |
| வேளாண்மை மேம்பாடு—ஆராய்ச்சித் திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு. | 17.51 | 15.28 | 13.03 |
| நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களுக்கான மூலதனச் செலவு. | .. | .. | .. |
| தொழில்-பொருளாதார வளர்ச்சிக்கான மூலதனச் செலவு. | 9,47.59 | 9,28.07 | 14,79.73 |
| பாசன, நீர்வழி, கரையுயர்த்து, வடிகால் வேலைகளுக்கான மூலதனச் செலவு (வணிகத் தன்மையுள்ளவை). | 6,56.61 | 7,21.73 | 6,77.34 |
| பாசன, நீர்வழி, கரையுயர்த்து, வடிகால் வேலைகளுக்கான மூலதனச் செலவு (வணிகத் தன்மையற்றவை). | 4,23.00 | 3,40.27 | 4,93.42 |
| பொதுப் பணிகளுக்கான மூலதனச் செலவு .. | 12,38.79 | 11,54.81 | 15,39.13 |
| வருவாய்க் கணக்கின்கீழ் வராத மற்ற வேலைகளுக்கு மூலதனச் செலவு. | 2,29.52 | 2,89.52 | 2,57.28 |
| சாலை, நீர்வழிப் போக்குவரத்துத் திட்டங்களுக்கான மூலதனச் செலவு. | 5,43.47 | 3,72.90 | (—)4,82.13 |
| காட்டு வள மூலதனச் செலவு .. .. | 1,40.96 | 1,56.12 | 2,06.55 |
| அரசு வணிகத் திட்டங்களுக்கான மூலதனச் செலவு. | (—)6,94.95 | (—)4,64.97 | (—)9,02.31 |
| எதிர்பாராச் செலவு நிதிக்கு நிதி ஒதுக்கம் .. | .. | .. | .. |
| மொத்தம் .. | 35,46.22 | 35,41.94 | 33,81.98 |

இணைப்பு II—தொடர்ச்சி.

தமிழ்நாடு வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவினம்—பெருந் தலைப்பு வாரியான விவரங்கள் —தொடர்ச்சி.

திருத்த வகைப்பாடு—தொடர்ச்சி.

| பெருந் தலைப்பு எண்ணும், பெருந்தலைப்புகளும். | 1974-75 கணக்குகள். | 1975-76 கணக்குகள். | 1976-77 கணக்குகள். | 1977-78 கணக்குகள். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| 459 பொதுப் பணிகள் குறித்த மூலதனச் செலவு. | 1,01·37 | 3,26·29 | 1,74·37 | 1,13·29 |
| 465 எழுதுபொருள்-அச்சுத் துறை, ஏனைய நிர்வாகப் பணிகள் குறித்த மூலதனச் செலவு. | 22·93 | 9·67 | 2·21 | 5·24 |
| 477 கல்வி, கலை, பண்பாடு குறித்த மூலதனச் செலவு. | 1,74·27 | 1,83·62 | 1,38·87 | 99·73 |
| 480 மருத்துவம் குறித்த மூலதனச் செலவு | 2,69·75 | 3,39·60 | 2,63·91 | 1,76·27 |
| 481 குடும்ப நலத் திட்டம் குறித்த மூலதனச் செலவு. | 7·17 | 0·55 | 26·38 | 8·39 |
| 482 பொதுச் சுகாதாரம், துப்புரவு, குடிநீர் வழங்கல் குறித்த மூலதனச் செலவு. | 1,41·37 | 1,27·92 | 1,55·13 | 60·79 |
| 483 வீட்டுவசதி குறித்த மூலதனச் செலவு | 87·43 | 1,11·56 | 1,01·74 | 21·96 |
| 484 நகர்ப்பகுதி வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு. | 0·27 | 0·47 | 0·16 | (—) 0·04 |



| பெருந் தலைப்பு எண்ணும், பெருந்தலைப்புகளும். | 1974-75 கணக்குகள். | 1975-76 கணக்குகள். | 1976-77 கணக்குகள். | 1977-78 கணக்குகள். |
|---|---|---|---|---|
| 485 செய்தி-விளம்பரம் குறித்த மூலதனச் செலவு. | 21.66 | 0.93 | 1.32 | 1.51 |
| 486 ஒலிபரப்பு குறித்த மூலதனச் செலவு .. | .. | .. | .. | .. |
| 488 சமூகப் பாதுகாப்பு-நலன் குறித்த மூலதனச் செலவு. | 1,89.61 | 1,94.54 | 1,83.09 | 1,56.70 |
| 495 ஏனைய சமூக-சமுதாய நலப்பணிகள் குறித்த மூலதனச் செலவு. | 27.06 | 28.80 | 18.07 | 14.49 |
| 498 கூட்டுறவு குறித்த மூலதனச் செலவு .. | (—)1,14.03 | 9,63.72 | 6,63.71 | 2,93.47 |
| 500 பொது நிதியுதவி-வர்த்தக நிறுவனங்களில் முதலீடுகள். | .. | .. | .. | 3.75 |
| 504 ஏனைய பொதுவான பொருளாதாரப் பணிகள் குறித்த மூலதனச் செலவு. | 1,38.61 | (—)59.83 | 1,15.92 | (—)25.42 |
| 505 வேளாண்மை குறித்த மூலதனச் செலவு. | 6,62.34 | 13,28.39 | (-)11,44.74 | (-)4,69.62 |
| 506 சிறுபாசனம், மண் வளப் பாதுகாப்பு, பகுதி மேம்பாடு குறித்த மூலதனச் செலவு. | 1,28.70 | 89.34 | 2,13.25 | 1,39.28 |
| 509 உணவு குறித்த மூலதனச் செலவு .. | (—)18.31 | (—)26.14 | 6.15 | 4,56.02 |
| 510 கால்நடை வளர்ப்பு குறித்த மூலதனச் செலவு. | 56.80 | 52.26 | 55.09 | 1.19 |
| 511 பால் பண்ணை வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு. | 5.47 | 2.77 | 6.99 | 0.34 |
| 512 மீன்வளம் குறித்த மூலதனச் செலவு .. | 71.68 | 48.66 | 21.68 | 37.34 |
| 513 காட்டு வளம் குறித்த மூலதனச் செலவு. | 1,58.79 | 1,88.63 | 2,13.16 | 2,83.97 |
| 514 சமுதாய நல வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு. | 12.41 | 13.91 | 4.85 | 3.71 |
| 520 தொழில் ஆராய்ச்சி-வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு. | 2,09.65 | 2,78.30 | 4,50.09 | 2,53.54 |

## இணைப்பு II—தொடர்ச்சி.

### தமிழ்நாடு வருவாய்க் கணக்கினின்றும் வராத மூலதனச் செலவினம்—பெருந் தலைப்பு வாரியான விவரங்கள்—தொடர்ச்சி.

திருத்த வகைப்பாடு தொடர்ச்சி.

| | பெருந்தலைப்பு எண்ணும், பெருந்தலைப்புகளும். | 1978-79 கணக்குகள். | 1979-80 கணக்குகள். | 1980-81 கணக்குகள். | 1981-82 கணக்குகள். |
|---|---|---|---|---|---|
| | (1) | (6) | (7) | (8) | (9) |
| | | | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| 459. | பொதுப் பணிகள் குறித்த மூலதனச் செலவு. | 1,01.79 | 1,07.73 | 3,09.66 | 6,99.45 |
| 465 | எழுதுபொருள்-அச்சுத் துறை, ஏனைய நிர்வாகப் பணிகள் குறித்த மூலதனச் செலவு. | 9.21 | 14.23 | 8.00 | 80.24 |
| 477 | கல்வி, கலை, பண்பாடு குறித்த மூலதனச் செலவு. | 3,46.38 | 6,14,67 | 4,27.17 | 4,77.61 |
| 480 | மருத்துவம் குறித்த மூலதனச் செலவு .. | 62.53 | 1,40.54 | 5,52.53 | 9,68.00 |
| 481 | குடும்ப நலத் திட்டம் குறித்த மூலதனச் செலவு. | 13.49 | 10.83 | 29.05 | 59.88 |
| 482 | பொதுச் சுகாதாரம், துப்புரவு, குடிநீர் வழங்கல் குறித்த மூலதனச் செலவு. | 36.45 | 7.35 | 5.92 | 8.82 |
| 483 | வீட்டு வசதி குறித்த மூலதனச் செலவு | 75.50 | 2.61,24 | 3,55.02 | 3,36.98 |
| 484 | நகர்ப்பகுதி வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு. | .. | 0.01 | 2.77 | 0.17 |
| 485 | செய்தி-விளம்பரம் குறித்த மூலதனச் செலவு. | 1.62 | 0.49 | 0.61 | 8.18 |
| 486 | ஒலிபரப்பு குறித்த மூலதனச் செலவு .. | .. | .. | .. | .. |
| 488 | சமூகப் பாதுகாப்பு-நலன் குறித்த மூலதனச் செலவு. | 1,32.72 | 1,31.55 | 5,77.74 | 8,75.14 |
| 495 | ஏனைய சமூக-சமுதாய நலப்பணிகள் குறித்த மூலதனச் செலவு. | 22.26 | 7.61 | 22.14 | 32.64 |
| 498 | கூட்டுறவு குறித்த மூலதனச் செலவு .. | 10,96.21 | 8,10.26 | 4,93.89 | 10,10.02 |
| 500 | பொது நிதியுதவி-வர்த்தக நிறுவனங்களில் முதலீடுகள். | .. | .. | .. | .. |
| 504 | ஏனைய பொதுவான பொருளாதாரப் பணிகள் குறித்த மூலதனச் செலவு. | (—)56.88 | (—)49.20 | (—)52.28 | (—)53.92 |
| 505 | வேளாண்மை குறித்த மூலதனச் செலவு | (—)11.17 | 87.63 | 1,36.58 | 44.76 |
| 506 | சிறுபாசனம், மண்வளப் பாதுகாப்பு பகுதி மேம்பாடு குறித்த மூலதனச் செலவு. | 1,25.65 | 3,19.17 | 2,32.57 | 2,60.37 |
| 509 | உணவு குறித்த மூலதனச் செலவு .. | (—)2.91 | (—)8.83 | 6,84.50 | .. |
| 510 | கால்நடை வளர்ப்பு குறித்த மூலதனச் செலவு. | 1.53 | 14.12 | 52.70 | 31.32 |
| 511 | பால்பண்ணை வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு. | (—)1,32.82 | 0.32 | 16.62 | .. |
| 512 | மீனளம் குறித்த மூலதனச் செலவு .. | 27.56 | 12.15 | 54.33 | 73.37 |
| 513 | காட்டு வளம் குறித்த மூலதனச் செலவு | 3,05.29 | 4,46.68 | 6,27.53 | 9,57.62 |
| 514 | சமுதாய நல வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு. | 0.62 | 10.19 | 30.92 | 61.34 |
| 520 | தொழில் ஆராய்ச்சி-வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு. | 4,53.54 | 3,90.27 | 4,21.40 | 9,33.00 |

## இணைப்பு II.—தொடர்ச்சி.

**தமிழ்நாடு வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவினம்—பெருந் தலைப்பு வாரியான விவரங்கள்—தொடர்ச்சி.**

திருத்த வகைப்பாடு.

| | பெருந்தலைப்பு எண்ணும், பெருந் தலைப்புகளும். | 1982-83 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. | 1982-83 திருத்த மதிப்பீடு. | 1983-84 வரவு-செலவுத் திட்டமதிப்பீடு. |
|---|---|---|---|---|
| | (1) | (10) | (11) | (12) |
| | | | (ரூபாய் இலட்சத்தில்). | |
| 459 | பொதுப் பணிகள் குறித்த மூலதனச் செலவு. | 12,01.52 | 10,36.28 | 9,34.99 |
| 465 | எழுதுபொருள்-அச்சுத் துறை, ஏனைய நிர்வாகப் பணிகள் குறித்த மூலதனச் செலவு. | 17.16 | 28.00 | 1,30.96 |
| 477 | கல்வி, கலை, பண்பாடு குறித்த மூலதனச் செலவு. | 6,47.22 | 6,75.64 | 6,29.02 |
| 480 | மருத்துவம் குறித்த மூலதனச் செலவு .. | 14,83.07 | 13,21.46 | 13,56.64 |
| 481 | குடும்ப நலத் திட்டம் குறித்த மூலதனச் செலவு. | 2,46.15 | 2,10.36 | 2,64.52 |
| 482 | பொதுச் சுகாதாரம், துப்புரவு ,குடிநீர், வழங்கல் குறித்த மூலதனச் செலவு. | 10.27 | 10.15 | 69.77 |
| 483 | வீட்டுவசதி குறித்த மூலதனச் செலவு .. | 3,29.29 | 6,99.81 | 5,60.38 |
| 484 | நகர்ப்பகுதி வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு. | .. | (—)0.01 | .. |



| | | | | |
|---|---|---|---|---|
| 485 | செய்தி-விளம்பரம் குறித்த மூலதனச் செலவு. | 11.85 | 30.94 | 31.13 |
| 486 | ஒலிபரப்பு குறித்த மூலதனச் செலவு .. | .. | .. | .. |
| 488 | சமூகப் பாதுகாப்பு-நலன் குறித்த மூலதனச் செலவு. | 7,94.15 | 7,07.44 | 6,08.32 |
| 495 | ஏனைய சமூக-சமுதாய நலப் பணிகள் குறித்த மூலதனச் செலவு. | 24.15 | 29.75 | 11.42 |
| 498 | கூட்டுறவு குறித்த மூலதனச் செலவு | 4,44.97 | 4,17.63 | 48.11 |
| 500 | பொது நிதியுதவி-வர்த்தக நிறுவனங்களில் முதலீடுகள். | .. | .. | .. |
| 504 | ஏனைய பொதுவான பொருளாதாரப் பணிகள் குறித்த மூலதனச் செலவு. | (—)54.47 | (—)50.29 | (—)49.98 |
| 505 | வேளாண்மை குறித்த மூலதனச் செலவு | 5,34.21 | 4,68.82 | 7.50.08 |
| 506 | சிறுபாசனம், மண்வளப் பாது காப்பு, பகுதி மேம்பாடு குறித்த மூலதனச் செலவு. | 2,24.56 | 1,64.12 | 1,81.92 |
| 509 | உணவு குறித்த மூலதனச் செலவு .. | 0.01 | 16.48 | 30.00 |
| 510 | கால்நடை வளர்ப்பு குறித்த மூலதனச் செலவு. | 75.12 | 80.32 | 10.28 |
| 511 | பால் பண்ணை வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு. | 37.63 | 45.56 | 17.00 |
| 512 | மீனளம் குறித்த மூலதனச் செலவு .. | 57.98 | 1,02.59 | 2,04.23 |
| 513 | காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு | 13,11.07 | 13,35.61 | 14,16.47 |
| 514 | சமுதாய நல வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு. | 71.51 | 62.01 | 8.18 |
| 520 | **தொழில் ஆராய்ச்சி-வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு.** | 12,28.04 | 11,53.00 | 13,25.03 |

| | (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|---|
| | | | (ரூபாய் இலட்சத்தில்). | | |
| 521 | கிராமத் தொழில்கள்; சிறு தொழில்கள் குறித்த மூலதனச் செலவு. | 63.18 | 32.58 | 80.29 | 2,23.43 |
| 522 | இயந்திரங்கள், பொறியியல் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு. | 0.05 | .. | 35.70 | 11.06 |
| 523 | பெட்ரோலிய, இரசாயனப் பொருள் உரத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு. | .. | .. | .. | .. |
| 525 | வான்வழிச் செய்தித் தொடர்பு—மின்னணுவியல் தொழில்களுக்கான மூலதனச் செலவு. | .. | .. | .. | .. |
| 526 | நுகர் பொருள் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு. | 13.49 | 44.96 | 2,65.55 | 8.37 |
| 528 | சுரங்கம் வெட்டுதல்—உலோகவியல் குறித்த மூலதனச் செலவு. | (—)0.05 | 0.06 | 0.51 | 6.75 |
| 530 | தொழில் நிதி நிறுவனங்களில் முதலீடுகள். | .. | 50.00 | 1,25.00 | 1,00.00 |
| 533 | பாசன, நீர்வழி, வடிகால், வெள்ளக் கட்டுப்பாட்டுத் திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு. | 9,69.48 | 17,67.04 | 26,31.20 | 16,66.86 |
| 534 | மின்விசைத் திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு. | 0.01 | .. | .. | 1,47.30 |
| 535 | துறைமுகங்கள், கலங்கரை விளக்கங்கள், கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு. | 68.65 | 51.68 | 12.89 | 3.00 |
| 537 | சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு. | 4,59.97 | 5,11.92 | 6,71.87 | 5,26.65 |
| 538 | சாலை, நீர்வழிப் போக்குவரத்துப் பணிகள் குறித்த மூலதனச் செலவு. | 5.11 | 1.24.18 | 20.54 | (—)3,54.02 |
| 544 | ஏனைய போக்குவரத்து, சாலைப் போக்குவரத்துப் பணிகள் குறித்த மூலதனச் செலவு. | 20.00 | 10.00 | 15.80 | 26.20 |
| | மொத்தம் .. | 39,54.89 | 67,96.38 | 55,30.75 | 40,52.50 |

| | | (6) | (7) | (8) | (9) |
|---|---|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்). | | | |
| 521 | கிராமத் தொழில்கள், சிறு தொழில்கள், குறித்த மூலதனச் செலவு. | 97.84 | 1.54,74 | 2,32.36 | 1,76.34 |
| 522 | இயந்திரங்கள், பொறியியல் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு. | 0.04 | .. | .. | 36.40 |
| 523 | பெட்ரோலிய, இரசாயனப் பொருள் உரத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு. | .. | .. | .. | 0.02 |
| 525 | வான்வழிச் செய்தித் தொடர்பு— மின்னணுவியல் தொழில்களுக்கான மூலதனச் செலவு. | .. | .. | .. | .. |
| 526 | நுகர்பொருள் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு. | 66.11 | 15.61 | 69.27 | 27,74.48 |
| 528 | சுரங்கம் வெட்டுதல்— உலோகவியல் குறித்த மூலதனச் செலவு. | 45.00 | 35.99 | 12.35 | 10.98 |
| 530 | தொழில் நிதி நிறுவனங்களில் முதலீடுகள். | 2,00.00 | 50.00 | 50.00 | 3,00.00 |
| 533 | பாசன, நீர்வழி, வடிகால், வெள்ளக் கட்டுப்பாட்டுத் திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு: | 18,05.09 | 18,32.17 | 19,19.17 | 21,57.29 |
| 534 | மின்விசைத் திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு. | 1,45,46 | 47.63 | (—)75.35 | (—)29.50 |
| 535 | துறைமுகங்கள், கலங்கரை விளக்கங்கள், கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு. | 3,01.39 | 50.75 | 2,02.99 | 14.95 |



| | | | | | |
|---|---|---|---|---|---|
| 537 | சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு. | 5,07,88 | 9,37.68 | 10,23.30 | 15,19.54 |
| 538 | சாலை, நீர்வழிப் போக்குவரத்துப் பணிகள் குறித்த மூலதனச் செலவு. | 15.18 | 2,60.54 | 40.00 | 4.59.00 |
| 544 | ஏனைய போக்குவரத்து, சாலைப் போக்குவரத்துப் பணிகள் குறித்த மூலதனச் செலவு. | 41.50 | 44.92 | 42.20 | 68.59 |
| | மொத்தம் .. | 58,34.06 | 67,59.24 | 85,05.66 | 1,43,53.08 |

| (1) | (10) | (11) | (12) |
|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| 521 கிராமத் தொழில்கள், சிறு தொழில்கள் குறித்த மூலதனச் செலவு. | 2,75.12 | 2,60.20 | 3,83.69 |
| 522 இயந்திரங்கள், பொறியியல் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு. | .. | .. | .. |
| 523 பெட்ரோலிய, இரசாயனப் பொருள் உரத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு. | .. | .. | .. |
| 525 வான்வழிச் செய்தித் தொடர்பு— மின்னணுவியல் தொழில்களுக்கான மூலதனச் செலவு. | .. | 40.00 | 60.00 |
| 526 நுகர்பொருள் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு. | 4,95.42 | 5,04.89 | 90.34 |
| 528 சுரங்கம் வெட்டுதல்—உலோகவியல் குறித்த மூலதனச் செலவு. | 15.03 | 17.45 | 60.01 |
| 530 தொழில் நிதி நிறுவனங்களில் முதலீடுகள். | 4,00.00 | 4,00.00 | 4,50.00 |
| 533 பாசன, நீர்வழி, வடிகால், வெள்ளக் கட்டுப்பாட்டுத் திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு. | 41,39.53 | 48,74.81 | 62,35.41 |
| 534 மின்விசைத் திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு. | .. | .. | .. |
| 535 துறைமுகங்கள், கலங்கரை விளக்கங்கள், கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு. | 6,33.02 | 35.25 | 91.06 |



| (1) | (10) | (11) | (12) |
|---|---|---|---|
| 537 சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு. | 17,23.43 | 19,40.62 | 25,00.05 |
| 538 சாலை, நீர்வழிப் போக்குவரத்துப் பணிகள் குறித்த மூலதனச் செலவு. | 50.06 | 50.06 | 50.06 |
| 541 ஏனைய போக்குவரத்து, சாலைப் போக்குவரத்துப் பணிகள் குறித்த மூலதனச் செலவு. | 97.68 | 1.22.35 | 94.11 |
| மொத்தம் .. | 1,65,24.75 | 1,67,91.80 | 1,85,53.18 |

# இணைப்பு III

ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ், தமிழ்நாடு திட்டப் பணிகளின் செலவு விவரங்களைக் காட்டும் விவர அறிக்கை.

| தொடர் எண், வளர்ச்சித்தலைப்பு/ வளர்ச்சித் துணைத் தலைப்பு. | 1982-83 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. | 1982-83 திருத்த மதிப்பீடு. | 1983-84 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| **I. வேளாண்மையும் தொடர்பான பணிகளும்—** | | | |
| வேளாண்மை—பயிர் வளர்ப்பு .. .. | 34,72 | 35,80 | 42,21 |
| ஆராய்ச்சி—கல்வி .. .. .. .. | 1,54 | 1,54 | 2,03 |
| நிலச் சீர்திருத்தங்கள் .. .. .. .. | 5 | 5 | 5 |
| விற்பனை, சேமிப்பு, கிடங்கு வசதி .. .. | 72 | 1,21 | 89 |
| கிராம வளர்ச்சிக்கான சிறப்புத் திட்டம் .. | 16,87 | 20,94 | 18,71 |
| சிறு பாசனம் .. .. .. .. .. | 4,11 | 5,20 | 4,09 |
| மண்வளப் பாதுகாப்பும் நீர்வளப் பாதுகாப்பும் .. | 4,87 | 4,86 | 5,34 |
| கால்நடை வளர்ப்பு .. .. .. .. | 6,12 | 6,81 | 6,21 |
| பால்பண்ணை வளர்ச்சி .. .. .. .. | 59 | 72 | 64 |
| மீனளம் .. .. .. .. .. .. | 2,18 | 2,66 | 3,25 |
| காட்டுவளம் .. .. .. .. .. | 14,36 | 14,84 | 15,35 |



| | | | |
|---|---|---|---|
| வேளாண்மை நிதியுதவி நிறுவனங்களில் முதலீடு | 60 | (—) 4,55 | 40 |
| சமுதாய வளர்ச்சி .. .. .. .. | 79,54 | 86,01 | 34,19 |
| உணவு .. .. .. .. .. .. | 2,59 | 2,63 | 2,97 |
| மொத்தம் .. | 1,68,86 | 1,78,62 | 1,36.33 |
| **II. கூட்டுறவு—** | | | |
| கூட்டுறவு .. .. .. .. .. | 2,68 | 6,45 | 1,89 |
| **III. பாசன, வெள்ளக் கட்டுப்பாட்டுத் திட்டங்கள்—** | | | |
| நீர்வள, மின்விசை உற்பத்தி வளர்ச்சி— பாசன, வெள்ளக் கட்டுப்பாட்டுத் திட்டங்கள். | 40,39 | 46,70 | 61,76 |
| மின்விசை உற்பத்தி வளர்ச்சி .. .. | 2,20,00 | 2,20,25 | 2,72,42 |
| மொத்தம்—III .. | 2,60,39 | 2,66,95 | 3,34,18 |
| **IV. தொழில்களும் கனிவளங்களும்—** | | | |
| தொழில்கள் .. .. .. .. | 28,25 | 28,38 | 24,03 |
| கிராமத் தொழில்களும் சிறு தொழில்களும் .. | 13,48 | 15,33 | 15,35 |
| சுரங்கங்களும் கனிவளத் தொழில்களும் .. | 34 | 38 | 70 |
| மொத்தம்—IV .. | 42,07 | 44,09 | 40,08 |

143138

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்). | | |
| V. போக்குவரத்தும் சாலைகளும்— | | | |
| துறைமுகங்கள், கலங்கரை விளக்கங்கள், கப்பல் போக்கு வரத்து. | 6,37 | 29 | 55 |
| சாலைகளும் பாலங்களும் | 28,54 | 32,34 | 35,98 |
| சாலை, நீர்வழிப் போக்குவரத்துப் பணிகள் .. | 27,24 | 29,01 | 26,20 |
| சுற்றுலா .. .. .. .. .. | 1,08 | 1,29 | 1,14 |
| மொத்தம்— V .. | 63,23 | 62,93 | 63,87 |
| VI சமூக-சமுதாய நலப் பணிகள்— | | | |
| பொதுக் கல்வி .. .. .. .. .. | 28,47 | 29,55 | 34,64 |
| கலையும் பண்பாடும் .. .. .. .. | 1,17 | 1,41 | 1,82 |
| தொழில் நுட்பக் கல்வி .. .. .. .. | 5,99 | 6,02 | 6,17 |
| அறிவியல் பணியும் ஆராய்ச்சியும் .. .. | ... | .. | 31 |
| மருத்துவம் .. .. .. .. .. | 23,49 | 21,32 | 20,35 |



| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| பொதுச் சுகாதாரம்-துப்புரவு .. .. .. | 4,07 | 16,67 | 17,65 |
| வடிகால், குடிநீர் வழங்கல் .. .. .. | 62,15 | 55,22 | 97,15 |
| வீட்டு வசதி .. .. .. .. .. | 37,93 | 36,90 | 45,86 |
| நகர்ப் பகுதி வளர்ச்சி .. .. .. .. | 30,05 | 26,76 | 29,13 |
| செய்தி-விளம்பரம் .. .. .. .. | 41 | 76 | 57 |
| தொழிலாளரும் தொழிலாளர் நலனும் .. .. | 1,03 | 1,14 | 16,48 |
| ஆதி திராவிடர், பழங்குடியினர், ஏனைய பின் தங்கிய வகுப்பினர் நலன். | 21,41 | 22,41 | 22,62 |
| சமூக நலன் .. .. .. .. | 2,66 | 3,86 | 5,54 |
| சத்துணவு .. .. .. .. .. | 7,89 | 7,95 | 9,76 |
| ஏனைய சமூக-சமுதாய நலப் பணிகள் .. | 43 | 29 | 29 |
| மொத்தம்— .. | 2,27,15 | 2,30,26 | 3,08,34 |
| VII. பொருளாதாரப் பணிகள்— | | | |
| தலைமைச் செயலகம்-பொருளாதாரப் பணிகள் | 1 | 1 | 1,02 |
| பொருளாதார ஆலோசனையும் புள்ளிவிவரமும் | 54 | 51 | 54 |
| மொத்தம்— VII .. | 55 | 52 | 1,56 |

(ரூபாய் இலட்சத்தில்).

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| VIII. பொதுவான பணிகள்— | | | |
| பொதுப் பணிகள் .. .. | 7,68 | 6,11 | 7,06 |
| எழுதுபொருள்-அச்சுத்துறை .. .. | .. | .. | 15 |
| மொத்தம்—VIII .. | 7,68 | 6,11 | 7,21 |
| பெரு மொத்தம் .. | 7,72,61 | 7,95,93 | 8,93,46 |

[Issued 9—9—1983

தமிழ்நாடு ஆவணக்காப்பகம், சென்னை-600 008
301

# TAMIL NADU LEGISLATIVE COUNCIL DEBATES

# OFFICIAL REPORT

MONDAY 7th MARCH 1983

Volume CXCIV (No. 2)

©
GOVERNMENT OF TAMIL NADU
1983

*Legislative Council Department*
*Fort St. George, Madras*-600 009.

Price *Rs.* 2.75 *Paise*]

பொருளடக்கம்

7—3—1983

பக்கங்கள்


1 இரங்கல் தீர்மானம்—

தமிழ்நாடு முன்னாள் ஆளுநர் சர்தார் உஜ்ஜல்சிங் அவர்களின் மறைவு குறித்து .. 105—106

2. வினாக்கள் விடைகள் .. .. .. .. 107—125

3. கவன ஈர்ப்பு—

(1) சத்துணவு மையங்கள் உள்ள பங்ளித் தலைமை ஆசிரியர்களும் பள்ளிக்கு கட்டாயம் வந்தாக வேண்டுமென்ற நிலையில் அவர்கள் படும் அவதி குறித்து .. .. .. 125—127

(2) முன்னாள் இந்தி மற்றும் வடமொழி ஆசிரியர்களுக்குத் தேர்வுநிலை வழங்காதது குறித்து .. .. .. .. 127—128

4. 1983-84 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை மீது பொது விவாதம் .. .. .. 129—174

5. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் 175


143138

## தமிழ் நாடு சட்டமன்ற மேலவை.

---

திங்கட்கிழமை, 1983—மார்ச் 7

---

(மாசி 23, துந்துபி — திருவள்ளுவராண்டு 2014)

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 9-30 மணியளவில், மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

### 1. இரங்கல் தீர்மானம்.

**தமிழ்நாடு முன்னாள் ஆளுநர் சர்தார் உஜ்ஜல் சிங் அவர்களின் மறைவு குறித்து.**

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர்களே, தமிழ் நாடு முன்னாள் ஆளுநர், சர்தார் உஜ்ஜல் சிங் அவர்கள் புது டில்லியில் இயற்கையெய்தினார் என்ற செய்தியை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அவர் 27—12—1895-ல் பிறந்தார், அவர் பஞ்சாப் மாநிலத்தில் சட்டமன்ற உறுப்பினராகவும், 1949 மற்றும் 1952 முதல் 1956 வரை அமைச்சராகவும், 1965 முதல் 1966 வரை ஆளுநராகவும் இருந்தார். அரசியல் நிர்ணய சபை உறுப்பினராகவும் இருந்தார். நமது மாநிலத்தில் 28—6—1966 முதல் 26—5—1971 வரை ஆளுநராகப் பணியாற்றினார். அவர் 1930-31-ல் நடை பெற்ற முதலாவது, இரண்டாவது வட்டமேஜை மாநாடுகளில் கலந்து கொண்டார். அவர் இந்த மாநிலத்தின் ஆளுநராக வந்தபோது, அப்போ திருந்த இரு வேறு அரசியல் கட்சிகளின் பாரம்பரியத்தின் அடிப்படையில் பெரிய மாறுதல் இந்த மாநிலத்தில் ஏற்பட்டது. காங்கிரஸ் கட்சியின் ஆட்சி விலகி, திராவிடர் ஆட்சி அண்ணா அவர்கள் தலைமையில் அமைந்தபோது, இரு மாறுதலுக்குமிடையே பாலமாக இருந்து, வெற்றிகரமாக அந்தக் காரி யத்தை நடத்தி, ஜனநாயகம் வாழவும், வளர்ச்சியடையவும் அவர் உதவி புரிந்தார். அவருடைய நினைவாக இங்கே சென்னை நகரில் குருநானக்

(மாண்புமிகு மேலவைத் தலைவர்) [1983 மார்ச் 7

கல்லூரி அமைவதற்கும் அவர் துணை புரிந்தார் என்பதனையும் இந்த நேரத்தில் நினைவில் கொள்ள வேண்டும். அவரது மறைவால் தமிழ்நாடு ஒரு நல்ல நண்பரை இழந்துவிட்டது என்பதைத் தெரிவித்துக்கொண்டு, கீழ்க்கண்ட தீர்மானத்தை அவை முன் வைக்கிறேன் :—

"1966 முதல் 1971 வரை தமிழ் நாட்டில் ஆளுநராக இருந்த சர்தார் உஜ்ஜல் சிங் அவர்கள் 15—2—1983 அன்று புது தில்லியில் இயற்கையெய்தியதைக் குறித்து இந்த அவை, தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறது. அன்னாரது மறைவால் துயருற்றிருக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கு இம்மேலவை தனது ஆழ்ந்த இரங்கலையும் பரிவுணர்ச்சியையும் தெரிவித்துக் கொள்கிறது."

அன்னாரது மறைவுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் அவை உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிட நேரம் மௌனமாக எழுந்து நிற்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(அவை உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நின்றனர்.)

தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மறைந்த பெரியவருக்கு மரியாதை செலுத்தும் வகையில் அவை இப்போது ஒத்திவைக்கப்பட்டு மீண்டும் 10-00 மணிக்குக் கூடும்.

பின்னர் அவை ஒத்திவைக்கப்பட்டது.

(முற்பகல் 9—33)

மீண்டும் முற்பகல் 10-00 மணியளவில் மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் துணைத் தலைவர் (புலவர் புலமைப்பித்தன்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.



## 2. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### சுற்றுலா வளர்ச்சிக் கழக உணவகங்கள்.

* 121. வினா—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் மற்றும் டாக்டர் இரா. சனார்த்தனம் : மாண்புமிகு செய்தி-அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறோம் :

(அ) தமிழ்நாட்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட நகரங்களில் தமிழ் நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகமும் மத்திய சுற்றுலா வளர்ச்சிக் கழகமும் கூட்டாகச் சேர்ந்து உணவு விடுதிகள் நடத்துவது குறித்து செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை ?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** (அ) ஆம்.

(இ) தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகமும், இந்திய சுற்றுலா வளர்ச்சிக் கழகமும் இணைந்து தமிழகத்தில் ஓட்டல் வளாகம் ஒன்றினை கட்டும் திட்டம் கொள்கை அளவில் ஏற்கப்பட்டுள்ளது.

முதலில் சென்னை நகரத்தில் 100 அறைகள் கொண்ட மூன்று நட்சத்திர ஓட்டலை இரண்டரை கோடி ரூபாய் செலவில் இந்திய சுற்றுலா வளர்ச்சிக் கழகம் கட்டி நிர்வகிக்கவும், 100 அறைகள் கொண்ட சிக்கன வகுப்பு ஓட்டலை ஒரு கோடி ரூபாய் செலவில் தமிழ் நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் கட்டி நிர்வகிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. சென்னையில் இந்த ஓட்டல் வளாகம் அமைக்க தமிழ் நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் இந்திய சுற்றுலா வளர்ச்சிக் கழகத்துடன் கூட்டாண்மை ஒப்பந்தம் செய்ய நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** சென்னையில் இரண்டரை இலட்சம் ரூபாய் செலவில் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ள ஓட்டலுக்கான முழுச் செலவையும் மத்திய அரசு ஏற்றுக்கொள்கிறதா அல்லது அந்தச் செலவில் மாநில அரசுக்கும் ஏதேனும் பங்கு இருக்கிறதா ? நடுத்தர வருமானம் உள்ளவர்களுக்கும், குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கும் கட்டிக் கொடுக்கிற விடுதிகளை சென்னையைத் தவிர தமிழகத்திலே உள்ள வேறு முக்கிய நகரங்களிலும் கட்டும் கருத்து அரசின் பரிசீலனையில் இருக்கிறதா ?

[1983 மார்ச் 7

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** இந்த ஓட்டல் வளாகம் கட்டுகிற திட்டத்தைப் பொறுத்தவரையில் இந்திய சுற்றுலா வளர்ச்சிக் கழகமும், தமிழக சுற்றுலா வளர்ச்சிக் கழகமும் இணைந்து "தமிழ் நாடு அசோகா ஓட்டல் கார்பரேஷன் லிமிடெட்" என்கிற ஒரு நிறுவனத்தை அமைத்து அதனுடைய பொது நிர்வாகத்தின் கீழ் இரண்டு ஓட்டல்களும் கட்டப்பட விருக்கின்றன. இதற்குச் சுமார் மூன்றரை கோடி ரூபாய் முதலீடு ஆகுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. அதிலே தமிழகத்தின் சுற்றுலா வளர்ச்சிக் குழுவினுடைய பங்கு 51 சதவீதமாகும். இந்திய சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் பங்கு 49 சதவீதமாக இருக்கும். இதிலே அங்கீகரிக்கப் பட்ட மூலதனமாக ரூபாய் ஒரு கோடியே 40 இலட்சம் முதலீடு செய்யப் படும். இரண்டு கோடி ரூபாயை வேறு நிறுவனங்களிலிருந்தும், அரசு நிறுவனங்களிலிருந்தும் இந்தக் கம்பெனி கடனாகப் பெறும். மூன்று நட்சத்திர ஓட்டல் இந்திய சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தினுடைய நிர்வாகத் திலே இயங்கும். குறைந்த கட்டணத்திலே நடைபெறுகிற ஓட்டல் தமிழ் நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் நிர்வாகத்திலே இருக்கும். பத்தாண்டுகள் கழித்து எந்த நிறுவனமாவது முழுமையாக எடுத்துக்கொள்ள விரும்பினால், அந்த நிறுவனம் முழுத்தொகையைக் கொடுத்து எடுத்துக்கொள்ளுவதற்கு அதிலே விதிகள் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** ஓட்டல் நிர்வாகத்தின் பொறுப்பு தமிழக அரசின் பொறுப்பிலே இருக்குமா அல்லது வேறு யாரிடத்திலே இருக்கும்? உணவு வகைகளைப் பொறுத்த வரையில், சைவம் இருக்குமா அல்லது அசைவம் இருக்குமா? சைவர்களைக் கவரக்கூடிய அசைவ உணவு வழங்கப்படுமா?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** இரண்டு ஓட்டல்களும் பொது கம்பெனியின் நிர்வாகத்தின்கீழ் இருக்கும். அதுதான் "தமிழ் நாடு அசோகா ஓட்டல் கார்பரேஷன் லிமிடெட்". அன்றாட நிர்வாகத்தைப் பொறுத்தவரையில், மூன்று-நட்சத்திர ஓட்டல் மத்திய அரசின் சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தினிடத்திலே இருக்கும். குறைந்த கட்டணத்திலே நடைபெறுகிற ஓட்டல் தமிழ் நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தினிடத்திலே இருக்கும். இதிலே அந்த நிர்வாகிகளும் இருப்பார்கள். அந்த நிறு வனத்திலே நம்முடைய நிர்வாகிகளும் இருப்பார்கள். சைவம், அசைவம் எல்லா ஓட்டல்களிலும் பரிமாறப்படுகிறது. தயாரிக்கப்படுகிறது.



1983 மார்ச் 7]

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** சென்னையைத் தவிர சுற்றுலா மையங்களாக வளர்ந்துகொண்டு வருகிற பல இடங்கள் தமிழகத்திலே இருக் கின்றன. சுற்றுலா புகழ்பெற்ற பல இடங்கள் இருக்கின்றன. அத்தகைய இடங்களில் மத்திய அரசும் மாநில அரசும் இணைந்து நடத்தக்கூடிய இது போன்ற விடுதிகளைத் துவக்குகிற கருத்து அரசின் பரிசீலனையில் இருக் கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** தமிழகத்திலே பல இடங்களில் மத்திய சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தினுடைய முதலீடு வர வேண்டும் என்ற தமிழக அரசின் வேண்டுகோளையொட்டித்தான் இந்த நிறுவனம் உருவாக்கப் படுகிறது. இது தமிழகத்திலே நிறைவேற்றப்பட்டதற்குப் பிறகு, மற்ற இடங்களிலே இதை நடத்துவது பற்றி ஆலோசிக்கப்படும்.

**திரு. த. சந்தோஷம் :** அரசினரால் நடத்தப்படும் மூன்று நட்சத்திர ஓட்டல்களில் ஓரளவிற்குக் கட்டணம் உயர்வாக இருப்பதைப் பற்றிக் கவலையில்லை. ஆனால் சாதாரண நடுத்தர மக்களும் சுற்றுலாவிற்குச் சென்று தங்கக்கூடிய அளவிலே கட்டணங்கள் குறைக்கப்படுமா?

உதாரணமாக இராமேஸ்வரத்தில் தமிழ் நாடு அரசால் ஓட்டல் நடத்தப் படுகிறது. அங்கேயுள்ள கட்டணம் சாதாரண மக்கள் தங்கும் நிலையில் இல்லை. நாள் ஒன்றுக்கு 80 ரூபாய் வசூலிக்கிறார்கள் என்று நினைக் கிறேன். இதை அரசு பரிசீலித்து, பொது மக்களும் பயன்படுத்தக்கூடிய அளவிலே குறைந்த கட்டணத்தில் பல ஓட்டல்களை அரசு நடத்த முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** அதிகமான கட்டணம் வசூலிக்கிற ஓட்டல்களில் வசதியுள்ளவர்கள் போய் தங்குகிறார்கள். அவர்கள் நல்ல முறையிலே அங்கு தங்கி வெளி வருகிற வகையில் ஏற்பாடுகள் செய்து தீர வேண்டிய அவசியம் இருக்கிறது. அப்படி வசதிகள் செய்து தருகிற நேரத்தில் அதற்கான கட்டணம் கூடிக்கொண்டிருக்கிறது. அந்தக் கட்டணத்தை அடிப்படையாக வைத்துத்தான் தங்குபவர்களுக்கு வாடகை நிர்ணயிக்கப்படுகிறது.

மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்ததைப் போல, தனியாக ஒருவர் தங்குகிற அறைகளுக்குக் கூடுதல் கட்டணம் இல்லை. இளைஞர்கள் விடுதி என்ற பெயரால் ஒரு படுக்கைக்கு ஏழரை ரூபாய், ஐந்து ரூபாய் என்று பல இடங்களில் வைத்திருக்கிறோம். அதை இராமேஸ்வரத்திலும் இப்போது துவக்கியிருக்கிறோம். அப்படி விரும்புகிறவர்கள் அங்கே தங்கினால் குறைந்த செலவிலே வசதியைப் பெற இயலும்.

### கவிஞர் கண்ணதாசனுக்கு நினைவுச் சின்னம்.

* 122. வினா—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் மற்றும் டாக்டர் இரா. சனார்த்தனம் : மாண்புமிகு செய்தி-அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறோம் :—

(அ) கவிஞர் கண்ணதாசனுக்கு காரைக்குடியில் நினைவுச் சின்னம் அமைக்க அரசு முடிவு செய்துள்ளது என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** (அ) நினைவுச் சின்னம் அமைப்பது பரிசீலனையில் உள்ளது.

(இ) கண்ணதாசன் மணிமண்டபம் அமைப்பதற்கான செலவு மதிப்பீடுகளும், வரைபடங்களும் அரசின் ஆய்வில் உள்ளன.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறிய இந்தச் செய்தியை மகிழ்ச்சியுடன் வரவேற்கிறோம். கவிஞர் கண்ணதாசன் அவர்களுடைய மணிமண்டபம் அமைக்கப்படும்போது, அது கவிஞருடைய நினைவுச் சின்னமாக மட்டும் இல்லாமல், கவிஞருடைய கவியைப் பார்ப்பவர்களுடைய உள்ளத்திலே பதிய வைக்கிற அளவிலே ஏற்பாடுகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்வார்களா ? உத்தேசிக்கப்பட்டுள்ள நினைவுச் சின்னம் எவ்வளவு காலத்திற்குள் கட்டி முடிக்கப்படும் என்ற விவரத்தையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** இந்த நினைவுச் சின்னம் என்பது ஏதோ எல்லோரும் போய் பார்த்துவிட்டுப் போகிற நினைவுச் சின்னமாக அமைய வேண்டும் என்று அரசு கருதவில்லை. கவியரசு கண்ணதாசன் பெயராலே மணிமண்டபம் அமைக்கப்பெற்று அதிலே மாநாடுகள் நடத்த வசதிகள், கூடங்கள், நல்ல நூலகம், படிப்பறை போன்ற பொது மக்களுக்குத் தேவையான வசதிகள் எல்லாம் அமைக்கப்பட வேண்டு



என்பதுதான் அரசின் திட்டம். ஆகவே அது பற்றிய கருத்துரு வரைபடங்கள் அரசுக்கு வந்திருக்கின்றன. அதிலே சுமார் பதினெட்டரை இலட்சத்திற்கு வரைபடம் தரப்பட்டிருக்கிறது.

முகவை மாவட்டத்தினுடைய முக்கியமான காரைக்குடி பகுதியில் மக்களுக்குப் பயன்படுகிற வகையில் கவியரசு கண்ணதாசன் பெயராலே நினைவு மண்டபம் அமைய வேண்டும் என்பதுதான் அரசின் விருப்பம். எல்லோரும் பார்த்துவிட்டுப் போகிற வகையிலே மிகப் பெரிய செலவு செய்வதில் அரசு கருத்தைச் செலுத்தவில்லை. மேலும் இப்போதுதான் பரிசீலனையில் இருக்கிறது. பரிசீலனை முடிந்த பிறகு எந்த வகையிலே நிறைவேற்ற முடியும் என்பதைப்பற்றி அரசு அறிவிக்கும்.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** கவியரசுக்கு மணி மண்டபம் அமைப்பது மிகுந்த மகிழ்ச்சிக்குரியது. "வீடு வரை உறவு, வீதி வரை மனைவி, காடு வரை பிள்ளை, கடைசி வரை யாரோ !" போன்ற அவருடைய தத்துவப் பாடல்கள் அங்கு எழுதப்படுமா ? மேலும் அங்கே நூலகம் அமைக்கும் எண்ணம் அரசுக்கு உண்டா ?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** கவியரசு கண்ணதாசன் அவர்கள் மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சனார்த்தனம் குறிப்பிட்டதைப் போல, ஒரு தத்துவப் பாடலை மட்டும் பாடவில்லை, பல்லாயிரக்கணக்கான பாடல்களை, நம்முடைய கால அடிப்படையிலே பாடிச் சென்றிருக்கிறார்கள். காலத்திலே வாழ்ந்த கவிஞர் சிறந்த கவிஞராக வாழ்ந்து மறைந்திருக்கிறார். அவரை எந்தெந்த வகையிலே நினைவுபடுத்த வேண்டுமோ அந்தந்த வகையிலே எல்லாம் மண்டபம் அமைக்கிறபோது நினைவுபடுத்துவோம். முன்னாலேயே நான் சொன்னேன், அங்கே நூலகம் அமைக்கிற திட்டமும் சேர்த்துத்தான் பரிசீலிக்கப்படுகிறது என்று.

(முற்பகல் 10-10)

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** நூலகம் அமைக்கின்ற திட்டத்தினை கவிஞர் கண்ணதாசன் அவர்கள் நினைவுச் சின்னத்திலே ஏற்படச் செய்ய இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதை நான் வரவேற்கிறேன். அவர் எழுதிய நூல்கள் மட்டுமல்லாமல், அவர் போற்றிய, பாராட்டிய பல்வேறு நூல்களும் இடம் பெறக்கூடிய அளவிலே, அவர் ஒரு கவிஞராக வருவதற்குரிய வாய்ப்பினைத் தந்த நூல்களை எல்லாம் வைப்பதோடு, அவருக்குப் போதித்த ஆசிரியர்கள், அவர்களுடன் பங்கு கொண்ட நிகழ்ச்சிகள் பற்றி புகைப்படங்கள், திரைப்படங்கள் இவைகளையும் அதிலே இடம்பெறச் செய்வதற்கு அரசு முன்வருமா ?

[1983 மார்ச் 7

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** நூலகம் என்றாலே, அது கவியரசர் கண்ணதாசன் அவர்கள் எழுதிய நூல்கள் மாத்திரம்தான் என்று பொருள் அல்ல. தமிழகத்திற்குப் பயன்படுகின்ற நூல்கள் என்றுதான் பொருள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்துக்கள் அந்த மண்டபம் அமைக்கப்படுகின்ற நேரத்திலே பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட அந்த நினைவு மண்டபம் கட்டிமுடிக்கப்படுவதற்கு முன்பாகவே இடைக்காலத்திலே ஏதேனும் ஒரு அரசுக் கல்லூரியை கவிஞர் கண்ணதாசன் அவர்கள் பெயரிலே மாற்றுவதற்கு அரசு பரிசீலனை செய்யுமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய இந்தப் பரிந்துரையைப்பற்றி அதன் தொடர்பான அமைச்சகத்திற்குத் தகவல் தெரிவித்து, அவர்களுடைய பரிசீலனைக்கு இந்தக் கருத்தை அனுப்புகிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. த. சந்தோஷம் :** ஏதோ கவிஞர் கண்ணதாசன் அவர்களுக்கு ஒரு சிலையோ, மண்டபமோ என்பதை மட்டும் வைத்துவிட்டுப் போகாதபடி, அந்த நினைவு மண்டபம் பல பேர்களுக்கு நிரந்தரமாகப் பயன்பட அரசு முயற்சிக்கும் என்று அறிவித்ததை வரவேற்கிறேன். அதே சமயத்தில் அவர் ஒரு சிறந்த கவிஞர். நம்முடைய இளம் சந்ததியினரை, கவிதைகள் எழுதுவதிலே திறமையுள்ள இளைஞர்களை, ஊக்குவிப்பதற்கு, அந்தத் திறமையுள்ளவர்களுடைய கவிதைகளை ஏற்று அவர்களுக்குப் பரிசளிக்கச் செய்து, மானியம் அளிக்கச் செய்ய இந்த நினைவு மண்டபம் பயன்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** இந்தக் கருத்துக்களும் அரசினுடைய பரிசீலனையில் எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** வினாக்கள் 123, 124, 125 ஒத்திவைக்கப்படுகின்றன.



1983 மார்ச் 7]

**பனைமரம் ஏறும் தொழிலில் உள்ளவர்களுக்கு வேலைவாய்ப்பு.**

* 126. வினா—**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு கதர் மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) பனைமரம் ஏறும் தொழிலில் மூன்று லட்சம் பேருக்கு வேலை வாய்ப்புக்களை அளிக்க அரசு முடிவு செய்துள்ளது என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன் :** (அ) ஆம்.

(இ) தமிழகத்தில் பனைத் தொழிலின் கீழ் இதுகாறும் 3.12 இலட்சம் நபர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாகியுள்ளது. 1982-83-ல் மேற்கொண்டு 9,512 பேர்களுக்குக் கூடுதலாக வேலைவாய்ப்பு உருவாக்கப்படும்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட அந்த 3 இலட்சம் பேர்களுக்கு வேலை வாய்ப்புகள் அளிக்கப்பட்ட விவரங்கள் என்ன ? அவர்களுக்குச் சராசரியாக ஒரு நாளைக்கு எவ்வளவு வருமானம் கிடைக்கிறது ? எந்த அளவுக்கு வேலைவாய்ப்புக்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்பது போன்ற விவரங்களை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன் :** தமிழகத்திலே 4 கோடி பனை மரங்கள் உள்ளன. அவற்றில் 2 கோடி பனை மரங்கள் பயன்தரத் தக்கதாக உள்ளன. இதிலே 60 இலட்சம் பனை மரங்கள் பயன்படுத்தப் பட்டு பனைத் துணைத் தொழிலிலே 3.12 இலட்சம் பேர்கள் ஈடுபட்டிருக் கிறார்கள் என்று ஏற்கெனவே அறிவித்திருக்கிறேன். அவர்களுக்குப் பதநீர் இறக்குதல், பனை வெல்லம் காய்ச்சுதல், பனைப் பொருள்கள் தயாரித்தல் போன்ற பணிகளைச் செய்துவருகிறார்கள். அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு நாளைக்கு ரூ. 10 வரை வருமானம் கிடைக்கக் கூடிய அளவுக்கு தொழில் கிடைக்கிறது. அவர்களின் கைத் தொழில் திறமைக்கு ஏற்ப கிடைக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே பயன்தரக்கூடிய பனை மரங்கள் இரண்டு கோடி அளவுக்கு இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே அந்த 2 கோடி மரங்களையும் பயன்படுத்தி தொழில்களை ஆரம்பித்து, அந்த அனைத்து மரங்களையும் பயன்படுத்துவதன் மூலம் அதிகமான வேலை

வாய்ப்புக்கள் கிடைக்கக்கூடிய அளவுக்கு அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறதா? சில மாவட்டங்களில் இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களில் ஏராளமான அளவுக்கு பனை மரங்கள் இருப்பதால், அந்த மரங்களைப் பயன்படுத்தி அவர்கள் கைத்தொழில்களைத் தொடங்கினால், நூற்றுக்கணக்கானவர்களுக்கு வேலை வாய்ப்புக்களை அளிக்கலாம். ஆகவே இந்த 2 கோடி பனை மரங்களையும் பயன்படுத்துகின்ற அளவுக்கு அரசு ஏதேனும் விரிவான திட்டம் வைத்திருக்கிறதா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன் :** பயன்தரத்தக்க பனை மரங்கள் 2 கோடி இருக்கின்றன. அவைகள் அந்தனையையும் பயனுக்குக் கொண்டுவந்தால், தொழில் வாய்ப்புக்களும் பெருகும், ஏற்றுமதிக்கான வாய்ப்பும் பெருகும் என்பதை அரசு உணர்ந்து, இந்த வாரியத்தின் வாயிலாக மாவட்டத்திற்கு ஒரு தொழில் மையம் என்று ஆரம்பித்திருக்கிறது. ரூ. 25 இலட்சம் செலவில் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. அந்தத் தொழிலில் தும்பு தயாரித்தல், ஓலை தயாரித்தல், பாய்கோலா தயாரித்தல், பனஞ்சீனி தயாரித்தல் என்று பணிகள் இருக்கின்றன. இதனால் ஒவ்வொரு மாவட்டத்திலும் 500 பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கக்கூடிய திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கின்றது. ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு மையம் திறக்கப்பட்டு வருகின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. த. சந்தோஷம் :** பனைத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள் பதனீர் இறக்குகின்ற காலத்தில் வேலைகிடைக்கிறது. அப்படி பதனீர் இறக்குகின்ற நிலை இல்லாத காலத்தில் அவர்கள் வேலையில்லாமல் திண்டாடுகிறார்கள். இதை மனதிலே கொண்டு அவர்களுக்கு அப்படிப்பட்ட பணியில்லாத காலத்திலே வேறு மாற்றுத் தொழிலை அரசு கொடுக்க வேண்டும். அவர்கள் அந்தத் தொழிலிலிருந்து மாற்றிக்கொள்ளவும் விரும்பமாட்டார்கள். அவர்கள் பனைமரத் தொழிலைக் காதலிக்கிறார்கள். அவர்கள் அந்தப் பனை மரங்களை விட்டு பிரிந்துபோகக்கூடியவர்கள் அல்ல. அந்தத் தொழிலாளர்கள் அந்த நிலைமையில் இருக்கிறார்கள். அந்த நிலைமையைக் கருத்தில் கொண்டு அவர்களுக்கு இந்தத் தொழிலிலே வேலையில்லாத காலத்திலே மாற்று வேலைகள் கொடுத்து அவர்களிடையே வேலையில்லாத் திண்டாட்டம் நிலவாமலிருக்கும்படி அரசு நிலைமைகளை உருவாக்குமா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் உணர்வைப் புரிந்துகொண்டுதான், அந்தப் பனைத் தொழிலாளர் களுக்கு 6 மாத காலத்திற்குத் தான் வேலை என்பதை உணர்ந்துதான், மாவட்ட மையங்களில் ஒவ்வொரு தொழில் கூடத்தை உருவாக்கி, அவர் களுக்குத் தொடர்ந்து வேலை வாய்ப்பு கிடைக்கக்கூடிய சூழ்நிலையை இந்த அரசு உருவாக்கி வருகிறது. அத்தோடு இல்லாமல், எதிர்காலத்தில் பனைமரத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களின் சந்ததியினருக்கும் பயன்படும அளவில், 6 மாத காலம் தான் பதனீர் இறக்குவது என்பதை மாற்றி, 12 மாத காலத்திற்கும் பதனீர் கிடைக்குமா என்பதைப்பற்றி ஆராய ஸ்ரீவில்லி புத்தூரிலே ஓர் ஆராய்ச்சி நிறுவனம் ஏற்படுத்தி ஆராய்ந்து வருகிறோம். அந்த ஆராய்ச்சியிலே, பனையையும் தென்னையையும் கிராஸ் செய்யவிட்டு அதிலே கிடைக்கின்ற கொட்டையை வைத்து உருவாக்கினால், 12 மாத காலத்திற்கும் பதனீர் கிடைக்கும் என்று விவசாயத் துறையின் ஆராய்ச்சி யாளர்கள் சொல்கின்றார்கள். அதனால் எதிர்காலச் சந்ததியினருக்கும் தற்காலத் தொழிலாளர்களுக்கும் உதவுகின்ற அளவில் மாவட்ட மையங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** இதிலே ஆண் பனை எவ்வளவு? பெண் பனை எவ்வளவு?

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** இதிலே கற்பனை எவ்வளவு என்றுகூட கேட்கலாம்.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** திருச்செந்தூரில் பனைத் தொழிலில் கிடைக்கின்ற பனங் கற்கண்டு கிடைக்காமல் மக்கள் ஏங்குவதாகத் தெரிகிறது. அந்தப் பனங் கற்கண்டு கிடைக்கின்ற வாய்ப்பை அரசு ஏற்படுத்தித் தருமா? தருமா?

**மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதைப்போல, பனைத் தொழிலில் பனங் கற்கண்டு செய்வதில் திருச்செந்தூரில் உள்ள தொழில் மையம் நல்ல முறையிலே நடைபெற்று வருகிறது. பனங்கற்கண்டுக்கு ஏகப்பட்ட கிராக்கி இருக்கிறது என்பதுடன் வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யக்கூடிய நிலைமையும் இருக்கிறது. அப்படி நமக்குப் பயன்தரக்கூடிய மரங்கள் பனை மரங்கள் 2 கோடி என்று தெரிவித்திருக்கின்றேன். பனை மரத்தில் ஆண் பனை, பெண் பனை என்பதெல்லாம் அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1983 மார்ச் 7

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலியிலிருந்து கன்னியாகுமரிக்குச் செல்கின்ற நேரத்திலே, அந்தப் பகுதிகளிலே இருக்கக்கூடிய பனை மரங்களைப் பார்க்கிறோம். அந்த மரங்கள் தலை குறுகிக் கொண்டு பாழ்பட்டு இருக்கிறது என்பதைப் பார்க்கிறோம். அவைகள் அழிந்துகொண்டு வருவதைப் பார்க்கிறோம். அதைத் தடுப்பதற்குரிய நடவடிக்கையை அரசு மேற்கொண்டிருக்கின்றதா ? இந்தத் தொழில் மையங்கள் எந்தெந்த மாவட்டத்திலே ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன ? இனிமேல் ஏற்படுத்தப்பட இருக்கின்ற மையங்கள் மாவட்டங்களில் எவையெவை என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-20)

**மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன் :** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, பனை மரங்களைப் பொறுத்தவரையில், தென்னை மரங்களைப் போன்று யாரும் அதை கண்ணும்கருத்துமாக வளர்ப்பதாக சரித்திரமில்லை. கற்பகவிருட்சம் என்று கூறுவதுபோல, இந்த மரங்கள் தானாகவே வளர்ந்து, பல இலட்சக் கணக்கான மக்களுக்கு வேலை வாய்ப்பு தரும் சூழ்நிலை இருக்கிறது. இது எப்படி அழிகிறது என்று யாரும் அக்கறையோடு கவனிப்பதில்லை. இப்போது பல இலட்சக் கணக்கான கொட்டைகளை மாவட்ட ரீதியாகக் கொடுத்து, பனை மரங்கள் உற்பத்தியாகும் வாய்ப்புக்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. அத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் வேலை வாய்ப்பு பெற, தர்மபுரி மாவட்டத்தில் மாத்தூரில் 25 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு மையம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. கிழக்கு இராமநாதபுரத்தில் மாரியூர் என்னுமிடத்தில் 17 ஏக்கர் நிலத்திலே, 25 இலட்சம் ரூபாய் செலவில் மையம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. மதுரை . . . திருநெல்வேலியிலே அந்தோனியார்புரத்திலே ஒரு மையம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் அதற்கான ஆய்வுகள் நடந்துகொண்டிருக்கின்றன. எந்த இடத்தில் வைப்பது என்பது முடிவாக வில்லை. மார்த்தாண்டத்திலா அல்லது இன்னொரு இடத்திலா என்பது முடிவு செய்யப்பட வேண்டும். எல்லா மாவட்டங்களிலும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மிகவும் ஆர்வத்தோடு இந்தத் திட்டத்தைக் கேட்டு, அதற்காக உதவி புரியும் சூழ்நிலைகளை உருவாக்கியிருக்கிறார்கள். அதற்கான ஆய்வு நடந்துகொண்டிருக்கிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும் இந்த மையம் ஏற்படுத்தப்படும்.



1983 மார்ச் 7]

**திரு. ப. மாணிக்கம் :** தலைவரவர்களே, 4 கோடி பனை மரங்களில் 2 கோடி பனை மரங்கள்தான் பயனுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றன என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். மீதி 2 கோடி பனை மரங்களையும் பயனுக்குக் கொண்டுவர உத்தேசமுண்டா ? மேலும் பனை மரங்களில் ஆல்ககால் கிடைக்கிறதென்றும், அதைப் பெட்ரோலுடன் கலந்து பயன் படுத்தலாமென்றும் சமீப கால ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன. எனவே மீதியுள்ள மரங்களும் பயன் தரக்கூடிய அளவிற்குக் கொண்டுவர அரசிடம் திட்டமிருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன் :** பலன் தரும் 2 கோடி பனை மரங்களை எந்தெந்த வகைகளில் பயன்படுத்துகிறோமென்பதைச் சொல்லியாகிவிட்டது. பனை மரங்களிலிருந்து என்னென்ன பொருள்கள் கிடைக்கும் என்ற அடிப்படையில்தான் தொழில்கள் ஆரம்பிக்கப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபற்றி விவரமில்லை. அதைப்பற்றி தனிக் கேள்வி போட்டால் நல்லது.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** அயல் நாடுகளில் பனை மரத்திலிருந்து பாமாயில் எடுப்பதுபோல, தமிழ் நாட்டிலும் அப்படி எண்ணெய் எடுப்பது பற்றி ஆய்வு செய்யலாமென்று இந்த அவையிலே மாண்புமிகு தொழில்மைச்சரவர்கள் ஓர் உறுதிமொழியாகக் கொடுத்திருக்கிறார்கள். அதை மாண்புமிகு அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து, பயன் தரும் பனை மரங்களிலிருந்து சமையலுக்கு அல்லது வேறு காரியங்களுக்குப் பயன் படும் எண்ணெய் எடுக்கலாமா என்பது குறித்து ஆய்வு செய்யும் நடவடிக்கைகளில் அரசு ஈடுபடுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன் :** தலைவரவர்களே, அது பற்றிய குறிப்புகள் இல்லை. தனிக் கேள்வி போடவும்.

**திரு. த. சந்தோஷம் :** தலைவரவர்களே, சமீப காலத்திலே சோஷியல் பாரஸ்ட் என்று சாலை ஓரங்களில் அதிகமாக மரங்கள் வளர்க்கப்படுகின்றன. அதிலே பனை மரங்கள் இடம் பெற்றதாகத் தெரியவில்லை. பனை மரத்தின் ஒவ்வொரு பகுதியும் பயன்படுகிறது. அது ஹார்டி பிளான்ட். எனவே பனை மரங்களையும் சாலை ஓரங்களில் வளர்த்தால் நல்லது. அதற்கான முயற்சிகளை அரசு எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன் :** தலைவரவர்களே, பனை மரத்திலிருந்து 33 பயன்கள் கிடைக்கின்றன, அவைகளைப் பயன்படுத்தித்தான் தொழில் வாய்ப்புகளை உருவாக்கிக் கொடுக்கிறது பனைத் தொழில் வாரியம். இது சம்பந்தமாக மாவட்ட ஆட்சித் தலைவரிடம் வாரியம் சம்பந்தமான அதிகாரிகள் அணுகி, ஆதரவு கேட்கிறார்கள். சில மாவட்ட ஆட்சித் தலைவர்களும் பல இலட்சக்கணக்கான கொட்டைகளை வாங்கி விதைத்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## *Board for Palmyrah Products Industry.*

*127 Q.—THIRU D. SANTOSHAM: Will the Hon. the Minister for Khadi and Public Works be pleased to state—

(a) whether representations have been received by the Government, from the Nadar Mahajana Sangam, for the establishment of a Special Board to take care of the Palmyrah Products Industry and also to look after the welfare of the Palmyrah Tree Climbers; and

(b) if so, the action taken thereon ?

**மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன் :** (அ) ஆம்.

(ஆ) பனைத் தொழிலுக்கு தனி வாரியம் தேவையில்லை என தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் முடிவெடுத்துள்ளது. அரசு இக்கருத்தினை ஏற்றுக் கொண்டுள்ளது.

**திரு. த. சந்தோஷம் :** தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் இப்படி ஒரு பதிலைக் கொடுப்பார்களென்று எதிர்பார்த்தேன். பனைமரப் பொருள் தொழிலுக்கு தனியாக ஒரு வாரியம் வைப்பது என்பது ஒருவேளை பெரிதாக இருக்கலாம். அதனால்தான் என்னுடைய கோரிக்கையாக இல்லாமல் நாடார் மகாஜன சங்கத்தினரிடமிருந்து ஏதாவது கோரிக்கை வந்திருக்கிறதா என்று கேள்வியில் போட்டேன். இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறவர்களின் பிரச்சினை மிகவும் மாறுபட்டது. அவர்களில் பெரும்பாலானவர்கள், கிராமங்களிலிருந்து வெகு தூரத்திலுள்ள பனந் தோப்புகளில் குடியிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சரவர்களின் சத்துணவுத் திட்டத்தில்கூட அவர்களுடைய குழந்தைகள் பங்கு கொள்ள முடியாத நிலைமை இருக்கிறது. அவர்களுடைய தேவைகளைக் கவனிப்பது மிகவும் அவசியமாக இருக்கிறது. ஏற்கெனவே உள்ள கதர்



கைத்தறி வாரியத்தின்கீழ் ஒரு தனிப் பிரிவை அமைத்து, இவர்களுக்கு உதவி செய்ய முயற்சி எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன். அவர்களுடைய பிரத்தியேகப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண தனிப் பிரிவை ஏற்படுத்துவார்களா ?

**மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன் :** துணைத் தலைவரவர்களே, இந்தத் தொழிலை நம்பி வாழும் தொழிலாளர்களுக்கும், அவர்கள் பெற்ற குழந்தைகளுக்கும் நல்வாழ்வு அளிக்கவும் கூட்டுறவு சங்கங்கள் வாயிலாக இந்த வாரியம் உதவி செய்து வருகிறது. இந்த வாரியத்தின் தனி அதிகாரி அக்கறையோடு இதை கவனித்து வருகிறார் என்பதால், தனியாக ஒரு வாரியம் அவசியமில்லை என்று முடிவெடுத்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஒன்றைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். பனை மரத்தில் ஏறி, அதிலே பணியாற்றுகிற தொழில் செய்கின்றவர்களுக்கு அவ்வப்போது ஏதாவது விபத்து ஏற்பட்டால், அவர்களுக்கு எந்தெந்த வகைகளில் உதவி செய்ய வேண்டுமோ அந்த உதவிகளை இந்த அரசு கொடுத்துக் கொண்டிருக்கிறது, ரூபாய் 5,000 வரையில் கொடுத்துக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** அரசு தரும் உதவி அதிக மகிழ்ச்சியைத் தருகிறது. அதோடு நவீன முறைகளை இதிலே புகுத்த அரசு ஆலோசனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன். இலங்கையில், ஒரு மரத்திலிருந்து இறங்கி இன்னொரு மரத்திற்கு ஏற நீண்ட நேரமாகிறது என்பதால், மரங்களை கயிறு கட்டி, ஒரு மரத்திலிருந்து இன்னொரு மரத்திற்குப் போக வழி செய்கிறார்கள். அந்த முறையில் இங்கும் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன் :** மரம் ஏறும் தொழில் என்பது பரம்பரைத் தொழிலாக இருப்பதால், எதிர் காலச் சந்ததியினர் இத்தகைய தொழிலைச் செய்ய அஞ்சுவதால், இப்போது நவீன முறைகளைக் கையாள பயிற்சிகள் கொடுக்கப்படுகின்றன. கடலூரில் அதற்காகப் பயிற்சி கொடுக்கப்படுகிறது. ஏணிகள் வைத்து ஏறுதல் போன்ற நவீன முறைகளில் பயிற்சி கொடுத்து வருகிறார்கள். அந்தக் காரியத்தை இந்த வாரியம் செய்து வருகிறது.

**திரு. த. சந்தோஷம் :** தென்னை மரங்களில், அதிக உயரம் வளர முடியாதபடி, ட்வார்ஃப் வெரைடீஸ்—குட்டை ரகங்களைத் தயார் செய்திருக்கிறார்கள். அதுபோல பனை மரங்களிலும். அப்படி ட்வார்ஃப் வெரைடீஸ் உற்பத்தி செய்ய ஆய்வுகள் நடந்து வருகிறதா ? அது குறித்து ஆய்வு செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன் :** இந்தக் கருத்தைக் கொண்டு தான், பனை மரத்திலிருந்து கிடைக்கும் பொருள்களை விரிவாக்கம் செய்ய ஸ்ரீவில்லிபுத்தூரில் ஓர் ஆராய்ச்சி நிலையம் நிறுவி, கோவை விவசாயக் கல்லூரி ஆராய்ச்சியாளர்களைக் கொண்டு ஆராய்ச்சி நடத்தி, 6 மாதம் கிடைக்கும் பதநீரை 12 மாதங்கள் கிடைக்கவும், பல அடி உயர்ந்துள்ள மரத்தை குட்டையாக்குவதற்கும், விரைவிலே சலித்துவிடும் பதநீரை நீண்டகாலம் சலிக்காமல் இருக்கவும் ஆராய்ச்சி நடந்து வருகிறது. ஆராய்ச்சி வெற்றிகரமாக இருக்குமென்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள்.

**மேட்டூர் அணை அரசு மேல்நிலைப்பள்ளி ஆசிரியர்களுக்கு வீடு ஒதுக்குதல்.**

* 128. வினா—**திரு. ம. சங்கரலிங்கம்** மற்றும் **திரு. பா. ரா. தாமஸ் :** மாண்புமிகு கதர் மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறோம் :

(அ) சேலம் மாவட்டம், மேட்டூர் அணை அரசு மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கென ஒதுக்கப்பட்ட 18 வீடுகளில் 6 வீடுகளை பழுதுபார்த்து மீண்டும் அதனைக் கல்வித்துறைக்கே தருவதற்குப் பதிலாக, பொதுப் பணித் துறையினர் வேறு துறையினருக்கு வழங்கியுள்ளதால் ஆசிரியர்கள் தங்க வீடு இன்றி அவதியுறுவதாக அரசுக்குப் புகார் ஏதும் வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன் :** (அ) ஆம்.

(இ) இப்பொருள் அரசின் பரிசீலனையில் உள்ளது

(முற்பகல் 10-30)

**திரு. பா. ரா. தாமஸ் :** ஏறத்தாழ ஓராண்டுக்கு மேலாக ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்ட வீடுகள், அவர்களிடமிருந்து பொதுப் பணித் துறையினரால் பழுது பார்ப்பதற்காக எடுக்கப்பட்ட பின்னர் ஆசிரியர்களிடம் மீண்டும் கொடுக்கப்படவில்லை. மேட்டூர் அணை அரசு மேல்நிலைப் பள்ளியில்



நூறு ஆசிரியர்கள் பணியாற்றுகிறார்கள். அதில் 50 பேருக்குக் கூட வீட்டு வசதி இல்லை. இருந்தாலும் ஒதுக்கப்பட்ட 18 வீடுகளில் 6 வீடுகளைப் பழுதுபார்ப்பதற்கென்று பொதுப் பணித் துறையினரே எடுத்துக் கொண்டார்கள். இந்த நிலையில் ஆசிரியர்களுக்கே இந்த வீடுகள் மீண்டும் கொடுக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன் :** மாண்புமிகு உறுப்பினர் தவறான செய்தி கூறுகிறார். அங்குள்ள ஆசிரியர் பெருமக்கள் கைவசம் 48 வீடுகள் இருக்கின்றன. 18 குடியிருப்புகளை மட்டும், அதாவது குடியிருப்பு நம்பர் 49 முதல் 54, 10 முதல் 15 மற்றும் 31 முதல் 36 வரை பொதுப் பணித் துறையிடம் ஒப்படைக்காமலும், கல்வித் துறை பயன்படுத்தாமலும் 1975 ஆம் ஆண்டிலிருந்தே அவர்கள் கைவசம் வைத்திருக்கிறார்கள். எனவே மேற்கண்ட 18 குடியிருப்புகளால் அரசுக்கு வருமான இழப்பு வருகிறது. இந்த நிலையில் அரசு 31 முதல் 36 வரை நம்பருள்ள குடியிருப்புகளைப் பழுதுபார்த்து முடிந்தவுடன், கல்வித் துறையில் ஏற்கெனவே 49 குடியிருப்புகள் இருப்பதைக் கருத்திற்கொண்டு இந்த 6 குடியிருப்புகளையும் தேவைக்கேற்ப பரிசீலித்து கல்வித் துறையிடம் ஒப்படைக்கலாமா அல்லது வேறு துறையிடம் ஒப்படைக்கலாமா என்பது குறித்து அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. பா. ரா. தாமஸ் :** ஏற்கெனவே 18 வீடுகள் ஆசிரியர்கள் பொறுப்பிலிருக்கின்றன. அவர்கள் வாடகை கூட கொடுத்து வருகிறார்கள். அரசு பள்ளித் தலைமை ஆசிரியர்கள் அவர்களுடைய ஊதியத்திலிருந்து வாடகை பிடித்து வருகிறார்கள். அப்படி இருக்கும்போது, அவர்கள் வாடகையைக் கொடுக்கவில்லை என்று சொல்வது எந்த அளவுக்குப் பொருந்தும் என்பது எனக்குத் தெரியவில்லை. இதுகுறித்து மனுவில் திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறார்கள். ஆறு வீடுகளைப் பழுதுபார்க்க பொதுப் பணித் துறையினரிடம், பொறியாளர்களிடம் ஒப்படைத்த பிறகு, திரும்ப ஆசிரியர்களிடம் கொடுத்தார்களா இல்லையா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்புகளைப் பார்த்தால், விளக்கமாகத் தெரியலாம். அதோடு குடியிருப்பின் மத்தியில் வேலைவாய்ப்பு அலுவலகத்தை வைத்திருக்கிறார்கள். அங்கு பெருமளவில் பெயர்களைப் பதிவு செய்வதற்காக ஆட்கள் வருகிற காரணத்தால், குடியிருப்புகளில் வாழ்கிற பெண்கள் பெரும் தொல்லைக்கு ஆளாகிறார்கள். இந்த அலுவலகம் ஒதுக்குப்புறமாக இருந்தால் நல்லது. அப்படி இருந்தால், பெண்களுக்குத் தொல்லையிராது. இதுகுறித்தும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலிப்பார்களா ?

[1983 மார்ச் 7

**மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன் :** ஆசிரியர்களுடைய ஊதியத்திலிருந்து தலைமையாசிரியர்கள் வாடகையை வசூல் செய்திருக்கிறார்கள் என்று இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அந்தக் குறிப்பு என்னிடத்தில் இல்லை. வாடகை ஒப்படைக்கப்படவில்லை என்றுதான் என்னிடத்திலுள்ள குறிப்பில் இருக்கிறது. 18 குடியிருப்புகளில் 12 குடியிருப்புகளை அலுவலகத்திற்காக பல்வேறு துறைகளுக்குக் கொடுத்திருக்கிறோம். வேலைவாய்ப்புத் துறைக்கு மட்டும் ஒதுக்கவில்லை. டான்சி, வேளாண்மைத் துறை, இடைநிலை வேலைவாய்ப்புத் துறை, டாமின், மருத்துவத் துறை, பொதுப் பணித் துறை அலுவலகம், வேலைவாய்ப்புத் துறை அலுவலகம் என்று பல்வேறு துறைகளுக்காக ஒதுக்கப்பட்டிருக்கின்றன. இந்தக் கட்டிடங்களிலே அலுவலக வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அது தவிர 6 இல்லங்கள் பழுதுபார்க்கப்பட்டு வருகின்றன. இந்த இல்லங்களை அந்தத் துறைக்கு ஒதுக்குவதா, இல்லை வேறு துறைக்கு ஒதுக்குவதா என்பது குறித்துதான் அரசு முடிவெடுக்க வேண்டியுள்ளது.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** 14—2—1983 அன்று வினாப்பட்டியலிலிருந்து ஒத்திப்போடப்பட்ட வினாக்கள்.

**வேதாரண்யம்-தலைஞாயிறு நகரப்பேருந்து.**

* 108. வினா—**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) தஞ்சாவூர் மாவட்டம், வேதாரண்யத்திலிருந்து தாளந்திருவாசல் வரை வரும் நகரப் பேருந்தை தலைஞாயிறு வரை நீட்டிக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அது எப்போது நடைமுறைப்படுத்தப்படும் ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** (அ) மற்றும் (இ) தஞ்சாவூர் மாவட்டம் வேதாரண்யத்திலிருந்து தாளந்திருவாசலுக்கு வரும் சோழன் போக்குவரத்துக் கழக நகரப் பேருந்து தலைஞாயிறுக்கு 23—12—1982 முதல் ஓடிக்கொண்டிருக்கிறது.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** வேதாரண்யத்திலிருந்து தாளந்திருவாசலுக்கு வரும் பேருந்தை தலைஞாயிறு வரை ஓட அனுமதித்ததற்கு அரசுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இப்போது தாளந்திரு



1983 மார்ச் 7]

வாசலிலிருந்து தலைஞாயிறு வரை பேருந்து செல்கிறது. இதிலே ஒரு விஷயம். தலைஞாயிறின் உட்பகுதியாகிய மூன்றாம்சேத்தி என்று ஓர் இடம் இருக்கிறது. அந்த இடம் வரை பேருந்து சென்றால்தான் வசூல் வரும். இப்போதைய முறையினால் வசூல் பாதிக்கப்படுகிறது. இப்படி வசூல் குறைந்திருக்குமானால், பிற்காலத்தில் இந்தப் பேருந்தை நிறுத்தக் கூடிய வாய்ப்பு கூட இருக்கிறது. ஆகவே இந்தப் பேருந்தை மூன்றாம் சேத்தி வரை நீட்டிப்பதற்கு வழிவகை செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** உறுப்பினர் சொல்கிற விவரம் சரியாக இருந்தால் அதுகுறித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

**தலைஞாயிறிலிருந்து கூடுதல் நகரப் பேருந்து.**

* 109. வினா—**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) தலைஞாயிறிலிருந்து திருத்துறைப்பூண்டிக்கும் நாகப்பட்டிணத்திற்கும் மேலும் ஒரு நகரப் பேருந்து விடும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அது எப்போது செயல்படுத்தப்படும் ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** (அ) மற்றும் (இ) தலைஞாயிறிலிருந்து திருத்துறைப்பூண்டிக்கு கூடுதலாக ஒரு நகரப் பேருந்து விடுவதற்கு தஞ்சாவூர் மாவட்ட மண்டலப் போக்குவரத்து அலுவலர் நடவடிக்கை எடுத்து வருகிறார்.

தலைஞாயிறு-நாகப்பட்டிணம் வழித்தடத்தின் நீளம் 30 கி.மீ.க்கு அதிகமாக உள்ளதால் இந்த வழித்தடத்தில் நகரப் பேருந்து விட இயலாது.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** 30 கிலோ மீட்டருக்கு அதிகமாக உள்ள சில பகுதிகளிலே கூட பொது மக்கள் நலன் கருதி அரசு தவிர்ப்பு வழங்கி, நகரப் பேருந்து விட்டிருப்பதாக நான் அறிகிறேன். ஆனால் இந்தத் தகவல் உண்மையா இல்லையா என்பது தெரியாது. மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் அருள்கூர்ந்து பொதுமக்கள் நலன் கருதி சற்று தவிர்ப்பு வழங்கி, அந்த நகரப் பேருந்தை விட அனுமதிக்க முன்வருவார்களா ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** ஏறத்தாழ 2 ஆண்டுகளுக்கு முன்பு 27 கிலோ மீட்டர் தூரம் வரை நகரப் பேருந்துகளை அனுமதித்து வந்தோம். அந்த நேரத்தில் பல இடங்களில் தவிர்ப்பு கொடுத்ததால், 27 கிலோ மீட்டர் என்று இருந்ததை 30 கிலோ மீட்டராக உயர்த்தியிருக்கிறோம். மேலும் தவிர்ப்பு கொடுத்தால், அது 40, 50 கிலோ மீட்டர் ஆகிவிடும் என்கிற அச்சம் இருக்கிறது. மேலும் அந்த ஊர் மாண்புமிகு உறுப்பினருடைய சொந்த ஊர். அந்த ஊருக்குத் தனி கவனம் செலுத்திவிட்டோம் என்ற தவறான எண்ணம் பொதுமக்களுக்கு வந்துவிடக் கூடாது என்கிற கருத்தும் இருக்கிறது. (சிரிப்பு)

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** "யாதும் ஊரே, யாவரும் கேளிர்" என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவார்கள். அது என்னுடைய சொந்த ஊர் அல்ல. திருவாரூர் அருகிலுள்ள வேறொரு ஊர் என்னுடைய சொந்த ஊர். சொந்த ஊருக்காக மட்டுமே வாதாடுபவனல்ல நான் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவதுடன் ஏற்கெனவே தவிர்ப்பு தந்துள்ளதுபோல், இதற்கும் தவிர்ப்பு வழங்குவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** சொந்த ஊர் அல்ல என்றாலும் அங்கு மாண்புமிகு உறுப்பினர் போயிருக்கிறார். அந்த அன்பு இருக்கிறது. சட்டப்படி. 30 கிலோ மீட்டருக்கு மேற்பட்ட தூரத்திற்கு நகரப் பேருந்து விட முடியாது. இருந்தாலும் பொதுமக்களுடைய சௌகரியத்தை முன்னிட்டு இதுபற்றி ஆழமாகச் சிந்தித்துப் பார்க்கப்படும்.

### தலைஞாயிறுவரை பேருந்துகளை நீட்டித்துவிடல்.

* 110. வினா—**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) தஞ்சாவூர் மாவட்டம், நாகப்பட்டிணத்திலிருந்து தாளந்திருவாசல் வரை வரும் சோழன் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளை தலைஞாயிறு வரை நீட்டிக்கும் செயற்குறிப்பு எதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அது எப்போதிலிருந்து செயல்படத் துவங்கும் ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.



**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** நாகப்பட்டினத்திலிருந்து தாளந்திருவாசல் வரை பேருந்துகள் வருகின்றன. தாளந்திருவாசலிலிருந்து தலைஞாயிறுக்கு 5 கிலோ மீட்டர் தூரம்தான் இருக்கிறது. ஆனால் இன்றைக்கு பொதுமக்கள் 15 கிலோ மீட்டர் சுற்றிச் செல்லவேண்டிய நிலை இருக்கிறது. நான் சொல்லுவது குறுகிய வழி. இதற்கு வழிவகை செய்வது பொது மக்களுக்கு நலன் பயப்பதாக அமையும். இதுகுறித்து இப்போது செயற்குறிப்பு இல்லாவிட்டாலும் கூட, வருங்காலத்திலாவது செயற்குறிப்பை ஏற்படுத்தி பரிசீலிக்க மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற வழித்தடத்தின் நீளம் 6 கிலோ மீட்டர். இப்போது 15 கிலோ மீட்டர் சுற்றிப் போவதால், 15 கிலோ மீட்டர் பகுதிகளிலுள்ள மக்கள் பயன் பெறுகிறார்கள். இதை நிறுத்தி விட்டு 6 கிலோ மீட்டர் வழித்தடத்துக்கு பேருந்தை விட்டால், அவர்கள் மட்டும்தான் பயனடைவார்கள். ஆகவே தான் முடியாது என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் தேவையானால் அரசு நிச்சயமாகப் பரிசீலிக்கும்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

### 3. கவன ஈர்ப்பு.

**(1) சத்துணவு மையங்கள் உள்ள பள்ளித் தலைமை ஆசிரியர்களும் ஆசிரியர்களும் 348 நாட்களும் பள்ளிக்கு கட்டாயம் வந்தாக வேண்டுமென்ற நிலையில் அவர்கள் படும் அவதி குறித்து.**

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** துணைத் தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :—

"சத்துணவு மையங்கள் உள்ள பள்ளித் தலைமை ஆசிரியர் மற்றும் ஆசிரியர்கட்கு ஆண்டில் 19 நாட்கள் விடுமுறை அளிக்கப்பட்டிருந்ததை 17 நாட்களாகக் குறைக்கப்பட்டுள்ள நிலையில் 348 நாட்கள் பள்ளிக்கு கட்டாயம் வந்தாக வேண்டும் என்ற நிலையில் அவர்கள் படும் அவதி குறித்து".

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** துணைத் தலைவரவர்களே, அவை முன் ஓர் விவர அறிக்கை @ வைக்கப்பட்டிருக்கிறது.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** இப்போது தலைமையாசிரியர்கள் இந்தப் பணியிலிருந்து விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள். இது ஏற்கெனவே போடப்பட்ட கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்குப் பதிலாக வந்திருக்கிறது. இருந்தாலும் இன்றைக்கு அவர்களை இப்பணியிலிருந்து விடுவித்திருப்பதற்காக அரசுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

இது தொடர்பாக ஒரு சந்தேகத்தை எழுப்புகிறேன். சத்துணவுத் திட்டம் வருவதற்கு முன்பாக மதிய உணவு மையங்கள் செயல்பட்டு வந்தன. ஊராட்சி மன்றங்கள் ஒவ்வொரு பிள்ளைக்கும் 5 காசு விதம் தந்து கொண்டிருந்தன. ஆனால் சத்துணவுத் திட்டம் அமுலுக்கு வந்ததற்குப் பின்னர், முழுச் செலவையும் அரசே ஏற்றுக் கொண்டிருக்கிறது. முன்பு இருந்த முறையில் தலைமை ஆசிரியர்கள் செலவு செய்த தொகையை, எதிர்பார்த்து செலவு செய்த தொகையை, கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்தத் தேவையில்லை என்று அண்மையில் அரசு ஓர் உத்தரவு போட்டிருக்கிறது. தலைமை ஆசிரியர்கள் எதிர்பார்த்து, செலவு செய்து நஷ்டம் அடைந்திருக்கிறார்கள். அந்த நஷ்டத்தைப் போக்கும் வகையில், தலைமை ஆசிரியர்கள் எதிர்பார்த்து செலவு செய்த தொகையைத் திருப்பிக் கொடுக்கும் வகையில் அரசு உத்தரவு பிறப்பிக்குமா ?

(முற்பகல் 10-40)

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** அதைப்பற்றிய விவரம் இப்போது என்னிடத்தில் இல்லை.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** ஆசிரியர்கள் 7 மாதம் 7 நாட்கள் அதிகப்படியாக இந்தச் சத்துணவுத் திட்டத்தை, சனி ஞாயிறு விடுமுறைகூட இல்லாத அளவுக்கு ஆண்டு முழுவதும் செயல்படுத்தியதன் மூலமாகப் பணியாற்றியிருக்கிறார்கள். அவர்களுக்கு எவ்விதமான சலுகைகளும் அளிக்கப்படவில்லை. அவர்கள் தொண்டுள்ளத்தோடு பணியாற்றியிருக்கிறார்கள் என்று சொல்லுவதை நான் ஒப்புக்கொள்கிறேன். அவர்கள் அப்படித்தான் அங்கே பணியாற்றியிருக்கிறார்கள். என்றாலும் பேரறிஞர் அண்ணா அவர்கள்

@ 176-177 ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.



காலத்தில் ஒரு முறை கோடை விடுமுறையின்போது வறட்சி ஏற்பட்டு, அப்போது மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கப்பட வேண்டும் என்று ஆசிரியர்கள் வற்புறுத்தப்பட்டார்கள். அப்படி அந்தக் காலத்தில் பணியாற்றியவர்களுக்கு பின்னாலே ஈட்டிய விடுப்பு வழங்கப்பட்டிருக்கிறது. எனவே அதையே ஒரு முன்னுதாரணமாகக் கொண்டு, தற்போது விடுமுறை நாட்களையாவது இத்தகைய ஆசிரியர்களுக்கு ஈட்டிய விடுப்பாகக் கருதி வழங்கிட அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** வறட்சியை முன்னிட்டு அதிகமான நாட்கள் ஆசிரியர்களுக்கு விடுமுறையாகக் கிடைக்கக் கூடிய வாய்ப்பு இப்போது இருக்கிறது.

## (2) முன்னாள் இந்தி மற்றும் வடமொழி ஆசிரியர்களுக்குத் தேர்வு நிலை வழங்காதது குறித்து.

**திரு. பா. ரா. தாமஸ் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

" அரசாணை நிலை எண் 477, கல்வி, நாள் 6—4—1968-க்கு மாறாக, உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்கள், எழுத்தர், நூலகர், கடைநிலை ஊழியர்களாக மாற்றுப்பணி வழங்கப்பட்ட முன்னாள் இந்தி மற்றும் வடமொழி ஆசிரியர்களுக்குத் தேர்வுநிலை வழங்காதது குறித்து "

மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, இது குறித்த விவர அறிக்கை @ ஒன்று அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

**திரு. பா. ரா. தாமஸ் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, 1968 ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா அவர்கள் இந்தி மொழி ஆசிரியர்களுக்குக் கொடுத்த வாக்குறுதியை, 1973 முதல் கடந்த 10 ஆண்டுக் காலமாக அமுல்படுத்தாமல் காலம் தாழ்த்தப்பட்டு அவ்வாசிரியர்களுக்கான சலுகைகள்

@ 178 ஆம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[திரு. பா. ரா. தாமஸ்] [1983 மார்ச் 7

மற்றும் நிலுவைகள் ஆகியவை அவர்களுக்குத் தரப்படாமல் இறுதியில் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விளக்கத்தின் மூலமாக இப்போது அந்தச் சலுகைகளும், நிலுவைகளும் வழங்கப்பட்டு, பெரிதும் நன்மை அடைந்திருக்கிற காரணத்தால், இந்த அரசை அவர்கள் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையில் ஆசிரியர்களின் பிரதிநிதிகள் என்ற முறையில், இம் மாநிலத்தில் உள்ள அனைத்து முன்னாள் இந்தி மொழி மற்றும் வடமொழி ஆசிரியர்களின் சார்பில் எங்களுடைய வணக்கத்தையும் நன்றியையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களுக்கும் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம். முடிவாக ஒரே ஒரு கேள்வியை மட்டும் கேட்க விரும்புகிறேன். 1—4—1975 லிருந்து 10 ஆண்டு பணி முடித்த அனைத்து இரண்டாம் நிலை மொழி ஆசிரியர்களும், குறிப் பாகத் தமிழாசிரியர்கள், முதல் நிலைக்கு உயர்த்தப்படலாம் என்று உத்திர விடப்பட்டிருக்கிறது. தமிழாசிரியர்கள் மற்றும் வடமொழி ஆசிரியர்கள் ஆகியோர், 10 ஆண்டுக் காலம் பணி முடித்திருந்தால், முதல் நிலைக்கு உயர்த்தப்படலாம் என்று இருக்கிறது. எனவே அதே அடிப்படையில் முன் னாள் இந்தி மொழி ஆசிரியர்களையும் உயர்த்தினால், அண்ணா அவர்களின் வாக்குறுதி முழுமையாக நிறைவேறியதாக இருக்கும் என்ற காரணத்தால், மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் இதை ஆராய்ந்து ஒரு நல்ல முடிவை எடுப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** விவர அறிக்கையின் இரண்டாம் பகுதி அதைத்தான் குறிப்பிடுகிறது என்று நான் கருதுகிறேன்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** அரசுக் கொள்கையின் காரணமாக சில ஆசிரியர்களுக்கு பாதிப்புகள் ஏற்படும்போது, அரசே முன்வந்து அவைகளை ஆராய்ந்து, அத்தகைய பாதிப்புகளைப் போக்குவதற்காக நடவடிக்கை எடுப்பது என்ற நல்ல கருத்தின் அடிப்படையில் தமிழக அரசு இந்தச் சலுகையை வழங்கியிருப்பதற்காக நான் தமிழக அரசுக்கு நன்றியையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொள்கிறேன். இதைப்போலவே கொள்கை அடிப்படையில் இரண்டாம் நிலை தமிழாசிரியர்கள் 10 ஆண்டுக் காலப் பணிக்குப் பிறகு முதல் நிலைக்கு உயர்த்தப்பட்டிருக்கிறார்கள். இப்படி அரசின் கொள்கை காரணமாக இரண்டாம் நிலையிலிருந்த தமிழாசிரி யர்கள் முதல் நிலைக்கு உயர்த்தப்பட்ட பிறகு, அவர்களுக்குத் தேர்வு நிலை, மற்றும் சிறப்பு நிலையைக் கணக்கிடும்போது, இரண்டாம் நிலைப் பணிக் காலத்தையும்—இப்போது கொடுக்கப்பட்ட சலுகையைப் போலவே—கணக்கில்



எடுத்துக்கொள்ள வேண்டும் என்று அவர்களால் கோரப்பட்டு வருகிறது. எனவே அதைப்பற்றி அரசு அனுதாபத்தோடு பரிசீலனை செய்ய முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** அதைப்பற்றித் தனியாக ஒரு கேள்வியாகவோ, வேறு வகையிலோ கேட்க வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**4. 1983-84 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை மீது பொது விவாதம்.**

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** இப்போது 1983-84 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீது பொது விவாதம் நடைபெறும். ஏற் கெனவே அலுவல் ஆய்வுக் குழுவில் தீர்மானித்தபடி. நிதிநிலை அறிக்கையின் மீதான விவாதத்தில் பேசுவதற்கு, உறுப்பினர்களுக்கு 15 முதல் 20 நிமிடங் களும், கட்சித் தலைவர்களுக்கு 30 முதல் 40 நிமிடங்களும் நேரம் ஒதுக்கப் பட்டிருக்கிறது. எனவே இதற்கேற்ப மாண்புமிகு உறுப்பினர்கள் ஒத்துழைப் பைத் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

* THIRUMATHI MANDAKINI KRISHNAMURTHI: Hon. Deputy Chairman, Sir, I am indeed happy to take part in this discussion. I would not call this a discussion on the Budget because a 'budget' is known to mean only a brief-case. I would not also say that I would be speaking on the Financial Statement of our Government. But, I would like to term this as a discussion on the financial aspirations of a Government who, in terms of taxation economics, should pluck the goose with as little squealing as possible. I would term this Budget as one which has been drafted, admits a lot of constraints with an arm to give the maximum benefits to the population with as little taxation as possible and to give the people, especially those who are economically backward, a better deal. I would congratulate the Hon. the Chief Minister, the Hon. the Finance Minister and the band of officers of the Finance Department on their having given us a Budget to think about.

Sir, having said this in favour of the Budget, I have to make certain suggestions on some points which might have been overlooked when the Budget was drafted. I will start with the

[Thirumathi Mandakini Krishnamurthi] [1983 மார்ச் 7

Nutritious Meals Programme of which, as I have always said, I am the greatest votary. I have found, in my own experience, the wonderful results that this scheme has been giving. In the institution with which I am associated, we have bothtypes of the Nutritious Meals Programme—the one implemented in the school and the other implemented in the two centres run by the Social Welfare Department, all situated in one compound. The programme implemented in the schools is in charge of the Education Department. They have prescribed a form for use by the field officers of the Education Department who visit the centres in theschools. Often, every time an officer visits the centre, he or she gives a report in this form. In that report, he or she marks the appropriate ratings as "Very Good" or "Good" or ('Not Good" and also mentions whether the centre is kept clean. This system has a very salutary effect on the school-managements. If, at the time of the first visit by an officer, they get the rating "Good", they strive to get the rating "Very Good" at the time of the next visit. The Nutritious Meals Centres run by the Social Welfare Department for the benefit of children in the age-group 2–5 have no sanitary conveniences. They serve the meals and also conduct the classes in beautiful schools. The small children who come at 9 o' clock in the morning leave the centres only at 3 O'clock in the afternoon. Therefore, the availability of sanitary conveniences for them is a must. I have already mentioned this point while participating in the discussion on the Governor's Address. Since, I am now speaking on the Financial Statement of the Government, I would like to reiterate that point and request that the authorities may see that sanitary conveniences are provided in these centres which are run for the children in the age-group of 2 to 5 so that we can catch them young and teach good habits. Sir, I would like to make another point also on this subject. All the time, there has been a lot of debate in the Council, outside the Council, in the Press and everywhere about the Nutritious Meals Programme. It would do well if we have a review committee, after the completion of one year from the inception of this programme by which time the Government would be in a position to tell us the good after effects of this wonderful scheme. This will convince the people of its efficacy or impact.



1983 மார்ச் 7] [Thirumathi Mandakini Krishnamurthi]

Sir, while going through the Budget documents, I was wondering whether I could make a suggestion. That suggestion is about the formation of a Women's Development Board. I am now making that suggestion, not because I have seen a news-item in the newspapers but because I have always been emphasising and pleading that there should be a Women's Development Board where all the problems--legal and developmental—of women could be dealt with. This Board should comprise women specialists in all fields and it should be a guiding authority for all the vibrant welfare schemes that are implemented for the benefit of women. At present, we find that no specialised guidance or advice is available for the women. This morning I saw in the newspapers that, in Pondicherry, they had decided to have a Women's Development Board. I have been saying this before

(முற்பகல் 10-50)

and recently we had a Seminar at the Women's Christian College on women's studies where I read a paper on Women Labour Force. I have also made a suggestion there to have such a Board which will guide and advise the women. I would request the Hon. the Chief Minister, who has always been very sympathetic and considerate to women's causes to consider the formation of such a Board which will be an ideal Board to guide and advise women and women's programmes so that they function in a better way.

There is very little time available for me. Before concluding, I would like to say a word about the vocationalised education. Tamil Nadu has been the forerunner in this particular system and has received encomiums. While I was presiding over a valedictory function after a three-day seminar for vocational teachers of +2 stream, I was mentioning about the High-power Committee Report on vocationalised education that was recently presented to the Hon. the Chief Minister. While they have made mention of many reports—the Woods Dispatch of 1854; Report of Indian Education Commission 1882-83, under Hunter; Report of Sir Hastag Diarchical Committee 1929; the Provincial Authority Education Report of 1937-47; Sergeant's Report of 1944; Dr. Radhakrishnan's report which gave us 10 plus 3 pattern;

[Thirumathi Mandakini Krishnamurthi] [1983 மார்ச் 7

Dr. Mudaliar Commission Report, 1952-53; Kothari Commission Report, 1964-66 which gave us the foundation for work experience and vocationalisation; NCERT documents; Findings of Working Group under Thiru Sabhanayagam and then Dr. Adiseshiah's Report—Gandhiji's New ESucation system has not been referred to in detail. We are passing through a magnificent obsession about Gandhiji and the hon. Members might have seen the film on Mahatma Gandhi produced by Sir Attenborough, where he could bring in such an obsession about Gandhiji among the people who had to some extent forgotten Gandhiji. This particular report has made a passing mention of Gandhijis educational philosophy. It was Gandhiji who gave us regularised vocational education and it was through a Basic Education Committee headed by no small a person than Dr. Zakir Husain who later became Presiding of India that vocational school was worked outthrough the hon. Deputy Chairman, I would request our dynamic Education Minister to see that this Committee is given another two or three days' time for inclusion of Gandhiji's new education system in its very wonderful, purposeful report that has been presented by Dr. Kulandaiswamy on vocationalisation of education. I feel...

THIRU A. R. DAMODARAN: May I seek a clarification from the hon. Member? I have not seen the copy of Kulandaisami's Report which I believe is still a secret report. Has the hon Member received a copy of the same?

THIRUMATHI MANDAKINI KRISHNAMURTHI: I do not think it is a secret Report. In a Seminar, there was mention about this Report and I had the occasion to glance through it. Probably it has not yet been given to the legislators. I happened to know about it, because I took part in the Seminar and anyhow, there is nothing secret about it because it is about the vocationalisation of education and nothing else. Even though there is a mention about Gandhiji in the Report, it is very casual and it should be mentioned that this was the system which Gandhiji advocated. So I plead that the Report could be a complete document on the subject if Gandhiji's New Education finds a place. It is no doubt a very wonderful Report that has been brought out which is systematised and technically based—I also gave evidence there and that is why I know something about it. Hence I made a mention about the Gandhiji's system of vocational education. I,



1983 மார்ச் 7] [Thirumathi Mandakini Krishnamurthi]

therefore, make an appeal that late Gandhiji's educational philosophy should find a place in this very wonderful documentary which will remain for all time to come. Thank you.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, 1983-84 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் மீது சில கருத்துக்களைக் கூற வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நிதிநிலை அறிக்கையின் மீது பேசுகின்றபோதே, நான் ஒரு ஆசிரியர் பிரதிநிதி என்று உணர்கிறேன். ஆசிரியர்கள் பிரதிநிதியாக, அரசு ஊழியர்கள் பிரதிநிதியாக இங்கே பணியாற்றுகின்ற நான் இந்த நிதி நிலை அறிக்கையிலே பாராட்டுவதற்கு என்ன இருக்கிறது என்று கடந்த இரண்டு நாட்களாக மிகவும் சிரமப்பட்டு தேடித் தேடிப் பார்த்தேன். ஆனால் அவர்கள் சார்பிலே பேசுகின்ற வாய்ப்பைப் பெற்ற எனக்கு அவர்கள் சார்பிலே நன்றி தெரிவிக்க எதுவுமில்லை என்று மிகவும் வருத்தத்தோடு தெரிவிக்கக் கூடிய நிலைமையிலே இருக்கிறேன்.

துணைத் தலைவர் அவர்களே, கவிஞரும், புலவருமாகிய நீங்கள் இங்கே வீற்றிருக்கிறீர்கள். இந்த நிதிநிலை அறிக்கை "பசியிலே ஆரம்பித்து பற்றாக்குறையிலே முடிந்திருக்கிறது" என்று சொன்னால் இது மிகையாகாது என்று நினைக்கிறேன்.

"விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்து
உள்நின்று உடற்றும் பசி"—என்று பசிக்குள்ள இலக்கணத்தைக் கூறுகின்ற அந்தக் குறளிலே தொடங்கி இறுதியிலே "பற்றாக்குறை 184.55 கோடி ரூபாயாக இருக்கும் என்று இந்த அரசு நம்புகிறது" என்று முடிக்கப் பட்டிருக்கிறது. எனவேதான் பசியிலே தொடங்கி பற்றாக்குறையிலே முடி கிறது என்று நான் சொல்ல விழைந்தேன். பசி வந்தாலே என்னவாகும் என்று நம் எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். "மானம், குலம், கல்வி, வண்மை, அறிவுடைமை, தானம், தவம், முயற்சி, தாளண்மை, பெண்ணின் மீது காமுறுதல்" ஆகிய பத்தும் பசி வந்திடப் பறந்துபோகும் என்று புலவன் பாடி னான். ஆனால் இந்தப் பத்தும் பறந்துபோவது மட்டுமல்லாமல், ஆட்சியாளர்கள் பற்றும் கூட பறந்துவிடக் கூடும் என்பதையும் உணர்ந்துதான் எங்கெங்கே அரிசி கிடைக்கிறதோ அங்கெல்லாம் போய் அரிசி வாங்கி வர ஏற்பாடு செய் திருக்கிறார்கள். அதை நான் பாராட்டுகிறேன் என்றாலும், அது காலங் கடந்த முயற்சியாக இருக்கிறது என்பதை என்னாலே சுட்டிக்காட்டாமல் இருக்க முடியவில்லை.

[திரு. க. மீனாட்சிசுந்தரம்] [1983 மார்ச் 7

சென்னையிலே இரண்டு நாட்களுக்கு ஒரு முறைதான் குடிநீர். தஞ்சையே பாலைவனமாக ஆகிக்கொண்டிருக்கிறது, காரணம் கர்நாடகம் தண்ணீர் தரவில்லை என்றெல்லாம் இங்கே குறிப்பிடப்பட்டிருக்கிறது. கர்நாடகம் நீரைத் தராததற்கு இந்த அரசின் அணுகுமுறை சரியில்லை என்று பார்வையாளர்கள், அரசியல்வாதிகள் கூறுகிறார்கள். இந்த நிதிநிலை அறிகையைப் படிக்கின்ற பாமர மக்களுக்கு இப்போது மிகுந்த அச்சம் ஏற்பட்டிருக்கிறது. காரணம் இதிலே குறிப்பிட்டிருப்பதுதான். உணவோ ஓரிரு திங்களுக்கு மட்டும்தான் இருக்கும். குடிநீரோ இரண்டு நாட்களுக்கு ஒரு முறைதான் தர முடியும். அதுவும் எம்.எல்.ஏ. ஹாஸ்டலை எடுத்துக் கொண்டால், குடிநீர் உப்பு நீராக வந்து கொண்டிருக்கிறது, தொலைபேசியை எடுத்தால் தொலைபேசி வேலை செய்வதில்லை. எங்களுக்கே ஆபத்து என்றாலும், ஆளை அழைக்க நாங்கள் தான் எழுந்து வர வேண்டும். ஆகவே ஃபோனை எடுத்துவிட்டு, வேறு ஏதாவது காலிங் பெல் போன்றவற்றை வைத்தாலும் கூட, பரவாயில்லை. ஏனென்றால் ஃபோன் இருந்தும் பயன் இல்லை. அதைத் தூக்கிப் போட்டு உடைக்கவேண்டிய அவசியம் இருக்கிறது. ஜூன் மாதத்தில் பருவ மழை பெய்யாவிட்டால், மின்சாரம் கிடைக்காது, தண்ணீர் கிடைக்காது, உணவு கிடைக்காது என்ற நிலை இந்த நிதிநிலை அறிக்கையிலேயே சொல்லப்பட்டிருப்பதால், மக்களுக்கு அச்சம் ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலையிலே 26 கோடி ரூபாய்க்கு வரி விதித்திருக்கிறார்கள். அந்த வரி விதிப்பு ஏழைகளைப் பாதிக்கவில்லை என்றெல்லாம் சொல்லப்படுகிறது. இந்த நிலையிலே 26 கோடி ரூபாய்க்கு வரி விதித்திருக்கிறார்கள். சுமையை ஏற்றிவிட்டு கடைசியில் சில பொட்டலங்களைக் கீழே போடுகிற போது அந்த ஒட்டகம் தன்மீது இருந்த எல்லாச் சுமையையும் இறக்கிவிட்டதாகக் கருதுவதைப் போல, மக்களையும் ஒட்டகங்களாக நினைத்து, 26 கோடி ரூபாய்க்கு வரியைப் போட்டுவிட்டு, அதிலிருந்து ஒரு கோடி ரூபாய்க்கு வரி விலக்கு அளித்து சுமையை இறக்குவதாகக் காட்டி "மகிழ்ச்சியாகச் செல்லுங்கள் ஒட்டக மக்களே" என்று சொல்லுவதைப் போல இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சர்க்கரைக்கு வரி. பழைய காலத்திலே உப்பு இல்லாமல் தவிப்பது, சர்க்கரை இல்லாமல் சங்கடப்படுவது என்று சொல்லுவது வழக்கமுண்டு. ஆனால் இப்போது டீ இல்லாமல் ஏழைகள் இல்லை. சர்க்கரை போடாமல் யாரும் டீ சாப்பிடுவதில்லை. அதற்கு வரி போட்டிருக்கிறார்கள். கூழ் குடித்தவன் கூழையே குடிக்க வேண்டும், டீயைக் குடிக்கக் கூடாது



1983 மார்ச் 7] [திரு. க. மீனாட்சிசுந்தரம்]

என்று சொல்வதைப் போல இருக்கிறது இது. இது ஏழையைப் பாதிக்காதா? துணிவகைகளுக்கு வரி. இது ஏழையை பாதிக்காதா? புகையிலைக்கு வரி. இது பீடி பிடிக்கிறவர்களைப் பாதிக்காதா?

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: பீடி, சாப்பிடுகிறவர்களையே பாதிக்கும்.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: சாப்பிடுகிறவர்களைப் பாதிக்கும். ஆகவே அதற்கு வரி போட்டது சரியல்ல என்று மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே சொல்லுகிறார்கள்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: பீடி அதை பிடிப்பவர்களையே பாதிக்கும் என்று நான் சொன்னேன்.

(முற்பகல் 11-00)

திரு. க. மீனாட்சிசுந்தரம்: மருந்துப் பொருள்கள். நாம்கூட பார்த்திருக்கிறோம். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் முன்பு நடித்திருந்த படங்களில் பார்த்திருக்கிறோம். மருந்து வாங்கக்கூட காசு இல்லாமல், திருடியதாக, தண்டிக்கப்பட்டதாக பல்வேறு நிகழ்ச்சிகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். மருந்துப் பொருள்களுக்கு வரி போட்டால், ஏழை மக்கள் என்ன செய்வார்கள்? அதுமட்டுமல்லாமல், காகிதத்திற்கும் காகித அட்டைக்கும் வரி. அது பள்ளிக்கூடம் போகின்ற பிள்ளைகளைப் பாதிக்கின்ற வரியாகும். அந்த அட்டைகளைத் தயாரிக்க முடியாமல், அல்லது நோட்டுப் புத்தகங்கள் தயாரிக்க முடியாமல் இருக்கின்ற அளவுக்கு இந்த வரியைப் போட்டிருக்கிறார்கள். புக் பைண்டர்ஸ் அசோசியேஷன் என்று இருக்கிறது. ஏறத்தாழ 6 மாதகாலமாக அவர்களுக்குக் காகிதம் சப்ளை இல்லை. வேலை அவர்களுக்கு நசித்துப்போயிருக்கிறது. பல்லாயிரக் கணக்கான குடும்பங்கள் அழிந்து கொண்டிருக்கின்றன. அதற்கான சலுகையை மத்திய அரசிடமிருந்து பெற முயற்சி செய்யவில்லை. ஆனால் அந்தத் தொழில் 2 சதம் வரியை இப்போது உயர்த்தியிருக்கிறார்கள். இரு சக்கர வண்டிகளுக்கெல்லாம் வரி போட்டிருக்கிறார்கள். அது யாரைப் பாதிக்கும் நடுத்தர மக்களை பாதிக்கப்படுகின்ற நிலை இருக்கிறது. ஆசிரியர்களை, அரசு ஊழியர்களை, கூட்டை தூக்கி வியாபாரம் செய்பவர்களை இப்படிப்பட்ட ஏழைகளை எல்லாம் பாதிக்கிறது. உங்களுடைய விரிசார்ஜ் பஸ் கட்டணம் உயர்த்தப்பெற இருக்கிறது. மின் கட்டணம் உயர இருக்கிறது. மண்ணெண்ணெய், கண்ணாடி சிமினி ஆகியவைகளுக்கு வரிவிலக்கு

[திரு. க. மீனாட்சிசுந்தரம்] [1983 மார்ச் 7

என்று சொல்லுகிறார்கள். ஏற்கெனவே அரசினர் குடிசைகளுக்கு விளக்குத் திட்டம் என்று கொண்டுவந்திருக்கிறார்கள். அது என்ன ஆயிற்று? தோல்வியுற்றதா? அப்படிப்பட்ட குடிசைகளிலே இருப்பவர்களை இந்த வரிகள் பாதிக்காது என்று சொல்கிறார்களா? இது எப்படிப் பொருந்தும்? அதை எப்படி ஏற்றுக்கொள்வது? இதைத் தோல்வி என்று ஏற்றுக்கொள்ளுங்கள். இதை எப்படிச் செய்ய முடியும் என்று சொல்லிவிடுங்கள். அது மட்டுமல்ல. வெள்ளிக் கொலுசு, வெள்ளி அரைஞான் இவைகளுக்கெல்லாம் வரிவிலக்கு என்று சொல்கிறார்கள். இது ஏழைகளுக்கு அளிக்கும் வரி விலக்கு என்று சொல்கின்றார்கள். வெள்ளி அரைஞான் அணியும் ஏழைகள் அப்போது இருந்திருப்பார்கள். அதை பழைய காலத்தில் பார்த்திருக்கலாம். இப்போது பணக்காரர்கள்தான் அணியலாமே தவிர, ஏழைகள் அணிய முடியாது என்ற நிலைதான் இருக்கிறது. இது எப்படி ஏழைகளுக்கு நன்மை செய்ததாக ஆகும்? ஆகவே இந்த வரி விலக்கு என்பது ஒரு ஏமாற்றுகிற திட்டமாக இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்த அரசு 1575 கோடி ரூபாய்க்கு பல்வேறு திட்டங்கள் போட்டிருக்கின்றது. ஆனால் அந்தத் திட்டங்களைச் செயல்படுத்துகின்ற இயந்திரமாக இருக்கும் ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள் ஆகியவர்களுக்கு அரசினர் அப்பட்டமான புறக்கணிப்பைக் காட்டியிருக்கின்றார்கள். அதற்கு என்ன அர்த்தம்? அவர்களுடைய ஒத்துழைப்பு அரசுக்குத் தேவையில்லையா? அவர்களுக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை என்பதுதான் அரசினுடைய முடிவா? ஒரு சாதாரண கோரிக்கையாவது நிறைவேற்றவேண்டாமா? அவர்களை அலட்சியப்படுத்தியிருக்கிறார்களே. அந்த இயந்திரமே அரசுக்குத் தேவையில்லையா? அது இல்லாமல் இந்த அரசு நடக்கும் என்று எதிர்பார்க்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன். அந்தக் காலத்திலே அரசு ஊழியர்கள் நலன் என்று தலைப்பு இருக்கும். உறுப்பினர்கள் புரட்டிப் பார்த்தால், தெரியும். எல்லோருமே என்னை விட அனுபவம் உள்ளவர்கள். நான்தான் ஜூனியர். நான் புரட்டிப் பார்த்திருக்கிறேன். அதிலே ஆசிரியர்கள்—அரசு ஊழியர்கள் நலன் என்று தலைப்பு இருக்கும். அந்தத் தலைப்புகூட இப்போது இல்லையே. என்ன காரணம்? அந்த அளவுக்கு இந்த அரசு ஆசிரியர்களையும் அரசு ஊழியர்களையும் புறக்கணிக்கிறதா? அது எந்த வழியிலே சரி என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

அரசுப் பணியாளர்கள் பயன் அடைவர் என்று ஓரிடத்திலே இரண்டு வார்த்தைகள் வருகின்றன. ஏனென்றால், மாண்புமிகு உறுப்பினர், நாது அருமை நண்பர், எங்கள் ஊர்க்காரர், அண்ணன் திரு. இராதா அவர்கள்



1983 மார்ச் 7] [திரு. க. மீனாட்சிசுந்தரம்]

சொல்வார்கள். ஒன்றுமே இல்லை என்கிறார்களே, இதோ பாருங்கள்
இருக்கிறதே என்று நாளைக்குப் படித்துக்காட்டுவார்கள். அது என்ன
வென்று கேட்டால், வாடகைக் குடியிருப்புகள் கட்ட ரூ. 3½ கோடியிலிருந்து
ரூ. 6 கோடி என்று இந்த அரசு ஒதுக்கியிருக்கிறது. இதனால் அரசு
ஊழியர்கள் பயன் அடைவார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது என்பார்கள்.
ஏற்கெனவே இருந்த அரசு ஊழியர்கள் எண்ணிக்கை குறைவு. இப்போது
உள்ளாட்சித் துறை ஆசிரியர்கள் எல்லாம் அரசு ஊழியர்கள் ஆக்கப்பட்ட
பிறகு மேலும் 1½ லட்சம் பேர்கள் அதிகமாக ஆக்கப்பட்டிருக்கிறார்கள்.
அப்படி எண்ணிக்கை உயர்த்தப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே பற்றாக்குறைத்
திட்டம். இந்த 1½ லட்சம் ஆசிரியர்கள் அதிகப்படுத்தப்பட்ட பிறகு,
இன்னும் பற்றாக்குறை வரும். ஆகவே இதிலே பயன் அடைய எதுவும்
இல்லை. அதிலே கூட அந்த ஆசிரியர்கள் 5 ஆண்டுகள் அரசு ஊழியர்களாகப்
பணியாற்றி இருக்க வேண்டும் என்று சொல்கின்றார்கள். அவர்கள் ஏற்
கெனவே 10, 15 ஆண்டுகள் பணியாற்றிக்கொண்டிருந்தவர்கள். அவர்கள்
கடன் பெற வேண்டுமென்றால், இந்த அரசுப் பணியில் 5 ஆண்டுக்காலம் பணி
யாற்றி இருக்கவேண்டும் என்று ஜி.ஓ. வந்திருக்கிறது. அப்படிச் சொன்
னால், அவர்கள் இன்றைக்கு 5 ஆண்டுகள் வரை கடனே பெற முடியாது,
அவர்களுக்குக் கொடுக்கக் கூடாது என்று சொல்கின்றார்களா? ஆகவே அந்த
ஆணையை ரத்து செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். வீட்டு
வசதி வாரியம் என்று ஏற்கெனவே அமைக்கப்பட்டதாக பலமுறை சொல்லப்
பட்டிருக்கிறது. என்றாலும் ஆசிரியர்களுக்கு அது அமைக்கப்படவில்லை
என்று சொல்லலாம்.

ஒன்றைப் பற்றி நாம் பேசிக்கொண்டிருக்கிறோம். அது சத்துணவுத்
திட்டம். அதன் மூலம் 6.23 லட்சம் பிள்ளைகள் பள்ளிகளிலே சேர்க்கப்பட்
டிருக்கிறார்கள் என்று சொல்லிக்கொண்டிருக்கிறோம். அப்படி 6.23 லட்சம்
குழந்தைகள் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள் என்று சொன்னால், அதற்கான
ஆசிரியர்கள் எங்கே என்று முதல் கட்டத்திலே நான் ஆளுநர் அவர்கள் உரை
யில் பேசும்போது கேட்டபோது, எதிர்த் தரப்பு அங்கத்தினர் அவர்கள் நிதி
நிலை அறிக்கை வரும் வரையிலேகூட பொறுத்திருந்து பார்க்கக்கூடாதா,
அதற்கு மீனாட்சிசுந்தரம் அவர்களுக்குப் பொறுமையில்லையா என்று கேட்
டார்கள். ஒவ்வொரு ஆண்டும் வந்திருக்கிறது. ஏற்கெனவே 7 ஆயிரம், 8
ஆயிரம் ஆசிரியர்கள் பணி என்று வந்திருக்கிறது. சென்ற ஆண்டுகூட
வந்திருக்கிறது. இந்த ஆண்டு மொத்தமே 1,859 ஆசிரியர்கள்தான் என்று
இந்த நிதிநிலை அறிக்கையிலே ஒதுக்கப்பட்டிருக்கிறது. இன்று புதிதாகச்
சேர்க்கப்பட்ட குழந்தைகள் எண்ணிக்கை 6 லட்சம் குழந்தைகள். அரசு

வைத்திருக்கின்ற கணக்குப்படி பார்த்தால், சட்டப்படி பார்த்தால் கூட, 10,620 ஆசிரியர்கள் இதற்கு நியமிக்கப்பட வேண்டும். ஆனால் நாம் ஒதுக்கியிருப்பது 1,250 தான். இது கடலிலே பெருங்காயத்தைக் கரைத்ததுபோலத் தான். இது இந்த அரசு கல்வியில் அக்கறை காட்டவில்லை என்பதைத்தான் காட்டுகிறது. மந்தைகள் இருக்கின்றன. மேய்ப்பவன் இல்லை. அங்கே மந்தைகளாக குழந்தைகளை அடைத்து வைக்க வேண்டுமென்று எதிர் பார்க்கிறார்களே தவிர, அவர்கள் கல்வி அறிவு பெற வேண்டுமென்ற கருத்து இருப்பதாகத் தெரியவில்லை என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, தமிழ்ப் பண்டிதர்கள். இதிலேகூட தமிழ்ப் புலவர்கள் என்று சொல்லவில்லை. பண்டிதர்கள். பண்டிதர்களைப் புலவர்களாகப் போடுகிறார்களே, அந்தப் பழக்கம் இதிலே வரக்கூடாதா? தமிழ்ப் பண்டிதர்கள் 150 பேர்கள் என்று ஒதுக்கம் செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் தமிழ்ப் பண்டிதர்கள் 150 பேர்கள் என்று சொல்லியிருக்கிறார்களே, இன்றைக்கு 400 பேர்கள் ஏற்கெனவே பணியாற்றி, அதிலே 50 பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, மீதியுள்ள 350 பேர்களை வெளியே, வீட்டுக்கு அனுப்பப்பட்டிருக்கிறார்கள். வேலை நீக்கம் செய்யப்பட்டு அவர்களை நீக்கம் செய்ய இருக்கிறார்கள். அத்தனை பேர்களுக்கானது வேலை கொடுக்கக்கூடிய அளவுக்கு, இதிலே ஒதுக்க வேண்டாமா? 150 பேர்கள் என்பது எப்படிப் போதும்? அது மட்டுமல்ல. 50 பேர்கள் உடற்பயிற்சியாளர்கள் சிறியவர்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். 50 பேர்கள் என்றால், உடற் பயிற்சி ஆசிரியர்கள், உடற்கல்வி இயக்குநர் என்பதற்காக விளக்கம் இல்லை. ஒரு கல்வி மாவட்டத்திற்கு ஒருவர் என்று கூட போட முடியுமா என்று பார்க்க வேண்டும். இதிலே சொல்லப்பட்டிருப்பது என்னவென்றால், வேறு எதனைதற்கோ ஒதுக்கிட்டு, இந்த ஆசிரியர்களுடைய நியமனத்திலே மிகமிகக் குறைவான அளவுக்கு ஒதுக்கியிருக்கிறார்கள். எந்த ஆண்டையும்விட இந்த ஆண்டு குறைவாக இருக்கிறது. சத்துணவுத் திட்டத்தை அமுல் நடத்துகின்றபோது, இந்த ஆண்டுதான் அதிகமான அளவுக்கு ஒதுக்க வேண்டும். ஆனால் இந்த ஆண்டு மிகமிகக் குறைவாக ஒதுக்கம் செய்யப்பட்டிருக்கிறது. இப்போது ஆசிரியர்கள் 30,000 பேர்கள் வேலை இல்லாமல் காத்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த அரசு கல்வியைப்பற்றிக் கவலைப்படவில்லை. காரணம் கல்வி தேவையில்லை என்ற அளவுக்கு இன்றைக்கு அரசு இருக்கிறது.





வேறு வழியிலேயாவது இந்த அரசைப் பாராட்ட வேண்டுமென்று மிகச் சிரமப்பட்டு பார்த்தபோது, கிராமங்களிலே இருப்பவர்களுக்கு மகளிர் கழிப்பிடங்கள் கட்டப் போவதாகச் சொல்லியிருக்கிறார்கள். தென் பகுதியிலே உள்ளவர்களுக்குத் தெரியும். கிராமங்களில் உள்ள மகளிர் யாரும் அடுத்த வீட்டுக்குப் பக்கத்திலே கூட போகமாட்டார்கள். தங்கள் வீட்டிலேயே கழிப்பிடங்கள் இருக்க வேண்டும் என்று கருதுவார்களே தவிர, பொதுக் கழிப்பிடத்திற்குப் போகமாட்டார்கள். இது கிராமப்புறங்களில் இருப்பவர்களுக்கு நன்றாகத் தெரியும். இது வீணாகப் போகப்போகிறது. ஆகவே இதைப் பாராட்டுகின்ற நிலை இல்லை.

அடுத்து, குடும்பத்திலே ஒருவருக்கு வேலை வாய்ப்புத் திட்டம். இதற்கு 15 கோடி ரூபாய் ஒதுக்கீடு என்று சொல்லியிருக்கிறார்கள். குடும்பத்திலே ஒருவருக்கு வேலை என்பதற்கு ரூ. 15 கோடி போதுமா? அதைச் செய்ய முடியுமா? எப்படி அதைச் செய்யப்போகிறார்கள்? எனக்கு ஒரு சந்தேகம் வருகிறது. வயதைக் குறைக்கப்போகிறார்கள், வயதைக் குறைக்கப்போகிறார்கள் என்றெல்லாம் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இப்போது குறைக்கவில்லை. ஆனால் குடும்பத்திலே ஒருவருக்கு வேலை அளிக்க இருக்கிறார்கள். அப்படி வேலை அளிக்க வேலைவாய்ப்பு உருவாக்குவதற்கு என்று புதிய செலவு செய்யாமல் இருப்பதற்காக ஏற்கெனவே இருப்பவர்களை வீட்டுக்கு அனுப்புகின்ற திட்டத்திலே வயதைக் குறைத்துவிடுவார்களோ என்ற அச்சம் ஏற்பட்டிருக்கிறது. அப்படியெல்லாம் குறைத்து ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள் வயிற்றெரிச்சலைக் கொட்டிக்கொள்ள வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். அவர்கள் சந்தேகப்படுகிறார்கள். இங்கே வேலை வாய்ப்பை அதிகப்படுத்த வேண்டும் என்று சொன்னால், ஒன்றைச் செய்யலாம். ஆந்திராவிலே ஓய்வு பெற்றவர்களுக்கு, 33 வருடத்திற்கான பயனை, முழுப் பென்சன் பயனை, 30 வருடத்திற்கு என்று வைத்திருக்கிறார்கள். நாம் இங்கே 20 ஆண்டுகள் ஆனால் வாலண்டரி ரிட்டையர்மெண்ட் என்று வைத்திருக்கிறோம். அந்த 20 ஆண்டுகள் கழிந்து யார் வேண்டுமானாலும் ரிட்டையர் ஆகலாம் என்று சொல்லி அவர்களுக்கு முழு ஊதியப் பயனும் உண்டு என்ற ஒரு கொள்கையை வெளியிடுவார்களானால், நிரம்ப பேர்கள் வெளியேறுவார்கள். நிறைய வேலைவாய்ப்பு ஏற்படும். இந்த 15 கோடி ரூபாய்க்குள்ளேயே செய்யலாமா என்பதற்கு முயற்சி மேற்கொள்ளலாம் என்று ஒரு ஆலோசனையை நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்கிறேன். ஆகவே இதையும் என்னாலே பாராட்ட முடியவில்லை.

[திரு. க. மீனாட்சிசுந்தரம்] [1983 மார்ச் 7

அதற்குப் பின்னால் எனக்கு ஒரு அற்ப ஆசை. சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் படித்தபோது, இங்கே வந்து போட்டோ படம் எடுத்தார்கள். நானும் தலையை நீட்டி நீட்டிப் பார்த்தேன். இந்த ஆண்டு படம் எடுப்பார்களா என்று பார்த்தேன். ஒவ்வொரு ஆண்டும் எடுப்பார்கள். இங்கே இந்த ஆண்டு எடுக்கவில்லை. மேலவை அந்த அளவுக்கு அரசினாலே மதிக்கப்படுகின்ற நிலை இல்லை. அங்கே எடுக்கப்படுகிறது. இங்கே எடுக்கப்படுவதில்லை. சென்ற ஆண்டு எடுத்தார்கள். அதற்கு முந்திய ஆண்டு எடுத்தார்கள். இந்த ஆண்டு எடுக்கவில்லை. அதையும் பாராட்ட முடியவில்லையே என்று நினைத்துக் கொண்டிருக்கிறேன். ஆனால் எதைப் பாராட்டலாம் என்று பார்த்தால், அரசு ஊழியர்களையும் ஆசிரியர்களையும் முழுவதுமாக புறக்கணித்த காரணத்தினாலேயே பல துருவங்களாகப் பிரிந்து கிடந்த, சிதறிக் கிடந்த அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் சங்கங்கள், ஏறத்தாழ 160 சங்கங்கள் அரசு அங்கீகாரம் பெற்ற சங்கங்கள் உட்பட நேற்று ஒரே இடத்திலே கூடி, மனச் சாட்சியோடு கூடிப் பேசினார்கள். ஒரு பைசா செலவில்லாத, ஒரு சின்ன கோரிக்கைகூட நிறைவேற்றப்படாமல் இருக்கிறது. 220 நாட்கள் வேலை என்று இருப்பதை ஏற்கெனவே போட்டபடி 200 நாட்கள் என்று மாற்றுங்கள் என்று கேட்டார்கள். அதிலே பணச் செலவு இல்லை. 'நோ ஒர்க் நோ பே' என்று போட்டிருக்கிறார்களே, அந்தக் கொள்கையை விட்டுவிடுங்கள் என்று கேட்கிறார்கள். ஜனநாயக ரீதியில் கடைப்பிடிப்பதாகச் சொல்லி...

(மாற்றுத் தலைவர் திரு. ஜி. இராமலிங்கம் தலைமை)

(முற்பகல் 11-10)

இதைக்கூட நிறைவேற்றவில்லையே. எனவே அரசைத் துதி பாடியும் பயன் இல்லை என்று பல சங்கங்கள், 160 சங்கங்கள் சேர்ந்து, நேற்றைய தினம் போராட்டக் குழு அமைத்து, போராட்டம் நடத்த முடிவு செய்திருக்கிறார்கள். அத்தகைய ஒற்றுமையை ஏற்படுத்திய பெருமை இந்த நிதி நிலை அறிக்கைக்கு உண்டு. அதற்காகப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இதை இப்போது சொல்வதற்குக் காரணம், நிதி நிலை அறிக்கையின்மீதான விவாதத்திற்கு விடையளிக்கும்போது, நிதி அமைச்சரவர்கள் கருணைகூர்ந்து அவர்களுடைய சிரமங்களை நிவர்த்தி செய்தால் நல்லது என்பதற்காகத்தான்.



1983 மார்ச் 7] [திரு. க. மீனாட்சிசுந்தரம்]

விலைவாசி உயர்ந்துள்ளது அகவிலைப்படி உயர்வு கேட்கிறார்கள். 1—9—1982, 1—12—1982 இரண்டு என்பது அனைவருக்கும் தெரியும். தேதிகளில் இரண்டு அகவிலைப்படி உயர்வு தருவதாக மத்திய அரசு சொல்லி யிருக்கிறது. அப்படித் தருவதற்கு இந்த அரசு ஒப்புதல் அளித்திருக்க வேண்டுமென்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்தியாவில் உள்ள, தென்கோடியில் உள்ள தமிழ் நாட்டில்தான் ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள் மற்ற மாநிலங்களைவிட மிகக் குறைந்த ஊதியம் பெற்று வருகிறார்கள். அதை மாற்றி அமைக்க வேண்டுமென்று சொல்லும்போது, நான்காம் ஊதியக் குழு கோருகிறேன் என்று கருதாதீர்கள். அப்படிக் கேட்கிறேன் என்றால் 4 ஆண்டுக் காலம் தள்ளலாமென்று பொருள். அதைக் கேட்கவில்லை. அனைத்துச் சங்கங்களையும் அழைத்து வைத்துப் பேசி, பே ரிவிஷன் செய்வதாக வேண்டும். அப்படி கர்நாடகாவில் செய்திருக்கிறார்கள். நம்முடைய மாநிலத்திலும் அதைப் பின்பற்றி அதை உடனடியாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

கல்லூரி ஆசிரியர்களுக்கு பல்கலைக் கழக ஊதிய விகிதம் வழங்குகிறோம். அவர்களுக்கு பே ரிவிஷன் செய்ய முடியாதென்றாலும் அவர்களுக்கு இடைக்கால நிவாரணம் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு நுழைவு வரி போனஸ் கோரிக்கை இருக்கிறது. பல்வேறு மாநிலங்களில் போட்டிருக்கிறார்கள் என்று போட்டிருக்கிறார்கள். அதற்கு மட்டும்தான் பல்வேறு அதற்குக் காரணம் சொல்லுகிறார்கள். மற்ற மாநிலங்களைப் பார்ப்பதா? போனஸ் ஆந்திரத்தில், கர்நாடகத்தில், மேற்கு வங்கத்தில், திரிபுராவில், கேரளாவில், பீகாரில் தருகிறார்கள். அது எல்லாம் ஏன் கண்ணுக்குப் படவில்லை? நுழைவு வரி கண்ணுக்குப் பட்டு, அதைப் போட்டிருக்கிறார்கள். அதைப்போல இதையும் செய்யுங்கள்.

ஓய்வு பெறும்போது, ரூபாய் 10,000 வழங்கப்பட வேண்டும் என்பதுபற்றி எத்தனை முறை விவாதித்திருக்கிறோம்? நிதி நிலை அறிக்கையை அளித்த நிதி அமைச்சரவர்கள்தான் அந்தக் குழுவினுடைய தலைவர். அப்படி இருக்கும்போது, அதைக்கூட அளிக்கவில்லை என்றால், என்ன பொருள்? அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் மிகவும் அலட்சியப்படுத்தப்படுகிறார்கள். அதன் விளைவுகளை அனுபவிப்பார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன். இருவழிப் பயணச் சலுகை கேட்கிறார்கள்.

[திரு. க. மீனாட்சிசுந்தரம்] [1983 மார்ச் 7

ஒரு வழிப் பயணச் சலுகை கொடுத்திருக்கிறார்கள். விடுப்பு இல்லாமல், அந்தச் சலுகையைத் தர வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். இதனையும் தரவில்லை. இனிமேலாவது தர முயற்சி செய்யுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மருத்துவப் படி கேட்டோம். அண்ணா அவர்கள் அதை ஏற்றுக்கொண்டார்கள் என்பதைச் சுட்டிக் காட்டியிருக்கிறேன். அண்ணா வழி வந்த அரசு மருத்துவப் படி கொடுக்க வேண்டும் என்று கேட்டோம். குஜராத்தில் 30 ரூபாய் மருத்துவப் படியாகத் தந்திருக்கிறார்கள். ஏன் அதை ஏற்றுக் கொள்ளவில்லை?

ஆசிரியர்களுக்கும், அரசு ஊழியர்களுக்கும் தொழில் வரி இருக்கிறது. ஆசிரியர்கள் இறைவர்கள்—இங்கே கவிஞர்கள் எல்லாம் இருக்கிறார்கள், அவர்கள் அதற்கான இலக்கணத்தைச் சொல்லுவார்கள். அவர்கள் தொண்டு செய்பவர்கள் என்றால், தொண்டுக்கு வரியுண்டோ? தொழிலுக்குத் தானே வரி இருக்க முடியும். அதைத் தொழிலாக மாற்றுகிறார்கள். அரசு ஊழியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் தொழில் வரியை ரத்து செய்ய வேண்டும். அப்படியில்லை, அது தொழில்தான் என்றால், அவர்களுக்கு 'டிரேட் யூனியன் ரைட்ஸ்' ஏன் தரக்கூடாது? அவர்கள் தொழில் வரி கட்டுகிறார்கள். தொழிலாளர்களாக ஆகிறார்கள். ஏன் அந்த 'ரைட்ஸ்' தரவில்லை? அதைத் தர வேண்டும் அல்லது தொழில் வரியை நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பழி வாங்கும் நடவடிக்கைகளை ரத்து செய்கிறோமென்றுகூட சொல்லியிருக்கலாம். 524 என்.ஜி.ஜி.ஓ. வினர் பழி வாங்கப்பட்டிருக்கிறார்கள். பால்வள ஊழியர்கள் 1500 பேர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். ஆசிரியர் மன்றங்களைச் சேர்ந்தவர்கள் 1335 பேர்கள் 21 நாட்களாக சம்பளம் இல்லாமல் இருக்கிறார்கள். இன்னும் ஏராளம். இவைகளையெல்லாம் நிறுத்தி ரத்தக்கூடாதா? இதைச் செய்திருக்கக்கூடாதா? மாண்புமிகு முன்னவர் அவர்களின் கவனத்திற்கு ஒன்றைக் கொண்டுவர விரும்புகிறேன். உதகை யிலே பட்டதாரி ஆசிரியர்கள் மாநாட்டிலே கலந்துகொண்டோம். அங்கே கொறடா கூட இருந்தார்கள். அமைச்சரவர்கள் அங்கே ஓர் உறுதிமொழி தந்தார்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே பட்டதாரி ஆசிரியர்கள் . . .

**மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்):** உறுப்பினரவர்கள் 20 நிமிடங்களாகப் பேசிக் கொண்டிருக்கிறார். அவர் பேச வேண்டிய நேரம் முடிந்துவிட்டது.



1983 மார்ச் 7]

திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாற்றுத் தலைவரவர்களே, இன்றைக்குப் பேசுவதற்கு வேறு யாருமில்லை.

**மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்):** மாண்புமிகு உறுப்பினர் கள் டாக்டர் இரா. சனார்த்தனம், திரு. ப. மாணிக்கம், மற்றவர்கள் இருக்கி றார்கள். மாண்புமிகு உறுப்பினரவர்கள் 20 நிமிடங்கள் பேசியாகிவிட்டது.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு முன்னவரவர்களுடைய கவனத்திற்கு ஒன்றைக் கொண்டுவருகிறேன். அந்த மேடையில் ஒன்றைச் சொன்னார்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே பட்டதாரி ஆசிரியர்கள் 13 நாட்கள் சிறைவாசம் அனுபவித்த காலத்திற்கு ஊதியம் இல்லாமல் இருக்கிறார்கள். அதை இந்த அரசு வழங்குமென்று சொன்னார் கள். இன்றுவரை அது என்னவாயிற்று? ஏன் வழங்கப்படவில்லை? அதைக் காட்டியே, கொறடாவுக்கு வாக்கு சேர்ப்பதுபோலப் பேசினார்கள். ஏன் இதைச் செய்யவில்லை? சொல்லி எத்தனை ஆண்டுகள் ஆகின்றன என்பதைப் பார்க்க வேண்டும். இதையெல்லாம் வற்புறுத்த 160 சங்கங்களும் சேர்ந்து 20, 26—3—1983 அன்று பேரணி நடத்த இருக்கின்றன, கண்டனக் கூட்டம் நடத்த இருக்கின்றன. 3—4—1983 அன்று தலைவர்கள் உண்ணாவிரதம் இருக்கப் போகிறார்கள். நிதிநிலை அறிக்கையின் மீதான விவாதத்திற்கு நிதி அமைச்சரவர்கள் பதில் சொல்லும்போது, இதையெல்லாம் நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக, ஒன்றே ஒன்று சொல்லி முடித்துக்கொள்கிறேன். உயிரோடு பணியாற்றுகிறவர்கள் இருக்கட்டும். ஓய்வு பெற்றவர்கள், பணியாற்றியவர்கள் இருக்கட்டும். ஓய்வு பெற்றவர்கள், அவர்களைக்கூட கவனிக்கக் கூடாதா? 1979 சட்டப்படி, அதற்குப் பிறகு ஓய்வு பெறுபவர்களுக்கு வழங்கும் ஓய்வூதிய விகிதப்படி, அதற்கு முன்னால் ஓய்வு பெற்றவர்களுக்குத் தர வேண்டு மென்று உச்ச நீதி மன்றத் தீர்ப்புப்பற்றி இங்கே பிரச்சினை எழுப்பப்பட்டு, 7—2—1983-ல் டெலக்ஸில் விவரம் கேட்டிருக்கிறோம். உடனே செய்வோம் என்று நிதியமைச்சரவர்கள் சொன்னார்கள். அதையாவது சேர்த்திருக்கக் கூடாதா? பஞ்சாப் மாநிலத்தில் மினிமம் பென்ஷன் 150 ரூபாய். இங்கே 125 ரூபாய், டி.ஏ. 51 ரூபாய். மினிமம் பென்ஷனை 300 ரூபாய் ஆக்கக்கூடாதா? டி.ஏ. சர்வீசில் உள்ளவர்களுக்கு கொடுப்பது போல தரக் கூடாதா? அடிப்படையில் ஒருவருக்கு வேலை என்று தரும்போது ஓய்வு பெற்றவர்களின் குடும்பங்களில் உள்ள ஒருவருக்கு முன்னுரிமை தர வேண்டும். இறுதியாக ஒன்றே ஒன்று.

மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்): உறுப்பினராவர்கள், அலுவல் ஆய்வுக்குழுவின் முடிவைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: ஒருவேளை நாங்கள் சொன்னால் செய்ய மாட்டோம், சொல்லாமல் இருந்தால் செய்வோமென்று சொல்லலாம். இப்போது பல்வேறு கோரிக்கைகளை வைத்தேன். இப்படிக் கேட்டால் தர மாட்டீர்கள் என்பதால், உணவுப் பஞ்சத்தைத் தீர்க்கமாட்டீர்கள். குடிநீர் கிடைக்கச் செய்யாதிர்கள், மின் வெட்டைத் தொடர்ந்து அமுல் படுத்துங்கள், அரசு ஊழியர்களுக்கு எதுவும் செய்யாதீர்கள், போராட்டத்தின்போது கடுமையான நடவடிக்கை எடுங்கள் என்று சொன்னால், அதற்கு எதிர்மறையாகச் சிந்திப்பீர்கள், அதனால் செய்வீர்கள் என்று நம்பி அமைகிறேன்.

டாக்டர் இரா. சனார்த்தனம்: மாற்றுத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கையின்மீது சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் நன்னுடைய உள்ளக் கிடக்கையை வெளிப்படுத்தினார். எது எது இந்த நாட்டிலே நடக்க வேண்டுமென்று அவர்கள் எதிர்பார்க்கிறார்களோ அதையெல்லாம் தெளிவுடச் சொன்னார்கள். ஆனால் அதையெல்லாம் வென்றுதான் அரசு இருக்கிறது. அதை எதிர்த்துப் போராடி வெற்றி பெற்றுவருகிறது என்பது நாடு அறிந்த உண்மைதான். அவருடைய அபிலாஷைகள் கற்பனையில் போய், தமிழ் நாட்டு மக்கள் காப்பாற்றப்படுவார்கள். வள்ளுவப் பெருந்தகை "நாடென்ப நாடா வளத்தன நாடல்ல நாட வளந்தரும் நாடு" என்று சொன்னார்கள். ஒரு நாடு எப்படி இருக்க வேண்டுமென்றால் இயற்கை வளத்தாலேயே நாடு அமைந்துவிடாதென்றும், அங்கே பெரிய வளத்தைப் பெருக்கும் அளவிற்கு ஒரு ஆட்சி முயற்சிகளில் ஈடுபட வேண்டிய அளவுக்கு நாடு அமைய வேண்டுமென்று சொன்னார்கள். அந்த அடிப்படையிலே, தமிழகத்தைப் பொறுத்தவரையில், ஒரு பக்கம் வறட்சி நிலை இருக்கிறது, இன்னொரு பக்கம் மின்சாரம் இல்லாத நிலை; மற்றொரு பக்கம் நீர் நிலைகளில் தண்ணீர் தட்டுப்பாடு; மறு பக்கம் அண்டை மாநிலங்களிலிருந்து உதவி எதிர்பார்க்கும் நிலை; இன்னொரு பக்கம் மத்திய அரசை நாடும் நிலை; அடுத்து நமக்குள்ள அதிகார வரம்பிற்கு உட்பட்டு ஆட்சி நடத்தும் நிலை—இவைகளுக்கிடையில் எந்த அளவிற்கு நிதிநிலை அறிக்கையைத் தயாரிக்க முடியுமோ அதைக் காட்டிலும் சிறந்த முறையில் தயாரித்திருப்பதைப் பாராட்ட வேண்டும்.





(முற்பகல் 11-20)

இந்த அடிப்படையை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும். ஆசிரியர்களுக்கு என்ன செய்தீர்கள், அரசு ஊழியர்களுக்கு என்ன செய்தீர்கள் என்று கேட்ப தெல்லாம் ஆசையின் அடிப்படையில் இருக்கலாம். இப்படி சலுகைகளை தரத் தான் அரசு இருக்கிறது என்பதல்ல. ஒரு அரசு இருப்பதன் அடிப்படைக் காரணம் என்ன என்பதும், அதன் செயல்கள் எந்த அளவில் அமைய வேண்டும் என்பதும், அரசு செய்கின்ற காரியங்களின் மூலம் நாளடைவில் அடித்தள மக்கள் என்ன பயனை அடைய இருக்கிறார்கள் என்பதும் எண்ணிப் பார்க்கப்பட வேண்டியவை. அந்த அடிப்படையில் அரசு செய்திருக்கக்கூடிய நல்ல செயல்களை நான் இந்த வரவு-செலவுத் திட்ட அறிக்கையிலே பார்க்கி றோம். தமிழ் நாடு முன்னேறுவதற்காக ஏராளமான முதலீடுகளை அரசு செய்திருப்பதை நாம் பார்க்கிறோம். அதற்காக நான் அரசைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அண்மையில் நான் ஒரு சீனப் பழமொழியைப் படித்தேன். பசியோடு வருபவனுக்கு உண்பதற்கு மீனைத் தருவதைவிட மீனைப் பிடிப்பது எப்படி என்பதுபற்றிச் சொல்லித் தாருங்கள் என்று சொல்லப்பட்ட பழமொழியில் அரிய கருத்து அடங்கியிருக்கிறது. அதுபோல் இன்றைக்கு நாம் ஆசிரியர்களுக்காகவும், அரசு ஊழியர்களுக்காகவும், 10 ரூபாய் தருவது என்பது இன்றைக்கு அவர்களுக்கு பயனுள்ளதாக இருக்கலாம். ஆனால் ஆசிரியர் தலைமுறையில் வர வேண்டாமா. ஆசிரியர் களுடைய, அரசு ஊழியர்களுடைய, எதிர்காலம் ஒளிமயமாக அமைய அவர்களுடைய அடிப்படை நிலையை அரசு உணர்ந்திருக் கிறது. பொருளாதாரத்தில் அவர்களுடைய நிலை எதிர்காலத்தில் உயர அரசு என்ன செய்திருக்கிறது வருங்காலக் குழந்தைகளின் நல்வாழ்வுக்காக அரசு என்ன செய்திருக்கிறது என்பதை எல்லாம் எண்ணிப்பார்க்க வேண்டும். இந்த அடிப்படையை உயர்த்துவதற்காகத்தான் இன்றைக்கு அரசு 30 சதவிகிதத்தை மின்சாரத்திற்காக ஒதுக்கியிருக்கிறது. நாம் பெரிய அளவில் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் அளவில் இருக்கிற தொழிற்சாலைகள் சிறப்பாக இயங்கும். புதிய தொழிற்சாலைகள் பெருகும். புதிய வேலை வாய்ப்புகள் பெருகும். இதை வரவேற்பதை விட்டுவிட்டு எங்கே சலுகை என்று பார்ப்பது இந்த ஆண்டு வேண்டுமானால் சுவையாக இருக்கும். ஆனால் அடுத்த ஆண்டும், வருங்காலத்திலும் அவர்களுடைய வாழ்க்கை சுவையாக அமைய வேண்டாமா? அதற்காகத்தான் அடுத்தடுத்து மக்களுடைய வளர்ச் சியை கவனிக்கிற அடிப்படையில் இந்த நிதி நிலை அறிக்கையில் மின்சாரத்திற் காக 20 சதவிகிதத்தை ஒதுக்கியிருக்கிறார்கள்.

(டாக்டர் இரா. சனார்த்தனம்) [1983 மார்ச் 7

அடுத்து, பாசனத்திற்கு 61 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பது மிகுந்த பாராட்டுக்குரியது. 'நீரின்றி அமையாது இந்த உலகம்' என்பது போல் தமிழகத்தில் இன்றைக்கு நீர் தட்டுப்பாட்டினால் வளர்ச்சி பாதிக்கப்பட்டிருக்கிறது. இன்றைக்கு மற்றவர்களைப் பார்த்து ஏங்கிக் கொண்டிருக்கிறோம். அதற்காகத்தான் நம்மிடம் இருக்கிற நீர் வளத்தைப் பெருக்கவும், இருக்கின்ற நீரைப் பாதுகாக்கவும், இருக்கின்ற நீரை வீணாக்காமல் நல்லமுறையில் பயன்படுத்தவும் 61 கோடி ரூபாயை அரசு ஒதுக்கியிருக்கிறது. இந்த அரிய முயற்சிக்காக அரசை நான் பாராட்டுகிறேன்.

அடுத்து, தொழில் வளர்ச்சிக்காக 40 கோடி ரூபாயை அரசு முதலீட்டுக் கழகங்கள் மூலம் ஒதுக்கியிருக்கிறது. இதைத் தவிர தனியார் முதலீடு வேறு வரும். மேலும் மத்திய அரசுக்கு நல்ல எண்ணம் இருந்தால், அதன் மூலம் வருகின்ற முதலீடுகள் வேறு வரும். அந்த வகையில் எல்லாமாகச் சேர்த்துப் பார்த்தால், இன்னும் நாலு மடங்கு தொழில்கள் வளர வாய்ப்பிருக்கிறது. அப்படிப் பார்க்கின்றபோது, 160 கோடி ரூபாய்க்கு மேல். தொழில்களுக்கு மறைமுகமாக முதலீடு செய்து அதன் மூலம் தொழில்கள் பெருகி வேலை வாய்ப்புகள் அதிகம் ஏற்பட வாய்ப்பு இருப்பதால், இந்த முயற்சியையும் நான் பாராட்டி வரவேற்கிறேன். இந்த மூன்றும்தான் ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு இன்றியமையாதவை. மின்சார உற்பத்தியை அதிகரிப்பதற்காக நாம் அதிகம் ஒதுக்கியிருக்கிறோம். அதுபோல் பாசனத்திற்காக அதிக அளவில் ஒதுக்கியிருக்கிறோம். அடுத்து, தொழில் வளர்ச்சிக்காக அதிக அளவில் ஒதுக்கியிருக்கிறோம். இந்த மூன்றும் அடிப்படையிலேயே வளர்ச்சியடைந்தால்தான், வருங்காலத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் வேலைவாய்ப்பினைப் பெறுவார்கள். நாட்டு மக்களும் பயனடைவார்கள். நாடும் வளம் கொழிக்கும். அந்த வகையில் அரசின் செயலை நான் வரவேற்கிறேன். பாராட்டுகிறேன். அதனால்தான் சலுகைகள் தரவில்லை, எதிர்பார்த்தோம், ஏமாந்தோம் என்று சொல்கின்ற கணக்கை விட்டு விட்டு, தொலை தூர நோக்கத்தோடு அரசின் காரியங்களோடு பார்க்க வேண்டுமென்று நான் சொல்லிக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். இத்தகைய ஒரு தொலைதூர நோக்கு 10 வருடங்களுக்கு முன்பு இருந்த அரசுக்கு இருந்திருக்குமேயானால், அல்லது நாடு சுதந்திரம் அடைந்த பின்பு வந்த அரசுக்கு இருந்திருக்குமேயானால், நாடு இன்றைக்கு நல்ல வளர்ச்சியை அடைந்திருக்கும், அல்லது குறைந்தபட்சம் இந்த அரசு இன்றைக்கு சிரமத்திற்கு ஆளாக வேண்டிய நிலையாவது ஏற்பட்டிருக்காது. அவ்வப்போது ஆசிரியர்கள் குரல் எழுப்பும்போதெல்லாம், ஏதாவது சலுகைகளைக் கொடுத்துவிடலாம். அவ்வப்போது அரசு ஊழியர்கள் குரல் எழுப்பும்



1983 மார்ச் 7] (டாக்டர் இரா. சனார்த்தனம்)

போதெல்லாம்; கண் துடைப்பாக ஏதாவது சலுகைகளைக் கொடுத்து விடலாம். அதேபோல தொழிலாளர்கள் குரல் எழுப்பும்போதெல்லாம் ஏதாவது கொடுத்து காலம் கடத்தி விடலாம். இப்படியே பல ஆண்டுகளை ஓட்டலாம். ஆனால் தமிழக அரசைப் பொறுத்தவரையில், அதை விட நாடு வளர வேண்டுமென்கிற நல்லெண்ணம் இருப்பதால்தான், மின்சாரம், பாசனம், தொழில் வளர்ச்சி போன்ற முக்கியமான மூன்று திட்டங்களுக்கும் அதிகமான அளவில் பணத்தை ஒதுக்கி நாட்டின் முன்னேற்றத்துக்கு உறுதுணையாக இருந்து செயல்பட்டு வருகிறது. விவசாயிகளுக்கு உறுதுணையாக இருந்து இந்த அரசு செயல் பட்டு வருகிறது. அதுபோல் மின்சார வாரியம் இன்றைக்கு மிகுந்த சிரமமான நிலையில் இருக்கிறது. இப்படிப்பட்ட நேரத்தில் 30 சதவிகித ஒதுக்கீட்டை மின்சார வாரியத்துக்கு ஒதுக்கி, புதிய திட்டங்களுக்கு வழிவகை செய்திருப்பதற்காக நான் அரசைப் பாராட்டுகிறேன். வரவேற்கிறேன். இப்பொழுதெல்லாம் சிலர் 'எதற்கெடுத்தாலும் மத்திய அரசை இந்த அரசு எதிர்பார்க்கிறது' என்று ஒரு குற்றச்சாட்டைச் சொல்கிறார்கள். ஒரு மாநில அரசு மத்திய அரசை எதிர்பார்க்காமல் இருக்க முடியாது என்பது மறுக்க முடியாத உண்மை. இதற்குக் காரணம் மத்திய அரசு தான். நம்மிடமுள்ள பல முக்கியமான வரிகள் எல்லாம் மத்திய அரசுக்குத்தான் போகின்றன. ஆகவேதான் நாம் அங்கிருந்து எதிர்பார்க்கிறோம். அதை மத்திய அரசும் நமக்குத் தர கடமைப்பட்டிருக்கிறது. அவர்கள் நம்மை ஊக்கப்படுத்த வேண்டும் அல்லது நம் சேவைகளில் அவர்கள் துணை இருக்க வேண்டும். ஆனால் நடைமுறையில் அப்படி இல்லை. உதாரணத்திற்கு எச். பி. தொழிற்சாலை. தேர்தலுக்கு 2 நாட்களுக்கு முன்புதான் அறிவிப்பு தருகிறார்கள். அதுவும் நமக்குத் துணையில்லாமல் போகிறது. பெரியகுளம் தேர்தலுக்கு 2 நாட்களுக்கு முன்பு காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த திரு. திவாரி அவர்கள் இதுகுறித்து காங்கிரஸ் நண்பர்கள் மகிழ சென்னையில் சொன்ன உடனே வட மாநிலத்திற்கு நைனிடாலுக்கு கலர் பிலிம் தொழிற்சாலை போகிறது என்று செய்தி வருகிறது. அதுபோல் திருச்செந்தூர் தேர்தலுக்கு 2 நாட்களுக்கு முன்பு எச். பி. எப்-ன் தலைவர் திரு. தாண்டன் ஒரு அறிக்கை விடுகிறார். "நைனிடால் என்று நினைத்து விடாதீர்கள். இங் ஊட்டிக்கும் வருகின்றன" என்று சொன்னார். உடனே காங்கிரஸ் நண்பர்களுக்கு அவல் கிடைத்த மாதிரி. அதற்காகத்தான் அவர்கள் அவ்வாறு சொன்னார்கள். அவர்கள் குறிப்பிட்டது ஏற்கெனவே இங்கு வருவதற்கு முடிவு செய்யப்பட்ட ஒன்று. அதாவது 'ரிசர்ச் அண்ட் டெவலப்மென்ட்' என்று ஏற்கெனவே இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே எடுபடுத்தல்து என்று முடிவு செய்யப்பட்ட காரியம். 8 கோடி ரூபாய் அதுபோல் பல் எக்ஸ்ரே திட்டத்திற்கு செல்லில் டேப் தயாரிக்கிற திட்டம்.

2 கோடி ரூபாய் திட்டம் இப்படியாக நீலகிரியில் 14 கோடி ரூபாய்க்கு முதலீடு செய்ய இருக்கிறார்கள். ஆனால் நாம் கேட்டது 160 கோடி ரூபாய் முதலீட்டில் ஊட்டியில் கலர் பிலிம் தொழிற்சாலை. நாம் கேட்ட நீலகிரி கலர் பிலிம் தொழிற்சாலை வட இந்தியாவுக்குப் போய்விட்டது. அது போய் ரூ. 14 கோடியில் திட்டம் வந்திருக்கிறது. 160 கோடி ரூபாய் முதலீட்டின் மூலம் 2 ஆயிரம் பேருக்கு வரக்கூடிய வேலைவாய்ப்பு போய் இன்றைக்கு இத்திட்டத்தின் வாயிலாக நீலகிரியில் 100 பேருக்குத் தான் வேலைவாய்ப்பு கிடைக்கும். அதுவும் திருச்செந்தூர் தேர்தலுக்கு 3 நாட்களுக்கு முன்பு நமக்குக் கிடைத்திருக்கக்கூடிய தரிசனம் இது. ஆதலால்தான் இதை நான் சொல்கிறேன். மத்திய அரசின் அணுகுமுறை நம் மாநிலத்திற்கு ஆதரவாக இல்லை. அதற்காக என்னுடைய வேதனையை நான் தெரிவித்துக்கொள்கிறேன். தொழிற்சாலைகள் என்ற உடனே புதிய தொழிற்சாலைகளை ஏற்படுத்த வேண்டும் என்று கூட அல்ல. ஏற்கெனவே இருக்கின்ற தொழிற்சாலைகளை நல்ல முறையில் விரிவுபடுத்த வேண்டும். இன்றைக்கு சாதாரண தொழிற்சாலைகள் கூட வட நாட்டுக்கு மாற்றப்படுகிற நிலை இருக்கிறது. இன்றைக்கு நம்முடைய அரசு 40 கோடி ரூபாயை தொழில் வளர்ச்சிக்காக ஒதுக்கியிருக்கிறது. அந்த முறையில் தமிழகத்தில் தொழில்கள் பெருக நல்ல வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. அந்த வகையில் தமிழக அரசின் அணுகுமுறையை நான் வரவேற்கிறேன்.

அடுத்து, தமிழ் நாட்டில் வறட்சி நிலை. இந்தியாவில் எங்கும் இல்லாத அளவுக்கு தமிழ் நாட்டில் வறட்சி ஏற்பட்டிருக்கிறது. டெல்லியிலிருந்து வறட்சிக் குழு இங்கு வந்திருக்கிறது. அவர்கள் கூட இங்கு இருக்கிற நிலையை நேரில் சென்று பார்த்து, வட மாநிலங்களில் வறட்சிக்குப் பெயர் போன மாநிலங்களை விட இங்கு இருக்கிற வறட்சி மிக பயங்கரமானது என்று தெரிவித்திருக்கிறார்கள். நாம் கேட்டிருப்பதைக் காட்டிலும் அதிகமாக மைய அரசு தந்து, தமிழகத்தில் ஏற்பட்டிருக்கிற வறட்சித் துன்பத்திலிருந்து மக்களைக் காப்பாற்ற துணை நிற்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். நம்முடைய நீர் நிலையும் அப்படித்தான் இருக்கிறது. இங்கே எல்லோரும் எடுத்துக்காட்டியது போல், குடிக்கிற தண்ணீருக்குக் கூட ரேஷன் வருமோ என்று நினைக்கத்தக்க அளவுக்கு நாம் பாதிக்கப் பட்டிருக்கிறோம். இந்த அரசு இந்த விஷயத்தில் போர்க் கால நடவடிக்கையை மேற்கொண்டிருக்கிறது. அதற்காக நான் அரசைப் பாராட்டுகிறேன். மழை பெய்யாததற்கு நாம என்ன செய்ய முடியும்? இது நம்முடைய கையில் இல்லாத காரியம். மழை வராத காரணத்தால் வறட்சி நிலை ஏற்பட்டிருக்கிறது. இதற்கும் அரசு போர்க் கால நடவடிக்கையை எடுத்து நிவாரணம் கொடுத்து வருகிறது.





அடுத்து, சத்துணவுத் திட்டத்திற்கு வழங்கியிருந்த அரிசியைத் தீர்த்து விட்டார்கள் என்று இங்கே சொன்னார்கள். 65 லட்சம் குழந்தைகளுக்கு அரசு இலவசமாகச் சத்துணவு வழங்குகிறது. நாம் இப்போது ஒருவேளை சத்துணவை சத்துணவு மையங்களிலிருந்து வழங்குகிறோம். நாம் சத்துணவை வழங்காவிட்டாலும் கூட, அவர்கள் ஒருவேளை உணவை வீட்டிலிருந்து சாப்பிட்டிருக்க வேண்டும். அப்படி என்றால் நாம் பள்ளிகளில் அல்லது சத்துணவு மையங்களில் சத்துணவைத் தருவதன் வாயிலாக இன்னொரு பக்கம் மீதியாக அரிசிக் கடைகளிலாவது அல்லது வீடுகளிலாவது இருந்தாக வேண்டும். அல்லது இந்த 65 லட்சம் குழந்தைகளும் இவ்வளவு நாட்களாகச் சரியாக உணவு உண்ணாமல் பட்டினி கிடந்து வாடியிருக்க வேண்டும். நாமெல்லாம் வயிறார உணவு உண்டுகொண்டு, இந்தக் குழந்தைகள் வயிறார உண்ணாமல் பட்டினி கிடந்து வாடிக் கொண்டிருந்த நிலையை மாற்றிய தியாகச் செயலை, நல்ல முயற்சியை மேற்கொண்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பாராட்டுகிறேன்.

அடுத்து, சுற்றுலாவுக்கு இந்த அரசு அதிக அக்கறை காட்டி வருகிறது. காட்டைப் பாதுகாக்கிற முறையில் மரங்களை அழிக்காமல் செயல்படுவதை நான் பாராட்டுகிறேன். நீலகிரியில் நல்ல கவனம் செலுத்தி, தொட்டபெட்டாவுக்குச் செல்ல, ரெயில் பாதையை, வானளாவிய உயரத்துக்குச் செல்கிற வகையில், ஒரு நல்ல திட்டத்தைத் தீட்டி, அதைச் செயல்படுத்த இருப்பதை நான் வரவேற்கிறேன். அதை விரைவுபடுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(முற்பகல் 11-30)

அதோடு சுற்றுலா பெருகுவதற்கு ஏற்ற வகையில் நீலகிரியில் ஊட்டிக்கு விமானப் போக்குவரத்திற்கும் வழிவகை செய்வது சிறப்பாக இருக்கும் என்பதைத் தெரிவித்து, அரசு அதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். இந்த முறைகளிலெல்லாம் அவையின் முன் வைக்கப்பட்டுள்ள இந்த நிதிநிலை அறிக்கை மிகவும் பாராட்டுக்குரிய ஒன்றாக இருக்கிறது என்பதும், தமிழ் நாட்டின் எதிர்காலத்தை மனதில் கொண்டு தீட்டப்பட்ட நிதிநிலை அறிக்கை என்பதும்—இது ஏதோ வரும் 5 ஆண்டுகளுக்கு மட்டும் தயாரிக்கப்பட்ட ஒன்றாகவோ அல்லது பெற வேண்டிய வாக்குகளை மனதில் கொண்டு ஒன்றாகவோ அல்லது பெற வேண்டிய வாக்குகளை மனதில் கொண்டு செய்யப்பட்ட ஒன்றாகவோ இல்லை என்பதோடு, மிகுந்த தொலை நோக்குப் பார்வையோடு தயாரிக்கப்பட்டுள்ளது என்பதும் மிகுந்த மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகும். இந்த நிதிநிலை அறிக்கையில் தொழில் துறைக்கும், பாசனத்

அணைக்கும் மின்சார உற்பத்திக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவைகளுக்கு இப்போது தரப்படும் முக்கியத்துவத்தின் பலன்கள் என்பவை இன்னும் 10, 15 ஆண்டுகளுக்குப் பின்னால்தான் நமக்குத் தெரியும். மின்சாரத் துறையில் நாம் கொடுத்திருக்கும் முக்கியத்துவத்தின் பலன் அதைப் போலவே பாசனத் துறைக்கு நாம் கொடுத்திருக்கும் முக்கியத்துவத்தின் பலன் ஆகியவைகளையெல்லாம் இன்னும் 5 அல்லது 10 ஆண்டுகளுக்குப் பிறகுதான் நம்மாலே முழுமையாக அனுபவிக்க முடியும். அந்த வகையில் மிகுந்த தொலை நோக்குப் பார்வையோடு மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் செயல்பட்டிருப்பதை நான் மனமாரப் பாராட்டுவதோடு, இந்த அரசு மக்களுக்காக இருக்கிற அரசு, மக்களுடைய நன்மைக்காகப் பாடுபடுகிற, பணியாற்றுகிற அரசு என்று சொல்லிக்கொண்டு, அதிலும் குறிப்பாகக் கல்வித் துறையில் இந்த அரசு அதிக கவனம் செலுத்துவதோடு, இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களுக்கும் வழிகாட்டியாக ஒரு புரட்சிகரமான முறையில் கல்வித் துறையில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதையும் சொல்லி இந்த நிதிநிலை அறிக்கையை மனமார மீண்டும் வரவேற்று அமைகிறேன்.

**திரு. ப. மாணிக்கம் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீது பேசுவதற்கான வாய்ப்பு அளித்ததற்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் இரண்டு அம்சங்கள் மிகவும் முக்கியமான அம்சங்களாக இருக்கின்றன. ஒன்று மாநில அரசின் நிதிக் கொள்கை சம்பந்தமானது. அடுத்தது மாநில மத்திய அரசுகளுக்கு இடையே இருக்க வேண்டிய உறவுகள் பற்றியதாகும். தற்போதைய நிலைமைகளுக்கு ஏற்ப இந்த உறவு நிலைமைகள் புனரமைக்கப்பட வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. என்றாலும், இந்த இரண்டு முக்கியமான அம்சங்களைப் பற்றிப் பேசுவதற்கு முன்னால் நான் ஒரு கருத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன். இந்த நிதிநிலை அறிக்கையைப் பொறுத்தவரையில், ஒரு முக்கியமான கொள்கை அறிவிப்பாக வந்திருக்கிற அம்சம் என்னவென்றால், மத்திய மாநில அரசுகளுக்கு இடையே நிலவும் உறவுகள் மாற்றியமைக்கப்பட வேண்டும் என்பதாகும். அதிலும் குறிப்பாக மக்கள் தொகை அதிகமாக வளர்ந்துவிட்ட நிலையில், வளர்ச்சிப் பிரச்சினைகள் மிகவும் அதிகமாகிவிட்ட நிலையில், மாநில அரசுகளின் மீது மிக அதிகமான வகையில் கடமைகளும் பொறுப்புகளும் சுமைகளும் சுமத்தப்பட்ட நிலையில், மாநில அரசுகளின் நிதிப் பற்றாக்குறை என்பது மிகவும் அதிகமாகவே இருக்கிறது. இந்த



நிலையில் மத்திய அரசிடம் ஏராளமான நிதி வசதிகளும், அதிகாரங்களும் குவிக்கப்பட்டிருக்கிற உண்மையைப் பார்க்கிறோம். இந்த அடிப்படையில்தான் மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கிடையேயான உறவுகள் புனரமைக்கப்பட வேண்டும் என்ற தேவை ஏற்பட்டிருக்கிறது. தொடக்கத்தில் குடியரசுச் சட்டம் உருவாக்கப்பட்டபோது இருந்த சூழ்நிலைக்கும் தற்போதுள்ள நிலைமைகளின் அடிப்படையில் இந்தியாவில் பல்வேறு இடங்களிலும் ஏற்பட்டுள்ள கொந்தளிப்புகளின் காரணமாக ஏற்பட்டுள்ள சூழ்நிலைக்கும் நிறைய வித்தியாசம் இருப்பதால், நிச்சயமாக அத்தகைய உறவுகள் மாற்றியமைக்கப்பட வேண்டும் என்பதில் யாருக்கும் எந்தவிதமான கருத்து வேறுபாடும் இருக்க முடியாது.

எனவே, நமது மாநில அரசு எடுத்திருக்கிற இந்தக் கொள்கை நிலையில் எனக்கு உடன்பாடுதான். என்றாலும் இதே கொள்கையைத் தொடர்ந்து வலியுறுத்தி, மாநில மத்திய அரசுகளின் உறவுகளைப் புனரமைத்து, நிதி மாநில அரசுகளின் உரிமைகளையும் அதிகார வரம்புகளையும், நிதி வசதிகளையும் பெறுவதற்கான முறையில் இந்த அரசு செயல்படுமா என்பதுதான் என்னுடைய கேள்வியாக இருக்கிறது. அப்படி நின்றால்தான், அது நல்ல முறையில் தன்னுடைய கடமையை நிறைவேற்றுவதாக அமையும். ஆனால் நடைமுறையில் நாம் என்ன காண்கிறோம் என்றால், தொடர்ந்து இந்த மாநில அரசு ஊசலாட்டத்திலேயே இருந்து வருகிறது. இந்தியாவின் ஒற்றுமைக்குக் குந்தகம் ஏற்படுவதற்கு நாம் எந்த வகையிலும் காரணமாக இருக்க மாட்டோம். இந்தியாவின் ஒற்றுமை உருக்குலைந்தால் அது நமது மாநிலத்திற்கு மட்டுமல்ல, யாருக்குமே நல்லதல்ல. எந்த ஒரு மாநிலமும் பாதுகாப்போடு வாழ முடியாது. அதில் நாம் உறுதியாக இருப்போம். ஆனால் பல்வேறு சந்தர்ப்பங்களிலும் இந்த அரசு தொடர்ந்து ஊசலாட்டத்தில் இருந்து வருகிறது என்பதுதான் உண்மையான நிலைமையாக இருக்கிறது. இன்றையதினம் நமது மாநிலத்திற்குச் சில சிரமங்கள் ஏற்பட்டிருக்கின்றன. மாநிலம் முழுவதும் வறட்சி நிலை உருவாகியிருக்கிறது. குடி தண்ணீருக்குக் கூட தமிழகம் கஷ்டப்பட வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அடுத்து, அரிசிப் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. இந்த இரண்டின் காரணமாகவும், தமிழகத்தில் ஏற்பட்டுள்ள நிலைமைகளைச் சரிக்கட்டுவதற்கு மத்திய அரசு இன்றையதினம் உதவி செய்வதில் தயக்கம் காட்டுவது மட்டுமல்லாமல், ஒரு அலட்சியப் போக்கைக்கூட கடைப்பிடித்து வருகிறது. இதன் காரணமாக மட்டுமல்லாமல், பொதுவாகவே மத்திய அரசுக்கு இன்றைக்கு இருக்கும்

(திரு. ப. மாணிக்கம்) [1983 மார்ச் 7

அதிகாரங்களும், நிதி வசதிகளும் மாற்றியமைக்கப்பட்டு, மாநில அரசுக்கு அதிகாரங்களும் நிதி வசதிகளும் அதிகமாக்கப்பட வேண்டும் என்பதில் யாருக்கும் எந்தவித வேற்றுமை இருக்க முடியாது.

தமிழ் நாட்டில் மட்டுமல்லாமல் ஆந்திரத்தில் ஏற்பட்டுள்ள நிலைமைகளும், அசாம் மாநிலத்தில் ஏற்பட்டுள்ள நிலைமைகளும், அங்கே உருவாகியிருக்கும் கிளர்ச்சிகளும், அதைப்போலவே பஞ்சாபில் ஏற்பட்டிருக்கின்ற கிளர்ச்சிகளும், மற்ற பிற மாநிலங்களில் ஏற்பட்டுள்ள கிளர்ச்சிகளும், ஓரளவுக்கு நிதிப் பற்றாக்குறை காரணமாகவும் ஏற்பட்டிருக்கின்றன. அதன் காரணமாக அவைகளெல்லாம் இத்தகைய நிலைமைக்கு உந்தப்பட்டிருக்கின்றன. எனவே இந்தியாவில் மத்திய மாநில அரசுகளுக்கு இடையே உள்ள உறவுகள் புனர் அமைக்கப்பட வேண்டும் என்பதில் கருத்து வேறுபாடு யாருக்கும் இருக்க முடியாது. எனவே இந்தப் பிரச்சினையில் நமது மாநில அரசு உறுதியானதொரு கொள்கையைக் கடைப்பிடித்தால், நாம் நிச்சயமாக வெற்றி காண முடியும். எந்த அளவுக்கு நாம் வெற்றி காண முடியும் என்பது காலத்தையும், நேரத்தையும், நம் சக்தியையும் பொறுத்து அமையும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இங்கே மாநிலங்களுக்கு அதிகமான நிதி வசதிகள் கிடையாது, வளர்ச்சித் திட்டங்கள் இதன் காரணமாகப் பாதிக்கப்படுகின்றன என்று சொல்லுகிற அரசு தன்னுடைய நிதிக் கொள்கையை வகுக்கும்போது, இந்தக் கொள்கைக்கு ஏற்ற முறையில் தன்னுடைய கொள்கையை வகுத்துக் கொள்ளவில்லை என்பதுதான் என்னுடைய குற்றச்சாட்டாகும். நிதிநிலை அறிக்கையின் பாரா 90-ல் ஒரு கருத்து சொல்லப்பட்டிருக்கிறது.

"இந்த நிதியாண்டிற்கான வரவு-செலவு திட்ட மதிப்பீடுகளை இந்த அவை முன் வைத்தபோது, திட்டச் செலவுகளுக்கும், திட்டத்தின் கீழ் வராத செலவுகளுக்கும் போதிய ஒதுக்கீடுகள் செய்வதில் கவனம் செலுத்தப்பட்டது. இருப்பினும், தொடக்கத்தில் ஒதுக்கியதைவிட ரூ. 300 கோடிக்கு மேலான சில கூடுதல் செலவுகளை அரசு மேற்கொள்ள வேண்டி வந்துள்ளது." அதாவது திட்டமில்லாத செலவினங்களுக்கு அதிகமான தொகையைச் செலவழிக்கின்றது என்பது மட்டுமல்லாமல், குழந்தைகளுக்குச் சத்துணவு வழங்கும் திட்டத்திற்கான செலவையே ஒரு மூலதனச் செலவு என்று சொல்லும் வகையில் விளக்கம் தரப்பட்டிருக்கிறது. தொழில் முறையில் இல்லாவிட்டாலும், சமுதாயத்தின் எதிர்கால சந்ததியினரைக் காப்பாற்ற செய்யப்படும் செலவினமானதால், இதை மூலதனச் செலவு என்று



(திரு. ப. மாணிக்கம்)

1983 மார்ச் 7]

அரசு வகைப்படுத்தி, ஒரு விளக்கத்தை அளித்திருக்கிறது. அப்படியே இந்த ஒரு மூலதனச் செலவு என்று ஏற்றுக் கொண்டாலும்கூட, தமிழ் நாட்டிலுள்ள வறுமை நிலையைப் போக்க இந்தத் திட்டம் எந்த அளவுக்கு உதவியாக இருக்கும் என்பதையும் நாம் கவனிக்க வேண்டும்.

புள்ளிவிவரங்கள் என்பவை மாறி மாறி வந்தாலும், நான் தமிழ் நாடு திட்டக் கமிஷன் கொடுத்துள்ள புள்ளிவிவரங்களின் அடிப்படையில் இங்கே ஒரு கருத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். ஆதாரமாகக் கொண்டு தமிழ் நாட்டில் 100-க்கு 58 சதவீதத்தினர் வறுமையில் வாடுகிறார்கள் என்று அந்தப் புள்ளிவிவரம் நமக்குச் சொல்லுகிறது. எனவே அப்படிப்பட்ட நிலைமையில் வாடும் குழந்தைகளுக்கு நாம் சத்துணவு வழங்க வேண்டாமா என்று கேட்கலாம். அது நல்ல தர்மம் கூட. தமிழகத்தில் ஏராளமான தர்மங்களுக்கு வழிவகைகள் உண்டு. இங்கேயுள்ள கோயில்களும் மடங்களும் ஒரு காலத்தில் தர்மங்களுக்காகவே உருவாக்கப்பட்டன. ஆனால் தர்மங்களுக்காகத் தொடங்கப்பட்ட அவைகள் அனைத்தும் இன்று சீர்குலைந்து போய்விட்டன. அது வேறு விஷயம். அதை வரலாற்றின் அடிப்படையில் பார்க்க வேண்டும். ஆனாலும் சத்துணவு வழங்குவது என்பது ஒரு தர்மமாக இருந்தாலும்கூட, இதைத் தொடர்ந்து நீட்டிப்பதன் காரணமாக உண்மையிலேயே தமிழகத்தில் உள்ள வறுமையைப் போக்க இது உதவாது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இப்படிப்பட்ட கொள்கையை வகுத்துக்கொண்டு நமது மாநில அரசுக்குக் கூடுதல் நிதி வசதிகள் இல்லை என்று சொல்லுவது எந்த அளவுக்கு உதவிகரமாக இருக்கும் என்று பார்க்கும்போது, இந்த அரசு உண்மையில் தவறு செய்கிறது என்பதை என்னால் சொல்லாமல் இருக்க முடியாது. மத்திய அரசிடம் நியாயமான முறையில் மாநில அரசு நிதி வசதிகள் இல்லை என்று குற்றச்சாட்டைக் கூறி, அதிகமான நிதி வசதிகளைக் கோருவதில் நியாயம் இருக்கிறது. அப்படிப்பட்ட உரிமை கண்டிப்பாக இருக்கிறது. அப்படிக் கேட்கும்போது, நமக்கு இருக்கும் நிதியைப் பயன்படுத்துவதில் நாம் என்ன முறைகளைக் கையாள்கிறோம் என்று பார்க்கிறபோது, வளர்ச்சியின்பால் அமையாத பணிகளுக்குச் செலவிட்டுக் கொண்டிருப்பது எப்படி நியாயமாக இருக்கும் என்பதைத்தான் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். போதிய நிதி வசதிகள் நமக்கு இல்லை என்று சொல்லிக்கொண்டு, ரூ. 300 கோடி அளவுக்கு திட்டத்தில் சேராத பணிகளுக்குச் செலவழிக்கிறோம் என்று சொல்லுவது எப்படி சரியாக இருக்க முடியும்?

(திரு. ப. மாணிக்கம்) [1983 மார்ச் 7

மாநில அரசு இந்தத் தவறைச் செய்வதன் காரணமாகத்தான் தன்னுடைய நிதிப் பற்றாக்குறையைச் சரிக்கட்ட முடியாமல் புதிய வரி விதிப்புகளை மேற்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. இன்றையதினம் இதன் காரணமாகத்தான் நமது அரசு சுமார் 26 கோடி ரூபாய்க்கு புதிய வரி விதிப்புகளைச் செய்து ஒரு கோடி ரூபாய் அளவுக்கு வரி நீக்கம் செய்திருக்கிறது.

வரி விலக்கு அளிக்கிறோம் என்றால், அது உண்மையிலேயே ஒரு நிவாரணமாக இருக்க வேண்டும். மக்கள் அதை உண்மையான நிவாரணமாக உணர வேண்டும். பட்டுப் புழு, கூட்டுப் புழுவுக்கு நிவாரணம் தருகிறோம் என்றால், இது உண்மையிலேயே நிவாரணமாக அமையுமா என்று பார்க்க வேண்டும். (ஒரு குரல்: தூண்டில் புழு) இதில் தூண்டில் புழு இல்லை. நாம் இலக்கியத்திற்குப் போக வேண்டாம். நிதிநிலை அறிக்கையோடு நிற்போம். அதைப்போலவே கொலுசு, அரைஞாண் ஆகிய இனங்களில் நாம் வரிவிலக்குக் கொடுத்திருக்கிறோம். இவைகளால் உண்மையான நிவாரணம் கிடைத்தால் சரிதான். அதாவது "டாக்ஸ் ரிலீஃப்" என்பது உண்மையிலேயே அதிகமாக விற்பனையாகும் பொருள்களுக்கு வழங்கப்பட வேண்டும். ஒப்புக்கு நிவாரணம் அளிப்பது நல்லதல்ல. அந்த வகையில் ஒரு ஒப்புக்குத்தான் இங்கே நாம் நிவாரணம் அளிப்பதாகச் சொல்லியிருக்கிறோம்.

(முற்பகல் 11-40)

25 கோடி ரூபாய்க்கு வரி போட்டிருக்கிறார்கள். கூடுதலாகவே வரும் என்று நான் நினைக்கிறேன். 8 கோடி ரூபாய் வரும். அது மட்டுமல்லாமல், வரி போட்டிருக்கும் அம்சங்களைப் பார்த்தால், நகரத்திலுள்ள மக்கள்பால் அது அதிகச் சுமையை ஏற்படுத்தும் என்று தெரிகிறது. நகரத்தில் ஆயிரத்து ஐநூறு ரூபாய் வருமானம் உள்ளவர்கள் கூட மிகவும் கடுமையான வாழ்க்கை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. ஆகவே இன்றைக்குள்ள நிலைமையில் சர்க்கரைக்கு நுழைவு வரி போட்டது சரியல்ல. நாம் சட்டப்படி 'ஆக்ட்ராய்' வரி போட முடியாது. ஆகவே நுழைவு வரி என்று போட்டு சட்டத்திலிருந்து தப்பிக்க வேண்டியிருக்கிறது. நுழைவு வரி என்று சொல்லி டவுன் பஸ் சர்வீஸ்களுக்கு வரியை உயர்த்தப் போகிறோம். சர்க்கரைக்கு வரியை உயர்த்தப் போகிறோம். துணிகளுக்கு வரியை உயர்த்தப் போகிறோம். இப்படி நகர மக்கள் பயன்படுத்தும் பல பொருள்களின் மீது வரியைக் கூட்டுவதன் மூலமாக நகர மக்களுக்குச் சுமையை ஏற்படுத்தப் போகிறோம். ஆரம்பத்திலே ஒரு பைசா என்றாலும், காலப் போக்கிலே



1983 மார்ச் 7] (திரு. ப. மாணிக்கம்)

அது அதிகமாகலாம். மூதறிஞர் இராசாசி அவர்கள் முதல்வராக இருந்த போது, 1937-ல் விற்பனை வரியை அறிமுகப்படுத்தியபோது. "ஒரு பைசா தானே தரப் போகிறீர்கள்?" என்று சொல்லி வரியைப் போட்டார்கள். அது இன்று எந்த அளவில் நிற்கிறது என்பது நமக்குத் தெரியும். எனவே இப்போது சொல்லும் 26 கோடி, பிறகு 150 கோடி, 200 கோடி என்று ஆகும். டவுன் பஸ்களுக்கு வரி உயர்த்துவதால் நகரத்தில் வாழக்கூடிய ஒரு ஃபிக்ஸ்ட் இன்கம் உள்ள 80 சதவீதம் மக்களுக்குச் சுமையாக ஆகிறது. ஏழைக் குழந்தைகளுக்கு சத்துணவு வந்ததே தவிர, அவர்களுடைய பெற்றோர்களுக்கு நிவாரணம் ஏதும் வரவில்லை. அவர்களுடைய வறுமையைப் போக்கவில்லை. இது ஒரு புறமிருக்க மறுபுறம் கொஞ்சம் வறுமைக் கோட்டிற்கு மேலே வாழக்கூடிய மத்திய தர மக்கள், நிர்ணய வருமானம் உள்ளவர்கள் ஆகியவர்கள் மீது அதிகமாக வரியைப் போட்டிருக்கிறார்கள். ஒருபைசா என்றாலும் சர்க்கரை, துணி, சிமெண்ட் போன்ற 12 பொருள்கள் மீது வரியைப் போட்டிருக்கிறார்கள். வெட்டியெடுத்த கனிப்பொருள்களுக்கும் போட்டிருக்கிறார்கள். மண்ணை வெட்டியெடுத்தாலும் கனிப்பொருள் என்று வரலாம். அதை விட்டுவிட்டாலும் மற்ற 12 பொருள்களின் மீதும் விதிக்கப்பட்டுள்ள வரி நிர்ணய வருமானம் உள்ளவர்களின் மீதுதான் விழுகிறது. இத்தகைய கொள்கை சரியல்ல. இப்போதுள்ள பொருளாதார நிலையில் சாதாரண மக்களின் மீது வரி போட்டிருப்பது சரியல்ல. மத்திய அரசும் போட்டிருக்கிறது. மத்திய அரசினர் ஏற்கெனவே தபால், தந்தி ஆகியவற்றுக்கான கட்டணத்தை உயர்த்திவிட்டார்கள். ஒரு சாவுக்குத் தந்தி அடிக்க வேண்டுமென்றாலும், கூடுதலாக இரண்டு ரூபாய் கொடுக்க வேண்டும். மத்திய அரசினர், தந்தி, ரயில் போன்ற பல்வேறு கட்டணங்களை உயர்த்தியதற்கு மேலாக நாமும் ஒரு சுமையை ஏற்றியிருக்கிறோம். ஆகவே நிரந்தர வருமானமுள்ளவர்களின் எலும்பு முறிகிற அளவிற்கு தொடர்ச்சியாக 1956-ஆம் ஆண்டிலிருந்து வரி விழுந்துகொண்டே இருக்கிறது. ஒவ்வொரு மார்ச் மாதம் வந்தால் மத்திய அரசு வரி, மாநில அரசு வரி வந்துகொண்டே இருக்கிறது. தேயிலை, சிகரெட், பீடி, பாக்கு, சர்க்கரை, துணி போன்ற பொருள்களின் மீது மத்திய அரசும் மாநில அரசும் வரியைப் போட்டு நிரந்தர வருமானப் பகுதியினரைத் தாக்குவதற்குத் தயங்குவதில்லை. இந்தக் கொள்கையை மாற்றுங்கள். இந்த 26 கோடி வரியைப் புனர்பரிசீலனை செய்ய வேண்டும். மக்களை நேரடியாகத் தாக்கக் கூடிய சர்க்கரை, துணி, டவுன் பஸ் ஆகியவற்றின் மீதான வரியை ரத்து செய்ய வேண்டும் என்று கேட்டுக்

(திரு. ப. மாணிக்கம்) [1983 மார்ச் 7

கொள்கிறேன். இந்த வரிகளையெல்லாம் கைவிடுகிறோம் என்ற மகிழ்ச்சிகரமான செய்தியை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களிடம் எதிர்பார்த்து நான் இதை வலியுறுத்துகிறேன்.

இந்த மாதிரி வரியைப் போடுவதால், நாம் நம்முடைய உரிமைகளுக்காக எந்தப் பகுதியினரிடமிருந்து ஆதரவைப் பெற வேண்டுமோ அவர்களை இது பாதிப்பதால், அந்தப் பகுதி மக்கள் மத்திய அரசு மீதும், மாநில அரசின் மீதும் கோபப்பட்டு தவறான வழியில் போக வாய்ப்பு ஏற்படும். இன்றைய சூழ்நிலையில் மக்களுடைய அதிருப்தியைச் சம்பாதிக்கும் ஆபத்து இருக்கிறது. ஆகவே இதைப் புனர் பரிசீலனை செய்ய வேண்டும்.

சத்துணவுத் திட்டத்திற்காக 134 கோடி ரூபாய் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. உண்மையிலேயே இதைவிட அதிகமாக இருக்கும். இதனுடைய செலவை கல்வி, சமூக நலம் ஆகிய துறைகளிடையே பகிர்ந்து போட்டிருப்பார்கள். முன்பு 6 மாதங்களுக்கு 112 கோடி ரூபாய் செலவு என்று விவரம் கொடுத்த அரசு ஆண்டு ஒன்றுக்கு 134 கோடி ரூபாய்தான் செலவு என்று சொன்னால், அதைப் பல்வேறுவிதமாகப் பிரித்திருக்கிறார்கள் என்று தெரிகிறது. நான் இப்படிச் சொல்வதால் குழந்தைகள் பால் அன்பு இல்லாமல் இல்லை. பல நேரங்களில் தமிழ் நாட்டு அரசியலில் இசை திருப்புவது என்பது மிகவும் சுலபமாக நடந்து கொண்டிருக்கிறது. ஆகவே குழந்தைகளுக்குச் சத்துணவு கொடுப்பதில் நான் குற்றம் சொல்லவில்லை. ஆனால் அரசு என்ற முறையில் இது ஒரு தர்மஸ்தாபனம் அல்ல state is not a charitable institution தர்மம் செய்வது வேறு ஒருவருடைய வேலை. வரக்கூடிய வருமானத்தைச் சரியாகப் பயன்படுத்தி வளர்ச்சிக்குத் திட்டமிடுவதுதான் இந்தக் காலத்தின் தேவை. வளர்ச்சிக்காக திட்டமிட வேண்டும் என்ற கருத்தில் பார்க்கும்போது, இது தப்பிதமான கொள்கை. ஆகவேதான் தவறு என்று சொல்லுகிறோம்.

இந்த நிதிநிலை அறிக்கையிலே பத்தி 89-ல் நிதி ஒதுக்கீடு என்று சொல்லி சில அம்சங்களைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இதிலே வரிசையாக கல்வித் துறை, சுகாதாரத் துறை, நீர்ப்பாசனத்துறை, தொழில் துறை என்று போட்டிருக்கிறார்கள். நானும் தொடர்ச்சியாக நான்கைந்து பட்ஜெட்டுக்களைப் பார்த்துக் கொண்டு வருகிறேன், தொழில் துறை எட்டாவது இடத்திற்கு வந்து கொண்டிருக்கிறது. சென்ற ஆண்டே அதை ஆறாவது இடத்திற்குக் கொண்டு போகக் கூடாதா என்று கேட்டேன். தொழில் வளர்ச்சித் திட்டங்கள் என்று வந்தால், விவசாயத்தில் வேலையற்று இருப்பவர்களுக்குக்



1983 மார்ச் 7] [திரு. ப. மாணிக்கம்]

சாத்தியம் இருக்கிறது. எம்ப்ளாய்மென்ட்
கூட வேலை வாய்ப்பு இடைக்கும் சாத்தியம் இருக்கிறது. ஆகவே தொழில் பொட்டென்ஷியல் விவசாயத்தில் ரொம்பவும் குறைவு. ஆகவே தொழில் வளர்ச்சி தமிழகத்திற்குத் தேவை. இப்போது கல்வியில் 'வொக்கேஷனல் கோர்ஸ்' அதிகமாகத் தேவையென்று சொல்லுகிறோம். ஆகவே புதிய தொழில்களை, அதிகமாக வேலை வாய்ப்பு தரக்கூடிய தொழில்களை அதிகமாக உண்டாக்க வேண்டுமென்றால், இப்போது ஒதுக்கியுள்ளது காணாது. இதில் அரசின் கொள்கையில் தவறு இருக்கிறது. இதைப் புனராலோசனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தொழில் வளர்ச்சிக்கு அதிகமாக நிதி ஒதுக்க வேண்டும்.

வேறு சில அம்சங்களைப்பற்றி விவரமாகக் கொள்கை விளக்கக் குறிப்புகள் வரும்போது பேசலாம் என்றிருக்கிறேன். ஆகவே இப்போது ஒன்றிரண்டு அம்சங்களைப்பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். முக்கியமாக காவல் துறை, பொது நிர்வாகம். கார்ல் மார்க்ஸ் ஒரு முறை சொன்னதை சொல்ல விரும்புகிறேன். "பிரான்சு நாட்டில் உள்ள விவசாயிகளிடம் பிசாசு பற்றி படம் போடச் சொன்னால் வரி வசூலிப்பவரைப் படம் போட்டுக் காட்டுகிறான்." என்று சொன்னார். அந்த நிலை இங்கும் வந்துவிட்டது. முனிசிபாலிட்டியில் வரி வசூலிக்கிறார்கள். ஆனால் எந்த சாக்கடையும் சுத்தமாக இருக்காது. அந்த நிர்வாகத்தை யாரும் அணுகமுடியாது. கான்ட்ராக்டர்கள் அணுகலாம். பிளாக் டெவலெப்மெண்ட் ஆபீசர்களும், கான்ட்ராக்டர்களும் பேசிக்கொண்டிருக்கிறார்கள். பொது நிர்வாகத்தை எடுத்துக்கொண்டால், நிறைய தப்புகள், ஊழல்கள் மலிந்து வருகின்றன. இதைத் திருத்த வேண்டும். நிர்வாகத்தில் ஊக்கம் உண்டாக்க வேண்டும். மாநில அரசு ஊழியர்கள் தங்களுக்கு நிவாரணம் வேண்டும் என்று கேட்கிறார்கள். இப்போதுள்ள நிலைமையில், ஏறி வரக்கூடிய விலைவாசியைச் சரிக்கட்ட முடியாமல் தவிக்கிறார்கள். பல பேர் ரிட்டையர் ஆகும்போது என்ன செய்வது என்று தெரியாமல் தலையில் கை வைத்துக் கொண்டிருக்கக்கூடிய நிலைமையில் இருக்கிறார்கள். அவர்கள் பத்தாயிரம் ரூபாய் கேட்கிறார்கள். வேண்டுமானால் பணம் பிடித்துக்கொள்ளலாம் என்றும் சொல்லுகிறார்கள். அதிலே அணுக வேண்டிய முறையிலே அணுகவில்லை என்பது தான் என்னுடைய விமர்சனம்.

(முற்பகல் 11-50)

(மாற்றுத் தலைவர் திரு. பா. ரா. தாமஸ் தலைமை)

எனவே அவர்களுடைய கோரிக்கையிலே பலவற்றை ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் கூட, முக்கியமாக பஞ்சப்படிபற்றி அறிவிப்பதிலே அரசு அனுதாபம் கொண்டு நிதி அமைச்சர் அவர்கள் கூறுவார்கள் என்று எதிர்பார்க்கிறோம். அது மட்டும் போதாது. அது ஏனென்றால், அரசு நிர்வாகத்திலே சோர்வடைந்த நிர்வாக ஊழியர்கள் என்று அவர்கள் ஆகிவிடுவர். அவர்கள் ஒத்துழைப்பு, சுறுசுறுப்பு இவைகள் எல்லாம் இந்த நிர்வாகம் சரியாக நடப்பதற்குத் தேவைப்படுகின்றன. ஆகவே மாநில அரசு சில கோரிக்கைகளையாவது ஏற்கலாம். குறிப்பாக ரிட்டையர்மெண்ட்டுக்குப் பிறகு ரூ. 10 ஆயிரம், போக்குவரத்துக்கு ஒரு வழிப்படி பர்ஸ்ட் கிளாஸ் என்பதற்கு பதில் செகண்ட் கிளாஸ் என்று வைத்து, 'அப் அண்டு டவுன்' படி கொடுக்கலாம். இதிலே ஒரு ஸ்தூலமானதைச் செய்யலாம். அதிகாரிகள் பல்வேறு யோசனைகள் கொடுப்பார்கள். நிதி நிலை அறிக்கையில் இருக்கக்கூடியதற்கு ஏற்ப சட்டத்திற்குட்பட்டு சொல்வார்கள். அவர்கள சொல்வதை மட்டும் பார்க்கக் கூடாது. மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பொதுமக்களுடைய மனோநிலையைத் தெரிந்தவர்கள். அந்த நிலையிலே அமைச்சர் அவர்கள் எல்லாவற்றையும் கவனத்திலே கொண்டு, இந்தப் பிரச்சினைகளுக்கு ஆக்கபூர்வமான தீர்வு காண வேண்டும். அப்போதுதான் பொது நிர்வாகத்திலே ஒரு நல்ல அபிவிருத்தியைக் கொண்டுவர முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, காவல் துறையைப்பற்றிச் சொல்ல விரும்புகிறேன். தமிழ் நாடு காவல் துறை திறமையான துறை என்று பெயர். அதிலேயும் ஏற்படக்கூடியவற்றைப்பற்றிச் சொல்கிறேன். சமீபத்திலே நடந்ததைச் சொல்கிறேன். ஒரு குற்றவாளி மீது சந்தேகப்பட்டு அவரைக் கொண்டுபோய் விசாரிக்கிறார்கள். உள்ளூர்க்காரர் ஒரு பொய் கம்ப்ளெயிண்ட் கொடுக்கிறார். இவன் தான் செய்தான் என்று சொல்கிறார்கள். அவனை அவர்கள் கொண்டு போய் நைய அடிக்கிறார்கள். உயிர் போகின்ற மாதிரி அடிக்கிறார்கள். அந்தத் தவறுகள் நடந்து வருகின்றன. தயவுசெய்து அதை நிறுத்த வேண்டும். சமீபத்திலே சென்னையை அடுத்த தாம்பரத்திலேகூட அவ்வாறு நடந்தது. சென்ற முறை ஆளுநர் அவர்கள் உரையின் மீது பேசும்போது, ஊற்றங்கரையிலே நடந்த கொடுமையைப்பற்றிச் சொன்னேன். இப்போது சொல்கிறேன். ஏதோ இரண்டு கட்டிடத்திலே வேலை நடக்கிறது. அடுத்த அந்தக் கட்டிடத்தில் வேலை நடக்கிறது. ஒரு கட்டிடத்தில் உள்ள அம்மையார்



கட்டிடத்தில் வேலை நடக்கிறது. ஒரு கட்டிடத்தில் உள்ள அம்மையார் அவரது தங்க வளையலைக் கழட்டி வைத்துவிட்டுப் போயிருக்கிறார்கள். அது காணாமல் போகிறது. ஒரு சின்ன பையன் மீது புகார் சொல்கிறார்கள். அவன்தான் திருடிவிட்டான் என்று சொல்லும்போது, அவனை அழைத்துப் போய் அடிக்கிறார்கள். அவன் அடி தாங்காமல், அந்த மேஸ்திரியிடம் கொடுத்துவிட்டேன் என்று சொல்கிறான். அவர்கள் அந்த மேஸ்திரியை அடிக்கிறார்கள். இப்படியெல்லாம் நடக்கிறது. அனாவசியமாக அவர்கள் வீட்டிலே வேலை செய்கின்றவர்களைத் துன்புறுத்துகின்றார்கள். தப்புத் தலக்க சட்டத்திலே பல வழிவகைகள் இருக்கின்றன. காவல் துறையிலே இருப்பவர்கள் அதையெல்லாம் விட்டுவிட்டு, நிரபராதிகளைத் துன்பப்படுத்துகிறார்கள். இவர்கள் எல்லாம் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்று அடிக்கிறார்கள். ஊர் பெயரைச் சொல்ல முடியாத காரணத்தால். நான் சொல்ல விரும்பவில்லை. முதலமைச்சர் அவர்களிடம் எழுதிக் கொடுக்க இருக்கிறேன். காரணம் அதிகாரிகளைக் கேட்டால், அவர்கள் 'உங்களால் ஆனது அனைத்தையும் பார்த்துக்கொள்ளுங்கள்' என்கிறார்கள். கம்யூனிஸ்ட் கட்சியை அடக்க அரசு இப்படிச் சொல்லியிருக்கிறதா? அப்படி ஏதாவது இருந்தால், அரசு பகிரங்கமாகச் சொல்லலாம். போலீசுக்கும் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் நீண்ட அனுபவம் உண்டு. ஆனால் சாதாரண தொழிலாளர்களைக் கஷ்டப்படுத்துகிறார்கள். தப்பிதமான முறையில் செய்வதால் உண்மையான குற்றவாளிகள் தப்பிக்கலாம். அதுதான் நடக்கிறது. அதுதான் காவல் துறையில் இருக்கிறது. திறமையானவர்கள் இருந்தாலும்கூட, பல அநீதிகள் அங்கே நடைபெற்றுவிடுகின்றன. காரணம் காசு இருப்பவர்கள் அப்படிச் செய்துவிடுகிறார்கள். உள்ளூர் பிரமுகர்கள் காசை வைத்துக்கொண்டு அப்படிச் செய்துவிடுகிறார்கள். தாம்பரம் பக்கத்திலே உள்ள ஒரு ஊரில் பல புறம்போக்கு நிலங்களை எடுத்து, 'லே அவுட்' பண்ணி, பல லட்சக்கணக்கான ரூபாய்களைச் சம்பாதிக்கிறார்கள். அந்த வேலையைச் செய்கிறார்கள். காரணம் அப்படிச் சம்பாதியம் செய்கிறார்கள். புறம்போக்கு நிலத்தை, அரசுக்குச் சொந்தமான பொதுச் சொத்தை அப்படியெல்லாம் பயன்படுத்துகிறார்கள். காவல் துறையிலே பல இடங்களிலே ஊரில் செல்வாக்குள்ளவர்கள் என்ற பெயரால், பல தவறுகள் நடக்கின்றன. அதற்கு அந்தத் துறை ஆளாகிறது. அது அரசு தலைமீதுதான் வந்து விழும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு அதைத் திருத்துங்கள் என்று சொல்லிக்கொள்கிறேன்.

(திரு. ப. மாணிக்கம்) [1983 மார்ச் 7

அடுத்து, மற்றொரு முக்கியமான விஷயம்பற்றிச் சொல்கிறேன். குறிப்பாக உள்ளாட்சித் துறையிலே முனிசிபல் அட்மினிஸ்ட்ரேஷனிலே உள்ளதைச் சொல்கிறேன். எல்லா நகராட்சிகளிலும் ஜன நெருக்கடி காரணமாக பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன. நெருக்கடி இருக்கிறது. ஒரு 'பிரேக் டவுன்' ஏற்பட்டிருக்கிறது. அந்த அளவுக்கு வந்திருக்கிறது. பல இடங்களிலே அரசு உத்தரவு போட்டிருக்கிறது. 30, 40 வருடங்களுக்கு முன்னால் அது இருந்தது. நான் எதிர்பாராமல் இங்கு பேச வேண்டியதாக ஏற்பட்டதால், நான் அந்த உத்தரவைக் கொண்டுவரவில்லை. ஒரு நகராட்சிக்கு ஒரு வார்டுக்கு அல்லது 4 வார்டுகளுக்கு எத்தனை சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் போட வேண்டும் என்று இருக்கிறது. இன்றைக்கு அந்த சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் எண்ணிக்கை மிகக் குறைவாக இருக்கிறது. அந்த எண்ணிக்கையை உயர்த்த வேண்டும். பல இடங்களிலே மாதக்கணக்கிலே சுத்தம் செய்யவில்லை. நாங்கள் இருக்கின்ற இடங்களிலே அப்படி இருக்கிறது. அதிக தூரம் போகவேண்டியதில்லை. சென்னையிலே மாம்பலம் தெற்கு போக் ரோட்டுக்கு அடுத்து டாக்டர் தாமஸ் ரோடு இருக்கிறது. அங்கே டாக்டர்கள் இருக்கிறார்கள். அங்கே குடிசைகள் இருக்கின்றன. அங்கு 1½ மாத காலமாக, 2 மாத காலமாகச் சுத்தம் செய்யவில்லை. அப்படி சுத்தம் பண்ண வந்தால், ரூ. 5, ரூ. 10 என்று கொடுக்க வேண்டும். அது சில்லரை விஷயம். அதைப்பற்றிப் பெரிதுபடுத்த விரும்பவில்லை. குப்பை கூளங்கள் மலிந்து அங்கே கொசுத்தொல்லை வந்து நோய் வந்து, டாக்டரிடம் போகவேண்டியிருக்கிறது. அந்த அளவுக்கு நகராட்சி நிர்வாகத்திலே பல இடங்கள் சீர்குலைந்துவிட்டன. இதிலே காண்ட்ராக்ட் முறை வைத்திருக்கிறார்கள். அதிலே திருத்தம் கொண்டுவாருங்கள். தேர்தல் நடக்கவில்லை. தேர்தல் வேண்டுமென்று நாம் வலியுறுத்திக்கொண்டிருக்கிறோம். பல பேர்கள் மந்திரம் சொல்கிறார்கள். நாம் தேர்தல், தேர்தல் என்று சொல்லிக்கொண்டிருக்கிறோம். மந்திரம் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அது பலித்துவிட்டால், அது சாமி தான் நிறைவேற்றியது என்று சொல்வார்கள். நான் அந்த மாதிரி சொல்லமாட்டேன். நாளைக்குக்கூட ஒரு சட்ட முன்வடிவு வருகிறது. அதிகாரிகள் பதவிக் கால நீடிப்பு பற்றி வருகிறது. அதைக் கேட்டுக் கேட்டு அலுத்துப் போயிற்று. அதிகாரிகள் நகராட்சியைச் சீர்திருத்தம் செய்யப் பார்க்க வேண்டும். அப்படி இல்லாவிட்டால், நகரங்களிலே மக்களுடைய தாக்குதலுக்கு உள்ளாவார்கள். அந்த அளவுக்கு மோசம் நடக்கிறது. தப்பு நடக்கிறது.



1983 மார்ச் 7] (திரு. ப. மாணிக்கம்)

இன்னொன்று இன்றைக்கு உண்மையிலேயே அரிசி நெருக்கடி இருக்கிறது. விலையேற்றம் இருக்கிறது. இந்த நெருக்கடி இயற்கை ஏற்படுத்தியுள்ள நெருக்கடி காரணமாக அதிகமாகியிருக்கிறது என்பது உண்மையாகும். பகிரங்கமாக வெளிப்படையாகச் சொல்வதாக இருந்தால், 3 மழை பொய்த்ததால் இந்த நெருக்கடி ஏற்பட்டது என்று சொல்லலாம். இருந்தாலும் இந்த அரசு உஷாராக இருந்து கொள்முதல் செய்திருந்தால், ஸ்டாக் செய்திருந்தால், இந்த அளவுக்கு இல்லாமல் சமாளித்து இருக்கலாம். இந்த நெருக்கடியான நேரத்திலேதான் ஒரு திட்டத்தை மேற்கொண்டிருக்கிறார்கள். இந்த நேரத்திலே அரசு சத்துணவுத் திட்டத்தை விரிவடையச் செய்திருக்கிறது. அத்துடன் இயற்கை செய்த கொடுமையால் சிக்கல் ஏற்பட்டிருக்கிறது. அத்துடன் அரசினுடைய திட்டத்திலே, அந்தக் கொள்கையிலே இருந்த கோளாறு காரணமாக இந்த நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன. இரண்டு கிலோ அரிசி தான் தருகிறார்கள். அந்த அரிசியும் கிடைக்கவில்லை. அதையும் நான் பகிரங்கமாகக் குறிப்பிட முடியும். ஆனால் இந்த அவையிலே அதைப்பற்றிக் குறிப்பிடும்போது எனக்குப் பாதுகாப்பு இருக்கிறது. ஆனால் அவர்களுக்குப் பாதுகாப்பு இல்லை என்ற பிரச்சினை வரும். நான் வாழக்கூடிய குரோம்பேட்டையிலே கியூவிலே நின்றிருக்கிறார்கள். அவர்களிடம் சில்லரை இல்லை என்றால், வெளியே போய் மாற்றிக்கொண்டு வரவேண்டும் என்று சொல்வார்கள். அவர்கள் போய் சில்லரை மாற்றிக்கொண்டு வருவதற்குள் ஒரு 10, 15 பேர்களுக்குக் கொடுத்து விடுவார்கள். அதற்குப் பிறகு சாயந்திரம் வாருங்கள் என்று சொல்வார்கள். அரிசி இல்லை என்று சொல்லிவிடுவார்கள். அதே நேரத்திலே ஒரு 2 அல்லது 3 மூட்டைகள் தனியார்கள் கடைக்கு விற்பனைக்கு அனுப்பிவிடுகிறார்கள். இது கூட்டுறவுக் கடையிலே நடக்கிறது. இப்படி அமுதம் கடையிலே சென்ற ஆண்டு பிரச்சினை வந்து கேட்டபோது, அமைச்சர் அவர்கள் அங்கு 17 தொழிலாளர்கள் இருக்கிறார்கள், அதிலே முன்னும் பின்னுமாக நடந்திருக்கும் என்று சொன்னார்கள். கூட்டுறவுத் துறையிலே இப்படி பல மோசடிகள் நடக்கின்றன. அந்த மோசடியை யார் தடுப்பது? நாங்கள் எல்லாம் நேரடியாகத் தலையிட்டால், கம்யூனிஸ்ட்காரர்கள் தலையிடுகிறார்கள் என்று சொல்வார்கள். இன்னும் சொல்லப்போனால், வழக்குகள் வரும். அதையும் நாங்கள் சமாளிப்போம். இப்படி கண் எதிரிலேயே மக்கள் கியூவிலே நிற்கும்போதே 3 மூட்டை அரிசி அனுப்புகிறார்கள். அதைப் பற்றிக் கேட்டால் அங்கு இருப்பவர்களுக்கு அரிசி கிடைக்காது. நமக்குக் கிடைக்காமல் போகுமே என்று அவர்களும் சும்மா இருந்து விடுகிறார்கள். இந்த மாதிரி கூட்டுறவுத் துறையிலே நடக்கிறது. இந்த மாதிரி ஊழல்

களைத் தடுக்க திடீரென்று சோதனை செய்ய வேண்டும். ‘சர்பிரைஸ் செக்’ செய்ய வேண்டும். அந்த முறைகளை வைத்தால், நேரடியாகக் கியூவிலே இருப்பவர்களை அந்த அதிகாரிகள் மூலம் விசாரிக்கச் செய்தால், ஓரளவுக்கு அபிவிருத்தி ஏற்படும். இதை நான் சொல்வதற்குக் காரணம் அந்த ஊரிலே உள்ள ஆளுங்கட்சியினரே, “எங்களாலே முடியவில்லை, உங்களாலே முடிந்தால் செய்யுங்கள்” என்று சொல்கிறார்கள். அந்தக் கூட்டுறவுத் துறையிலேயே செயலாளராக இருந்தவர், ஒரு பெரிய பங்களாவே கட்டிக்கொண்டிருக்கிறார். அந்த அளவுக்குக் கட்டி விட்டார். கூட்டுறவுத் துறையிலே உள்ள கடைகள் மூலம் அரிசி ஒழுங்காகக் கிடைக்கச் செய்ய வேண்டும். சாதாரண மக்கள் பல ஊர்களிலே துன்பப்படுகிறார்கள். சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலமாக நடக்கின்ற கடைகளையும் ஒழுங்குபடுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நமக்கு மழை பொய்த்துவிட்டது. அது காலம் மாறி மாறி வருகிறது. பெரியகுளம் தேர்தல் நடந்த காலத்திலே பார்த்தேன். வைகையினுடைய தலைப்பகுதிக்கு வரிசைநாடு என்று இருக்கிறது. கேரளா எல்லையிலே, வைகை இணைகின்ற இடத்திலே கரை ஓரங்களிலே 96 அடி உயரம் உள்ள இரண்டு ஆட்கள் கட்டிப் பிடித்தாலும் கட்டிப்பிடிக்க முடியாது. அப்படி மரங்கள் இருக்கின்றன. அந்த மரங்கள் மருத மரங்கள். அது தேக்கைவிட சிறப்பானது. சிறந்த மரம். இன்னும் சொல்லப்போனால் அதை கப்பல் கட்டுவதற்கு தளங்கள் அமைக்கப் பயன் படுத்துகின்றார்கள். அப்படிப்பட்ட மரம். நல்ல விலைக்கு விற்கிறது.

(நண்பகல் 12-00)

அருமையான மரங்கள், நல்ல விலை. பெரிய மரங்கள் அறுத்து வீழ்த்தப்பட்டிருக்கின்றன. படங்களைக் கொண்டு வந்திருப்பேன். எதிர்பாராதவிதமாக இன்று நான் பேசுவதால் அவற்றைக் கொண்டு வர முடியவில்லை. அவற்றைக் கொண்டு வந்து சமர்ப்பிக்க வேண்டுமென்று இருந்தேன். அப்படி மரங்கள் வெட்டி வீழ்த்தப்பட்டிருக்கின்றன. பல மரங்கள். அதனாலே கரை ஓரங்களுக்குப் பாதுகாப்பு இல்லை என்பது மட்டுமல்ல, கடந்த 10 ஆண்டுகளில் ஆற்றுக்குள்ளே 10 அடி உயர பாறை மண் மேடிட்டுவிட்டது. அதனால் கரைக்குப் பாதுகாப்பு இல்லை. மேடு தட்டி, மேடு தட்டி தண்ணீர் ஓடுவது குறைகிறது. வைகை, பெரியார், முல்லையார் மூன்றும் கலந்து தான் வருகிறது. இப்படி மேடு தட்டி, மேடு தட்டி தண்ணீர் ஆற்றுக்குள் வாராமல், நான்கு பக்கமும் போகக்கூடிய ஆபத்து இருக்கிறது. இதனால்



மலைச் சரிவு, மண் சரிவு ஏற்படும் ஆபத்து இருக்கிறது. மரங்களை வெட்டு
வதுபற்றிப் புகார் சொன்னால், சாதாரண ஏழை மக்கள் வீடுகளுக்கு முன்னால்
ஏதாவது காட்டு விறகு இருந்தால், அவர்கள்மீது கேஸ் போடுகிறார்கள்.
காடுகள் பல இடங்களில் அழிக்கப்படுகின்றன. தருமபுரி மாவட்டத்தில்
அழிக்கப்படுகிறது. சத்தியமங்கலம் பகுதியில் சந்தன மரங்கள் வெட்டப்
படுகின்றன. ஏற்கெனவே வளர்ந்துள்ள காடுகளில் சந்தன மரங்கள், மருத
மரங்கள் இவைகளெல்லாம் வெட்டி, பணம் ஆக்கப்பட்டிருக்கின்றன. இவை
களைத் தடுத்து நிறுத்த வேண்டும். இன்றைக்கு அரசால் முடியாவிட்டால்,
நாளைக்கு மக்கள் செய்வார்கள். பல பேர், திடீரென்று பல லட்சம், பல
கோடி சம்பாதிக்கிறார்கள். காலத்தில் இதை கவனிக்க வேண்டும். காட்டு
வளத்தை அழிப்பதால், தமிழகத்தின் எதிர்காலத்தை அழிக்கிறோம். வள
மான காடுகள், வளமான மலைகள் இருந்த இடத்தில் காடுகள் போய், மலை
களில் உள்ள மரங்கள் வெட்டப்பட்டு, பொட்டலாக இருக்கின்றன. இதை
காலத்தில் நிறுத்தப் பாருங்கள். இதனால் நிரந்தர நீர் பற்றாக்குறை ஏற்
பட்டு, தமிழ் நாடு வறட்சி மிகுந்த பாலைவனமாகும் நிலைமை இருக்கிறது.
இதை காலத்தில் செய்யவில்லை என்றால், இதற்காக மக்கள் இயக்கம்
தொடங்கும் நிர்ப்பந்தத்திற்கு உள்ளாவோம். எனவே காடுகள் மட்டுமல்ல,
இன்னமும் பல இடங்களில் நீர் பிடிப்பு உள்ள இடங்களில், சென்னை நகர்
உட்பட தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களில், கட்டிடங்களைக் கட்டக்
கூடாது. மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்தோஷம் அவர்கள் இந்தப் பிரச்
சினையை இந்த அவையிலே கிளப்பினார்கள். மதுரையில் குளங்களிலே அரசு
கட்டிடம் கட்டுகிறது என்று சொன்னார்கள். பல்வேறு இடங்களிலே குளங்
களிலே வீடுகள் கட்டுவது மட்டுமல்ல, அங்கே வசிக்கிறவர்கள் புறம்போக்கு
நிலங்களாகக் காட்டி, அதை வீட்டு மனைகளாக்கி விற்கிறார்கள். அரசு
இதைக் கண்டும் காணாததுமாக இருக்கிறது. ஆளுங்கட்சிக்காரர்கள்தான்
செய்கிறார்கள் என்று சொல்லவில்லை. ஆளுங்கட்சியைச் சேராதவர்களும்
இப்படிச் செய்கிறார்கள். அவற்றைக் காப்பாற்ற கடுமையான நடவடிக்கை
எடுக்க வேண்டும். குறிப்பாக விவசாயப் பொருளாதாரம், அரிசி விலை
இரண்டுக்கும் பருவ மழையை நம்பியிருந்தால், இரண்டு பருவ மழை தவறி
விட்டால், நம்முடைய பொருளாதாரம் சீர்கெடும். அப்படி இருக்கக்
கூடாது. நீர் நிலைகளைக் காப்பாற்ற தொடர்ச்சியாகப் பேசுகிறோம்.
எனவே எந்தக் குளத்திலும் வீடுகள் கட்ட அனுமதிக்கக்கூடாது. எந்தக்
குளத்தையும் உடைக்கக்கூடாது. பல்வேறு இடங்களில் தெரிந்தும் தெரியா
மலும் குளங்கள் உடைக்கப்படுகின்றன. எனவே நீர் நிலைகளைக் காப்பாற்ற
கடுமையான முயற்சிகளைச் செய்ய வேண்டும். இல்லாவிட்டால் தமிழகத்தில்

நீர் பிடிப்பு இராது. இராமநாதபுரம் மாவட்டத்தில் பல ஆண்டுகளாக கண்மாய்கள் தூர் எடுக்காமல் இருக்கிறது. புழலேரியில் தூர் எடுக்காமல் இருக்கிறது. அதில் தூர் எடுக்க ஆலோசனை இருக்கிறது. பழைய குடி மராமத்து போய்விட்டது. அதைக் கொண்டுவர முயற்சிக்கிறார்கள். அதில் தீவிர கவனம் செலுத்தி, குடி மராமத்து முறையைக் கொண்டுவர முயற்சிக்க வேண்டும். பல பயனுள்ள குளங்கள் தூர் எடுக்காமல், நீர் பிடிப்பு இல்லாமல், வற்றி விடுகின்றன. எனவே அவற்றையெல்லாம் காப் பாற்ற அரசு துரித நடவடிக்கை எடுக்க வேண்டும். நிதிநிலை அறிக்கை யிலே ஒதுக்கியுள்ள தொகை போதுமானதல்ல. கால்வாய்களை ஒழுங்கு படுத்த, அணைக்கட்டுகளைப் பராமரிக்க மட்டுமே இது போதுமானது. சிறு பாசனத் திட்டங்களைச் சீர் படுத்துவதில் கவனம் செலுத்த வேண்டும். அதனால் பல்வேறு கிராமங்கள் பாதுகாக்கப்படும். விவசாயிகளுக்கும் உதவி செய்யலாம். குடிநீர் நெருக்கடி தீரவும் உதவி செய்யலாம். இதில் கவனம் செலுத்த வேண்டும்.

26 கோடி ரூபாய்க்கு போட்டுள்ள வரிகளை ரத்து செய்வதுபற்றி அரசு ஆழ்ந்து பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒரு கோடிக்கு நிவாரணம் அளித்திருப்பதை வரவேற்கிறேன். 26 கோடி அளவிற்கு வரி வேண்டாம். இதிலே சாதாரண நகர, மத்திய நகரப் பகுதிகளைத் தாக்கக் கூடிய பல்வேறு அம்சங்கள் இருக்கின்றன. இவைகளை அரசு கைவிட்டுவிட வேண்டும். வேறு சில செலவுகளைக் குறைக்க அரசு முயற்சித்தால், இத னால் அரசுக்கு எந்தவிதக் கஷ்டமும் ஏற்படாது. சில அம்சங்களை இந்த ஆண்டிலே நிச்சயமாகக் குறைக்க முடியும். எனவே இந்த ஆண்டு ரூ. 26 கோடிக்கு வரி போட வேண்டாம். ரூ. 26 கோடிஎன்பது ரூ. 45 கோடிக்குச் செல்லும். புதிதாக தமிழ் மக்கள்மீது 45 கோடி ரூபாய் வரிகளைச் சுமத்த வேண்டாமென்று சொல்லி, அமைகிறேன்.

திரு. சி. இராமலிங்கம்: மாண்புமிகு மேலவை மாற்றுத் தலைவரவர்களே, 1983-84ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின்மீது நான் என்னுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு வாய்ப்பு அளித்ததற்காக இந்த அவைக்கும், உங்களுக்கும் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த வரவு செலவுத் திட்டத்தைப் பார்க்கும்போது, என்னைப் போன்று அன்றாடம் உழைத்து உழைத்து, உருத்துப்போன கைத்தறி நெசவாளர்கள்; அதைப்போல ஏர் பிடித்து பிடித்து, உழைத்து உழைத்து, நெற்றி யிலே சொட்டுகின்ற வியர்வைதான் இன்றைக்கு மாட மாளிகை யில் இருப்பவர்களுக்குப் பன்னீராகவும், அவன் மிதித்த சேற்றிலே இறங்கி,



சேற்றிலே மிதித்து, உடலிலே அவன் சேற்றைப் பூசிக்கொண்டு விவசாயம் செய்யும் நிலையிலே, அந்த சேறுதான் இன்றைக்கு மாளிகையிலே உள்ளவர்களுக்குச் சந்தனமாகவும், அத்தராகவும் உபயோகப் படும் இந்தக் காலத்திலே, ஏழைக் குழந்தைகளுக்கு மதிய உணவுத் திட்டம் என்று மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் கொண்டு வந்த திட்டத்தை நான் கடந்த முறை பாராட்டி வரவேற்றுப் பேசியிருக்கிறேன். உழைக்கின்ற மக்கள்பற்றி இன்றைக்கு ஓர் உறுப்பினர் பேசினார். 156 சங்கங்களை ஒன்றாகச் சேர்த்ததற்காக இந்த அரசைப் பாராட்டுகிறேன் என்றார். அந்த 156 சங்கங்களிலே இருக்கின்ற, அவற்றிலே உறுப்பினர்களாக இருக்கின்ற, 8 மணி நேரம் வேலை செய்கின்ற, எழுது கோலைப் பிடித்து வாழ்கின்ற, ஆஃபீசர், ஆசிரியர் என்று சொல்லுகின்ற 13, 14 லட்சம் மக்கள்தான் இந்த நாட்டு மக்களா? அவர்களுக்குத்தான் சலுகைகள் அளிக்க வேண்டுமா? அவர்களுக்குத்தான் பஞ்சப் படி கொடுக்கவேண்டுமா? அவர்களுக்குத்தான் வீடு கட்டிக் கொடுக்க வேண்டுமா? அந்தக் குறிப்பிட்ட மத்தியதர, உயர்தர வகுப்பு மக்களுக்குத்தான் அரசு நன்மைகள் செய்ய வேண்டுமா என்பதைச் சிந்திக்க வேண்டும். இந்த நேரத்தில் மகாத்மா காந்தியை நினைவுபடுத்து கிறேன். அவர்கள் யாருக்காக சுதந்திரம் வாங்கினார்கள்? அவர் அரை நிர்வாணமாக இருந்தார்கள். அவர் மதுரைக்கு வந்திருந்தபோது, அங்கே உடம்பிலே கட்ட துணியில்லாமல் விவசாயி இருப்பதைப் பார்த்து, எனக்கு என் முழு உடை என்று சொல்லி, அரை நிர்வாணமாகவே இருந்தார். யாருக்காக? இந்த நாட்டிலே உள்ள உழைக்கின்ற மக்களுக்காகத்தான் அப்படி சுதந்திரம் வாங்கி 35 ஆண்டுகள் ஆகியும், அந்த 30 கோடி மக்களுக்கு என்ன வசதிகளை இதுவரை செய்து கொடுத்திருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் சிந்திக்க வேண்டும்.

திரு. ப. மாணிக்கம்: இப்போது 70 கோடி.

திரு. சி. இராமலிங்கம்: நான் பாரதியார் பாடிய பாடலில் உள்ளதைத் தான் சொன்னேன். அதில் இந்த 14 லட்சத்தை ஒதுக்கிவிடுங்கள். உயர்ந்த நிலையில் திரு. எ.ஆர்.டி. போன்று உள்ள ஒரு லட்சம் பேரை ஒதுக்கி

(பிற்பகல் 12-10)

விடுங்கள். ஏதோ 5 ஏக்கர், 10 ஏக்கர் வைத்திருப்பவர்களை—சர்க்கார் கணக்குப்படி 2 லட்சம் பேர் இருக்கிறார்கள்—அவர்களை ஒதுக்கி விடுங்கள். இந்த 4½ கோடி மக்களில் வியர்வை சிந்தாமல் உழைக்கிறார்களே, மேட்டுக்குடி

மக்களாக வாழ்கிறார்களே, உங்கள் பாஷையில் ஆங்கிலத்தில் சொல்வதென்றால் 'வைட் காலர்ட்' என்று சொல்லுவார்களே அவர்களை ஒதுக்கி விடுங்கள்.

**திரு. செ. முத்துசாமி :** அரசு ஊழியர்களையும், ஆசிரியர்களையும் மேட்டுக்குடி மக்களாக மாண்புமிகு உறுப்பினர் கருதுகிறாரா? இந்த 14 லட்சம் பேர்களுக்கும் குடும்பம் இல்லையா? இதையெல்லாம் மாண்புமிகு உறுப்பினர் விவரமாகச் சொன்னால் நன்றாக இருக்கும்.

**திரு. சி. இராமலிங்கம் :** மாண்புமிகு உறுப்பினர் இன்னும் பேசவில்லை. அவர் பேசுகிறபோது இதுபற்றியெல்லாம் விளக்கம் அளித்துப் பேசலாம். நான் குறிப்பாக 'ஆசிரியர்கள்' என்று குறிப்பிடவில்லை. சாலையில் கோழி கூவும்போதே கழனிக்குச் சென்று இரவு 9 மணிக்கு சோர்வுடன் வீட்டுக்குத் திரும்பி வருகிற அந்த விவசாயியை நான் நினைத்துப் பார்க்கிறேன். அதுபோல் சென்னையில் கைவண்டி இழுக்கிறானே, ரிக்ஷா ஓட்டுகிறானே இவர்களுக்கெல்லாம் மத்திய அரசு இதுவரை என்ன செய்திருக்கிறது? இதுபற்றி எல்லாம் சிந்திக்க வேண்டாமா? இன்றைக்கு சத்துணவுத் திட்டத்தைப்பற்றி எவ்வளவு அங்கலாய்ப்பு செய்து பேசினார்கள். அதன் மூலம் எவ்வளவு குழந்தைகள் பயனடைகிறார்கள் என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும். நான் மிகவும் வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்கு பங்களாக்களிலே வேலை செய்கிற பெண்கள் இருக்கிறார்களே, அவர்களுக்கு பிற்காலத்தில் நிலைமை என்ன என்பதுபற்றிச் சிந்தித்தோமா? கலெக்டராக இருப்பவர் ரிட்டையர் ஆகிவிட்டால் அவருக்கு 600 ரூபாய் பென்ஷன் வரும். ஆனால் அவருடைய வீட்டில் பியூனாக வேலை செய்கிறவன் ரிட்டையர் ஆனால் அவனுடைய நிலை என்ன? அவனுக்குப் பென்ஷன் யார் கொடுப்பது என்பதுபற்றி எல்லாம் சிந்தித்தோமா? அதுபோல் காலையில் வேலைக்குச் சென்று இரவில் வீட்டுக்குத் திரும்புகிறானே அந்த சாலை போடுகிற தொழிலாளிக்கு யார் பென்ஷன் கொடுப்பது? காண்டிராக்டர்கள் சம்பாதிக்கிறார்கள். என்ஜினியர்களுக்கு அவர்கள் பணம் கொடுக்கிறார்களா இல்லையா என்பது தெரியாது, ஆனால் அவர்களும் வசதியாக வாழ்கிறார்கள். இன்றைக்கு கைவண்டி இழுப்பவன், பாரவண்டி இழுப்பவன், மூட்டை சுமக்கிறவன்—இப்படிப்பட்டவர்களுடைய நிலைமை என்ன? இவர்களுக்கு வயதாகிறபோது இவர்களுடைய நிலைமை என்ன? நூலுக்கு சாயம் போடுகிறவனுடைய நிலைமை என்ன? வீடுகளில் வர்ணம் அடிக்கிறானே அவனுடைய நிலைமை என்ன? தச்சு, கருமார் போன்ற வேலை செய்பவர்களுடைய நிலைமை என்ன? 40, 50 வயதிற்குப் பிறகு அவன் என்ன



தொழில் செய்ய முடியும்? சுதந்திரம் பெற்றும் இப்படிப்பட்டவர்களுக்காக
நாம் இதுவரை என்ன செய்திருக்கிறோம் என்பதைப்பற்றிச் சிந்தித்தோமா?
அதுபோல் சினிமா தியேட்டரில் சினிமா ஆப்பரேட்டராகப் பணியாற்று
கிறானே அவனுடைய நிலைமை என்ன? சினிமாவில் துணை நடிகராக நடிப்
பவன், லைட் பாயாக இருப்பவன்—இப்படிப்பட்டவர்களுடைய நிலைமை
என்ன? பலசரக்குக் கடையில் வேலை பார்க்கின்ற சிறுவனின் நிலைமை
என்ன? மிகக் குறைந்த ஊதியத்தைப் பெற்றுக்கொண்டு அவன் எப்படி வாழ்
கிறான்? ஓட்டல் தொழிலாளியின் நிலைமை என்ன? ஷாப்ஸ் சட்டம்
இருக்கலாம். ஷாப்ஸ் சட்டத்தில் அவனுடைய பிற்கால வாழ்வுக்கு என்ன
உத்தரவாதம் இருக்கிறது? கோயிலில் அர்ச்சனை செய்கிறவர்களுடைய நிலை
என்ன? கடவுள் ஆலயத்துக்கு ஏதாவது செய்தால் தான் உண்டு. இப்படி
நாட்டில் கீழ் மட்டத்தில் வாழ்ந்துகொண்டிருக்கின்ற லட்சக்கணக்கான
மக்களைப்பற்றிச் சிந்தித்துப் பார்க்கிறோமா?

நெசவாளர்களை எடுத்துக்கொள்ளுங்கள். அவர்களுடைய பிற்கால
வாழ்வுக்காக மத்திய, மாநில அரசுகள் ஏதாவது செய்திருக்கின்றனவா?
இன்றைக்கு நெசவாளர்களுக்கு நாங்கள் உதவி செய்கிறோம், உதவி செய்
கிறோம் என்று சொல்லிக் கொண்டிருக்கிறோம். ஆனால் நெசவாளர்களுடைய
பிற்கால வாழ்வு என்று பார்க்கும்போது, என்ன செய்திருக்கிறோம் என்பதைச்
சிந்தித்துப்பார்க்க வேண்டும். அப்படிப் பார்க்கும்போது, நான் உதாரணத்
திற்கு ஒன்றைச் சொல்கிறேன் மாண்புமிகு உறுப்பினர்கள் யாரும் கோபித்
துக்கொள்ளக் கூடாது. இன்றைக்கு "நான் 15 ஆண்டுகள் படித்தவன்,
கல்லூரியிலே படித்தவன், அதற்கு மேல் 2 ஆண்டுகள் பயிற்சி முடித்தவன்,
நான் அந்தப் பணியில் சிறந்தவனாக இருக்கிறேன்" என்றெல்லாம் சொல்
கிறார்களே அவர்களுக்கெல்லாம் பிற்காலத்தில் பென்ஷன் கிடைக்கிறது.
ஆனால் தையல் தொழிலாளி இருக்கிறானே அவன் 10 வயதில், 8 வயதில் சித்தா
ளாகச் சேர்கிறார்கள். 4 ஆண்டுகள் பயிற்சியை முடித்த பிறகு கத்திரியைப்
பிடித்து தைக்க ஆரம்பிக்கிறான். அதுபோல் தறி வேலை செய்கிற நெசவாளி
4 ஆண்டுகள் பழக்கப்பட்ட பிறகுதான் நெய்ய ஆரம்பிக்கிறான். நெய்ய ஆரம்
பித்த பிறகு 20 வயதுக்கு மேல் 40 வயதுக்குள்ளே கடுமையாக உழைத்தால்
ஓரளவுக்கு அவன் சம்பாதிக்க முடியும். 45 வயதுக்குப் பிறகு அவனுக்கு
நாடி நரம்பு எல்லாம் தளர்ந்து விடுகிறது. அவனுக்கு எந்தவிதமான
ஓய்வூதியமும் இல்லை. பிள்ளை இருந்தால் அவன் சாப்பாடு போட
மாட்டான். பெண் இருந்தாலும் சாப்பாடு போட மாட்டாள்.
அவர்களுடைய இருப்பைக் காப்பாற்றுகிற அவர்களுக்குக் கஷ்டமாக

(திரு. சி. இராமலிங்கம்) [1983 மார்ச் 7

இருக்கும். பிறகு வயதான காலத்திலே அந்த நெசவாளி பிச்சை எடுப்பான். தையல் தொழிலாளியை எடுத்துக்கொள்ளுங்கள். காஜா எடுப்பதிலிருந்து ஆரம்பித்து நல்லமாதிரி பயிற்சியை முடித்த பின்புதான் அவன் சட்டை தைக்க முடியும். சட்டை தைக்க 15 ரூபாய் வரை வாங்குகிறார்கள். ஆனால் சட்டை தைக்கின்ற தொழிலாளிக்கு ஒரு சட்டை தைக்க 2 ரூபாய் கொடுக்கிறார்கள். அவனுடைய வாழ்க்கையும் நெசவாளியினுடைய வாழ்க்கையைப் போல் மிகவும் கஷ்டமான வாழ்க்கை. 50 வயதானால் அவனால் தைக்க முடியாது. கத்தரி பிடித்து வெட்ட முடியாது. இப்படியே சொல்லிக்கொண்டே போகலாம். ஆகவேதான் நான் சொல்கிறேன் இந்த நாட்டிலே அலுவலகங்களிலே வேலை பார்ப்பவர்களை மட்டும் பார்க்காமல் உடல் உழைப்பில் ஈடுபட்டிருக்கிறார்களே லட்சக்கணக்கான ஏழையெளிய மக்கள் அவர்களுடைய நிலையைப் பற்றியும் சிந்தித்துப்பார்க்க வேண்டுமென்றும், நல்லதொரு முடிவை எடுக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ப. மாணிக்கம்:** மாநில அரசு சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்கிறார்களா? அல்லது இவர்களுக்கெல்லாம் மாநில அரசு ஏதாவது நிவாரணம் கொடுக்க வேண்டுமென்று சொல்கிறார்களா? அல்லது பட்ஜெட்டிலே இதுகுறித்து இல்லை. ஆகவே இனிமேல் மாநில அரசு செய்ய வேண்டுமென்று சொல்கிறார்களா?

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** முந்தைய அரசுகள் செய்யவில்லை என்பதை உறுப்பினர் சுட்டிக்காட்டுகிறார்.

**திரு. சி. இராமலிங்கம்:** இதுகுறித்து மத்திய-மாநில அரசுகள் சிந்தித்து நல்ல முடிவெடுக்க வேண்டுமென்று சொல்கிறேன்.

உடல் நோக வேலை செய்தாலும் போதுமான கூலி கிடைக்காததால், அந்தப் பிள்ளைகளை உண்ண உணவின்றி, பெற்ற பிள்ளைகளைப் பராமரிக்காததால், கில்லி அடித்துக்கொண்டு, சாக்கடை ஓரத்தில் ஓடியாடி விளையாடிக் கொண்டிருந்த பிள்ளைகளை அழைத்து சத்துணவு வழங்கி பள்ளிக்கு அனுப்பியிருக்கிறது இந்த அரசு. அதற்காக நாமெல்லாம் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுக்குப் பாராட்டு தெரிவிக்க வேண்டாமா? இன்றைக்கு பிற்கால வாழ்வுக்கு எந்தவிதமான உத்தரவாதமும் இல்லாமல் உழன்று கொண்டிருக்கிற லட்சக்கணக்கான தொழிலாளர்கள் வாழ்க்கைக்கு உத்தரவாதம் கொடுப்பதுபற்றி எல்லாம் சிந்திக்க வேண்டாமா? அவர்களுக்கு நல்ல மாதிரி வேலைவாய்ப்பு, வீட்டுவசதி போன்றவற்றை ஏற்படுத்திக் கொடுக்க



1983 மார்ச் 7] (திரு. சி. இராமலிங்கம்)

வேண்டாமா? எதிர்த் தரப்பிலே இருப்பவர்கள் அரசு என்ன நல்ல காரியங்களைச் செய்தாலும் குறை சொல்லிக் கொண்டுதான் இருப்பார்கள். காரணம் எதிர்த்த வீட்டுக்காரன் எப்போதும் பக்கத்து வீட்டுக்காரனை நல்லவன் என்று சொன்னது கிடையாது. அதுபோல் இங்கே எதை வேண்டுமானாலும் பேசுபவர்கள் பேசலாம். ஆனால் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் நடைமுறையில் ஏழையெளிய மக்களுக்கு நல்லது செய்ய வேண்டுமென்ற நல்லெண்ணத்தில்தான் சத்துணவுத் திட்டம், வீட்டுக்கு ஒருவருக்கு வேலை வாய்ப்பு போன்ற புரட்சிகரமான திட்டங்களை நிறைவேற்றிக்கொண்டு வருகிறார்கள். அதற்காக வேலைவாய்ப்புகளை உருவாக்கிக் கொடுப்பதற்காக இன்றைக்கு 15 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். இந்தக் கூட குறை கூறுகிறார்கள். இதுபற்றிப் பேசும்போது இந்த 51 கோடி ரூபாய் ஊறுகாய்க்கு ஆகுமா என்று கூட சொல்லலாம். அல்லது சுண்டைக்காய்க்கு ஆகுமா என்றும் சொல்லலாம் அல்லது புரட்சித் தலைவர் அவர்களுடைய வீட்டுப் பணமா என்றும் சொல்லலாம். ஆனால் நான் சொல்கிறேன் அந்த ஏச்சையும், பேச்சையும் கேட்டுக்கொண்டு ஏழையெளிய மக்களைக் காப்பாற்றத்தான் இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதைப்பற்றி மகிழ்கிறார்களோ இல்லையோ, ஆனால் குறை சொல்லாமலாவது இருக்க வேண்டாமா?

அடுத்து, நிதி நிலை அறிக்கையில் வாகனங்களுக்கு வரி போட்டிருக்கிறார்கள். ரிக்ஷாவுக்கு வரி போட்டிருக்கிறோமா? மாட்டு வண்டிக்கு வரி போட்டிருக்கிறோமா? அல்லது நெசவாளிக்கு வரி போட்டிருக்கிறோமா? இல்லையே. கார் வைத்திருப்பவனுக்கு தானே வரி போட்டிருக்கிறோம். அவனுக்கு அது கஷ்டம் ஒன்றுமில்லை. 5 லிட்டர் பெட்ரோல் வாங்குபவனுக்கு $5\frac{1}{2}$ லிட்டர் வாங்குவது மாதிரி இருக்கும். அவ்வளவு தான். இப்படிச் செய்வதால் $4\frac{1}{2}$ கோடி மக்கள் உள்ள இந்த நாட்டிலே 50 லட்சம் பேர்களுக்கு பாதகம் ஒன்றும் வந்து விடாது.

அடுத்து, கொலுசுக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. 25 ஆயிரம் தொழிலாளர்கள் இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். சேலத்திலுள்ள ஒரு கிராமத்தில் இந்தத் தொழிலைச் செய்துகொண்டிருப்பதை நானும் மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் முத்துசாமி, ராசு, ஆறுமுகம் போன்றவர்கள் எல்லாம் சென்று பார்த்தோம். ஆசிரியர்கள் தனி பின்னல் வதை பள்ளிக்கூடங்களில் சொல்லிக் கொடுப்பார்கள். அதுபோல் இவர்கள் வெள்ளியைக் கம்பிகளாக நீட்டி, கையில் வைத்துக் கொண்டு வரும்போதும், போகும்போதும், சினிமா பார்க்கப் போகும்போதும் பின்னுகிறார்கள். இவர்

(திரு. சி. இராமலிங்கம்) [1983 மார்ச் 7

[illegible] நிலை பரிதாபமாக இருந்த காரணத்தால், அவசியம் இவர்களுக்கு [illegible] செய்ய வேண்டும் [illegible] எடுத்துச் சொன்னோம். அதை இந்த பட்ஜெட்டிலேயே அரசு [illegible] நான் அரசைப் பாராட்டி நன்றி தெரிவித்துக் கொள்கிறேன் [illegible] அவர்கள்கூட எனக்கு ஒரு நன்றி [illegible]

(பிற்பகல் 12-20)

அனுப்பியிருக்கிறார்கள். [illegible] நீங்கள் எல்லாம் வந்து பார்த்ததன் காரணமாக இப்போது வரி விதிப்பிலிருந்து விலக்கு அளித்திருக்கிறார்கள் [illegible] நன்றி தெரிவித்திருக்கிறார்கள்.

மண்ணெண்ணெய்க்கு மத்திய அரசு வரி போட்டிருக்கிற நேரத்தில் நமது அரசு சிமை எண்ணெய் விளக்குக்கு வரி விதிப்பிலிருந்து விலக்களித்திருக்கிறது. நாம் ஏற்கெனவே குடிசைப்பகுதிகளில் வீட்டுக்கு ஒரு மின் விளக்கு என்று கொடுத்திருக்கிறோம். அதன் காரணமாக பல வீடுகளில் மின் விளக்கு எரிந்து கொண்டிருக்கிறது. இப்படி நம்மாலான உதவிகளையெல்லாம் நாம் செய்து கொண்டிருக்கிறோம். ஆக இந்த அரசைப் பொறுத்த வரையில், தன்னாலான உதவிகளையெல்லாம் செய்ய வேண்டும் என்றுதான் ஏழை எளிய மக்களுக்கு எல்லா நன்மைகளையும் செய்து வருகிறது.

அடுத்து, மாநிலத்தின் கைத்தறித் துறையை எடுத்துக் கொண்டால், இந்தத் துறை சிறப்பாக வளர்ச்சியடைய உரிய நிதியை ஒதுக்கியுள்ள மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒன்றை சொல்ல வேண்டும் என்ற கடமையின் அடிப்படையில் இலவற்றை நான் இங்கே [illegible] அவையின் சார்பில் சில விவரங்களை மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்ல குறிப்பிட விரும்புகிறேன்.

தமிழ் நாட்டில் சுமார், 5,30,000 முதல் 5,60,000 தறிகள் செயல்படுகின்றன. இவற்றில் சுமார் 2 லட்சம் தறிகள் கூட்டுறவுத் துறையின் கீழ் [illegible] வரப்பட்டிருக்கின்றன. ஒரு தறி ஒரு மாதத்தில் 25 நாட்களுக்குத் [illegible] தான் வேலை செய்ய முடியும். ஒரு நாளைக்கு பட்டு சேலையானாலும் சரி, கரூர், ஈரோடு பகுதிகளில் நெய்வதைப்போல் [illegible] ஆனாலும் சரி, நாள் ஒன்றுக்கு ஒரு தறிக்கு 2 மீட்டர்தான் நெய்ய முடியும். சராசரியாக அதன் விலை ஒரு மீட்டர் 10 ரூபாய் என்று வைத்தால், இந்த அடிப்படையில் ஆண்டொன்றுக்கு 2 லட்சம் தறிகளின் மூலம் 120 கோடி ரூபாய்க்கான சரக்கு தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்படுகிறது. இந்த ஆண்டு சுமார் 100 கோடி ரூபாய் அளவுக்கு கைத்தறித் துணிகளை விற்பனை செய்வது என்று நாங்கள்



1983 மார்ச் 7] (திரு. சி. இராமலிங்கம்)

திட்டம் போட்டிருந்தோம். ஆனாலும் ரூ. 70 கோடி அளவுக்குத்தான் விற்பனை நடைபெற்றிருக்கிறது. வறட்சியின் காரணமாகவும் மற்ற காரணங்கள் காரணமாகவும் பொங்கல், தீபாவளி போன்ற பண்டிகைகள் காலத்தில் ரூ. 70 கோடி அளவுக்குத்தான் விற்பனை ஆகியிருக்கிறது. ஏறத்தாழ ரூ. 120 கோடி அளவுக்கு உற்பத்தியான சரக்கில் ரூ. 70 கோடி அளவுக்குத்தான் விற்பனை ஆகியிருக்கிறது. மீதி துணி விற்காமல் தேங்கியிருக்கிறது. நெசவாளர் களின் நன்மையைக் கருதி, கூட்டுறவுத் துறையில் தேங்கியுள்ள சரக்கை விற்பனை செய்ய மாநில அரசு பெரிய மனது வைத்து புரட்சித் தலைவரின் ஆட்சியில் டாக்டர் நாவலர் அவர்கள் காலத்திலும் சரி, கலைஞர் காலத்திலும் சரி, பேரறிஞர் அண்ணா அவர்கள் காலத்திலும் சரி, அரசு ஊழியர்களுக்குக் கைத்தறித் துணியை கடனில் வழங்க வேண்டும் என்று உத்தரவிட்டு, அதன் காரணமாக இன்றைக்கு சுமார் ரூ. 18 கோடி அளவுக்கு கைத்தறித் துணி விற்பனையாகி இருக்கிறது. இதைப்போலவே போக்குவரத்துத் துறையில் உள்ள பணியாளர்களுக்கும், மற்றும் மருத்துவ மனைகளில் உள்ள பணியாளர் களுக்கும் சீருடை வழங்கப்படுவதால், அவர்களுக்கும் கைத்தறித் துணியை வாங்க வேண்டும் என்று உத்தரவிடப்பட்டிருக்கிறது.

வரும் ஆண்டிலும் அதிகமான அளவுக்கு கைத்தறித் துணியை நாம் விற்றாக வேண்டும். நம் ஊர்களில் மழை பொழிந்தால்தான், மக்கள் துணி எடுத்துக் கட்டுவார்கள். ஆனால் நாம் எப்படியும் உற்பத்தியாகும் கைத் தறித் துணியை விற்றாக வேண்டியவர்களாக இருக்கிறோம்.

இதற்காக பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்களுக்கு நான் கடிதம் எழுதியிருக்கிறேன், நேரில் சந்தித்தபோது ஒரு மனுவும் கொடுத் திருக்கிறேன். பண்டிகைக் காலத்தில் மத்திய அரசு ஊழியர்களுக்கும் கைத்தறித் துணியைக் கடன் வடிவில் பெறுவதற்கு உத்தரவிட வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறேன். நமது மாநிலத்தில் எப்படி மாநில அரசு ஊழியர்கள் கடனில் கைத்தறித் துணி பெறுவதற்கான வாய்ப்பு இருக் கிறது என்பதை எடுத்துக் கூறியிருக்கிறேன். அதைப்போலவே மத்திய அரசிலும் ஒரு ஜீ.ஓ. போட வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறேன். டெல்லியில் உள்ள டெவலப்மெண்ட் கமிஷனர் அவர்களும் கூட அதைப் பரிசீலனை செய்யலாம் என்று அப்போது சொன்னார். மத்திய அரசு ஊழியர்களைப் போலவே, மத்திய அரசைச் சார்ந்த பாதுகாப்புத் துறையில் உள்ள ஊழியர்களுக்குத் தேவையான துணிகளைக்கூட கைத்தறியிலிருந்து வாங்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று மத்திய அரசில் பாதுகாப்புத் துறை அமைச்சராக இருக்கும் திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்களிடம்

(திரு. சி. இராமலிங்கம்) [1983 மார்ச் 7

கேட்டுக் கொண்டேன். அப்போது அவர் "அதற்காக நாங்கள் டெண்டர் வைப்போம். அதில் நீங்களும் கலந்து கொள்ளலாமே" என்று குறிப்பிட்டார்கள். டெண்டர் என்று வைத்து அதில் கலந்து கொள்வது என்று வரும் போது, கூட்டுறவுத் துறையில் செயல்படும் நாங்கள் தனியார் வியாபாரிகளைப் போல் விலையில் ஏற்றம் இறக்கம் செய்ய முடியாது, விலையைக் குறைத்துக் கொடுக்க முடியாது, தனியார் துறைகளுக்கு ஏற்ற வகையில் குறைத்தோ அதிகரித்தோ முடியும் என்று எடுத்துச் சொல்லி அதன் காரணமாக எங்களுக்கு ஒரு நாயினலாக ஒரு விலையை, அடக்க விலைக்குக் குறையாமல் நிர்ணயித்து கைத்தறித் துணியை அந்தத் துறை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டேன். அதைப்போலவே மத்திய அரசின் உள்துறை அமைச்சர் அவர்களையும் பார்த்துக் கேட்டுக் கொண்டதோடு கடிதம் மூலமாகவும் எழுதியிருக்கிறேன். தபால் தந்தி இலாக்காவில் பணியாற்றும் பணியாளர்களுக்குச் சீருடை தேவைப்படுகிறது. அதைப் போலவே ரெயில்வே துறையில் பணியாற்றும் பணியாளர்களுக்கும் சீருடை தேவைப்படுகிறது. இப்படிப்பட்ட பல்வேறு மத்திய அரசின் துறைகளில் பணியாற்றும் பணியாளர்களுக்கும் சீருடை தேவைப்படுகிறது என்ற காரணத்தால், அவர்களும் கைத்தறித் துணியையே வாங்குவதற்கான வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டேன். ஏன் மத்திய அரசைக் கேட்கிறேன் என்றால், கடந்த ஆண்டு மட்டும் கூடுதலாக 2,000 விசைத் தறிகளை இங்கே மத்திய அரசின் அனுமதியோடு செயல்பட அனுமதித்திருக்கிறார்கள்.

மில்களில் மொத்தம் 2,20,000 தறிகள் இருக்கின்றன. அதாவது பம்பாய், அகமதாபாத், கோவை போன்ற இடங்களில் உள்ள மில்களில் அந்த அளவுக்குத் தறிகள் இருக்கின்றன. ஒவ்வொரு தறியிலும் ஒரு மணி நேரத்திற்கு 40 மீட்டர் நெய்யலாம். ஒரு ஆள் 40 தறிகளைப் பார்த்துக் கொள்ளலாம், ஜப்பானிய தறி என்று சொல்லுகிறார்கள். அதைப்போலவே லட்சுமி மில்லில் ஒரு தறி கண்டு பிடித்திருக்கிறார்கள். அதன் மூலமாக வேகமாக நெய்யும் நிலை ஏற்பட்டிருக்கிறது. அதைப்போலவே நாட்டில் 5,00,000 விசைத் தறிகள் இருக்கின்றன. இதில் நமது மாநிலத்தில் மட்டும் 2,00,000 விசைத் தறிகள் இருக்கின்றன. இவைகள் தவிர, லைசென்ஸ் இல்லாமல் ஏறத்தாழ 4 லட்சம் விசைத் தறிகள் செயல்படுவதாக மத்திய அரசு கணக்கு தருகிறது. இப்படி இந்தியா முழுவதும் 9 லட்சம் விசைத் தறிகள் செயல்படுகின்றன. இவை போதாதென்று கடந்த ஆண்டு மத்திய அரசு 4,000 விசைத் தறிகளுக்கு அலாட்மெண்ட் போட்டிருக்கிறது. குஜராத் மாநிலத்திற்கு இவ்வளவு ஒதுக்கியிருக்கிறார்கள். நமது மாநிலத்திற்கு 700 தறிகளை ஒதுக்கியிருக்கிறார்கள். இப்படி இந்தத் தறிகளின் மூலமாக [illegible]



1983 மார்ச் 7]

[illegible] லாம் துணியை உற்பத்தி செய்கிறார்கள். இதன் காரணமாக சந்தையில் [illegible] கைத்தறித் துணிக்கான விலையை மிகவும் குறைத்துக் கேட்கிறார்கள். மில்களிலும், விசைத் தறிகளிலும் உற்பத்தியாகும் துணி குறைந்த விலைக்குக் [illegible] துணியின் வாங்க மாட்டேன் என்கிறார்கள். இருக்கும்போது, எங்கள் [illegible] நாங்கள் குறைந்த விலைக்கும் விற்க முடியவில்லை. [illegible] சேலை துணியைக்கூட மில்களில் சுமார் ¾ ரூபாய்க்கு மீட்டர் துணியை நெய்கிறார்கள். நாங்கள் ஒரு மீட்டர் துணிக்கு ரூ. 7½ கொடுக்க வேண்டும். ஒரு நாளைக்கு ஒரு தொழிலாளி 2 மீட்டர்தான் நெய்ய முடியும். ரூ. 15 [illegible] சம்பாதிக்க முடியாது. எனவே கைத்தறிக்கு என்று சில [illegible] ரகங்களை நாம் ஒதுக்கிட வேண்டும் என்று மத்திய அரசிடம் முறையிட்டிருக்கிறோம். நாட்டில் விசைத் தறியை வளர்த்துக்கொண்டே போனால், எதிர்காலத்தில் நம் கைத்தறியின் நிலைமை என்னவாகும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

மாற்றுத் தலைவர் (திரு. பா. [illegible]): மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இன்னும் 2 நிமிடங்களில் தம் பேச்சை முடித்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. சி. இராமலிங்கம்: இன்றைய தினம் இந்தியாவில் 750 மில்லியன் மீட்டர் துணி உற்பத்தியாகிறது. அந்த உற்பத்தியை வரும் 5 ஆண்டுகளில் 1,000 மில்லியன் மீட்டராக உயர்த்த வேண்டும் என்று மத்திய அரசு திட்டம் போட்டிருக்கிறது. உள்ளபடியே நான் அதை வரவேற்கிறேன். அதே நேரத்தில் எங்களுக்கு அவர்கள் உதவி செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

[illegible] அரசைப் பொறுத்த வரையில், அவர்கள் எங்களுக்கு [illegible] வங்கியின் மூலம் நெசவாளர்களுக்குக் கடன் [illegible] தறிகள் வாங்குவதற்காக அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட 54,000 [illegible] ரூ. 2,000 வீதம் வங்கிகளிலிருந்து கடன் கொடுக்க ஏற்பாடு செய்யப்படும் என்று மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் தம் நிதிநிலை அறிக்கையிலேயே குறிப்பிட்டிருக்கிறார்கள். இப்படி மாநில அரசால் முடிந்த அளவுக்கு அனைத்துச் சலுகைகளும் அளிக்கப்படுகின்றன.

சூம்பிப் போன குழந்தைக்கு, தேரை விழுந்த கைக்குழந்தைக்கு மருந்து, சத்துள்ள டானிக்கும் கொடுத்து வளர்ப்பதைப்போல எல்லா ஒத்தாசைகளையும் செய்வதைப்போல் கைத்தறித் துறைக்கு மாநில அரசு தன்னால் ஆன அனைத்து உதவிகளையும் செய்து வருகிறது. சூம்பிப் போன குழந்தைக்கு என்னதான் ஆட்டுப் பாலைப் போட்டாலும், போஷாக்காக வளராமல் இருப்பதைப்போல் கைத்தறித் துறை இருக்கிறது. எனவே அதற்கு என்ன வைத்தியம் செய்ய வேண்டுமோ அதைக் கண்டறிந்து செய்ய வேண்டும். அந்த வைத்தியம் தான் மத்திய அரசு எல்லா இலாக்காக்களுக்கும் தாக்கீது கொடுத்து அவைகள் அனைத்தும் கைத்தறித் துணியை வாங்க வேண்டும் என்று சொல்லுவதாகும். எனவே மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் நசிந்து கொண்டிருக்கும் நெசவுத் தொழிலை வாழ வைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்த நிதிநிலை அறிக்கை எங்களுக்கெல்லாம் மிகுந்த மன நிறைவைக் கொடுப்பதாக இருக்கிறது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். 50 லட்சம் ஊழியர்களை மட்டும் கவனிக்காதீர்கள் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அவர்களையெல்லாம் மறந்துவிட வேண்டும் என்றுகூட சொல்லவில்லை. பல லட்சக் கணக்காக இருக்கும் உழைப்பாளர்களை மறந்துவிடாதீர்கள், அவர்களுக்கு இன்னும் வாழ்க்கை வசதிகளை ஏற்படுத்தித் தாருங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். 4½ கோடி மக்களுக்கு நன்மை செய்யும் திட்டங்களை எதிர் அணியில் இருப்பவர்கள் தயவு செய்து சிந்தித்துப் பார்க்க வேண்டும், அரசு எடுக்கிற நல்ல முயற்சிகளுக்கு நீங்கள் உறுதுணையாக இருந்து ஆதரவு தர வேண்டும், எதிர்க்க வேண்டாம் என்று கேட்டு அமர்கிறேன்.

மாற்றுத் தலைவர் (திரு. பா. ரா. தாமஸ்): பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று, அவை மீண்டும் நாளை செவ்வாய்க்கிழமை காலை 9-30 மணி அளவில் (8—3—1983) கூடும்.

பின்னர், அவை ஒத்தி வைக்கப்பட்டது.

(பிற்பகல் 12-40)





5. அவை முன்வைக்கப்பட்ட ஏடுகள்.

## A. Statutory Rules and Orders.

166. Notification issued with G.O. Ms. No. 656, Housing and Urban Development, dated the 20th July 1982 regarding variation to land use—Notification. [Laid on the table of the House under section 128 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972).]

167. Notification issued with G.O. Ms. No. 1983, Labour and Employment, dated the 14th September 1982 regarding certain amendments to the Tamil Nadu Labour Welfare Fund Rules, 1973. [Laid on the table of the House under section 41 (5) of the Tamil Nadu Labour Welfare Fund Act, 1972 (Tamil Nadu Act 36 of 1972).]

168. Notification issued with G.O. Ms. No. 765, Prohibition and Excise (VIII), dated the 30th October 1982 regarding certain amendments to the Tamil Nadu Molasses Control and Regulation Rules, 1958. [Laid on the table of the House under section 54 (3) of the Tamil Nadu Prohibition Act, 1937 (Tamil Nadu Act X of 1937).]

169. Notification issued with G.O. Ms. No. 1434, Commercial Taxes and Religious Endowments, dated the 28th December 1982 regarding inclusion of Transformer Oil Feed Stock under the concessional levy scheme. [Laid on the table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

## B. Reports, Notifications and Other Papers.

Nil.

## இணைப்பு I

[126 ஆம் பக்கத்தில் இனம் 3(2) க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம் 1—7—1982 முதல் பள்ளிகளில் 5(+)9(+) மற்றும் 10—14 வயதுப் பிள்ளைகளுக்காக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் இதுவரை பள்ளிகளில் தலைமை ஆசிரியர்களின் பொறுப்பில் நடத்தப்பட்டு வந்தது. சத்துணவுத் திட்ட கணக்குகளின் பராமரிப்பு, இருப்புகளின் கையிருப்பு, மற்றும் பொது மேற்பார்வை ஆகிய பொறுப்புகளைத் தலைமை ஆசிரியர் பிற ஆசிரியர்களின் துணையோடு மேற்கொண்டிருந்தார்.

இத்திட்டம் தொடங்கப்பட்டபோது ஆண்டின் எல்லா தினங்களிலும் சத்துணவு வழங்க முடிவுசெய்யப்பட்டு அதன்படியே நடத்தப்பட்டு வந்தன. சத்துணவுப் பணியாளர்களுக்கு விடுப்பு வழங்கும் பொருட்டும், பண்டிகை நாட்களில் பிள்ளைகளின் வருகை பெரிதும் குறைவதாலும், தீபாவளி, கிருஸ்துமஸ், மிலாடி நபி, பொங்கல் போன்ற பண்டிகை நாட்களிலும் பிற அரசு விடுமுறை நாட்களிலும் சத்துணவு மையங்களுக்கும் விடுப்பு அளிப்பது என முடிவு செய்யப்பட்டது. இதன்படி அரசால் அறிவிக்கப்பட்டுள்ள விடுமுறை நாட்களில் சத்துணவு மையங்கள் செயல்படாது எனவும், விடுமுறைக்கு முன் தினம் பிள்ளைகளுக்கு அன்றைய சத்துணவோடு ஏதாவதொரு [illegible] வழங்கப்பட வேண்டும் எனவும் உத்திரவுகள் வழங்கப்பட்டு உள்ளன. வழக்கமான சனி, ஞாயிறு ஆகிய வார விடுமுறைகள் கணக்கில் [illegible]. இதன்படி இதுவரை தீபாவளி (15—10—1982), கிருஸ்துமஸ் (25—12—1982), மிலாடி நபி (29—12—1952). புத்தாண்டு தினம் (1—1—1983), பொங்கல் (14—1—1983) ஆகிய நாட்களில் எல்லா சத்துணவு மையங்களுக்கும் விடுமுறை விடப்பட்டன. ஒவ்வொரு விடுமுறைக்கும் முன் தினங்களில் லட்டு, பொரி உருண்டை, கடலை உருண்டை, முறுக்கு போன்ற தின்பண்டங்கள் குழந்தைகளுக்கு வழங்கப்பட்டன.



இப்போது பள்ளிகளில் சத்துணவு மையங்களுக்கு புதிய அமைப்பாளர்களை நியமிக்க முடிவு செய்யப்பட்டு அமைப்பாளர்கள் நியமனங்கள் மாவட்டங்களில் நடைபெற்று வருகின்றன. இந்த அமைப்பாளர்கள் சத்துணவுத் திட்டத்தின் முழுப்பொறுப்பையும் ஏற்றுக் கொள்வர். தலைமை ஆசிரியர்கள் சத்துணவுப் பணியிலிருந்து முழுமையாக விடுவிக்கப்படுவர். புதிதாக நியமிக்கப்படும் அமைப்பாளர்கள் நேரடியாகக் கல்வித்துறை அலுவலரின் கண்காணிப்பில் செயல்படுவர். தலைமை ஆசிரியர்களுக்கு இந்த புதிய அமைப்பாளர்களைக் கண்காணிக்கும் பொறுப்போ, வேறு எவ்வித சத்துணவுத் திட்ட பொறுப்போ இராது.

கற்பக நிலையம் சென்னை-600 008

## இணைப்பு II

[127 ஆம் பக்கத்தில் இனம் 3(2)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

அரசின் இரு மொழிக் கொள்கையினால் எழுத்தர், நூலகர், பதிவேடு அல்லது இளநிலை ஆசிரியர்களாக மாற்றுப் பணி அளிக்கப்பட்ட முன்னாள் இந்தி அல்லது வடமொழி ஆசிரியர்களுக்கு, தற்போது கீழ்க்கண்டவாறு தேர்வுநிலை வழங்கி ஆணையிடப்பட்டு விட்டது:—

(1) எழுத்தர். நூலகர், பதிவேடு எழுத்தர் மற்றும் இளநிலை ஆசிரியர்களாக பணியாற்றும் முன்னாள் முதல்நிலை இந்தி அல்லது வடமொழி ஆசிரியர்களுக்கு அவர்களது முந்நாளைய முறையான ஆசிரியப் பணியினையும் கணக்கில் கொண்டு பத்தாண்டு பணி அடிப்படையில் 1—4—73 லிருந்து தேர்வுநிலை ஊதிய விகிதம் அளிக்கப்படுகின்றது.

(2) எழுத்தர், நூலகர், பதிவேடு எழுத்தர் அல்லது இளநிலை ஆசிரியர்களாக மாற்றுப் பணி அளிக்கப்பட்ட முன்னாள் இரண்டாம் நிலை இந்தி அல்லது வடமொழி ஆசிரியர்களுக்கு அவர்களது முந்நாளைய முறையான ஆசிரியப் பணியையும் கணக்கில் கொண்டு 10 ஆண்டு பணி அடிப்படையில் 1—4—74லிருந்து தேர்வுநிலை ஊதியம் வழங்கப்படுகின்றது.

143138
D
V2-11,32'N83
N82.191.1-3

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C Pycrofts Road Madras-5.
10 The South India Saiva Siddhantha Works Publishing Society (Tirunelveli), Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1
12 New Century Book House (Private) Limited, Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore Madras-8

### IN MOFASSIL OF TAMIL NADU.

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District.
2 Bharathamatha Book Depot, Thanjavur (Thanjavur District).
3 P. V. Nathan & Company, Kumbakonam (Thanjavur District).
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Bros., Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers 9/31, Cross Cut Road, Coimbatore-12
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11. S. M. Jagannathan Book House, 35, Nandhi Koil Street, Tiruchi-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mari Martin, Booksellers, Kottagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No 46-D, Old Market Street, Salem.
16 Meenakshi Pathippagam, Pudukkottai
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District)
19 Baby Stores Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores No. 3/1, Old Post Office Road, Coimbatore-18.
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1
23 Radhamani Stores, 6-A Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop 90, Amman Sannathi, Madurai-1

### IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi-1
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad
5 Puthaghaleyam Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bagchi & Company, 286, B. B. Ganguli Street, Calcutta-17.

---

PRINTED AND PUBLISHED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, TAMIL NADU ON THE AUTHORITY OF THE CHAIRMAN OF THE LEGISLATIVE COUNCIL